வெளியீடு : 15-2-2017 Issued : 15-2-2017

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 12, 2016—தொகுதி 10—எண் 2

Friday, the 12th August 2016—Volume 10—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

12–8–2016

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள்–விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	461-496
2. தகவல் கோரல்—	
போக்குவரத்துத் தொழிலாளர் ஊதிய ஒப்பந்தம் குறித்து	496-497
*திரு. கே.என். நேரு	496
மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்	496-497
3. கவன ஈர்ப்பு—	
பஞ்சு விலை ஏற்ற இறக்கத்தினால் ஜவுளித் தொழிலில் ஏற்பட்டுள்ள பாதிப்பு	497-503
திரு. நா. கார்த்திக்	497,500-503
*மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்	497-500, 502-503
4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி	
(அ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) (ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) (இ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	503-540, 565-701
மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்	504,521, 528-529, 613-614, 621-625,636, 639-640, 671-699

பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)
(இ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)
—தொடர்ச்சி

*மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு	511,517, 521-522,539, 644,646-671
திரு. வாகை சந்திரசேகர்	522-527, 529-530, 535-540
*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி	530
*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி	531-535, 591-592, 617-619, 640-641
மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா	536-538, 565-566
திரு. அ. சண்முகம்	566-574
*மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்	574-575,643
*திருமதி மு. சந்திரபிரபா	575-584
திரு. ச. பாண்டி	584-590,593
மாண்புமிகு திரு. பி. தங்கமணி	590,594-595
*மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்	592-594

பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)
(இ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)
—தொடர்ச்சி

*திரு. சி.வி. இராஜேந்திரன் 595-599, 604-609

*திரு. அர. சக்கரபாணி 506-507, 515,600-601

திரு. மு.க. ஸ்டாலின் 602-604,626, 628-629,631, 635-636,646

*திரு. எஸ். சுதர்சனம் 510,516,520, 609-616,619, 621,625, 637-638, 642-643

*மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் 620-621

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 625-629, 631-632,636

*திரு. துரைமுருகன் 632

பக்கங்கள்

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—தொடர்ச்சி

(அ) மேட்டூர் அணை, காளிங்கராயன் அணை கால்வாய்களைச் சீரமைத்தல், சரபங்கா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகள், கால்வாய்களைப் புனரமைத்தல், வராக நதியின் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைத்தல், வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல், ஏரிகளைப் புனரமைத்தல், திருச்சி, பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை — 540-544

(ஆ) பாலங்கள் கட்டுதல், ஓசூரில் வெளிவட்டச் சாலை அமைத்தல், சென்னை சுற்றுப்புற முக்கிய இணைப்புச் சாலைகளை மேம்படுத்துதல், தாரமங்கலம், ராசிபுரம் புறவழிச்சாலைகள் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை — 544-548

6. பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி— — 548-566

*திரு. எம். தமிமுன் அன்சாரி — 548-549

திரு. உ. தனியரசு — 550-551

*திரு. சே. கருணாஸ் — 551-554

*திரு. துரைமுருகன் — 554,556

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா — 554-556, 560-562,

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி — 562-563

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 702

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆடி 28, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 ஆகஸ்ட் 12, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்."

மணிபோல் தெளிந்த நீரும், வெட்டவெளியான நிலமும், மலையும், குளிர்ச்சியான நிழலைத் தரும் மரங்கள் நிறைந்த காடும் ஆகிய நான்கும் உடையதே இயற்கையாய் அமைந்த கோட்டையாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

***85—திரு. எஸ். பவுன்ராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, ஆக்கூர் முக்கூட்டு முதல் கருவிழந்தநாதபுரம் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தி மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, ஆக்கூர் முக்கூட்டு முதல் கருவிழந்தநாதபுரம் வரையுள்ள சாலைப் பகுதி தேசிய நெடுஞ்சாலை 45A (விழுப்புரம்–புதுச்சேரி–கடலூர்–சீர்காழி–நாகப்பட்டினம்) சாலையில் கிலோ மீட்டர் 144/8–லிருந்து 150/8 வரையுள்ள ஒரு பகுதியாகும். இச்சாலையினை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி, மேம்பாடு செய்திட, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தற்போது நில எடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மையில் மேலாண்மை கண்டு, வறுமையை விரட்டி, தமிழகம் கல்வி, தொழில் வளர்ச்சியில் முதன்மை பெற அயராது உழைக்கும் ஆற்றல் கொண்டவரே, மக்கள் பணி செய்து, மக்களுக்காகவே வாழும் எங்கள் அம்மாவே, தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை 45A கடலூர், நாகப்பட்டினம் ஆகிய சாலைகளின் நீளம் 135 முதல் 154 கிலோ மீட்டராகும். இதில் ஆக்கூர் முக்கூட்டு, கருவிழந்தநாதபுரம், தென்னலக்குடி வரையுள்ள சாலைகள் 3.75 மீட்டர் அகலம் உள்ள குறுகிய சாலையாக இருப்பதால், மக்கள் வாகனங்களில் செல்லும்போது மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இச்சாலையில் மக்கள் சிரமமின்றி வாகனங்களில் பயணம் செய்ய ஏதுவாக அகலப்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2016 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை 45A விழுப்புரம், புதுச்சேரி, கடலூர், சீர்காழி, நாகப்பட்டினம் ஆகிய சாலைகளின் மொத்த நீளம் 194 கிலோ மீட்டராகும். இதில் 129.34 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையானது தேசிய நெடுஞ்சாலையின் கட்டுப்பாட்டிலும், மீதமுள்ள 64.66 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையானது புதுச்சேரி மாநிலம், பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டிலும் உள்ளது. இச்சாலையினை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி, மேம்பாடு செய்திட, தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம் பகுதி–IV–ன்கீழ், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்–NHAI மூலம் எடுத்துக்கொள்ளப்பட்டு, இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்தும் பணியும் முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்படி சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி, மேம்பாடு செய்திடும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட உள்ளது. சட்டமன்ற உறுப்பினர் கோரிய, ஆக்கூர் முக்கூட்டு முதல் கருவிழந்தநாதபுரம் வரையுள்ள சாலைப் பகுதியும் இதில் உள்ளடங்கும். அந்தச் சாலையும் அகலப்படுத்தி, மேம்படுத்தப்பட உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையாக உள்ள இச்சாலையை, NHAI மூலமாக எடுத்து அகலப்படுத்துகின்ற பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை நான் நன்கு அறிவேன். இருந்தாலும், இச்சாலையானது குறுகிய சாலையாக இருப்பதால், இந்துக்களின் புகழ் வாய்ந்த திருத்தலங்களான திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் அபிராமி திருக்கோயிலும், திருநள்ளாறு சனீஸ்வர பகவான் திருக்கோயிலும் உள்ளது. அதேபோல், இஸ்லாமிய மக்களுடைய புகழ் வாய்ந்த*

நாகூர் தர்காவும், கிறிஸ்தவ மக்களுடைய புனிதத் தலமான வேளாங்கண்ணி மாதா ஆலயமும் இந்தப் பகுதியில் இருப்பதால், இந்தச் சாலை வழியாகத்தான் மக்களெல்லாம், பக்தர்களெல்லாம் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும், இச்சாலையானது குறுகிய சாலையாக இருக்கின்ற காரணத்தால், பல்வேறு நேரங்களில் மக்கள் போக்குவரத்தின்போது சிறு, சிறு விபத்துகளும் ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, 19 கிலோ மீட்டர் தூரமுள்ள, 3.75 மீட்டர் அகலமுள்ள இந்தக் குறுகிய சாலையை அகலப்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், மார்ச் 25 ஆம் நாள் வேளாங்கண்ணி புனித வெள்ளி விழா வருகிறது. அந்த நன்னாளிலே பக்தர்கள் நடந்தே செல்கிற சூழ்நிலை இருக்கிறது. அதேபோல செப்டம்பர் 8 ஆம் தேதி தேவமாதா பிறந்த நாள் என்ற காரணத்தினாலே இலட்சக்கணக்கான பக்தர்கள் நேர்த்திக் கடனிற்காக நடந்து செல்லும்போது போக்குவரத்து இடையூறு ஏற்படுகின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி இந்த ஆண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணியைத் துவங்க வேண்டுமென்று தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் பராமரிக்கப்படுகிற சாலை. தேசிய நெடுஞ்சாலை 45A விழுப்புரம், புதுச்சேரி, கடலூர், சீர்காழி, நாகப்பட்டினம் இதிலேதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஆக்கூர் முக்கூட்டு முதல் கருவிழந்தநாதபுரம் வரை உள்ள பகுதி வருகிறது. இந்தப் பகுதியையெல்லாம் அகலப்படுத்தி மேம்படுத்துவதற்காக விரிவான திட்ட அறிக்கை தற்போது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற*

2016 ஆகஸ்ட் 12]

அந்தப் பகுதியும் அகலப்படுத்தி மேம்படுத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் இருக்கின்ற, விக்கிரவாண்டி, பண்ருட்டி, வடலூர், சேத்தியாத்தோப்பு கும்பகோணம் சாலை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டு, 20 ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்தச் சாலை இன்னும் தரமுயர்த்தப்படவில்லை. மேலும் அணைக்கரை பாலம் மற்றும் கொள்ளிடம் பாலங்கள் பழுதடைந்து, போக்குவரத்திற்கு தகுதியற்றவையாக அமைந்திருக்கின்றன. அது இப்போது ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டு, அந்தப் பாலத்தைக் கடக்க வேண்டுமென்றால் அரைமணி நேரத்திற்குமேல் காலதாமதமாகிறது. அத்தகைய பாலத்தைக் கட்டுவதற்கும், அதேபோல என்னுடைய தொகுதியில் விக்கிரவாண்டி சாலையில் உள்ள கன்னிக்கோவில் ஓடைப்பாலம் பழுதடைந்து அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அதுவும் எப்பொழுது மாற்றப்படும், அந்தச் சாலை எப்பொழுது தரம் உயர்த்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலம் வலுவிழந்து இருப்பதாக குறிப்பிட்டிருந்தார்கள். அதை மாற்றி அமைக்க வேண்டும். அதே நேரத்தில் தேசிய நெடுஞ்சாலை சீரமைக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட பகுதிகள் தேசிய நெடுஞ்சாலை மூலமாக சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே நடப்பு ஆண்டிலே இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை தெரிவிக்கப்பட்டு, அந்தச் சாலையைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதே நேரத்திலே பாலம் வலுவிழந்ததாகச் சொன்னார்கள். அந்தப் பாலத்தையும் ஆய்வு செய்து, அதன்

அடிப்படையிலே இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதையும் சீர்செய்வதற்கான நடவடிக்கை எதிர்வருகின்ற காலத்திலே மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரிலிருந்து நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லும் சாலைகளை இணைப்பதைப் பொறுத்தவரையில், தஞ்சாவூர்–நாகப்பட்டினம் சாலையுடன் இணைத்து அரைவட்ட புறவழிச் சாலை அமைப்பதற்கான திட்டம் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது நில எடுப்பு நடந்து கொண்டு இருப்பதாக தகவல் சொல்கிறார்கள். அந்தப் புறவழிச் சாலை அமைக்கும் பணி எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தச் சாலைக்கு நிலம் எடுப்புப் பணி தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணி நிறைவுபெற்ற பின்னர் புறவழிச் சாலைப் பணி தொடரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தங்கம் இந்த நாட்டுக்குத் தந்த தங்கம்; தமிழ்*

2016 ஆகஸ்ட் 12]

நிலத்தின், தமிழ் இனத்தின் தலை அங்கம்; திருமண நாளுக்காக ஏங்கி நிற்கும் தமிழ் பெண்களுக்கு நான்கு கிராம் அல்ல, எட்டு கிராம் தாலிக்குத் தங்கம் தருகிற எங்கள் தங்கத்தின் தங்கம்; (மேசையைத் தட்டும் ஒலி) சொக்கத் தங்கம்; புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் மக்கள் நலத் திட்டப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன என்று மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

எனது ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட பணகுடியிலே தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது. இந்தப் பகுதியிலே விபத்துகள் நடைபெறுவது என்பது அன்றாட வாடிக்கையாகிவிட்டது. பணகுடி சாலையிலே, கிட்டத்தட்ட 350 பேர் இதுவரை மரணம் எய்திருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியும் இருக்கிறது. தினசரி நடைபெறுகின்ற இந்த விபத்துகளால் ஏற்படுகிற இழப்புகளைத் தவிர்க்க, அந்தப் பகுதியிலே இரண்டு மேம்பாலங்களை அமைக்கவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரி வருகிறார்கள்.

இதுகுறித்து, கடந்த 10, 20 நாட்களுக்கு முன்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் வந்து அந்தப் பகுதியிலே ஓர் ஆய்வு நடத்தி, அரசுக்கு அறிக்கை அனுப்பியிருப்பதாகக்கூட நான் அறிகிறேன். ஆகவே, NHAI *என்ற தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை வலியுறுத்தி, அந்தப் பகுதியில் உடனடியாக மேம்பாலங்கள் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டிலே வருகின்ற பகுதியிலே இரண்டு மேம்பாலங்கள் கட்ட வேண்டுமென்று கேட்டு, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கிறார்கள். இங்கே மட்டுமல்ல, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் வருகின்ற சாலைகளையெல்லாம் சீரமைக்க வேண்டும், எங்கெங்கெல்லாம் பாலம் கட்ட வேண்டுமோ அங்கெல்லாம் பாலம் கட்ட வேண்டும்*

என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இரண்டு மேம்பாலங்களையும் கட்டுவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை வலியுறுத்தும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், இந்திய தேசிய நெடுஞ்சாலையின் நீளம் 4,994 கிலோ மீட்டர்; அதிலே மாநில அரசால் பராமரிக்கப்படுகின்ற சாலைகளுடைய நீளம் 1,985 கிலோ மீட்டர்; இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக பராமரிக்கப்படும் சாலையின் நீளம் 3,009 கிலோ மீட்டர்.

2006 முதல் 2011 வரை ரூ.819 கோடி மதிப்பிலான சாலைகள் மற்றும் பாலப் பணிகள் மட்டும்தான் எடுத்துக்கொள்ளப்பட்டன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, 2011 முதல் 2015 வரையான நான்கு ஆண்டுக் காலத்தில் ரூ.2,991 கோடி மதிப்பிலான சாலைகள் மற்றும் பாலப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, செயலாக்கத்தில் உள்ளன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2011–2016 வரைக்கும் பல்வேறு முக்கிய சாலைகள், கிட்டத்தட்ட 9 சாலைப் பணிகள் E.P.C. முறையிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விபத்து பற்றி இங்கே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், விபத்துகளைக் குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். விபத்துகளைக் குறைப்பதற்காக, இந்தத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். 2000 ஆம் ஆண்டில் வாகனங்களின் எண்ணிக்கை 50,12,810 ஆக இருந்தது, 10,000 வாகனங்களுக்கு ஓர் உயிரிழப்பு என்று கணக்கிடும்போது, அப்பொழுது 19 உயிரிழப்புகள் ஏற்பட்டன; 2005 ஆம் ஆண்டில் வாகனங்களின் எண்ணிக்கை 79,66,200 ஆக இருந்தது, உயிரிழப்பு 12 ஆக இருந்தது; 2010 ஆம் ஆண்டில் வாகனங்களின் எண்ணிக்கை 1,32,20,752 ஆக உயர்ந்தபோது உயிரிழப்பு 12 ஆக இருந்தது; 2013 ஆம் ஆண்டில்

2016 ஆகஸ்ட் 12]

வாகனங்களின் எண்ணிக்கை 2,15,58,272 ஆக உயர்ந்திருக்கின்றது, உயிரிழப்பு 7 ஆக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் சாலைப் பாதுகாப்பிற்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து, சாலையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்த காரணத்தினால், வாகனங்களின் எண்ணிக்கை உயர்ந்தபோதிலும் விபத்துகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. படிப்படியாக விபத்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, உயிரிழப்புகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

60—

நியாயவிலைக் கடை

***1455—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டம், பெருங்களத்தூரிலுள்ள சமத்துவ பெரியார் நகர் பகுதியில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், பெருங்களத்தூரில் சமத்துவ பெரியார் நகர் பகுதியில் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையால் நடத்தப்படும் பெருங்களத்தூர் நியாய விலைக் கடை எண் 9–ஐப் பிரிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். தற்போதுள்ள விதிகளின்படி,

[2016 ஆகஸ்ட் 12

புதிய முழுநேர நியாயவிலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருங்களத்தூரில் உள்ள சமத்துவ பெரியார் நகர் பகுதி, அன்னை அஞ்சுகம் நகர், அம்பேத்கர் புது நகர், சசிவரத நகர், வசந்தம் நகர் பகுதிகளை உள்ளடக்கிய அந்தப் பகுதியில், சற்றேறக்குறைய 1,000 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. நவம்பர் மாதத்திலே பெய்த மிகப்பெரும் மழையிலே, முதன்முதலாக பாதிக்கப்பட்டவர்கள் அந்தப் பகுதி மக்கள்தான்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, தாம்பரத்தைச் சுற்றியுள்ள பகுதியில் இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். நந்தம்பாக்கம் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் அங்கு வசிக்கிறார்கள். அவர்கள் ஏழையெளிய மக்கள், அன்றாடம் பணிக்குச் செல்லக்கூடிய மக்கள் அந்தப் பகுதியிலே வசிக்கின்றார்கள். அதுவும், அந்தப் பகுதியில் இப்போது இருக்கக்கூடிய அந்த மக்கள், தாம்பரம், C.T.O. காலனி, மேற்கு தாம்பரம், இராஜாஜி சாலையில் இருக்கின்ற ரேஷன் கடையிலும், இராமகிருஷ்ணா தெருவில் இருக்கின்ற ரேஷன் கடையிலும், இப்படி நான்கு தெருக்களில் இருக்கின்ற கடைகளில் பொருட்களை வாங்கிச் செல்ல அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். வாகன வசதியும் அந்தப் பகுதியில் மிகவும் குறைவு. அந்தப் பகுதியிலே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடம் அதிகமாக இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் மானியக் கோரிக்கைமீது பேசுவதுபோல் பேசிக்கொண்டே இருந்தால் எப்படி? நீங்கள் இப்படிப் பேசினால், நான் கேள்வி நேரத்தை எப்போது முடிப்பது? (குறுக்கீடு) எனக்கு நேரம் இல்லை. நீங்கள் இரண்டாவது துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு இருக்கிறது. அதனால், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

2016 ஆகஸ்ட் 12]

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தாம்பரம் பகுதியிலே பிறந்து வளர்ந்தவன். எனவே, அரசு நிலம் எங்கிருக்கிறது என்று எனக்குத் தெரியும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியையும் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். மேலும், தேவைப்பட்டால் அங்கிருக்கின்ற மகளிர் குழுக்களை வைத்து கடையை நடத்துவதற்கும் நான் உதவியாக இருப்பேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பகுதியில் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் நான்கு இருக்கின்றன. அந்த நான்கு பொது விநியோகக் கடைகளையும் மக்களின் வசதிக்காகப் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். (குறுக்கீடு) நான்கு நியாய விலைக் கடைகளும் ஒரே இடத்தில் இருக்கிறதா? அதாவது முழு நேரக் கடைகள் எந்த இடத்திலும் இருக்கலாம். ஆனால், மக்களுக்கு வசதியாக இருக்கவேண்டும் என்பதுதான் சட்ட விதி. அதாவது, ஒரு நியாய விலைக் கடைக்கும் மற்றொரு கடைக்கும் கூட்டுறவுச் சங்க விதிகளின் பிரகாரம் 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும்; பொதுவாக ஒரு தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும்; ஒரு பகுதிநேர கடையில் 150 கார்டுகள் இருக்கவேண்டும் என்பதுதான் சட்ட விதியில் உள்ளது.*

இந்த மாதிரி இருக்கும்பட்சத்தில், மக்களுடைய வசதிக்குத் தகுந்தவாறு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி மக்கள் சிரமப்படுகிறார்கள் என்றால், அந்தப் பகுதியிலே அரசுக் கட்டடமோ அல்லது அரசு சார்ந்த கட்டடமோ, உள்ளாட்சித் துறையின் சார்பில் கட்டடங்கள் இருக்கும்பட்சத்தில், நியாய விலைக் கடைகள் நிச்சயமாக மாற்றிக் கொடுக்கப்படும். அந்தமாதிரி கட்டடங்கள் இல்லாதபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டிக் கொடுத்தால், நியாய விலைக் கடைகள்

[2016 ஆகஸ்ட் 12

மாற்றிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

முற்பகல் 10–20

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கருத்துக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கடந்த முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 22, ஆனந்தபுரம் பகுதியில் ஒரு நியாய விலைக் கடைக்குக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தோம். இதுவரை அந்தக் கட்டடம் திறக்கப்படவில்லை. அதை உடனடியாகத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தாம்பரம் நகராட்சிக்கு உட்பட்ட 38–வது வட்டத்திலே அந்தப் பகுதி மக்கள் ஒரு நியாய விலைக் கடையைக் கேட்டிருக்கின்றார்கள். அகரம்தென் பஞ்சாயத்தில், கஸ்பாபுரம் பகுதியில் ஒரு நியாய விலைக் கடையைக் கேட்டிருக்கின்றார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் எங்கெல்லாம் வாய்ப்பு இருக்கின்றது என்று நினைக்கின்றார்களோ, அதற்கு சட்டமன்ற நிதியை ஒதுக்கித் தருகிறேன், உடனே அந்தக் கட்டடங்களைத் திறக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அவர்களுடைய நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடம் இதுவரை திறக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்குக் காரணம் நிச்சயமாக சட்ட விதியை மீறி ஏதாவது நடந்திருக்கும். இல்லையென்றால் அந்தப் பகுதி மக்களுடைய ஒரு எதிர்ப்பாக இருக்கும். இல்லையென்றால் மின்சார இணைப்பு கிடைக்காமல் இருக்கும். ஏதாவது ஒரு காரணத்தினால்தான்,*

அது திறக்கப்படாமல் இருக்குமேயொழிய, மக்களுக்குப் பயன் தரக்கூடிய மக்கள் விரும்பக்கூடிய பகுதியில் கட்டடம் கட்டப்பட்டிருந்தால், நிச்சயமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டப்பட்ட கடைகளை மக்களுக்குப் பயன்படாமல் வைத்திருந்ததாக சரித்திரம் இல்லை.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், கடந்த 5 ஆண்டுகளில் பார்த்தீர்களென்றால், ஏறத்தாழ 602 புதிய கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதேபோல 1,434 பகுதிநேரக் கடைகளைக் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். ஆக மொத்தம் 2,036 கடைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிக்கொடுத்திருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு குறை அங்கே இருக்கும். அது என்ன குறை என்பது துறை ரீதியாக ஆய்வு செய்யப்படும். அந்தக் கடைகள் எதனால் திறக்கப்படவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். ஒன்று, மின்சார இணைப்பு இல்லாமல் இருக்க வேண்டும் அல்லது அந்தப் பகுதி மக்கள் அங்கே போகமாட்டோம் என்று சொல்லியிருக்க வேண்டும். ஒரு கிணற்றின் மேலே கடையைக் கட்டி இருக்கலாம். ஒரு கடையைக்கூட கிணற்றின்மீது கட்டியிருக்கின்றார்கள். அதெல்லாம் தவறான இடம். அந்த மாதிரியான இடங்களில் கடையைக் கட்டினால், அதை எப்படிப் போய் திறக்க முடியும்? அங்கே பொருட்களை எப்படி வைக்க முடியும்? சில கடைகள் பள்ளமான பகுதியில் கட்டப்பட்டிருக்கலாம். மாண்புமிகு அம்மா அவர்கள் பொதுமக்களுக்கு தரமான, நல்ல பொருள்களை வழங்கிக்கொண்டிருக்கின்றார்கள். எந்தவிதமான பாதிப்பும் வரக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கின்றார்கள். பல இடங்களில் மக்களுடைய நலன் கருதி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அது கூட்டுறவுச் சங்க விதிகளுக்கு உட்பட்டு வரும்போது, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

திரு ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் என் முதற்கண் வணக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில், 75–வது வட்டம்,* S.S. Puram, B-Block *பகுதியில் உள்ள மக்கள் தங்களுக்குரிய நியாய விலைக் கடையினைத் தேடி நீண்ட தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.* S.S. Puram *பகுதியில் கிட்டத்தட்ட 500 குடும்பங்கள் வசிக்கின்ற சூழ்நிலையில், அந்த* S.S. Puram, B-Block *பகுதியில் உள்ள மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, அவர்கள் வசிக்கின்ற அந்த* B-Block *பகுதியில் ஒரு நியாய விலைக் கடையை அமைத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னமாதிரிதான், நகர்ப்புறங்களில், 150 கார்டுகள், இடைவெளி ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும்பட்சத்தில் அங்கே, நிச்சயமாக பகுதிநேரக் கடைகள் அமைத்துக் கொடுக்கப்படும். இன்னும் ஒன்று என்னவென்றால், சட்ட விதிகளுக்கு உட்பட்டுதான் செய்ய முடியும். கூட்டுறவுச் சங்கம் அந்தக் கடைகளை நடத்துகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியில் அரசுக் கடை அல்லது இலவசமாக அந்தப் பகுதியில் கடை கிடைக்கும்பட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அதற்காக கூட்டுறவுத் துறையின் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, கடை திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

துணை மின் நிலையம்

***812—திரு. ஆர். நடராஜ்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாப்பூர் தொகுதி, மந்தைவெளியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மந்தைவெளிப் பகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு உண்டான ஏற்பாடுகளை செய்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.*

திரு. ஆர். நடராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் காவல் பணியில் இருந்த எனக்கு, மக்கள் சேவகனாகப் பணிபுரியும் வாய்ப்பினை அளித்த உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) காவலர்களின் நிரந்தர காவல் தெய்வம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது இதயமார்ந்த கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'நன்றி' என்ற ஒரு சொல்லால் நன்றிக் கடனைத் தீர்க்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் அர்ப்பணிப்போடு, நேர்மையாக, மக்கள் பணியில் ஈடுபடுவதே நான் அளிக்கக்கூடிய நன்றிக் கடன். உத்தரவின்றி வர முடியாது என்று வெளியில் காவல் பணியில் இருந்த எனக்கு, உத்தரவு*

அளித்து வெற்றி பெறச் செய்த மயிலாப்பூர் தொகுதி மக்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகப் பொறுப்பாளர்கள், கழக கட்சித் தொண்டர்கள், தோழமைக் கட்சித் தொண்டர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்த 'பொறுமையின் சிகரம்' மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—25

மயிலாப்பூர் தொகுதி மக்களுக்கு லஸ், விசாலாட்சித் தோட்டம், பட்டினப்பாக்கம் மற்றும் மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் உள்ள 4 துணை மின் நிலையங்கள்மூலம் மின் வசதி செய்து தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு துணை மின் நிலையமும் 33/11 கே.வி.ஏ. மின் திறன் கொண்டதாக அமைந்துள்ளன. மந்தைவெளியில் மட்டும் 5,924 மின் இணைப்புகள் உள்ளன. பயனீட்டாளர்களின் மின் பயன்பாடு அதிகரித்துள்ளதால், கூடுதலான மின்சாரம் உபயோகப்படுத்தப்படுகிறது. பல நேர்வுகளில் மின்னழுத்தமும் குறைகிறது. மேலும், பட்டினப்பாக்கம் மின் நிலையம் கடற்கரையையொட்டி இருப்பதால், உப்புக் காற்றால் மின் நிலையத்தில் பழுது ஏற்பட்டு, மின் தடை பல மணிநேரம் தொடர்கிறது. மின் பொறியாளர்கள் மயிலையின் மத்திய பகுதியான மந்தைவெளியில் ஒரு துணை மின் நிலையம் அமைத்தால், தடையின்றி மின்சாரம் வழங்க இயலும் என்று தெரிவித்துள்ளார்கள். மந்தைவெளியில் வசிக்கும் மக்களுக்கு சீரான மின் விநியோகம் செய்ய, மின் சாதனப் பொருட்களை சேதமில்லாமல் இயக்குவதில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க ஒரு திட்டம் இருப்பதாக தெரிவித்துள்ள மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலையின் பல பகுதிகளில் மின் பெட்டிகள் பழுதடைந்துள்ளன. சென்னையில் 38,844 மின் தூண் பெட்டிகள் ரூ.270 கோடி செலவில் உயர் சிதைவுத் திறன் எரியிழை கட்டுப்பாட்டுடன்கூடிய லேசான எஃகு உலோக உறை கொண்ட 6 வழி மின் தூண் பெட்டிகளாக மாற்றப்படுமென்று, கேட்பதற்கு முன்பே மக்கள் நலன் கருதி அறிவிப்புகளை வெளியிட்ட (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு

என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள பழுதடைந்த மின் தூண் பெட்டிகளையும் மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மந்தைவெளிப் பகுதியில் துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். சென்னையைப் பொறுத்தவரை, இடம் கிடைப்பது என்பது மிக அரிதாக இருக்கிறது. எனவே, PRO Quarters–ல் இடம் கேட்டிருக்கிறோம். அதற்குண்டான ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இடம் கிடைத்தவுடன், உடனடியாக அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மின்மாற்றிகளைப் பொறுத்தவரை, இரண்டு நாட்களுக்கு முன்பாக மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவிப்பு செய்திருக்கின்றார்கள். சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் மின்மாற்றிகளை மாற்றி அமைக்க வேண்டும்; உயரழுத்தம் காரணமாக மின் பளு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் 14,535 மின்மாற்றிகள் அமைப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

62—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***1834—திரு. கே.எஸ். மஸ்தான்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி சட்டமன்றத் தொகுதி, செஞ்சி மற்றும் மேல்மலையனூர் இரு வட்டங்களை உள்ளடக்கிய பின்தங்கிய தொகுதி. எந்தவித தொழிற்சாலைகளும் இல்லாத தொகுதி. அரசு சார்ந்த மருத்துவம் மற்றும் பொறியியல், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லாத தொகுதி. ஏழ்மையில், வறுமையில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்கள் அதிக அளவில் விவசாயத்தைத் தொழிலாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்து வருகின்ற தொகுதி. செஞ்சி தொகுதியில் 41 நடுநிலைப் பள்ளிகளும், 24 உயர்நிலைப் பள்ளிகளும், 20–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் தேர்ச்சி பெறுகின்ற மாணவர்கள் கல்லூரி படிப்பிற்குச் செல்ல வேண்டுமானால், சுமார் 60 கிலோ மீட்டர் தூரம் கடந்து திருவண்ணாமலை,*

2016 ஆகஸ்ட் 12]

விழுப்புரம், திண்டிவனம் போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டிய சிரமமான நிலையுள்ளது. எனவே, செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, பாலிடெக்னிக், I.T.I. போன்ற கல்லூரிகள் அமைத்துத்தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்க விரும்புகின்றேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தில், ஏற்கெனவே 2 அரசு பல வகை தொழில் நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 8 சுய நிதி பல வகை தொழில் நுட்பக் கல்லூரிகளும் என மொத்தம் 10 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. 2012–2013 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் புதிய பலவகை தொழில் நுட்பக் கல்லூரி ஒன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. அக்கல்லூரிக்கான புதிய கட்டடமும் 12–6–2015 அன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை அனைத்துப் பல வகை தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் மொத்தம் 4,320 மாணவ, மாணவியர்கள் பயிலும் வகையிலே சேர்க்கை இடங்கள் உள்ளன. 2015–2016 ஆம் ஆண்டில் பார்த்தோம் என்றால், அந்த இடங்களில் 3,019 இடங்கள் மட்டுமே பூர்த்தி அடைந்துள்ளன. ஏற்கெனவே இயங்கிவரும் கல்லூரிகளில் 1,301 மாணவர்களுக்கான சேர்க்கை இடங்கள் பூர்த்தி ஆகவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றதைப்போல அந்தப் பகுதியில் புதிதாக ஒரு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி துவங்குவதற்கு அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

[2016 ஆகஸ்ட் 12

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நிலை, மேல்நிலை பள்ளிப் படிப்பிற்குப் பிறகு கல்லூரிப் படிப்பு தொடர்ந்து படிக்க வாய்ப்பு இல்லாத மாணவர்கள், ஏழ்மை, வறுமை நிலையிலுள்ள விவசாயத் தொழிலை நம்பியுள்ள மாணவர்கள் சொந்தமாகத் தொழில் செய்து வாழ்வதற்கு வசதியாக பலவகை தொழில் நுட்பக் கல்லூரியின் அவசியத்தைக் கருதி, இந்த பலவகை தொழில் நுட்பக் கல்லூரியை அமைத்துத்தர வேண்டுமாய், அதே நேரத்தில்* ** *பல வகை தொழில் கல்வியில் ஏதேனும் ஒரு கல்வி. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுவெல்லாம் தேவையில்லாத வார்த்தைகள் அவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் கேள்வி கேளுங்கள். உயர் கல்வி சம்பந்தமான கேள்வியில் இது தேவையற்றது. ஆகவே, அவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுடைய எதிர்காலத்தின் அவசியத்தைக் கருதி பல வகை தொழில் நுட்பக் கல்லூரியை நீங்கள் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செய்வீர்களா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது அரசு கல்லூரி இரண்டும், அரசு உதவி பெறும் கல்லூரி ஒன்றும், சுய நிதி கல்லூரிகள் இருபத்து ஐந்தும், பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி ஒன்றும் என மொத்தம் 29 கலை, அறிவியல் கல்லூரிகள் அங்கே இயங்கிக் கொண்டிருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011 முதல் 2016 வரை மொத்தமாக அறிவிக்கப்பட்ட 67 கல்லூரிகளில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்று விழுப்புரம் மாவட்டத்திற்கும் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

சுட்டிக்காட்டி, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல அரசு கல்லூரி ஒன்றும் இயங்கி வருகிறது. மேலும், புதிதாக ஒரு அரசு கல்லூரியும், 8 சுய நிதி கல்லூரிகளும், மொத்தம் 10 கலை, அறிவியல் கல்லூரிகளும், பாலிடெக்னிக் கல்லூரியும், ஆக மொத்தம் 40 கல்லூரிகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. நான் முன்னரே குறிப்பிட்டதைப்போல, அரசு பல வகை தொழில் நுட்பக் கல்லூரியில் 2015–2016 மற்றும் 2016–2017 ஆகிய 2 ஆண்டுகளில் மாணவர்களுடைய சேர்க்கையில் 110 இடங்கள் காலியாக இருக்கின்றன.

ஆகவே, புதிதாக அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு விதிமுறைகளின்படி மாநகராட்சிகளுக்குட்பட்ட பகுதி என்றால் 1½ ஏக்கர் நிலம், நகராட்சிக்குட்பட்ட பகுதி என்றால் 1½ ஏக்கர் நிலம் மற்றும் கிராமப் பகுதி என்றால் 4 ஏக்கர் நிலம் வேண்டும். மேலும், 18 ஆசிரியர்கள் பணியிடங்களும், 43 ஆசிரியர் அல்லாத பணியிடங்களும் தேவை. தொடர் செலவினமாக 17 கோடியே, 62 இலட்சம் ரூபாயும், தொடராச் செலவினமாக 33 கோடியும் மொத்தமாக 50 கோடியே, 62 இலட்சம் ரூபாய் அரசு பல வகை தொழில் நுட்பக் கல்லூரி தொடங்குவதற்குத் தேவைப்படுகின்றது. கட்டடம் கட்டப்படும் இடத்தில் மண்ணின் தன்மையைப் பொறுத்து மேலும் இதற்கு கூடுதல் செலவாகும். ஆகவே, புதிதாக விழுப்புரம் மாவட்டத்தில், செஞ்சி தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு ஓர் அரசு பல வகை தொழில் நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கு தற்போது அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலங்களில், அப்படி தேவைப்படின் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அதைப் பற்றி பரிசீலிக்கும் என்று சொல்லி, அமருகின்றேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள். (குறுக்கீடு) உங்களுக்கு இரண்டு கேள்வி கேட்க அனுமதி கொடுத்துவிட்டேன், உட்காருங்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1½ கோடி தொண்டர்களின் உயிர் மூச்சு, 7½ கோடி மக்களின் இதயத் துடிப்பு, எங்களையெல்லாம் வாழ வைக்கும்

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த பொற்கால ஆட்சிக் காலத்தில், விதி 110-ன்கீழ் புதிய வட்டம் அறிவிக்கப்பட்டு, தற்போது செய்யாறு தொகுதிக்கு உட்பட்ட வெம்பாக்கம் வட்டத்தில், அரசின் சார்பாக அனைத்து வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தற்போது புதிதாக உருவாக்கப்பட்ட வெம்பாக்கம் வட்டத்தில், மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூலமாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011-2016 ஆம் ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 67 பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகளில், 16 கல்லூரிகள் தொடங்கப்பட்டன. அந்த 16 கல்லூரிகளில், திருவண்ணாமலை மாவட்டத்திலும் ஒரு கல்லூரியைத் தொடங்கிய பெருமை மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள பகுதியில், மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, கூடுதலாக தேவைப்படுகின்றபட்சத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசானது பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2016 ஆகஸ்ட் 12]

"நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு."

அதாவது, பொது மக்களுக்கு பயனுள்ள செயல்களைச் செய்யும் பண்பாளர்களை உலகம் என்றும் மதிக்கும், பாராட்டும் என்ற குறளுக்கேற்ப வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, என்னைப் போன்ற இளைஞர்களை எல்லாம் ஊக்கப்படுத்தி, நான் இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய, எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதி கிராமப்புறங்கள் அதிகம் உள்ள பகுதியாகும். அது 99 ஊராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் ஒரு நகராட்சியை உள்ளடக்கியது. ஆகவே, எங்கள் பகுதியில், கிராமப்புற மாணவர்களின் நலன்களைக் கருதி, ஆற்காடு தொகுதியில், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2011–2016 ஆம் ஆட்சிக் காலத்திலேயே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்போதும் இல்லாத அளவிற்கு மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், மாணவர்களுடைய சேர்க்கையைக் கருதி, யார் எந்த பகுதியில் கல்லூரியைக் கேட்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொள்ளாமல், எந்தப் பகுதியில் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் எல்லாம், புதிதாகக் கல்லூரியைத் தொடங்கினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அப்படி தொடங்கியபோதுதான், வேலூர் மாவட்டத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உறுப்பு கல்லூரியாக இரண்டும், பல்வகை தொழில்நுட்பக் கல்லூரியாக ஒன்றும், ஆக 67 கல்லூரிகளில், 3 கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். ஆகவே, என்றைக்குமே இளைய சமுதாயத்திற்கு, மாணாக்கர்களுக்கு, என்னென்ன தேவையோ, எங்கு கல்லூரி தேவையோ, வேறு எது தேவையோ

அதனைக் கண்டறிந்து, அவர்கள் கேட்காமலேயே வழங்கும் அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மாணாக்கர்களுக்கு தேவைப்படுகின்ற அளவில் புதிய பாடப் பிரிவுகளின் எண்ணிக்கையை உயர்த்தி, கடந்த காலங்களில் 959 பாடப் பிரிவுகளையும் தொடங்கி, அந்த மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்த அரசுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதியில், அங்கே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தேவைப்படின், அதனை அரசு ஆய்வு செய்து, அந்த இடத்தில் கல்லூரியை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச்சென்று, அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்து, அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

நூற்பாலை

*__2864__—**திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தொகுதி, பேட்டையிலுள்ள நூற்பாலையினை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதி, பேட்டையில் இயங்கி வந்த தென்னிந்திய கூட்டுறவு நூற்பாலையினை, மீண்டும் செயல்படுத்துவதற்கான

2016 ஆகஸ்ட் 12]

செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதி, பேட்டையிலுள்ள நூற்பாலை, தமிழகத்திலேயே முதன்முதலில் தொடங்கப்பட்ட, பாரம்பரியமிக்க நூற்பாலை ஆகும். இந்த நூற்பாலை 1952 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது; 1962 ஆம் ஆண்டில் இரண்டாவது பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, 1972 ஆம் ஆண்டில் இரண்டாவது பிரிவு விரிவாக்கம் செய்யப்பட்டு, 2001 ஆம் ஆண்டு வரை நல்ல முறையில் இலாபத்தில் இயங்கி வந்த இந்த நூற்பாலை, 2004 ஆம் ஆண்டு திடீரென்று மூடப்பட்டுவிட்டது. இதனால், 2,000 பேர் வேலைவாய்ப்பினை இழந்து, இன்று வரை வேலை இல்லாமல் இருக்கிறார்கள். தென் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்புகள் கிடைக்காத இந்நேரத்தில், இந்த நூற்பாலையைத் திறந்தால், 2,000 பேருக்கு நேரடியாகவும், 1,000 முதல் 2,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கன்னியாகுமரி, எட்டையபுரம், தேனி, தருமபுரி, புதுக்கோட்டை மாவட்டங்களில் இயங்கி வந்த 5 நூற்பாலைகளுக்காக சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை திறக்கப்பட்டுள்ளன. அதேமுறையில், இந்த நூற்பாலையையும் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 18 நூற்பாலைகள் இயங்கி வந்தன. இதில், 12 நூற்பாலைகளின் குவிந்த நஷ்டம், அந்த நூற்பாலைகளின் சொத்தின் மதிப்பைவிடக் கூடுதலாகிவிட்ட காரணத்தினால், அதை ஆய்வு செய்ய தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது.*

அதைத் தொடர்ந்து, உயர்மட்டக் குழு, ஆய்வுகள் மேற்கொண்டு, 12 நூற்பாலைகளை மூடுவதற்கு பரிந்துரை செய்தது. அந்த அடிப்படையில்தான், திருநெல்வேலி தொகுதி, பேட்டையில் இயங்கி வந்த நூற்பாலை மூடப்பட்டதே தவிர, 2004 ஆம் ஆண்டு அந்த நூற்பாலை மூடப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது ஒரு தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மீதமுள்ள 6 நூற்பாலைகளுக்கு 175.23 கோடி ரூபாயைக் கொடுத்து, நவீனமயமாக்கினார்கள். அந்த 6 நூற்பாலைகளில், 5 நூற்பாலைகள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் இயங்கிவரும் நூற்பாலை மட்டும் கொஞ்சம் நஷ்டத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அந்த நூற்பாலையையும் இலாபத்தில் இயக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோலவே, இந்த நூற்பாலையையும் திறந்தால் கண்டிப்பாக இலாபமாக இயங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்நிய சந்தைக்கு நாம் செலவு செய்யும் நிதியைவிட, உள்ளூர் சந்தைக்கு பொருட்களை அனுப்பும் இந்த நூற்பாலைக்கு நாம் நிதி ஒதுக்கினால், கண்டிப்பாக நமக்கு நாமே என்ற திட்டத்தின்படி, நாம் தயாரிக்கும் பொருட்களை நாமே உபயோகப்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கும். எனவே, திருநெல்வேலி தொகுதி, பேட்டையிலுள்ள நூற்பாலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அந்த நூற்பாலையில் *குவிந்த நட்டம் அதிகமாக இருந்தது. (குறுக்கீடு) அதனால், 2004 ஆம் ஆண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அந்த நூற்பாலை மூடப்பட்டது. (குறுக்கீடு) எனவே, இந்த ஆலையை மீண்டும் திறப்பதற்கான பரிசீலனை எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், முடிந்தவரையில் குற்றச்சாட்டைத் தவிர்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர்கள் உட்காருங்கள், நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவரை திருத்திக் கொள்ளுமாறு சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமணன் அவர்கள், 2004 ஆம் ஆண்டில்... (குறுக்கீடு) நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள்* question raise *செய்திருக்கிறீர்கள். நான் பதில் சொல்லப்போகிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் ஏன் அங்கே பார்த்துப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு)*

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், நீங்கள் துணை கேள்விக்குரிய பதிலை மட்டும் சொல்லி, உட்காருங்கள். (குறுக்கீடு)*

முற்பகல் 10—45

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. உறுப்பினர் திரு. லெட்சுமணன் அவர்கள், 2004 ஆம் ஆண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அந்த நூற்பாலை மூடப்பட்டது என்கிற ஒரு குற்றச்சாட்டை இங்கே சொன்னார். அதற்குத்தான் நான் பதில் சொன்னேனே தவிர, நான் தவறாக எதுவும் சொல்லவில்லை. குவிந்த நட்டம் சொத்தின் மதிப்பைவிட அதிகமாகிவிட்ட காரணத்தினால் தலைமைச் செயலாளருடைய தலைமையில் அனைத்துத் துறைச் செயலாளர்கள் சிபாரிசின் அடிப்படையில்தான் அந்தப் பேட்டை நூற்பாலை மூடப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர் திரு. லெட்சுமணன் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். 2004 ஆம் ஆண்டு ஆட்சியிலே மூடப்பட்டது என்று சொன்னதற்கு ஏற்கெனவே பதில் சொல்கிறபோது அது தவறான தகவல் என்று அமைச்சர் அவர்களே பதிவு செய்துவிட்டார்கள். மீண்டும் அதையே இங்கே பயன்படுத்தி ** என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார், தி.மு.க. ஆட்சியிலே ** எனவே, தயவு கூர்ந்து நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, கேள்வி நேரம் எந்த விதிமுறைப்படி நடைமுறைப்படுத்தப்படும் என்பது*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 ஆகஸ்ட் 12]

தங்களுக்கு நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அவர் சொன்ன தி.மு.க. ஆட்சியிலே ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்குவதுதான் முறையாக இருக்கும். எனவே அதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தனது கருத்திலே அவர் சொன்னது அந்தத் திட்டத்தைத்தான் ** என்று குறிப்பிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தி.மு.க. ** என்று அவர் சொல்லவில்லை. திட்டம் ** என்பது குற்றச்சாட்டு கிடையாது. திட்டம் ** என்று சொன்னால், அது செயலிழந்துவிட்டது என்றுதான் குறிப்பிட்டார். அதுதான் அர்த்தம். அவர் திட்டத்தைத்தான் சொன்னாரேயொழிய தி.மு.க.வைச் சொல்லவில்லை. எனவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நான் சொல்கிறேன். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. ஆகவே மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் ** என்று சொன்னதைத் திருத்திச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பதற்கு பதிலாகக் குவிந்த நட்டம் அதிகமாக இருந்தது என்கிற வார்த்தைகளைப் பயன்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 64. மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

64—

மருத்துவமனையை மேம்படுத்துதல்

***43—திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டிலுள்ள வட்டம் சாரா மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புதிதாக வருவாய் வட்டங்கள் உருவாக்கப்படும்பொழுது அவ்வட்டத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது வட்டம்சாரா மருத்துவமனை, வட்ட மருத்துவமனையாக உயர்த்தப்படுவது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசின் உயர்ந்த நோக்கம். அந்த வகையிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30–8–2015 அன்று பேர்ணாம்பட்டை புதிய தாலுகாவாக உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகையினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் நோக்கத்தின்படி, 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பதுபோல எங்கெங்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தாலுகாவைக் கொடுத்திருக்கிறதோ, அங்கெல்லாம் அந்த மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே தரம் உயர்த்தப்படும். தங்களுடைய பேர்ணாம்பட்டு மருத்துவமனையும் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சமில்லை, அமுங்குதல் இல்லை, நடுங்குதல் இல்லை, நாணுதல் இல்லை, பாவம் இல்லை, பதுங்குதல் இல்லை, ஏது நேரிடினும் இடர்படமாட்டார், அண்டம் சிதறினாலும் அஞ்சமாட்டார், கடல் பொங்கி எழுந்தாலும் கலங்கமாட்டார், யாருக்கும் அஞ்சார், எதற்கும் அஞ்சார், எங்கும் அஞ்சார், எப்போதும் அஞ்சார், கொடிய விஷம்கொண்டு குடும்பத்துடன் படமெடுத்தாலும் பயப்படமாட்டார். தனக்கு தொழில் மக்கள் சேவை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்று அனுதினமும் மக்கள் பணியே தன் பணி என்று, மக்களால் அம்மா, மக்களுக்காகவே அம்மா என்று உழைக்கும் என் அன்னை தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு நகரத்தில் செயல்படும் அரசு மருத்துவமனை. . . (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *1925 ஆம் ஆண்டு தாய்சேய் நல மருத்துவமனையாக தொடங்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டு முதல் அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. அது பேர்ணாம்பட்டு நகர மக்கள் மற்றும் பேர்ணாம்பட்டு ஒன்றிய மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் சிறப்பான சேவை ஆற்றி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களால் புதிய பேர்ணாம்பட்டு வட்டம் 31–8–2015 அன்று அறிவிக்கப்பட்டது. எனவே, பேர்ணாம்பட்டு நகரத்தில் செயல்பட்டுவரும், வட்டம் சாரா மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாக மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

[2016 ஆகஸ்ட் 12

இன்முகத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்கும் முன்னே வாரி வழங்கிக் கொடுப்பவர் என்பதை மீண்டும் நிரூபிக்கும் வகையில் வாரி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒரு வினா. குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு நகரத்தில் செயல்பட்டுவரும் அரசு மருத்துவமனைக்கு C.T., M.R.I. scanning machine, Blood Testing Auto Analyser, Modern Kitchen, Modern Laundry, Male Surgical Ward, Female Surgical Ward, மருத்துவர், செவிலியர், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது அவசியமாகிறது. அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்தித் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், வருவாய்த் துறையிலே புதிய தாலுகா உருவாக்கப்படுகின்றபோது அங்கிருக்கக்கூடிய வட்டம் சாரா மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், C.T., M.R.I. போன்ற வசதிகள் வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய வேலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியிலே அத்தனை வசதிகளும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, நோயாளிகள் பயன்பெற்று வருகிறார்கள். படிப்படியாக முதலிலே மாவட்ட மருத்துவக் கல்லூரிகள், அதற்குப் பின்னாலே மாவட்ட தலைமை மருத்துவமனைகள் C.T., M.R.I. போன்ற வசதிகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் இந்த நீண்ட நாள் துயர் துடைக்கும் ஆற்றல் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மட்டுமே உள்ளது.*

'நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்'

*என்ற ** நிரந்தரமாக அகற்றி தமிழ் மக்களைக் காத்து,*

'வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி'

என்ற குறளின் இலக்கணமாக நல்லாட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்து, அமைகிறேன். (குறுக்கீடுகள்) நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆட்சேபனைக்குரிய அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

65—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***2698—திரு. அ. ராமு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

(அ) குன்னூர் தொகுதி, மேலூர் ஊராட்சி, கொலக்கம்பையிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை குன்னூர் தொகுதி, மேலூர் ஊராட்சி, கொலக்கம்பையில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தங்கத்தாரகை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். கொலக்கம்பை சுற்றுவட்டாரப் பகுதியானது முழுவதும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சுமார் 25 கிராமங்களில் வாழ்கின்ற பகுதி. எனவே, தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மேற்படிப்பிற்கு சுமார் 8 கி.மீ. தூரம் வாகனத்தில் செல்லவேண்டியுள்ளது. கல்விக் கடவுள் சரஸ்வதி தாயின் மறு உருவமாக காலணி முதல் கணினி வரை தந்து, கல்விப் புரட்சியில் உலகத்திற்கே வழிகாட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக கல்வித் துறையின் பிதாமகள், மாண்புமிகு தமிழக நிரந்தர முதலமைச்சர் அம்மா அவர்களினுடைய கருணைப் பார்வைக்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச்சென்று தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் மேற்படிப்பிற்கு வழிவகுக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

2016 ஆகஸ்ட் 12]

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 221 புதிய தொடக்கப் பள்ளிகளும், 112 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், புதிய பள்ளிகள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட வகையிலே 1,545 பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் சட்டமன்ற தொகுதியில் 125 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 28 நடுநிலைப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் 5,975 மாணவ மாணவியர்களும், 412 ஆசிரியர்களும் உள்ளனர். மேலும், குன்னூர் சட்டமன்ற தொகுதியில் 22 உயர்நிலைப் பள்ளிகளும், 18 மேல்நிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 12,379 ஆகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த பொற்கால ஆட்சியில் குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு தொடக்கப் பள்ளி புதியதாகத் துவங்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாகவும், ஒரு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

***[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

போக்குவரத்துத் தொழிலாளர் ஊதிய ஒப்பந்தம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தம் செப்டம்பர் 1 ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 31 ஆம் தேதிக்குள்ளாக முடிக்கப்படவேண்டும். இன்னும் அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெறவில்லை. ஏற்கெனவே அறிவித்த 12—வது ஊதிய ஒப்பந்தத்தில் 5.5 சதவீதம் ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டது. அந்தத் தொகையும் இன்னும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே அதுகுறித்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, இன்று காலையில்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். என்னிடம் வந்து 'தகவல் கோரல்', என்ற முறையில் கேட்கிறேன் என்று சொன்னீர்கள். இப்போது கேட்டுவிட்டீர்கள்; அதை நான் பதிவு செய்துவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், இதற்கு உங்களிடம் பதில் இருக்கிறதா? (குறுக்கீடு) உட்காருங்கள். தகவல் கோரல்தானே? அப்படியிருந்தால்தான் நான் அனுமதிப்பேன்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே போடப்பட்ட ஒப்பந்தம் இந்த மாதம் இறுதி வரை நடைமுறையிலே உள்ளது என்பதையும், இந்த வினாவை எழுப்பியிருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர். அவருக்கு நன்றாகவே தெரியும். சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 1—9—2010—லே போடப்படவேண்டிய ஒப்பந்தத்தை, ஆறு*

2016 ஆகஸ்ட் 12] [திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்]

மாதங்களுக்குப் பின்னர்தான் இறுதி செய்தார்கள் என்பதை இந்தப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கவன ஈர்ப்பு

பஞ்சு விலை ஏற்ற இறக்கத்தினால் ஜவுளித் தொழிலில் ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பஞ்சு விலை ஏற்ற இறக்கத்தின் காரணமாக ஜவுளித் தொழிலில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *இதுகுறித்து விரிவான விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

இந்திய ஜவுளித் தொழிலானது, நாட்டில் விவசாயத்திற்கு அடுத்ததாக, அதிக வேலைவாய்ப்பு வழங்கும் இரண்டாவது மிகப் பெரிய தொழிலாக விளங்குகிறது. ஜவுளித் தொழிலானது, தொழில் உற்பத்தியில் 14 விழுக்காடு அளவிற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 விழுக்காடு அளவிற்கும், நாட்டின் ஏற்றுமதி வருவாயில் 11 விழுக்காடு அளவிற்கும் பங்களித்து, நாட்டின்

[திரு. ஓ.எஸ். மணியன்] [2016 ஆகஸ்ட் 12

தொழில் உற்பத்தி, வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதி வருவாய் ஈட்டுதல் போன்றவற்றில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இத்தொழில், நாட்டில் 45 மில்லியன் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது.

• உலகளவில் இந்தியா பருத்தியினை அதிக அளவில் உற்பத்தி செய்கிறது.

• ஏற்றுமதியில் இந்தியா உலகளவில் 3–வது இடத்தை வகிக்கிறது.

• சராசரியாக ஓராண்டிற்கு 350 இலட்சம் பருத்தி பஞ்சு பேல்கள் உற்பத்தியாகிறது. அதன் மதிப்பு சுமார் 57 ஆயிரம் கோடி ஆகும்.

• இந்தியாவிலுள்ள பஞ்சாலைகளுக்கு ஓராண்டுக்குத் தேவையான பஞ்சு பேல்கள் சுமார் 300 இலட்சம் பேல்கள் ஆகும்.

• ஓராண்டிற்கு சுமார் 100 இலட்சம் பேல்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

• ஜவுளித் தொழிலானது–இந்தியாவிலுள்ள 40 மில்லியன் விவசாயிகள், பருத்தி அரைப்பவர், வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினைத் தருகிறது.

மத்திய அரசானது கடந்த பிப்ரவரி 2007 ஆம் ஆண்டில் பருத்தியை அத்தியாவசிய மூலப்பொருள் பட்டியலிலிருந்து (Essential Commodities Act) நீக்கிய காரணத்தாலும், உலகமயமாக்கல் கொள்கையை நடைமுறைப்படுத்திய காரணத்தாலும், பருத்தி பஞ்சின் விலையில் ஏற்ற இறக்கமான சூழ்நிலை நிலவி வருகிறது. இச்சூழ்நிலையால் சந்தையின் உறுதியற்ற நிலைப்பாடு காரணங்களினால், பஞ்சு விலையானது கடந்த மூன்று மாத காலத்தில் 25% முதல் 30% வரை அதிகரித்துள்ளது.

பஞ்சு விலையானது கடந்த மூன்று மாதங்களில் ரூ. 37,000/–லிருந்து ரூ.50,000/–வரை ஒரு கண்டிக்கு (356 கிலோ) உயர்ந்துள்ளது. நூல் விலை உயர்வானது 4% முதல் 8% அளவு மட்டுமே உயர்ந்துள்ளது. பஞ்சு விலைக்குத் தக்கவாறு நூல் விலை உயர்வு கிடைக்காத காரணத்தால், அனைத்து நூற்பாலைகளும் நட்டமடையக்கூடிய நிலையே தற்போது நிலவி வருகிறது.

2016 ஆகஸ்ட் 12] [திரு. ஓ.எஸ். மணியன்]

இதனால் பல நூற்பாலைகள் தங்கள் இயந்திரப் பயன்பாட்டுத் திறனைக் குறைத்து இயக்கி வருகின்றன. நடப்பு ஆண்டு பஞ்சு பருவ காலத்தில் புதிய பஞ்சு வரத்து செப்டம்பர் இறுதியில் சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்காரணமாக நிலைமை சீரடைந்து, பஞ்சு விலையில் கணிசமான விலை குறைவு ஏற்பட்டு பஞ்சு தட்டுப்பாடின்றி கிடைக்க வழிவகை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது செயல்படும் விவரம்

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு, வருடம் முழுவதுமான உற்பத்திக் குறியீடானது விலையில்லா வேட்டி, சேலை மற்றும் சீருடை திட்டங்களுக்காக வழங்கப்பட்டு தொடர்ந்து நன்கு செயல்பட்டு வருகின்றன.

மேற்படி ஆலைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி சுமார் ரூ.175.22 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு, நவீனப்படுத்தப்பட்டு, அவை தொடர்ந்து நன்கு செயல்பட்டு வருகின்றன. மேற்படி இயங்கும் 6 கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் வருடம் முழுவதுக்கும் தேவையான பருத்தி மத்திய அரசின் இந்திய பருத்திக் கழகத்திடமிருந்து (Cotton Corporation of India, Mumbai) கொள்முதல் செய்யப்படுகிறது.

தற்போது, மத்திய அரசின் காட்டன் கார்ப்பரேசன் ஆப் இந்தியா நிறுவனத்தினர் 25,000 பேல்கள் மட்டுமே சரக்கிருப்பு உள்ளதாகத் தெரிவித்து, அதனையும் மின் ஏலம் (e-auction) மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொண்டதன் அடிப்படையில் கூட்டுறவு நூற்பாலைகள் மின் ஏலத்தில் கலந்துகொண்டு, 900 பேல்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இதல்லாது கூடுதலாக 2,500 பேல்களும் ஆகஸ்டு 2–வது வாரத்தில் ஒதுக்கீடு செய்து தரவும் இந்திய பருத்தி கழகம், மும்பை தெரிவித்துள்ளது.

மேலும், 3,000 பஞ்சு பேல்கள் குஜராத் மாநில சபர்கந்தா கூட்டுறவு ஒன்றியம்மூலம் ஆலைகளுக்கு தற்சமயம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி 3,000 பேல்களும் ஆலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதன்மூலம் மொத்தம் 3,900 பேல்கள் கூட்டுறவு ஆலைகளுக்கு இதுவரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளதால், வரும் நாட்களில் பஞ்சு தட்டுப்பாடின்றி

கூட்டுறவு ஆலைகள் தொடர்ந்து இயங்கக்கூடிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து வகையான நூலுக்கும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்ககத்தில் செயல்படும் நூல் விலை நிர்ணயக் குழு மூலமாக விலை நிர்ணயம் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய அரசின் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலமாகவும், அரசு நூல் கிட்டங்கிகளில் இருப்பாக வைக்கப்பட்டு, ஆண்டு முழுவதும் தங்குதடையின்றி நூல் விநியோகம் செய்யப்படுகிறது.

தற்போது, துறையின் இத்தகைய சீரான நடவடிக்கைகள்மூலம் ஆண்டு முழுவதற்கும் கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்களுக்குத் தங்குதடையின்றி வேலைவாய்ப்பு வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நெசவாளர்களுக்கும் தொடர்ந்து தங்குதடையின்றி தரமான நூல், சரியான விலையில் வழங்கப்பட்டு, ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது.

எனவே, தற்போது நிலவி வரும் இச்சூழ்நிலையில் மாநில அரசின் கைத்தறி மற்றும் துணிநூல் துறையில், மேற்படி நூல் சந்தை மற்றும் பருத்தி சந்தை நிலவரங்களை உன்னிப்பாக கவனித்து, அது சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

முற்பகல் 11–00

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் பொருளாதாரத்தில் ஜவுளித் துறையின் பங்கு மிக முக்கியமானது. இந்தியாவிலுள்ள மொத்த நூற்பாலைகளில் 40 சதவிகிதத்திற்கு மேலான நூற்பாலைகள் தமிழகத்தில்தான் உள்ளன. இந்தியா முழுவதும் நூற்பாலைகளில் 5.1 கோடி கதிர்கள் உள்ளன. அதில் தமிழ்நாட்டில் மட்டும் 2.4 கோடி கதிர்கள் உள்ளன. வருடத்திற்கு இந்தியாவில் ஒட்டுமொத்தமாக நூற்பாலைகளுக்கு 300 இலட்சம் பேல்கள் தேவைப்படுகின்றன. இதில் தமிழ்நாட்டிற்கு

மட்டும் 120 இலட்சம் பேல்கள் தேவைப்படுகின்றன. தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலில் 50 இலட்சம் பேர் நேரடியாக ஈடுபட்டு வருகின்றனர். இந்தியாவில் விளையும் பருத்தியில் 30 சதவிகிதத்தைத் தமிழகம்தான் உபயோகிக்கிறது. நூற்பாலைகள் மட்டுமல்லாமல், விசைத்தறிகள், ஆயத்த ஆடை நிறுவனங்கள், auto loom–கள், சாய ஆலை நிறுவனங்கள் என்று ஒட்டுமொத்த ஜவுளி உற்பத்தித் துறையின் கட்டமைப்பை தமிழகம் பெற்றுள்ளது. இந்த ஜவுளி உற்பத்தித் துறைக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. கார்த்திக், ஒரு கேள்வி கேளுங்கள். மற்றொரு கேள்விக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் கேள்வியைக் கேட்டு, பதிலைப் பெறுங்கள்.

திரு. நா. கார்த்திக்: ஒரு நிமிடம்தான். ஒரு நிமிடத்தில் கேள்வியை முடித்து விடுகிறேன். மூலப்பொருளான பருத்தி பஞ்சு, கடந்த 3, 4 மாதங்களில் ஏறத்தாழ 35 சதவிகிதம் விலை உயர்ந்துள்ளது. அதாவது, பஞ்சு விலையானது கடந்த மூன்று மாதங்களில் ரூ.37,000–லிருந்து 50,000 ரூபாய் வரை கண்டிக்கு உயர்ந்துள்ளது. இந்த அபரிமிதமான விலை உயர்வால் ஒட்டுமொத்த ஜவுளித் துறையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பஞ்சு விலையேற்றத்திற்கேற்ப நூல் விலையை உயர்த்த முடியாத காரணத்தால், நூற்பாலைகள் தினசரி நஷ்டத்தைச் சந்திக்கின்றன. அதைப்போல மூலப்பொருள் விலையேற்றத்தின் காரணமாக 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்று சொல்லப்படுகின்ற கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர், ஈரோடு, கரூர் போன்ற பகுதிகளிலுள்ள ஏற்றுமதி செய்யும் ஜவுளி நிறுவனங்கள் மற்ற நாடுகளுடன் போட்டியிட முடியாமல் ஏற்றுமதி வர்த்தகமும் பாதிக்கப்பட தொடங்கியுள்ளது. இதனால் உற்பத்திப் பொருட்கள் தேக்கம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நான் முன்பே சொல்லிவிட்டேன், கேள்வியைக் கேளுங்கள் என்று சொல்கிறேன். நீங்கள் அறிக்கையில் இருப்பதிலிருந்து கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் விளக்கமாகப் பேசிக்கொண்டே போனால் எப்போது முடிப்பது?

திரு. நா. கார்த்திக்: இதனால், இந்த நிலையைப் போக்குவது குறித்து தமிழக அரசினுடைய நிலையை அறிய விரும்புகிறேன்.

[2016 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் நான் சொல்ல வேண்டிய பதிலிலே கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பதிலை அவரே சொல்லிவிட்டார். தமிழ்நாட்டில் 5 இலட்சம் பேல்கள் பருத்தி மட்டும் உற்பத்தியாகின்றன. ஆனால், தமிழ்நாட்டிற்கு 125 இலட்சம் பேல்கள் தேவைப்படுகின்றன. இந்தியாவில் நூற்பாலைகளினுடைய எண்ணிக்கை 3,301 ஆகும். தமிழ்நாட்டில் மட்டும் 1,983 நூற்பாலைகள் இருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் 40 சதவிகிதம் என்று சொன்னார்; 47 சதவிகிதமாக இருக்கிறது. பருத்தி உற்பத்தி என்பது தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மிக அதிக அளவில் குறைந்திருப்பதற்குக் காரணம் பருவகால மாற்றம், கடுமையான வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் ஆகும். இதனால் 28 ஆயிரம் ரூபாயாக இருந்த 356 கிலோ கிராம் எடையுள்ள ஒரு கண்டி, இப்போது 50 ஆயிரம் ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இருப்பினும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நூற்பாலைகளினுடைய தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பை வழங்கிட வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காக நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, தொடர்ந்து பணி வழங்குகிற காரணத்திற்காக, கூடுதலான தொகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த மாதம் முதல் வாரத்தில் உற்பத்தியாகின்ற புதிய பருத்தி மார்க்கெட்டுக்கு வந்துவிடும். எனவே, விலை குறைந்துவிடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பருத்தி விளைச்சல் குறைவாக உள்ள நிலையில் வெளி மாநிலங்களையே நூற்பாலைகள் நம்பியுள்ளன. மத்திய அரசு,* Cotton Corporation of India (CCI) *என்னும் அமைப்பை ஏற்படுத்தி வைத்திருப்பதைப்போல, தமிழக அரசு ஓர் அமைப்பை ஏற்படுத்தி வெளி மாநிலங்களிலிருந்து பருத்தியை* season *சமயத்தில் கொள்முதல் செய்து, நூற்பாலைகளுக்கு இலாப நோக்கின்றி*

2016 ஆகஸ்ட் 12] [திரு. நா. கார்த்திக்]

கொடுக்கவும், தமிழகத்தில் பருத்தி விளைச்சலை அதிகரிக்கவும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டிலேதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நூற்பாலைகளை நவீனமயமாக்குவதற்காக 175.23 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். இந்த விலையேற்றம் என்பது தற்காலிகமானது; சீசன் நேரங்களில் குறையும்; மற்ற நேரங்களில் கூடும். எனவே, பருவகாலத்தில் கொள்முதல் செய்து இருப்பு வைப்பது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 30—எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(அ) கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016–2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை). மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலுள்ள உயிர்கள் நலமுடன் வாழ மழை தேவைப்படுகிறது. தமிழகம் நலமுடன் வாழ மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி தேவைப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றும் கொங்கு மண்டல மக்களின் மனதில் குடிகொண்டிருக்கும் குல தெய்வம் நடமாடும் எங்கள் தெய்வம் அம்மா, தமிழகத்தில் எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லையென்ற நிலையோடு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.20,00,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 444, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2184, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்.

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1871, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 396, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப் பகுதியில் பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்தத் தடை விதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 488, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லாவரம் தொகுதிக்குட்பட்ட நாகல்கேணியில் மாசுக் கட்டுப்பாட்டு அலுவலகம் துவங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 555, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் சண்முகாநதி, அமராவதி ஆறுகளில் ஆலைக் கழிவுகள் கலப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 806, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு குறிப்பிட்ட இடங்களில் மட்டும் சாப்பிட இட வசதி ஏற்படுத்தி சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 908, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பெண்ணாகரம் அருகேயுள்ள எறையூர் ஊராட்சியில் அமைந்துள்ள அம்பிகா சர்க்கரை ஆலையில் இருந்து வெளியேறும் புகையைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1244, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1361, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நெகிழிப் பைகளைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1405, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குளம் தொகுதியில் நெகிழிப் பைகளின் பயன்பாட்டைத் தடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1445, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி பூதலூர் புதுக்குடி கிராமத்தில் இயங்கும், SICGILSOL நிறுவனத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு அடைவதைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1543, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், நக்கலக்கோட்டை கிராமத்தில் உள்ள கல்குவாரியை மாசுக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1827, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி தொகுதி, ராகையன்பட்டி பஞ்சாயத்து பகுதியில் குப்பைக் கிடங்கில் தீ விபத்து ஏற்பட்டு சுற்றுச்சூழல் பாதிப்படைவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1940, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட களையநல்லூர்

கிராமத்தில் அமைந்துள்ள தரளி சர்க்கரை ஆலைமூலம் வெளியேறும் கழிவு நீர் மற்றும் நச்சுப் புகையால் மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1953, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுற்றுச்சூழல் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4291, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாசுபடுவதைத் தவிர்க்க நெடுஞ்சாலை ஓரங்களில் மரங்களை நடுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.20,00,01,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான், உங்களால் நான், உங்களுக்காகவே நான்' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அரசியல் பாதையை வகுத்து, மக்களை மட்டும் நம்பி, எவர் துணையுமின்றி தன்னந்தனியாக தேர்தலைச் சந்தித்து, 32 ஆண்டுகால அரசியல் வரலாற்றிலே புதிய சகாப்தத்தைப் படைத்த மாண்புமிகு எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள், அன்பின் திருவுருவம், அறிவின் சிகரம், ஆற்றலின் புகலிடம், ஆளுமையின் உறைவிடம், உண்மைக்கு உதாரணம், உழைப்பிற்கு ஆதாரம், உயர்விற்கு எடுத்துக்காட்டு எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) தகுதியின் அடையாளம், திறமைக்குச் சான்று, துணிச்சலின் தூதுவர், பண்பின் பிறப்பிடம், பாசத்தின் இருப்பிடம், நேசத்தின் நிறைகுடம் எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதத்தை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன்.*

திரு. பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 420, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 445, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 776, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1841, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2873, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. மோகன்.*

திரு. எம்.கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1872, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4306, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய *28* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*67,37,52,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *205*, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நள்ளி மன்னருக்கு நினைவு மண்டபம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய *28* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*67,37,52,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *340*, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது மக்களுக்குத் தேவைப்படும் தகவல்களை அரசு அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் தேவையான அளவு அறிவிப்புப் பலகைகள்மூலம் தெரிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய *28* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*67,37,52,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*1,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *397*, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாலைப் போக்குவரத்து மற்றும் மருத்துவ கண்காணிப்பு ஆலோசனைக் குழுக்களில் மூத்த பத்திரிகையாளர் ஒருவரை உறுப்பினராக சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 554, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திர போராட்ட வீரர் தியாகி கோபால் நாயக்கர் அவர்களின் வீர வாழ்க்கை வரலாற்றை பள்ளிப் பாடப் புத்தகத்தில் பாடமாக இடம்பெறச் செய்யவும் அவரது உருவம் பொறித்த தபால் தலை வெளியிடவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1257, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 1444, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, நடுக்காவேரி கிராமத்தில் தமிழறிஞர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களுக்கு*

மணிமண்டபம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1825, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி தொகுதியில் அரசு திட்டங்கள் கிராமங்கள் முழுவதும் சென்றடைய விளம்பரங்கள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1983, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கவிச்சக்கரவர்த்தி கம்பன் பெயரில் ஆண்டுதோறும் மாவட்டங்களில் விழா நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3472, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்தித் துறையின்மூலம் கீழ்பெண்ணாத்தூரில் அரசு பொருட்காட்சி அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–10

(இ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,58,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.*

திரு. ப. ரங்கநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 446, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4313, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 316, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் வெவ்வேறு பதவிகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 399, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுமக்கள் அரசிதழ்களை பெற, மாவட்ட அச்சகங்களில் விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1262, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1443, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன்.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு தொகுதி, திருவையாற்றில் அரசு அச்சகம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1783, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு நிறுவனங்களுக்கு எழுதுபொருட்கள் தங்குதடையின்றி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1817, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்.

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி தொகுதியில், நகரில் அமைந்துள்ள அரசுப் பதிப்பகத்திற்கு நவீன கருவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2023, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பழுதடைந்துள்ள அரசு அச்சு இயந்திரங்களை பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,58,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) ஆகிய துறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

@ 703 முதல் 752 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 753 முதல் 859 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணாவின் குரல் சங்கநாதமாய் முழங்கிய பேரவையில், முத்தமிழறிஞர் கலைஞரின் குரல் சண்டமாருதமாய் ஒலித்துக் கொண்டிருக்கும் பேரவையில், கலைஞரின் வழியில் எங்களின் எதிர்காலம் தளபதி அவர்கள் மக்களின் குரலாய், (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராய் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து எங்களை வழிநடத்தும் தளபதி பணியாற்றும் பேரவையில், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ், மொழி, இனம், பண்பாடு காக்க, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நிறைந்த இந்த மாமன்றம், என்றும் துணை நிற்கும் என்ற உறுதியான நம்பிக்கையோடு என் நன்றியினை இவர்களுக்கு உரித்தாக்குகிறேன். சுயமரியாதையைக் கற்றுத் தந்த தந்தை பெரியாருக்கு நன்றி. எங்களை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்களுக்கு நன்றி. ஓய்வறியா உழைப்பால் உயர்ந்த, தமிழினத்தை உயர்த்திய கலைஞருக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) கனிவு, பணிவு, துணிவு மூன்றையும் ஒருங்கே பெற்று, எங்களை வழி நடத்திச் செல்லும் சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் தளபதிக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றப் பேரவை உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்த வேளச்சேரி தொகுதி மக்களுக்கு நன்றி.

பொதுவாக வெற்றி, தோல்வி பற்றி பலவிதமான கருத்துகள் உள்ளன. ஒரு வெற்றியை நாம் எப்படி அடையாளம் காண்பது? சிலருக்கு வெற்றி என்றால் செல்வமாகும், பிறருக்கு அங்கீகாரமும், நல்ல உடல் நலமும், நல்ல குடும்பமும், மகிழ்ச்சியும், திருப்தியும், சிலருக்கு மன நிம்மதியும், வெற்றிக்கான அறிகுறியாகக் கருதப்படலாம். உண்மையிலேயே வெற்றி என்பது உள்ளார்ந்தது.

வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு அர்த்தம் கொண்டதாக வெற்றி இருக்கிறது. வெற்றி என்பதை ரெத்தினச் சுருக்கமாகத் தருகின்ற ஒரு விளக்கமாக நான் கருதுவது இதுதான். ஒரு மதிப்புவாய்ந்த இலக்கை படிப்படியாக அடைதலே வெற்றியாகும். படிப்படியாக என்கிறபோது வெற்றி என்பது ஒரு பயணமே தவிர, சேரும் இடம் வெற்றி அல்ல. அப்படிப்பட்ட மதிப்பு வாய்ந்த இலக்கை அடைய பயணத்தை மேற்கொண்டிருப்பவர்தான் எங்கள் மாண்புமிகு தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தளபதி அவர்களின் பொது வாழ்வுப் பயணத்தில் நானும் ஒரு தொண்டனாய், தமிழனாய், மனிதனாய் பயணிப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

முற்பகல் 11–15

புதிய சட்டமன்றப் பேரவை தொடங்கிய நாளிலிருந்து, நாட்டின் பல்வேறு பிரச்சினைகளையும், அதற்கான தீர்வினையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்கள் இங்கே எடுத்து வைத்து உரையாற்றினார்கள். தி.மு.க. உறுப்பினர்களும் பல்வேறு பிரச்சினைகளில் கருத்துகளை முன்வைத்துப் பேசினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அதற்கான விளக்கங்களை முன்வைத்து உரையாற்றினார்கள். இது என்னுடைய கன்னிப் பேச்சு. அப்படியானால், இந்தக் கூட்டத்தொடரில் நான் இந்தப் பேரவையில் இதற்கு முன்னால் எழுப்பிய குரல், இந்த பூமியில் குழந்தை பிறந்தவுடன் அழும் குரலைப்போல, என் தொகுதிக்காக எழுப்பிய குரல் அது. ஆகவே, என்னுடைய இந்த கன்னிப் பேச்சில் என் தொகுதிப் பிரச்சினைகளையும், மானியக் கோரிக்கை தொடர்பான கருத்துகளையும் பதிவு செய்ய நான் விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு பெய்த மழையில் வேளச்சேரி தொகுதி பெரும் துன்பத்திற்கு ஆளானது. அடுத்த மழை வரும் முன்னர் அரசு நீர்நிலைகள், வடிகால் முறைகள், குப்பை மேலாண்மை, மழை நீர் சேகரிப்பு போன்ற தக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, வேளச்சேரியைக் காப்பாற்ற வேண்டும். முக்கியமாக, அவசரமான பிரச்சினைகளில் துரிதமாக முடிவு எடுக்கவும், உடனடியாகச் செயல்படுத்தவும் அரசு முன்வரவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

வேளச்சேரி தொகுதியில் 179–வது வார்டு, சேவா நகரில் பல ஆண்டுகளாக ஆரம்ப சுகாதார நிலையம் இருந்து வந்தது. 2006 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் தளபதி அவர்களால் அந்த ஆரம்ப சுகாதார நிலையம் மிகப் பெரிய மகப்பேறு மருத்துவமனையாக மேம்படுத்தப்பட்டு, அதில் குளிர்சாதன வசதி, ஆபரேஷன் தியேட்டர், ஜெனரேட்டர் போன்ற வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு, தரம் உயர்த்தப்பட்டது. வேளச்சேரி, தரமணி, கானகம், அம்பேத்கர் நகர், ஆதம்பாக்கம், பள்ளிக்கரணை போன்ற பகுதிகளிலிருந்து ஏழைத் தாய்மார்கள் அந்த மருத்துவமனைக்கு வந்து மருத்துவப் பரிசோதனைகள் செய்வதுடன், குழந்தைகளும் பெற்றுச் சென்றிருக்கிறார்கள். தற்போது இந்த மருத்துவமனை வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால், அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்ட இந்த மருத்துவமனை பயன்படுத்தப்படாமல் பூட்டிவைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அதே இடத்தில் இந்த மருத்துவமனை இயங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, வேளச்சேரி, சேவா நகரில் 1996 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தளபதி அவர்கள் மேயராக இருந்தபோது மாநகராட்சி நிதியிலிருந்து ஒரு சமூக நலக் கூடம் கட்டப்பட்டிருந்தது. இந்தப் பகுதியில் வாழும் ஏழை மக்கள் திருமணம் மற்றும் விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டிருந்தார்கள். அந்த சமூக நலக் கூடம் 1996–லிருந்து 2011 வரை சிறப்பாகச் செயல்பட்டது. ஆனால், அது கடந்த 5 ஆண்டுகளாக பூட்டப்பட்டிருக்கிறது. நான் அந்த இடத்தை நேரில் போய் பார்த்தேன். அங்கு இரண்டு காவலர்கள் பாதுகாத்துக்கொண்டிருந்தார்கள். ஏன் இது பூட்டப்பட்டிருக்கிறது, நீங்கள் ஏன் காவல் காத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டபோது, உள்ளே வாக்குப் பெட்டிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஓட்டுப் போட்டவர்கள் வெளியே நிற்கிறார்கள். வாக்குப் பெட்டிகள் பத்திரமாக உள்ளே இருக்கின்றன. ஆகவே, அந்த வாக்குப் பெட்டிகளை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, அங்கு இருக்கின்ற ஏழை மக்கள் மீண்டும் தங்களுடைய விழாக்களை, தங்கள் வீட்டுத் திருமணங்களை அந்த சமுதாயக் கூடத்தில் நடத்துவதற்கு ஏதுவாக, அந்த சமுதாயக் கூடத்தை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அரசிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, வேளச்சேரியில் பல இடங்களில் ஆக்கிரமிப்புக்குள்ளாகி, புதர் மண்டிக் கிடக்கும் விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. சென்னை நகரிலேயே வேளச்சேரியில்தான் அதிகமான விளையாட்டு வீரர்கள் தங்களுடைய விளையாட்டின் திறனைக் காட்டி, அரசு வேலையில் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் இருக்கின்ற விளையாட்டு மைதானங்களையும், மூடிக் கிடக்கின்ற உடற்பயிற்சிக் கூடங்களையும், இளைஞர்களுக்கு, மாணவர்களின் பயன்பாட்டிற்காகத் திறக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் நான் இங்கே முன்வைக்கின்றேன்.

கலைஞர் அவர்கள் ஆட்சியில் தொடங்கப்பட்ட மழை நீர் வடிகால் திட்டம், வீராங்கால் ஓடைத் திட்டம் போன்ற திட்டங்களை மக்கள்தொகை அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு, சீரமைப்புப் பணிகளை விரைவாக முடித்திட வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—20

அதேபோல, தரமணியிலுள்ள 100 அடி சாலை பழுதுபார்க்கப்பட்டு, தோண்டப்பட்டு, தற்போது 50 அடி சாலையாக மாறி, அதற்குப் பிறகு கடைகள் போன்றவற்றால் ஆக்கிரமிப்புக்குள்ளாகி, தற்போது 30 அடி என்கிற நிலைமையில் இருக்கிறது. இதனால் அங்கு போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக இருக்கிறது. எனவே, மீண்டும் அந்தச் சாலையை 100 அடி சாலையாக மாற்ற துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, திருவான்மியூர் பத்திரிகையாளர் காலனியிலே, பத்திரிகையாளர்கள் வசிக்கின்ற அந்த பகுதியிலே, சிறு மழை பெய்தாலும் மழை நீர் சூழ்ந்துவிடுகிறது. அதன் காரணமாக பெரும் அவதிக்குள்ளாகிறார்கள் பத்திரிகையாளர்கள். இது, அவர்களே என்னிடம் நேரடியாக சொன்ன குறை. பத்திரிகையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கை, மழை நீர் தேங்காவண்ணம் வடிகால்களையும், சாலைகளையும் சீரமைத்துத் தர வேண்டும் என்பதாகும். அதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, அடையாறு, வேளச்சேரி, திருவான்மியூர் மூன்றையும் இணைக்க தரமணி link road–ல் மேம்பாலம் ஒன்று வேண்டும் என்பது மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. அந்தக் கோரிக்கையை விரைவில் நிறைவேற்றிட வேண்டும் என்று அரசை தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நிலத்தடி நீரைச் சேமித்து வைப்பதில் சதுப்பு நிலங்களின் பங்கு மிக முக்கியமானது. இந்தியாவில் உள்ள ஒரே நன்னீர் சதுப்பு நிலமான பள்ளிக்கரணை, தற்போது குப்பை, கழிவு நீர், தொழிற்சாலை கழிவு மற்றும் மருத்துவக் கழிவுகளால் சீரழிக்கப்பட்டு வருகின்றது. சர்வேதச சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் வரையறுத்துள்ள அளவைத் தாண்டி பல மடங்கு இரசாயனத் தன்மை உள்ளதாக மாறி இருக்கின்றது. குறிப்பாக, ஜப்பானிய பல்கலைக்கழகத்தின் ஆய்வில் புற்றுநோயை உருவாக்கக்கூடிய இரசாயனங்களின் அளவு, பெருங்குடி பகுதி பெண்களின் தாய்ப்பாலில் கண்டறியப்பட்டு இருப்பது நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. மேலும், பள்ளிக்கரணை சதுப்பு நிலம் ஒரு முக்கியமான வெள்ள வடிகால் ஆகும்.

வெள்ள நாட்களில் வேளச்சேரி மற்றும் ஆதம்பாக்கத்திலிருந்து வீராங்கால் ஓடை வழியாக பள்ளிக்கரணை செல்லும் வெள்ள நீர், சதுப்பு நிலத்திற்கு சென்றடைய முடியாமல் குடியிருப்புப் பகுதியில் புகுந்து விடுகிறது. எனவே இந்த நிலத்தைச் சுற்றி மரம் நடுவதன்மூலம் வண்டலுடன் கூடிய மரத்தின் வேர்கள் வழிந்தோடும் நீரை உறிஞ்சி நிலத்தை வெள்ளத்திலிருந்து காப்பதோடு நீரின் தரத்தையும் உயர்த்துகிறது. இந்தியாவின் பொக்கிஷமாக விளங்கும் பள்ளிக்கரணை நன்னீர் சதுப்பு நிலத்தை, இந்த அரசு காப்பாற்றிட வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

“கடும் பனியிலும், கொட்டும் மழையிலும் இரவு பகல் என்று இடைவிடாமல் ஏரியைக் காக்கும் காவலன், தான் பெற்ற குழந்தையை தன் உயிரினும் மேலாக காத்து வளர்க்கும் தாய்க்கு ஒப்பானவன்” என்ற கருத்தை அகநானூறு பாடல் சொல்கிறது. ஆனால், வேளச்சேரியிலோ ஏரிக்கரையில் வைக்கப்பட்ட குப்பைத் தொட்டிகள் மர்ம நபர்களால் சில நாட்களுக்கு முன்னால் திருடப்பட்டு, மாற்றுத் தொட்டிகூட வைக்காமல் ஏரியே குப்பையாகி, மாசு அடைந்து துர்நாற்றம் வீசுகிறது. ஏரியில்

பரவி இருந்த ஆகாயத் தாமரைச் செடிகளை இரசாயனம்மூலம் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், சில நாட்களில் மீண்டும் ஏரி முழுவதும் ஆகாயத் தாமரைச் செடிகள் பரவி விடுகின்றன. ஏரியைக் காப்பாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஊருக்கு எல்லாம் சோறிட்ட ஏரி, இப்பொழுது சுற்றியுள்ள குடியிருப்புகளிலிருந்து கழிவு நீர், உணவகக் கழிவு, இறைச்சிக் கழிவு மற்றும் கட்டடக் கழிவுகளால் சீரழிந்து கொண்டிருக்கிறது. எனவே, வேளச்சேரி ஏரி மற்றும் வேளச்சேரியைச் சுற்றியுள்ள சிறிய குளங்களையும் தூர்வாரி முறையாகப் பராமரிக்க வேண்டும் என வலுவான கோரிக்கை மக்களிடம் எழுந்துள்ளது. ஆகவே, அதனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அனைத்து வீடுகளுக்கும் சுகாதார வசதி மற்றும் தனிநபர் இல்ல கழிப்பறை வசதி ஏற்படுத்த ஊரக அளவில், "மத்திய அரசு தூய்மை பாரத இயக்கம்" மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தாலும், சென்னை நகரத்திலே சிறிது மழை பெய்தாலும், கழிவு நீர் ஊற்றாக, ஆறாக மனிதக் கழிவுகளோடு சேர்ந்து, தெரு எங்கும் பெருக்கெடுத்து ஓடும் நிலைதான் இன்று இருக்கிறது. மக்கள்தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு ஜனத்திரளின் கழிவை 40 ஆண்டுகளுக்கு முன்னால் வடிவமைக்கப்பட்ட கழிவு நீர் அகற்றும் முறைமூலம் எவ்வாறு வெளியேற்ற முடியும்? Pressure motor, pumping station கிணறு மற்றும் அதன் வழித்தடம் போன்றவை அன்றைய காலத்திற்கு ஏற்ப கட்டப்பட்டு, இன்று வரை கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் உள்ளது. அரசு இதை மாற்றி அமைக்க போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னொன்று, எனக்கு சிறு வயதில் நடந்த ஒரு பாதிப்பை இந்த அவையிலே சொல்ல வேண்டும் என்பது நீண்டநாள் என்னுடைய ஆவல். நான், சிறுவயதிலே கிராமத்தில் இருந்து கால்களில் செருப்பு இல்லாமல் பக்கத்து ஊரில் உள்ள பள்ளிக்குச் செல்லும்போது என் கால்களை குத்தி கிழித்தது சீமை கருவேல முள். இதை ஒழிக்கவே முடியாதா என்ற கேள்வி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *பதில் சொல்லி விடுகிறேன். பள்ளிக்கரணை குறித்து பதில் சொல்லி விடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்.*

முற்பகல் 11–25

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *பள்ளிக்கரணை சதுப்பு நிலம் ஒரு நன்னீர் சதுப்பு நிலம் ஆகும். இங்கு 80 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள நீர் நிறைந்திருக்கும் சுற்றுச்சூழலைக் கொண்டுள்ளது. இச்சதுப்பு நிலம் பழைய மகாபலிபுரம் அதிவேகச்சாலை, பெருங்குடி, சிருங்கேரி, பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், வேளச்சேரி மற்றும் தரமணி குடியிருப்புப் பகுதிகளில் சூழ்ந்துள்ளது. இச்சதுப்பு நிலத்தினால் பள்ளிக்கரணை மற்றும் துரைப்பாக்கம் உள்வட்டச் சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளது. சதுப்பு நிலத்திலிருந்து வெளியேறும் அதிகப்படியான மழை நீர் ஒதுங்கியும், மடுவு, கால்வாய் வழியாகவும் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக வடிகட்டி, பின்னர் கோவளம் நதியில் உள்ள முகத்துவாரம் வழியாக வெளியேற்றப்படுகின்றது. இச்சதுப்பு நிலத்தின் அருகில் சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியத்தில் வழங்கப்பட்ட 3 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் அமைந்துள்ளன. சென்னை மாநகராட்சி பகுதியிலிருந்து உருவாகும் அன்றாட கழிவுநீரின் ஒரு பகுதி, கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைகள்மூலம் சுத்திகரிக்கப்பட்டு, பின்னர் பக்கிங்ஹாம் கால்வாய்மூலம் வெளியேற்றப்படுகிறது. எந்தக் கட்டத்திலும் சுத்திகரிப்பு செய்யப்படாத அன்றாட கழிவுநீர், சதுப்பு நிலப் பகுதிகளில் கலப்பதில்லை என்று சென்னை மாநகராட்சிமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநில மனித உரிமை ஆணையம் 5–3–2014 தேதியிட்ட உத்தரவின் அடிப்படையில் வாரியமானது தொடர் குழுக் கூட்டங்களை மாநகராட்சி அலுவலர், வனத் துறை அலுவலர், சமூக அலுவலர், ஆய்வாளர் ஆகியோருடன் நடத்தி தமிழக அரசால் கண்காணிப்புக் குழு அமைக்க பரிசீலனை செய்யப்பட்டது.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதனடிப்படையில் தமிழக அரசு 21–8–2014 தேதியிட்ட அரசாணை எண் 95–ல் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக் குழு அமைத்து, இக்கண்காணிப்புக் குழு சதுப்பு நிலத்தைப் பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், தயார் செய்யவும் ஆக்கிரமிப்புகளைச் சுருக்கி, பகுதியை அடையாளம் கண்டு, தற்போதைய நிலையில் ஆய்வு செய்யவும் தொடர் நீர் மாதிரிகளைச் சேகரிப்பு செய்து, சதுப்பு நீரின் தரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நிலத்தடி நீரின் தரம் ஆகியவற்றை ஆய்வு செய்து, விரிவான அறிக்கை சமர்ப்பிக்கவும், பள்ளிக்கரணை, மேடவாக்கம் பகுதியில் வருவாய் நிலம், மாநகராட்சி நிலங்கள் வனத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, பரிந்துரை செய்யவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, மருத்துவமனை கழிவுகளைப்பற்றி மாமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கும்மிடிப்பூண்டியில், திடக் கழிவு மேலாண்மைக்கான இடம் உள்ளது. அந்த இடத்தில் அனைத்து மருத்துவமனை கழிவுகளும் கொண்டு செல்லப்பட்டு, அது எரியூட்டப்படுகிறது என்பதை அன்போடு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சிறு வயதில் கிராமத்திலிருந்து கால்களில் செருப்பு இல்லாமல், பக்கத்து ஊரில் உள்ள பள்ளிக்குச் செல்லும்போது என் கால்களை குத்திக் கிழித்தது சீமைக் கருவேல முள். இதை ஒழிக்கவே முடியாதா என்ற கேள்வி, சிறு வயதில் என் மனதையும் கிழித்துப் பார்த்தது. இன்றுவரை அழிக்க விடை காண முடியாத சீமைக் கருவேல முள்ளை வேளச்சேரி தொகுதியிலும் நான் கண்டேன். இந்த மரத்தினை பார்க்காத ஒரு தமிழன்கூட தமிழ்நாட்டில் இருக்க முடியாது. தமிழகத்தின் நீராதாரம் வற்றி, இன்றைய வறட்சி நிலைக்கு இந்த மரங்களும் ஒரு காரணம் என்று உறுதியாகச் சொல்ல முடியும். மண்ணை மலடாக்கும் இந்த சீமைக் கருவேல மரத்தினை வேரோடு அழிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால்,

இது எப்படி வந்தது என்பது தெரியும். 1950 ஆம் ஆண்டிலே விறகுக்காக விதை விதைக்கப்பட்டது என்று சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீமைக் கருவேல மரங்களை அகற்ற வேண்டுமென்று ஒரு கருத்தை குறிப்பிட்டார்கள். மதுரை உயர் நீதிமன்றக் கிளையினுடைய ஆணையின்பேரிலே தமிழகத்தில் நீர்நிலைகளில் இருக்கின்ற சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதற்கு இன்றைக்கு பரப்பளவு கணக்கிடப்பட்டிருக்கின்றது. எந்தெந்த நீர்நிலைகளிலே எவ்வளவு பரப்பளவில் இருக்கின்றது என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. அதற்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் என்பதும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. அந்த ஆய்வுப் பணிகளெல்லாம் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தப் பணிகள் முடிந்தவுடன், நீர்நிலைகளில் இருக்கின்ற கருவேல மரங்களெல்லாம் அகற்றப்படும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதோடு, தற்போது ஆங்காங்கே நீர்நிலைகளில் கரையோரங்களில் இருக்கின்ற கருவேல மரங்கள் அகற்றப்பட்டிருக்கின்றன என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர் விருப்பாச்சி கோபால் நாயக்கருக்கு மணிமண்டபம் தலைவர் கலைஞர் ஆட்சியிலே 2010 ஆம் ஆண்டு ஒட்டன்சத்திரம் வட்டம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நிறைய பேசியிருக்கிறார். இப்போது பதில் சொல்லி முடிந்தவுடன், திரும்பவும் அவர் பேசுகின்ற அளவிற்கு நேரம் கொடுத்து, இப்போது மாநகராட்சியைப் பற்றி பேசுகின்றார். (குறுக்கீடுகள்) அவர் கன்னிப் பேச்சு பேசுவதால்தான் நான் குறுக்கிடவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல பிரச்சினைகளைப் பற்றி இங்கே பேசினார்கள். 175, 176, 177, 178, 179, 180, 181, 182 ஆகிய 8 வார்டுகளைக் கொண்ட வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட பல பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர் முதலில் சொன்ன சோபா நகரில் அமைந்துள்ள அந்த மகப்பேறு மருத்துவமனை 179–வது வார்டிலே இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அதேபோல, சமூக நலக் கூடத்தைப் பற்றிச் சொன்னார்கள். கண்டிப்பாக அது அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, அதில் என்ன பிரச்சினை இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, தீர்க்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

அதேபோல், மழை வெள்ளத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். பல பிரச்சினைகள் பற்றிப் பேசினார்கள். வெள்ளப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த போர்க்கால தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, பிரச்சினைகள் உடனடியாகத் தீர்வு செய்யப்பட்டன. அதேபோல் குப்பைப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். சென்னை மாநகராட்சியிலே தினமும் சேகரமாகும் குப்பை 5,400 டன். மொத்தமாக இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும், பேரூராட்சி, நகராட்சி நிருவாகத்தின்மூலமாக, சென்னை தவிர, 11 மாநகராட்சிகளில், 124 நகராட்சிகளில் 7,000 டன் குப்பைகள் சேகரமாகின்றன. அதேபோல, பேரூராட்சிகளில் 2,000 டன் குப்பைகள், ஊராட்சி ஒன்றியங்களில் 2,400 டன் குப்பைகள் என கிட்டத்தட்ட மொத்தம் 17,000 டன் குப்பைகள் தினமும் தமிழ்நாடு முழுவதும் சேகரமாகிறது. சென்னை மாநகராட்சியில் மட்டும்

5,400 டன் குப்பை தினமும் சேகரமாகிறது. கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்குப் பின்னால் அதிகமாக மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் சரித்திர சாதனையாக, போர்க்கால அடிப்படையிலே எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, மழை முடிந்தவுடன், 2, 3 நாட்களிலேயே கிட்டத்தட்ட 2,30,933 டன் குப்பையை போர்க்கால அடிப்படையில் எடுத்ததன் காரணமாக, நோய் எங்கும் பரவவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்குமே நோயே பரவவில்லை. இதற்கு முன்னால் எத்தனையோ நாடுகள், வளர்ந்த நாடுகளிலே, இங்கிலாந்தில், லண்டன் மாநகரில், அதேபோல் மற்ற மாநிலங்களில்கூட பார்த்தீர்களென்றால், இதைவிட குறைவான மழை பெய்தபோதுகூட, அங்கெல்லாம் நல்ல முறையில் அவர்களால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. நடவடிக்கை எடுக்க நாட்கள் அதிகமானது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையில், வேகமாக நடவடிக்கையை எடுத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் எடுத்த நடவடிக்கைகளைப் பற்றிப் பேசினார்கள். கழிவு நீர்க் குழாய்களைப் பொறுத்தவரையில், நீண்ட காலமாக அந்தக் குழாய்களையெல்லாம் மாற்றவில்லை என்று சொன்னார்கள். அதேபோல், மழை நீர் வடிகால் பற்றியும் பேசினார்கள். சென்னை மெட்ரோ வாட்டர் மூலம் அனைத்துத் திட்டங்களும், கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கி, அனைத்து நீர்நிலைகளிலும் கழிவு நீர் கலக்கக்கூடாது என்பதற்காக இரண்டு நிலையில் ரூ.150 கோடி, ரூ.150 கோடி என்று அந்தத் திட்டத்தை இரண்டாகப் பிரித்து, கிட்டத்தட்ட 363 பணிகளுக்கு ரூ.300 கோடி ஒதுக்கி, இரண்டு கட்டமாக பணிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதில் முதலாவது கட்டத்தில், 73 சதவிகிதம் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டத்திலும் பணிகளை எடுத்தாகிவிட்டது. எனவே, கழிவு நீர் கலக்காமல் இருப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மிகப் பெரிய அற்புதமான நடவடிக்கையை எடுத்துள்ளார்கள்.

அதேபோல, மழைநீர் வடிகால் பற்றி பேசினீர்கள். மழை நீர் வடிகாலைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த 5 ஆண்டுக் காலத்தில் ரூ.3,142 கோடி ஒதுக்கி, 4,100 கிலோ மீட்டருக்கான பணிகளுக்கு இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் வெறும் ரூ.845 கோடிதான் ஒதுக்கியிருந்தீர்கள். 718 கிலோ மீட்டருக்கான பணிகள்தான் எடுக்கப்பட்டன. அதேபோல், JnNURM—ஜவஹர்லால் நேரு புனரமைப்புத் திட்டத்தில் பார்த்தீர்களென்றால், கடந்த 2001–2006 அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அந்தத் திட்டங்களெல்லாம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு, அதற்குப் பிறகு தி.மு.க. ஆட்சி வந்த பிறகு (குறுக்கீடுகள்) அதிகபட்சமாக 12 சதவிகிதம்தான் வேலைகள் முடிக்கப்பட்டன. (குறுக்கீடுகள்) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் நடவடிக்கை எடுத்து, (குறுக்கீடுகள்) சென்னை மாநகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சி, மதுரை மாநகராட்சி என 3 மாநகராட்சிகளுக்கும் இந்தத் திட்டங்கள் எல்லாம் வந்தன. மதுரை மாநகராட்சிக்குக்கூட தி.மு.க. ஆட்சி இருந்தபோது இந்தத் திட்டங்களெல்லாம் சரியான முறையில் வடிவமைக்கப்படாமல், மீண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால், கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் நிதியை மதுரை மாநகராட்சிக்குக் கூடுதலாகக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஒவ்வொரு மாநகராட்சியாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இப்போது, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தளவில் மழைநீர் வடிகால் அமைப்புகளாக இருந்தாலும் சரி, அதேபோல் குப்பைகள் எடுக்கப்படுவதாக இருந்தாலும் சரி, (குறுக்கீடுகள்) அதேபோல பாதாளச் சாக்கடைத் திட்டமாக இருந்தாலும் சரி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், அமருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: அனைத்துத் திட்டங்களும் சிறப்பான முறையிலே நடைபெற்று வருகின்றன. (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்தான் வரிசையாக நிறைய கேள்விகள் கேட்டார். (குறுக்கீடுகள்) நான் குறைந்த அளவில்தான் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசச் சொன்ன பிறகு, உறுப்பினர் பேசுவார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி*: நடந்ததைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்வதிலே மாற்றுக் கருத்து இருந்தால் அவர் பேசட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். உறுப்பினர் கேள்வி கேட்டார். அதற்கு அமைச்சர் பதில் சொல்கிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரும்பவும் உங்கள் உறுப்பினர் பேசுவார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு நீங்கள் பேசவில்லை, (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

முற்பகல் 11–35

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி*: தொடர்ந்து எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அனைத்துத் திட்டங்களும் சிறப்பான முறையிலே நடந்து கொண்டிருக்கின்றன. அதேபோல சில திட்டங்கள் தொடங்கி நடந்துகொண்டிருக்கிறதென்பதை சரித்திரச் சாதனையாகச் சொல்லலாம். இப்போது தரமான சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். சென்னை மாநகராட்சியில் மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்த சாலைகளைப் புது* technique–*ல் அமைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அத்தனை திட்டங்களுக்கும் திட்ட ஆலோசகர்களை நியமித்து, என்னென்ன தேவையோ, அனைத்தையும் வழங்கி, சிறப்பான முறையில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 ஆண்டுகளில் பெய்யாத மழையைவிட அதிகமான பலத்த மழை பெய்து வெள்ளம் வந்த போதிலும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைத்த அந்தச் சாலைகளில் ஒரு சின்ன சேதம்கூட இல்லை. அந்த அளவிற்கு திட்ட ஆலோசகர்களை நியமித்து, புது technique–*ஐப்*

பயன்படுத்தி, சாலையில் milling செய்து, அற்புதமாகப் போடப்பட்ட சாலைகளில், ஒரு சிறிய damage-கூட ஏற்படவில்லை. அவைதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு சான்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குப்பைகளைப் பற்றிப் பேசினார்கள். சரித்திர சாதனையாக சுமார் 2,30,000 டன் அளவிற்கு குப்பைகள் மூன்று நாட்களில் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதற்குக் காரணம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த போர்க்கால நடவடிக்கைகள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் அத்தனை திட்டங்களும், பாலங்களாக இருந்தாலும் சரி, குப்பைகளை எடுப்பதாக இருந்தாலும் சரி, மழை நீர் வடிகால்கள் அமைப்பதாக இருந்தாலும் சரி, அத்தனை திட்டங்களும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சிறப்பான முறையில், சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு திரைப்பட விருது, தமிழ்த் திரைப்பட நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு வழங்கி சிறப்பிக்கும் விருதுகள், கடந்த ஆட்சி முழுவதும் வழங்கப்படவில்லை. 2011 ஆம் ஆண்டில், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது நடந்து முடிந்த அந்த விழாக்கள், அதற்குப் பிறகு, இன்று வரை அந்த விழாக்கள் நடைபெறவில்லை.

அதேபோல, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் முதன்முதலாக சின்னத் திரைக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. அந்த விருதுகளும் கடந்த ஆட்சியிலே வழங்கப்படவில்லை. அதுபோல குறைந்த செலவிலே தயாரித்து, வெளியிடப்பட்ட திரைப்படங்களுக்கு மானியத் தொகையும் வழங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, முந்தைய தி.மு.க. ஆட்சியில் திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மூன்று ஆண்டுகளுக்கு காவல் துறையினருக்கு பதக்கங்கள் வழங்குகின்ற விழா நடைபெறவேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் பின்னர் நான் ஆட்சிக்கு வந்த பிறகுதான், எல்லாவற்றிற்குமாகச் சேர்த்து ஒரு பெரிய விழாவை நடத்தினோம். அதைப்போலவே பல காரணங்களினால் திரைப்படக் கலைஞர்களுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் விருதுகள் வழங்க முடியவில்லை. எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரு பிரம்மாண்டமான விழா நடத்தப்படும்; விரைவில் அந்த விருதுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் சின்னத்திரைக் கலைஞர்களுக்கு முதன்முதலாக விருதுகள் அறிவிக்கப்பட்டது என்னுடைய ஆட்சிக் காலத்தில்தான் என்பதையும் அவருக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணாவினுடைய சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் என்ற நாடகத்தில் நடித்து, தந்தை பெரியாரால் சிவாஜி கணேசன் எனப் பாராட்டப்பட்டு, முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வசனத்தில் பராசக்தி திரைப்படத்தின்மூலம் திரையுலகில் புகழின் உச்சிக்குச் சென்று, தமிழுக்கு தன் நடிப்பால் தமிழ் உச்சரிப்பால் பெருமை சேர்த்து, மறைந்தார் நடிகர் திலகம். அறிஞர் அண்ணா துயில்கொள்ளும் நினைவிடம், மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் நினைவிடம் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவிடங்கள் அமைந்துள்ள கடற்கரைப் பகுதியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் சிலை இருந்தால்தான் சிவாஜிக்கும் பெருமை; அச்சிலையைத் தினந்தோறும் கண்டு மகிழும் தமிழர்களுக்கும் பெருமை எனக் கருதி, மாபெரும் கலைஞர் நடிகர் திலகத்திற்கு அன்று முதல்வராக இருந்த முத்தமிழ் அறிஞர்

கலைஞர் அவர்கள், கம்பீரமான தோற்றப் பொலிவுடன் விளங்கும் சிவாஜி சிலையை நிறுவினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

சாக்ரடீஸ் ப்ளாட்டோவிற்குக் கற்றுத் தந்தார்; ப்ளாட்டோ அரிஸ்டாட்டிலுக்குக் கற்றுத் தந்தார்; அரிஸ்டாட்டில் மாவீரன் அலெக்சாண்டருக்குக் கற்றுத் தந்தார். ஆக, ஞானம் என்பது பின்வருபவர்களுக்குத் தரப்படாமல் இருந்தால், அது மறைந்தே போயிருக்கும். நமது மாபெரும் பொறுப்பை எதிர்கால தலைமுறையினர் பெருமையோடு சொல்லிக்கொள்கிற அடிச்சுவடு ஒன்றை விட்டுச்செல்வதே அதன் பெருமையாகும். எனவே, தமிழ் மொழிக்குத் தன்னுடைய நடிப்பாற்றல்மூலம் பெருமை சேர்த்த சிவாஜி சிலை அங்கேயே நிலைத்திருக்க, சட்டப் பேரவையில் ஒரு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலை தற்போது இருக்கின்ற இடத்தைவிட்டு மாற்ற வேண்டுமென்பது இந்த அரசின் விருப்பம் அல்ல. அது நீதிமன்றத்தின் உத்தரவு. (மேசையைத் தட்டும் ஒலி) அதை அகற்றியே ஆக வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டுவிட்டது. தீர்ப்பளித்துவிட்டு, திரும்பத் திரும்ப அரசை அழைத்து, இன்னும் ஏன் அதை அகற்றவில்லை என்று உயர் நீதிமன்றம் கேட்டுக்கொண்டே இருக்கிறது. ஆகவே, சிவாஜி கணேசன் அவர்களுக்காக, அவர் நினைவைப் போற்றும்வகையில், ஒரு நினைவு மண்டபம் எழுப்பப்படும் என்று ஏற்கெனவே இந்த அவையில் நான் அறிவித்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நினைவு மண்டபம் கட்டி முடிக்கும்போது, சிலை அங்கே மாற்றப்படும் என்று சொல்லித்தான் உயர் நீதிமன்றத்தை சமாதானப்படுத்தியிருக்கிறோம். ஆகவே, அது இந்த அரசின் விருப்பம் அல்ல. நீதிமன்றத்தின் உத்தரவு என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிகர் திலகத்தைப் பொறுத்தவரையில், ஒரு கணக்கெடுப்பிலே, ஒரு பத்திரிகையிலே நான் படித்தேன். 1952 இல் வெளியிட்ட பராசக்தி, மனோகரா படத்திற்குப் பிறகு, படித்தவர்கள் எண்ணிக்கையைவிட, படிப்பறிவில்லாத, எழுத்தறிவில்லாத மக்கள் இலக்கியத் தமிழில் அதிகமாக பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கலைஞருடைய வசனத்தை, அதுவும் நடிகர் திலகத்தின் குரலில் பேசுகின்றபோது, அவர் ஒரு சினிமா நடிகர் என்பதற்கும் அப்பாற்பட்டு, தமிழுக்கு அவர் செய்த சேவை பெரிது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கின்ற மணிமண்டபத்திலேயே நடிகர் திலகம் சிவாஜி சிலை இருப்பது பெருமைதான். ஆனால், இங்கே இருக்கின்ற இடத்திலேயே இருந்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரைப் பார்க்கின்ற வாய்ப்புக் கிடைக்கும். ஆகவே, இதுபோன்ற தீர்ப்புகளை, எத்தனையோ தீர்மானங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு திரைப்படத் துறையைப்பற்றியும், நடிப்பைப்பற்றியும் தெரிந்த அளவிற்கு, சட்டத்தைப்பற்றி அவருக்குத் தெரியவில்லைபோல் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவர் வேண்டுமென்றால், உயர் நீதிமன்றத்தில் ஒரு Public Interest Litigation போட்டு, சிலை இங்கேயே நீடிக்க அனுமதி பெற்றால், அதைச் செய்ய நாங்கள் தயார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள், **

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர், அதுகுறித்து நீங்கள் பேச வேண்டாம். அதுகுறித்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அதுகுறித்து பேச வேண்டாமென்று உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் வேறு சப்ஜெக்ட்டைப்பற்றி பேசுங்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர் விருப்பாச்சி கோபால் நாயக்கருக்கு புகழ் சேர்க்கும்வண்ணம், அவருடைய உருவம் பொறித்த தபால் தலையை மத்திய அரசு வெளியிட, மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள், தியாகசீலர்கள், சமுதாயச் சிற்பிகள் என பல்வேறுபட்ட மக்களுக்கு, கடந்த ஐந்தாண்டுக் கால பொற்கால ஆட்சியில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நிகர் எவருமில்லை என்ற அளவிலே, (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை பேருக்கும் மணிமண்டபங்கள், நினைவுச் சின்னங்கள், சிலைகள் அமைக்கப்பட்டன. சுதந்திரப் போராட்ட வீரர் விருப்பாச்சி கோபால் நாயக்கர் அவர்களுக்கு தபால் தலை வெளியிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், திண்டுக்கல் மாவட்டம், விருப்பாச்சியில் விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம், ரூ.69 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 20–2–2013 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அந்த மணிமண்டபத்தைத் திறந்து வைத்தார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே நான் பதிவு செய்வதிலே பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், அனுமதியளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.*

5. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) மேட்டூர் அணை, காளிங்கராயன் அணை கால்வாய்களைச் சீரமைத்தல், சரபங்கா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டுகள், கால்வாய்களைப் புனரமைத்தல், வராக நதியின் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைத்தல், வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல், ஏரிகளைப் புனரமைத்தல், திருச்சி, பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு முக்கிய ஆதாரமாக விளங்கும் நீரினை முழுமையான அளவு சேகரிப்பதுடன் அவற்றைச் சிறப்புற பயன்படுத்திட வேண்டும். எனவேதான், புதிய பாசனத் திட்டங்களை ஏற்படுத்துதல், பாசனக் கட்டமைப்புகளைப் பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் கதவணைகள், நிலத்தடி நீர் செறிவூட்டு அமைப்புகள், தடுப்பணைகள், படுகை அணைகள் ஆகியவை கட்டுதல், அணை புனரமைப்பு, கால்வாய் புனரமைக்கும் பணிகள் மற்றும் ஏரிகள் அமைத்தல் மற்றும் புனரமைத்தல் போன்ற 6,118 பணிகள் 3,188.50 கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 864.31 கோடி ரூபாய் மதிப்பிலான 282 பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)*

2016 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பொதுப் பணித் துறையின் சார்பில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டின் மிக முக்கிய அணை மேட்டூர் அணையாகும். இவ்வணையிலிருந்து மேட்டூர் கிழக்குக் கரை கால்வாய் மற்றும் மேட்டூர் மேற்குக் கரை கால்வாய்களின்மூலம் சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள பாசன நிலங்கள் பயன்பெற்று வருகின்றன.

இக்கால்வாய்கள் வெட்டப்பட்டு 60 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால், தண்ணீர் கசிவு ஏற்பட்டு, கடைமடைப் பகுதிகளுக்கு உரிய அளவில் தண்ணீர் சென்று சேருவதை உறுதி செய்ய இயலவில்லை.

இப்பிரச்சினையைத் தீர்க்க, எனது அரசு கடந்த 5 ஆண்டுகளில் இவ்விரு கால்வாய்களிலும் 79.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டது.

இதன் தொடர்ச்சியாக, நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், மேட்டூர் கிழக்குக் கரை கால்வாயின் எல்.எஸ். 45.30 கிலோ மீட்டர் முதல் எல்.எஸ். 58 கிலோ மீட்டர் வரை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் மேற்குக் கரை கால்வாயின் எல்.எஸ். 7.283 கிலோ மீட்டர் முதல் எல்.எஸ். 13.92 கிலோ மீட்டர் வரை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பணிகளின்மூலம் இக்கால்வாய்களில் தண்ணீர் கசிவு ஏற்படுவது தடுக்கப்பட்டு, கடைமடை வரை தண்ணீர் செல்வது உறுதி செய்யப்படும்.

2. பவானி ஆற்றின் குறுக்கே உள்ள காளிங்கராயன் அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்கால் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டதாகும்.

காளிங்கராயன் வாய்க்காலின் மொத்த நீளம் சுமார் 56 மைல்கள் ஆகும். பழமையான இவ்வாய்க்காலை, எனது தலைமையிலான அரசு கடந்த 5 ஆண்டுகளில் 91 கோடி ரூபாய் செலவில், முகப்பிலிருந்து 9/7 மைல் வரை இருபுறமும் கான்கிரீட்

லைனிங் மற்றும் பேபி வாய்க்கால் அமைத்து, புனரமைப்புப் பணிகளைச் செய்தது. இதன் தொடர்ச்சியாக, ஈரோடு மாநகருக்குள் செல்லும் இவ்வாய்க்காலின் பகுதிகளில் கான்கிரீட் லைனிங் பணிகள் அமைத்தல் மற்றும் பேபி வாய்க்கால் அமைத்தல் ஆகிய பணிகள் 36 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பணியினால், மாநகராட்சிப் பகுதிகளிலிருந்தும், தோல் மற்றும் சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் காளிங்கராயன் வாய்க்காலில் கலப்பது தடுக்கப்படும். மேலும், தண்ணீர் கசிவினால் ஏற்படும் இழப்பு சரி செய்யப்படுவதால், கடைகோடி விவசாயிகள் பயன்பெறுவார்கள்.

முற்பகல் 11–50

3. சரபங்கா நதி, சேலம் மாவட்டத்தில் ஏற்காடு மலையின் மேற்குப் பகுதியில் உற்பத்தியாகி, ஓமலூர், எடப்பாடி மற்றும் சங்ககிரி வழியாக சுமார் 80 கிலோ மீட்டர் தூரம் ஓடி காவேரி ஆற்றுடன் கலக்கிறது. இவ்வாற்றின் குறுக்கே 21 அணைக்கட்டுகள் உள்ளன. அதன்மூலம் 30 ஏரிகள் பாசன வசதி பெறுகின்றன. இக்கட்டுமானங்கள் 100 ஆண்டுகளுக்குமேல் பழமையானவை. எனவே, இவற்றினைப் புனரமைத்து, மேம்படுத்துவது அவசியமாகிறது.

எனது தலைமையிலான அரசு, 2015 ஆம் ஆண்டில் ஓமலூர் மற்றும் எடப்பாடி பகுதிகளில் 13 அணைக்கட்டுகளை 5.23 கோடி ரூபாய் செலவில் புனரமைத்து மேம்படுத்தியது. இந்த ஆண்டு ஓமலூர் மற்றும் சேலம் மேற்குப் பகுதிகளில் உள்ள 6 அணைக்கட்டுகள், அதன் கால்வாய்கள் மற்றும் 10 ஏரிகள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஆற்றில் கிடைக்கப்பெறும் வெள்ள நீர் சேமிக்கப்பட்டு, ஏரிகளுக்குத் திருப்பப்படும். இதன்மூலம் ஏரிகளின் கீழுள்ள பாசன நிலங்கள் முழு பயன்பெறும்.

4. வராக நதி ஆறு வைகையாற்றின் ஒரு பிரதான கிளை ஆறாகும். தென்கரை கிராமத்தில் பெரியகுளம் நகரின் கழிவுநீர் இருபுறங்களிலும் கலப்பதால் நதி நீர் மாசு அடைகிறது. இதனைத் தடுக்கும்பொருட்டு, வராக நதியைச் சீர் செய்து, தூய்மைப்படுத்தும் வகையில், 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், (மேசையைத் தட்டும்

2016 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஒலி) ஆற்றின் இருபுறமும் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்து, அதன்மூலம் கரைகள் பலப்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்மூலம் பெரியகுளம் வட்டத்தில் உள்ள பாசன நிலங்கள் பயன்பெறும். மேலும், ஆற்றில் ஆக்கிரமிப்புகள் ஏற்படுவது தடுக்கப்படும்.

5. வைகை ஆறு, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் வழியாகப் பாய்ந்து கடலில் சென்று கலக்கிறது. இவ்வாற்றின் குறுக்கே பாசனத்திற்காக பல கட்டுமானங்கள் உள்ளன.

மழைக் காலங்களில் ஆற்றில் வரும் வெள்ள நீரை சேமிக்கும்பொருட்டு, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சி அருகே, வைகையாற்றின் குறுக்கே 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை ஒன்று அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தினால் ஆற்றில் வரும் வெள்ள நீர் சேமிக்கப்பட்டு, தடுப்பணையின் மேற்புறத்தில் அமைந்துள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான கிணறுகளில் நீர் செறிவூட்டப்படும். மேலும், அருகில் உள்ள பாசன கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இதன் காரணமாக, அப்பகுதி பாசன நிலங்கள் பயன்பெறும்.

6. ஏரிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு எனது தலைமையிலான அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மேம்படுத்தப்படுவதால், நீர் நிலைகளின் கொள்ளளவு அதிகரிக்கும். அதனால், நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு குடிநீர் ஆதாரம் பெருகும். மேலும், விவசாய உற்பத்தியும் பெருகும். திருவண்ணாமலை மாவட்டத்தில் 8 ஏரிகள், தருமபுரி மாவட்டத்தில் 7 ஏரிகள், வேலூர் மாவட்டத்தில் 12 ஏரிகள், விருதுநகர் மாவட்டத்தில் 22 ஏரிகள் என 49 ஏரிகள், 22 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு புனரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

இந்த 49 ஏரிகளில் மேற்கொள்ளப்படும் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் காரணமாக 3,789 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. திருச்சியிலுள்ள பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலைய அலுவலகம் சுமார் 60 வருடம் பழமை வாய்ந்த கட்டடத்தில் 32 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பொதுப் பணித் துறை பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பயிற்சி நிலையத்திற்கு விரிவுரையாளர் அரங்கம் மற்றும் பல்நோக்கு அரங்கம் உள்ளடக்கிய புதிய கட்டடம் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது என்னால் அறிவிக்கப்பட்டுள்ள இந்த புதிய திட்டங்களின் பயனாக நீர் ஆதாரம் மேம்படுத்தப்பட்டு, விவசாய உற்பத்தி பெருக வழிவகை ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) பாலங்கள் கட்டுதல், ஓசூரில் வெளிவட்டச் சாலை அமைத்தல், சென்னை சுற்றுப்புற முக்கிய இணைப்புச் சாலைகளை மேம்படுத்துதல், தாரமங்கலம், ராசிபுரம் புறவழிச்சாலைகள் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மை துறை வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, சேவைத் துறை வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி மற்றும் பாதுகாப்பான விரைவான பயணம் ஆகியவற்றிற்கு அடித்தளமாக விளங்குவது சாலை உட்கட்டமைப்பு வசதிகள்தான்.*

கடந்த 5 ஆண்டுகளில் 25,392 கோடி ரூபாய் செலவில் 48,372 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்பட்டதுடன், (மேசையைத் தட்டும் ஒலி) 2,095 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 13 புறவழிச் சாலைகள் 211.44 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 11,367 கோடி ரூபாய் செலவிலான பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் கீழ்க்காணும் புதிய அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

2016 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

1. நபார்டு கடனுதவி பெற்று 80 பாலங்கள் 159 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) திருவள்ளூர் மாவட்டத்தில் 1 பாலம், கடலூர் மாவட்டத்தில் 2 பாலங்கள், வேலூர் மாவட்டத்தில் 1 பாலம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 1 பாலம், சேலம் மாவட்டத்தில் 5 பாலங்கள், நாமக்கல் மாவட்டத்தில் 3 பாலங்கள், தருமபுரி மாவட்டத்தில் 3 பாலங்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 3 பாலங்கள், ஈரோடு மாவட்டத்தில் 4 பாலங்கள், திருப்பூர் மாவட்டத்தில் 3 பாலங்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 3 பாலங்கள், உதகை மாவட்டத்தில் 1 பாலம், திருச்சி மாவட்டத்தில் 2 பாலங்கள், பெரம்பலூர் மாவட்டத்தில் 2 பாலங்கள், அரியலூர் மாவட்டத்தில் 2 பாலங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 8 பாலங்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் 5 பாலங்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 4 பாலங்கள், திருவாரூர் மாவட்டத்தில் 2 பாலங்கள், மதுரை மாவட்டத்தில் 3 பாலங்கள், திண்டுக்கல் மாவட்டத்தில் 4 பாலங்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் 8 பாலங்கள், திருநெல்வேலி மாவட்டத்தில் 3 பாலங்கள், சிவகங்கை மாவட்டத்தில் 4 பாலங்கள், விருதுநகர் மாவட்டத்தில் 3 பாலங்கள் என இந்த 80 பாலங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பாலங்கள் கட்டப்படுவதன் காரணமாக சுமார் 472 கிராமங்களில் வசிக்கும் 22 இலட்சம் மக்கள் பயனடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பாலப் பணிகளில் பெரும்பாலானவை கிராமப்புறங்களில் அமைய உள்ளதால் விவசாயிகள் விவசாயப் பொருட்களை எளிதில் சந்தைப்படுத்துவதற்கும் இது பயனுள்ளதாக அமையும்.

நண்பகல் 12—00

2. ஓசூர் நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்வகையில் ஜுஜுவாடி முதல் பேரண்டப்பள்ளி வரை 18.40 கிலோ மீட்டர் நீளத்திற்கு வெளிவட்டச் சாலை அமைக்கப்படும். இப்பணிக்காக கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தாலுகாவில் ஜுஜுவாடி, அனுமப்பள்ளி அக்ரஹாரம், பேகேப்பள்ளி, நல்லூர், எலுவப்பள்ளி, ஆவலப்பள்ளி, கெலவரப்பள்ளி, சின்னகொள்ளு, பெத்தகொள்ளு, மோரனப்பள்ளி மற்றும் ஆலூர் ஆகிய 11 கிராமங்களில் 60.16 ஹெக்டேர் அளவுக்கு நில எடுப்பு செய்யப்படவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நில எடுப்புப் பணிகள் 215 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

TRUTH ALONE TRIUMPHS

இந்த வெளிவட்டச் சாலை திட்டத்தினால் ஒசூர் நகரில் போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறையும்.

3. சென்னை மாநகரின் முக்கிய நகர்ப்புற சாலைகளான தேசிய நெடுஞ்சாலை–45, தேசிய நெடுஞ்சாலை–4, தேசிய நெடுஞ்சாலை–5 மற்றும் தேசிய நெடுஞ்சாலை–205 ஆகிய சாலைகள் பல்வழிச் சாலைகளாக அகலப்படுத்தப்பட்டு, பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சென்னை பெருநகர எல்லைக்குள் சாலை கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் சென்னை புறவழிச் சாலை, சென்னை வெளிவட்டச் சாலை திட்டங்கள் செயலாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மேலும், அனைத்துத் தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் சென்னை துறைமுகப் பகுதிகளை இணைக்கும் பொருட்டு "சென்னை பெரிய வட்டச் சாலை" அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆராயப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரின் சுற்றுப்புறத்தில் உள்ள முக்கிய இணைப்புச் சாலைகள் மேம்படுத்தப்படும். செங்கல்பட்டு–திருப்போரூர் சாலை, தாம்பரம்–முடிச்சூர்–திருப்பெரும்புதூர் சாலை, கோடம்பாக்கம்–திருப்பெரும்புதூர் சாலை, வாலாஜாபாத்–சுங்குவார் சத்திரம்–கீழச்சேரி சாலை, சட்ராஸ்–செங்கல்பட்டு–காஞ்சிபுரம்–திருத்தணி சாலை, சிங்கபெருமாள்கோவில்–திருப்பெரும்புதூர்–திருவள்ளூர்–ரெட் ஹில்ஸ் சாலை, திருமழிசை–ஊத்துக்கோட்டை ஆகிய சாலைகள் தற்போதைய இருவழித் தடத்திலிருந்து நான்கு வழித்தடச் சாலைகளாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) பல்லாவரம்–துரைப்பாக்கம் சாலை, சென்னை–சித்தூர்–பெங்களூரு சாலை ஆகியவை நான்கு வழித் தடத்திலிருந்து ஆறு வழித்தடச் சாலைகளாகவும் விரிவாக்கம் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 141.60 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த சாலைகள் 744 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவுபடுத்தி, மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்விணைப்புச் சாலைகள் விரிவாக்கத்தினால் இச்சாலைகள் சென்னை மாநகரின் வெளிவட்ட சுற்றுச் சாலை, பெரிய வட்டச் சாலை ஆகியவற்றிற்கு இணைப்புச் சாலைகளாகத் திகழும். அதனால், சென்னை புறநகர்ப் பகுதிகளில் பெருமளவு போக்குவரத்து நெரிசல் குறையும்.

2016 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

4. தாரமங்கலம் நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், ஓமலூர்–சங்ககிரி–திருச்செங்கோடு–பரமத்தி சாலை கிலோ மீட்டர் 9/240 முதல் கிலோ மீட்டர் 12/300 வரையான பகுதியில் 3.110 கிலோ மீட்டர் நீளத்திற்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புறவழிச் சாலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த புறவழிச் சாலை திட்டம் தாரமங்கலம் நகரில் போக்குவரத்து நெரிசலை வெகுவாகக் குறைக்கும்.

5. தேசிய நெடுஞ்சாலை 79–ல் மல்லியக்கரை–ராசிபுரம், திருச்செங்கோடு–ஈரோடு சாலையில் கிலோ மீட்டர் 41/0–43/0–ல் ராசிபுரம் நகரம் அமைந்துள்ளது. ராசிபுரம் நகரப் பகுதியில் இச்சாலை மிகவும் குறுகலாக இருப்பதாலும், ராசிபுரம் நகரின் சுற்று வட்டாரங்களில் உள்ள கல்வி நிலையங்களின் பேருந்துகள் காலை, மாலை இருவேளைகளிலும் இச்சாலையின் வழியாகச் செல்ல வேண்டியிருப்பதாலும் போக்குவரத்து மிகவும் நெரிசல் மிக்கதாக உள்ளது.

பிற்பகல் 12–05

எனவே, ராசிபுரம் புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் முதற்கட்டத்தில் கிலோ மீட்டர் 2/8 முதல் 8/8 வரை 6 கிலோ மீட்டர் நீளத்திற்கு மோகனூர்–நாமக்கல்–சேந்தமங்கலம்–ராசிபுரம் சாலை அப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் ஆரம்பித்து அணைப்பாளையம் கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலையுடன் National Highway *44–உடன் கிலோ மீட்டர் 230/2–ல் இணையுமாறு அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.*

அணைப்பாளையம் கிராமத்திலிருந்து மல்லியகரை–ராசிபுரம்–திருச்செங்கோடு–ஈரோடு சாலை பொன்குறிச்சி என்னும் இடத்தில் இணையுமாறு தற்போது இரண்டாம் பகுதி அமைக்கப்படும். சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தச் சாலை அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனால், ஆத்தூர், மெட்டாலா, முள்ளுக்குறிச்சி, கொல்லிமலை, சேந்தமங்கலம் ஆகிய பகுதிகளிலிருந்து சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, ஈரோடு செல்லும் வாகனங்கள் இப்புறவழிச் சாலையின் வழியாகச் செல்ல இயலும். மேலும், ராசிபுரம் நகரைச் சுற்றியுள்ள கல்வி நிறுவனங்களின் வாகனங்கள் இப்புறவழிச் சாலை வழியாகச் செல்ல முடியும். அதன் காரணமாக ராசிபுரம் நகரில்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 12

போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறைவதுடன் பயண நேரம், எரிபொருள் செலவு, விபத்துகளின் எண்ணிக்கை போன்றவையும் குறையும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் காரணமாக சாலை போக்குவரத்து மேம்பாடு அடையும். சென்னை புறநகர்ப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் குறையும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் இன்று பொதுப் பணித் துறை தொடர்பாகவும், நெடுஞ்சாலைத் துறை தொடர்பாகவும் செய்திருக்கும் அறிவிப்புகளை வரவேற்றுப் பாராட்டுகிறேன். ஓர் ஆட்சியின் சிறப்பையும், செயல்பாட்டையும் தீர்மானிப்பதில் இவ்விரண்டு துறைகளுக்கும் பெரும்பங்கு இருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசில், இத்துறைகள் சிறப்பான பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றன என்பதை நாம் அறிகின்றோம். இன்று, நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் 22 இலட்சம் மக்கள் பயன் அடையும் வகையில் 80 பாலங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது உரிமைக்குக் குரல் கொடுக்கும் அரசு மட்டுமல்ல; உறவுக்கும் வளர்ச்சிக்கும் பாலம் அமைக்கும் அரசு என்பதும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) சாலைகளையும், சாலையோரம் சோலைகளையும் உருவாக்கும் அரசு இது; வளர்ச்சியை நோக்கி மாநிலத்தை வழிநடத்தும் அரசு இது என்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவிப்புகள் அனைத்தும் சிறப்புக்குரியவை.*

அதைப்போல் நீர் மேலாண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு காட்டிவரும் அக்கறையும், நதி நீர்

2016 ஆகஸ்ட் 12] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

உரிமைகளில் சமரசம் இல்லாமல் நடத்திவரும் போராட்டங்களும் சிறப்பானவை. முல்லைப் பெரியாறு அணை உரிமைப் போராட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் காட்டிய உறுதி காரணமாக 7—5—2014 அன்று உச்ச நீதிமன்றம் அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அணையின் பராமரிப்புப் பணிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளுவதற்கும் ஆணையிட்டது. இது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையிலான அரசுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும்.

அதைப்போல், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் காவேரி நடுவர் மன்ற இறுதியாணையை மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டுமென்று சட்டப் போராட்டத்தை நடத்தினார்கள். அதன் விளைவாக மத்திய அரசு 19—2—2013 அன்று இதனை அரசிதழில் வெளியிட்டது. இதன்மூலம், காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் மீட்டெடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 2005 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு பொதுப் பணித் துறைக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் நீர்வள, நிலவளத் திட்டம் உருவாக்கப்பட்டது.

பிற்பகல் 12—10

இதன்மூலம் நீர் ஆதாரங்களைப் புதுப்பித்து, ஏரி பாசன அமைப்புகளை நவீனப்படுத்தி, புனரமைப்பது முக்கிய நோக்கமாகும். இதனால் விவசாய சமூகத்தின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதுதான் தூர நோக்குத் திட்டமாகும். ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி, அதன்மூலம் பல்வேறு களங்களில் மக்களுக்கு நலன்களை வழங்கும் தூர நோக்குப் பார்வை நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சிறப்பாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், நீர் ஆதாரங்களை வளப்படுத்தும் நோக்கத்தோடு, பொதுப் பணித் துறைக்காக, இன்றைக்கு அம்மா அவர்கள் பல அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். அவை விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்கும் அறிவிப்புகள், (மேசையைத் தட்டும் ஒலி) தண்ணீரைப் பாதுகாக்கும் அறிவிப்புகள். (மேசையைத் தட்டும் ஒலி) பன்னீர் வாசனை வீசும் அறிவிப்புகள் என்று கூறி, அனைத்தையும் வரவேற்று, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சொட்டு நீரையும் வீணாக்கக்கூடாது என்று முதன்முதலில் நாட்டிற்கு மழை நீர் சேமிப்புத் திட்டம் தந்த ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) "கண்களில் நீர் உண்டு, கண் துடைப்பார் யாருமில்லை", இது முன்னோர் காலத்துப் பழமொழி. அன்னை தமிழ்நாட்டில் எவர் ஒருவரின் கண்களிலிருந்தும் நீர் சொரிந்திட அனுமதிக்காத ஒப்பற்ற தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110–ன்கீழ் வெளியிடப்படும் அவர்களுடைய அளப்பரிய திட்டங்களின் வரிசையில் இன்று புதிய திட்டங்கள் அன்னைத் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கின்றன.*

தமிழகத்தில் ஒரு நெல் மணியும் வீணாகக்கூடாது என்ற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு விதி 110–ன்கீழ் நேரடி நெல் கொள்முதல், நவீன அரிசி ஆலைகள் அமைப்பது முதல் நுகர்வோருக்குப் பாதுகாப்பான அரிசியைத் தருவது வரை, பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய மேட்டூர் அணை, வைகை அணை உள்ளிட்ட அந்த அணைகளுடைய நீர், குளங்கள், ஏரிகள் எல்லாம், நீர் உற்பத்தியாகின்ற இடத்திலிருந்து, கடைசியாக அந்த நீர் விவசாயிகளுடைய விளை நிலத்திற்கோ அல்லது வீடுகளில் மக்கள் பயன்படுத்துகிற வரையிலும், அந்தக் கடைசி சொட்டு நீரையும் வீணாக்காமல், அதைத் தூய்மைப்படுத்தி, பாதுகாத்து, நாட்டு மக்கள் அனைவருக்கும் தடையில்லாமல் குடிநீரை, பாசன நீரைச் சேமிப்பதற்கு அளப்பரிய அறிவுபூர்வமான திட்டத்திற்காக, பலகோடி ரூபாயை அள்ளித் தந்த தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஐந்தாண்டுகளில், நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய உள்கட்டமைப்பு வசதிகள், குறிப்பாக சாலை வசதியைப் பொறுத்தவரையில் குடிசைகளின் வாயிற்படி வரைக்கும் கான்கிரீட் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. நான் பல்வேறு குக்கிராமங்களுக்குச் சென்றபோது, அந்த குக்கிராமத்தில், உழைக்கும் மக்களுடைய வாயிற்படி வரைக்கும் சிமென்ட்

2016 ஆகஸ்ட் 12] [திரு. உ. தனியரசு]

கான்கிரீட் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. அங்கு துவங்கி, இங்கு கோட்டைக்கு வருகின்ற வரைக்கும், எந்த இடத்திலும் சேதாரம் இல்லாமல், தரமான தார்ச் சாலைகளைத் (மேசையைத் தட்டும் ஒலி) தந்த தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் எல்லா மூலை முடுக்கெல்லாம் தரமான, நேர்த்தியான சாலைகள் மற்றும் சாலைகளின் இருபுறமும் மரங்கள், ஏரிகள், குளங்கள், பசுமையாக அமைத்திருக்கிறார்கள். இதுதான் உலகத்திற்கு வழிக்காட்டுகிற, ஒப்பற்ற இந்தத் தாய் தமிழ் சமூகத்தினுடைய வாழ்வு மலர, (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் அழகான அரசியலை, நிருவாகத்தை, அறிவுசார்ந்த நிருவாகத்தை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டமிட்டு, வடிவமைத்து வருகிறார்கள் என்பதற்கு சான்று இந்த விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள்.

இந்த விதி 110–ன்கீழ், கிராமப்புறங்களுக்கு 22 இலட்சம் மக்கள் பயன்பெறுவதற்கு 80 பாலங்கள் என அறிவித்திருக்கிறார்கள். சென்னைப் பெருநகரத்தில் நான்கு வழிச்சாலைகளாக, ஆறு வழிச்சாலைகளாக மாற்றி, போக்குவரத்து நெருக்கடி உள்ள சாலைகளில், மக்களுடைய நேரத்தை, எரிபொருளைச் சேமிப்பதற்கு திட்டங்களைத் தந்த தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநகரத்திலிருந்து கடைக்கோடியில் இருக்கின்ற கிராமப்புற மக்கள் வரைக்கும், நீரைச் சேமித்துப் பயன்படுத்தவும், ஒரே சீரான, வேகமான, தடையில்லாமல், போக்குவரத்தை நடத்திட, சாலைகளையும், போக்குவரத்து வாகன தடத்தையும், நீர் வழித் தடங்களையும் சீர் செய்து, அன்னை தமிழ் மண்ணை அழகுபடுத்த, நாளும் திட்டம் தரும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்று விதி 110–ன்கீழ் அறிவித்த திட்டங்களை மனமார பாராட்டி, வரவேற்று, நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

பிற்பகல் 12–15

***திரு. சே. கருணாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.”

அதாவது, செயலுக்கு உரிய கருவியும், ஏற்ற காலமும், செய்யும் வகையும், செய்யப்படும் அரிய செயலும் சிறப்படைய செய்ய வல்லவனே அமைச்சன் என்பது வள்ளுவருடைய வாக்கு. தமிழக மக்களின் அனைத்துத் தேவைகளையும் உணர்ந்து, அதற்கேற்ப, விதி 110–ன்கீழ், தொலைநோக்குடன், தினந்தோறும் முத்தான திட்டங்களை அறிவிக்கும் வாராகியாக, ஒரே முதல்வராக, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுமே விளங்குகிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

மாண்புமிகு தமிழக முதல்வர் 2016 ஆம் ஆண்டு மே மாதம் பதவி ஏற்ற ஒரு மாத காலத்திற்குள்ளாகவே மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, 96 பக்கங்களைக் கொண்ட, தமிழக வளர்ச்சி குறித்த கோரிக்கை மனுவை அளித்தார்கள். அதில், செயல் திட்டம், முல்லைப் பெரியாறு, காவேரி மற்றும் நதிகள் இணைப்பு என மனிதனின் முக்கிய வாழ்வாதாரமான நீர்நிலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை, முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தார்கள். இந்தியாவிலேயே எதிர்கால சந்ததியினருடைய வாழ்க்கைக்கு ஓர் உத்தரவாதத்தைக் கொடுக்க வேண்டும் என்கின்ற நிலையில் யோசிக்கின்றார்கள். இதுபோன்று, அவர்களைத் தவிர, வேறு ஒருவரும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்ட அளவை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தியது மட்டுமல்லாது, காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை அரசிதழில் வெளியிடச் செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியில் தமிழ்நாட்டின் உரிமைகளையும், தமிழர்களுடைய பெருமைகளையும் காத்து, வரக்கூடிய சந்ததிகளுக்கு உத்தரவாதம் கொடுத்து, அதை நிறைவேற்றிய ஒரே முதல்வராக, இந்தியாவிலேயே தமிழக முதல்வர் ஒருவர்தான் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த யுகத்தில் வரக்கூடிய சந்ததியினர், எதிர்காலத்திலே ஓர் உலக யுத்தத்தை பார்க்கப் போகிறார்கள் என்றால், அது நிச்சயமாக தண்ணீருக்கான ஒரு யுத்தமாகத்தான் இருக்கும் என்பது வல்லுநர்களுடைய கருத்தாக இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீர்க்கமாக, தெளிந்த சிந்தனையில் முடிவெடுத்துத்தான், இன்று பொதுப் பணித் துறையின் சார்பாக நீர் வள ஆதாரங்களைப் பாதுகாக்கக்கூடிய இந்த நேரத்தில்,

எதிர்காலச் சந்ததிகளுக்காக, இந்த நாட்டு மக்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டும், கிராமப்புறங்களையும், விவசாயிகளையும், அனைத்துத் தரப்பு உயிரினங்களையும் காக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், மேட்டூர் அணையில் 60 ஆண்டுகளாக சீர் செய்யப்படாத கால்வாய்களுக்கும், 56 மைல் தூரமுள்ள பவானி காளிங்கராயன் வாய்க்கால்களை ரூ.91 கோடியிலே சீரமைத்திடவும், 100 ஆண்டுகள் பழமையான சரபங்கா நதி, வராக நதி, வைகை ஆறு போன்றவற்றுக்கு கிட்டத்தட்ட ரூ.10 கோடி அளவில் நிதி ஒதுக்கி, சிவகங்கை, இராமநாதபுரம் பகுதியிலுள்ள மக்களுடைய நீர்வள ஆதாரத்தைப் பாதுகாக்கக்கூடிய புரட்சிகரமான ஒரு திட்டத்தை இந்த நேரத்தில் வெளியிட்டமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களைச் சார்ந்த மக்களுடைய, அனைத்து மக்களுடைய மிக முக்கியமான, போக்குவரத்துக்கு மிக, மிக முக்கியமாக இருக்கக்கூடிய காரணத்தை மனதிலே கொண்டு, 80 பாலங்களை 22 இலட்சம் மக்கள் பயனடையக்கூடிய வகையில், இருவழிச் சாலைகளை, நான்கு வழிச் சாலையாக மாற்றுவது மட்டுமல்லாது, நான்குவழிச் சாலைகளை, ஆறுவழிச் சாலைகளாக மாற்ற கிட்டத்தட்ட 740 கோடியிலே திட்டங்களை உருவாக்கியிருக்கக்கூடிய ஒரே முதல்வராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

அயல்நாடுகளில், ஒவ்வொரு துறையும் ஓர் அறிஞரைப் பெற்றிருக்கிறது. பேச்சுக்கு சிசெரோவையும், எட்மண்ட் பர்க்கரையும், உரையாடலுக்கு சார்லஸ் லேம்ப்யையும், பெர்னாட்ஷாவையும், கதைக்கு ரூசோவையும், இங்கர்சாலையும், நாடகத்திற்கு சௌபாக்லியஸையும், ஷேக்ஸ்பியரையும் பெற்றிருக்கின்றன. ஆனால், நம் தமிழகமோ அத்தனை அறிஞர்களையும் உள்ளடக்கிய ஒரே அறிஞரைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தான், நம் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அப்படிப்பட்டவருடன் யாரையும் ஒப்பிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு நிகர் அவரே என்று கூறி, இன்று அறிவிக்கப்பட்ட அத்தனை திட்டங்களும் மக்களுக்கான திட்டங்கள் என்று கூறிக்கொள்கிறேன். தமிழக மக்கள், எதிர்காலச் சந்ததிகள் என்றென்றைக்கும் மறவாது உங்களுக்கு நன்றியுடன்

இருப்பார்கள் என்பதை உறுதியுடன் கூறி, என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும், நான் சார்ந்துள்ள முக்குலத்தோர் புலிப்படை சார்பாகவும் நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், இது மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி தெரிவிக்கும் வாய்ப்பு. (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்கிறீர்களா? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகளில் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால், ஒன்றை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே, Highways, PWD குறித்த மானியக் கோரிக்கைகள்மீதான விவாதங்கள் நடந்து முடிந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, விதி 110–ன்கீழ், எப்பொழுது வேண்டுமானாலும் அறிக்கை அளிப்பதற்கு உரிமை இருக்கிறது. நீங்கள் அதைப் பற்றியெல்லாம் கேள்வி கேட்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று விதி 110–ன்கீழ் அறிக்கைகளை அளித்திருக்கிறார்கள். அந்த அறிக்கைகளை வரவேற்பதாக இருந்தால், நீங்கள் நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு)மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் என்ன சொல்ல வருகிறார் என்பது புரிகிறது. அவை விதிகளைப் பொறுத்தவரை தங்களுக்கு எந்த அளவுக்கு விதிகளைப் பற்றி தெரியுமோ, அந்த அளவுக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் அவையின் விதிகளைப் பற்றித் தெரியும்.

ஆகவே, 110–வது விதியின்கீழ் ஓர் அறிக்கை இங்கே வாசிக்கப்பட்ட பின், அதைப்பற்றி எந்த விமர்சனமும் செய்யக்கூடாது, எந்தக் கேள்வியும் கேட்கக்கூடாது என்று விதிகளிலேயே உள்ளது என்பது எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு தெரியும். ஆனால் அவர் எழுப்புகின்ற கேள்வி,

2016 ஆகஸ்ட் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஏற்கெனவே இந்த அவையில் பலமுறை எதிர்க்கட்சியினரால் எழுப்பப்பட்ட கேள்விதான். அமைச்சர்கள் அவரவர்களுடைய மானியக் கோரிக்கையை இங்கே முன்மொழிந்து, அதன் பிறகு, அதன்மீது விவாதம் நடைபெற்ற பிறகு, அவர்கள் தங்கள் துறை சம்பந்தமாக சில புதிய அறிவிப்புகளைச் செய்த பிறகு, அதே துறையைப் பற்றிய சில அறிவிப்புகளை முதலமைச்சர் ஏன் வெளியிடுகிறார் என்று கேட்கிறார். அதுதான் அவருடைய கேள்வி. (குறுக்கீடு) அப்படித்தான். ஆகவே, அதற்கு விளக்கம் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். இந்தக் கேள்வியை ஏற்கெனவே எங்களுடைய ஆட்சிக் காலத்தில், ஏற்கெனவே இருந்த எதிர்க்கட்சியினர் கேட்டிருக்கிறார்கள். இப்போது விளக்கமளிக்கிறேன்.

எல்லா யோசனைகளும், எல்லா திட்டங்களும், ஒரே சமயத்தில் ஓர் ஆட்சிக்குத் தோன்றாது. அப்படித் தோன்றியிருந்தால் தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது இந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்தியிருக்கலாமே, ஏன் செய்யவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் தினந்தோறும் காலை முதல் மாலை வரை இரவு பகல் என்று பாராமல் 24 மணி நேரமும் மக்களைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்குப் புதிய புதிய திட்டங்கள் என்னென்ன கொண்டுவரலாம் என்று சிந்தித்துக்கொண்டேயிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஏற்கெனவே இந்தத் துறையைப் பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர் தன்னுடைய மானியக் கோரிக்கையை அவை முன் வைத்தார். அதன்மீது விவாதம் நடைபெற்றது. அன்றைக்கு அவர் சில புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அன்றுவரை எங்களுக்குத் தோன்றிய அறிவிப்புகள் அவைதான். அவற்றை அவர் வெளியிட்டார். அதன்பின் அந்தத் துறையைப் பற்றி யோசிக்க யோசிக்க, அடடா! இதை விட்டுவிட்டோமே, இதையும் செய்யலாமே என்ற யோசனை வந்ததால் அப்படிப்பட்ட புதிய அறிவிப்புகளை இன்று வெளியிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு துறையிலும் அப்படித்தான், அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதில் விவாதம் ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் நன்றி சொல்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், அதில் விவாதம் ஒன்றுமில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள். தேவையில்லாததைச் சொன்னால் நான் அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடுவேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எந்த நேரத்திலும் எதையும் வெளியிட அதிகாரம் உண்டு. நான் அதிலே குறுக்கிடவில்லை. எனக்கு உள்ள ஐயப்பாடு என்னவென்றால், ஏற்கெனவே பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறைக்கு இந்த மன்றத்தில் ஒரு தொகையை நீங்கள் வாக்கெடுப்பிற்கு விட்டு, இவ்வளவு தொகை செலவு செய்துகொள்ளலாம் என்று இம்மாமன்றம் ஒப்புதல் அளித்திருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற இந்தத் தொகைக்கெல்லாம் மீண்டும் ஒரு தீர்மானம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (குறுக்கீடு) இதற்குத்தான் இதில் விவாதம் கிடையாது என்று சொன்னேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளும் ஓர் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) வாய்க்கு வந்ததையெல்லாம் அறிவித்துவிடமாட்டோம். ஆளுக்கு இரண்டரை ஏக்கர் நிலம் கொடுக்கப்படும் என்று அறிவித்துவிட்டு, பின்பு நெல்லிக்கனி அளவு, கையளவு நிலம் இருந்தால்கூட கொடுக்கப்படும் என்றெல்லாம் சொல்லமாட்டோம். நாங்கள் யோசித்து, முடியுமா என்று யோசித்துதான் எதையும் அறிவிப்போம். ஒரு திட்டத்தை அறிவித்தால் அதைச் செயல்படுத்த முடியுமா என்று நூறு முறை ஆலோசித்துவிட்டுதான் நான் அறிவிப்பேன். ஆகவே, என்னென்ன புதிய திட்டங்களை இந்த அவையில் அறிவிக்கின்றேனோ, அறிவிப்பதற்கு முன்னால் இங்கேயுள்ள நிதித் துறைச் செயலாளர் அவர்களுடன் ஆலோசனை நடத்திவிட்டு, இதற்கான நிதி உண்டு, இதற்கு அனுமதி உண்டு, இதை அறிவிக்கலாம் என்று நிதித் துறை செயலாளர் ஒப்புதல் அளித்த பிறகுதான், அவற்றை இங்கே அறிவிக்கிறேன் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதன்மேலே விவாதம் ஒன்றும் இல்லை, (குறுக்கீடுகள்) துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். இதுசம்பந்தமாக இனிமேல் நீங்கள் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இதற்கு மேலேயும் ஒன்றும் இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே அதிலே விளக்கங்களை மேற்கொண்டு கேட்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை. நான் கொடுக்கமாட்டேன். ஏற்கெனவே நான் விதி 110—ன்கீழ் மேலும் விவாதம் வேண்டாமென்று ஆரம்பத்திலேயே சொன்னேன். ஆனால் நீங்கள் கேட்டீர்கள். நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவான விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். உங்களுக்கு தொண்டை சரியில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதற்கு மேல் பேசவேண்டாம் உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள். நான் நிற்கிறேன் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். விதிகளை மதியுங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் நின்றுகொண்டு இருக்கிறேன். (குறுக்கீடுகள்) விதிகளை மதித்து நீங்கள் அமருங்கள். நீங்கள் விதிகளுக்கு மதிப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் நிற்கிறேன். நீங்கள் உட்காருங்கள். தயவுசெய்து நான் சொல்வதைக் கேட்டு, நீங்கள் அமைதியாக அமருங்கள். உங்களுக்கு நான் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன்.*

நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவான விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். மேற்கொண்டும் இதை விவாதமாக்க முடியாது. (குறுக்கீடுகள்) இந்தப் பொருள் குறித்து, மேலும் விவாதம் கிடையாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதற்கு மேற்கொண்டு நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. நீங்கள் உட்காருங்கள். நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன். ஆரம்பத்தில் நீங்கள் எழுந்தவுடனேயே இந்த விவாதத்திலே எதுவும் கேட்கமுடியாது; நீங்கள் நன்றி சொல்வதாக இருந்தால் உங்களை

அனுமதிக்கிறேன் என்று சொன்னேன். *(குறுக்கீடுகள்)* நீங்கள் நன்றிதான் சொல்கிறேன் என்று சொன்னீர்கள். அதனால் உங்களைப் பேசுவதற்கு அனுமதித்தேன். நீங்கள் வேறு விளக்கங்களைக் கேட்டீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அதற்கு தெளிவான விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். *(குறுக்கீடுகள்)* ஆகவே, இதிலே மேற்கொண்டு விவாதம் இல்லை. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏற்கெனவே தெரிவித்த மாதிரி, விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. அவர்கள் நிதியையெல்லாம் ஆராய்ந்துதான் தெரிவித்தேன் என்று சொல்லிவிட்டார்கள். இதற்குமேல் இதிலே நீங்கள் விவாதம் செய்வதற்கு ஒன்றும் இல்லை. நான் வாய்ப்புத் தரமாட்டேன். *(குறுக்கீடுகள்)* அதற்கெல்லாம் வாய்ப்பு இல்லை. நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

திரு. அன்பழகன், இது உங்களுடைய இடம் இல்லை. நீங்கள் நின்று கொண்டு பேசிக்கொண்டிருப்பது உங்களுடைய இடம் இல்லை. உங்களுடைய இருக்கைக்குச் செல்லுங்கள். மேற்கொண்டு இந்த மாதிரி, இந்தச் சபை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால் நான் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும். நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். நான் எச்சரிக்கிறேன். திரு. அன்பழகன் நான் உங்களை எச்சரிக்கிறேன். உங்களுடைய இடம் இது இல்லை. உங்களுடைய இடத்தைவிட்டுவிட்டு இங்கே வந்து பேசுவது முறையல்ல. நான் உங்களை எச்சரிக்கிறேன். உங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். நான் உங்களை எச்சரிக்கிறேன். உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். நீங்கள் மேற்கொண்டும் இந்த மாதிரி விவாதம் செய்தால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் இடத்திற்குச் சென்று அமருங்கள். *(குறுக்கீடுகள்)* அரசினுடைய விதிகளை, சட்டமன்றத்தினுடைய விதிகளை முழுமையாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவாகத் தெரிந்து, விளக்கங்களைக் கொடுத்துவிட்டார்கள். *(குறுக்கீடுகள்)* அதற்கு மேலேயும் நீங்கள் எல்லாம் விளக்கம் கேட்க முடியாது. *(குறுக்கீடுகள்)* நீங்கள் உங்களுடைய இடத்திற்குச் செல்லுங்கள். முதலமைச்சருக்கு எல்லாம் தெரியும். *(குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

2016 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 12—30

திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். நிறைவேற்றுகிற திட்டங்களைத்தான் நாட்டு மக்களுக்குச் சொல்வோம் என்று அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆகவே, அதற்குரிய திட்டங்களைத்தான் அவர் அறிவித்திருக்கிறார். ஆகவே, இந்த அரசு முழுமையாக அதைப் பார்த்துக்கொள்ளும். (குறுக்கீடுகள்) ஆகவே, நீங்கள் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாதீர்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. திரு. துரைமுருகன், நீங்கள் உங்கள் இடத்திலிருந்து கேட்கிறீர்கள். உட்காருங்கள் என்று சொன்னால், உட்காரமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. பேரவைத் தலைவராகிய நான் இவ்வளவு நேரம் நின்றுகொண்டு, பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள் என்று சொன்னால், உட்காரமாட்டேன் என்கிறீர்கள். விதியைப் பின்பற்றமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இங்கே, உங்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள், கடைசி வரிசையிலிருந்து, அவருடைய இருக்கையை விட்டுவிட்டு, இங்கே வந்து, என்னிடத்தில் வாதம் செய்கிறார். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) இது என்ன முறை? (குறுக்கீடுகள்) என்ன முறை இது? (குறுக்கீடுகள்) நீங்கள், உங்கள் கட்சி உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தமாட்டேன் என்கிறீர்கள், நீங்களும் கட்டுப்படமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் விதிகளைத்தானே சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன், நீங்கள் வாய்ப்புக் கேட்டீர்கள், ஒரு முறைக்கு, இருமுறை நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தேன். நீங்கள் விளக்கங்களைக் கேட்டீர்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், தெளிவாக உங்களுக்கும் புரிகின்றமாதிரி, உங்களுடைய உறுப்பினர்களுக்கும் புரிகின்ற மாதிரி, நாட்டு மக்களுக்கும் தெரிகின்ற மாதிரி, தெளிவாக பதில் சொல்லிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கொண்டு இதில் விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) இந்தப் பொருள் குறித்து மேற்கொண்டு பேச நான் அனுமதி அளிக்கமாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவு தூரம் வற்புறுத்தினாலும், அதற்கு நான் இணங்கமாட்டேன். (குறுக்கீடுகள்) விதிகளின்படி அதற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) அமருங்கள்.

(குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், அங்கே உங்கள் கட்சி உறுப்பினர்கள் திரு. ஜெ. அன்பழகன் அவர்களும், திரு. ப. ரங்கநாதன் அவர்களும் இதுமாதிரி செய்கிறார்களே? இது முறையா? (குறுக்கீடுகள்) இதுதான் நீங்கள் இந்த அவையில் நடந்துகொள்கிற முறையா? (குறுக்கீடுகள்) நீங்கள் அன்றைக்கு என்னிடம் வந்து என்ன சொன்னீர்கள், 'நாங்கள் அவையை நடத்த ஒத்துழைப்புத் தருகிறோம்' என்று சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு நீங்கள் இந்த அவையை நடத்த ஒத்துழைப்பா தருகிறீர்கள்? (குறுக்கீடுகள்) இது முறையல்ல. அதாவது, நான் ஒவ்வொரு நாளும். . .

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுகளில் திட்டங்கள் எப்படி செயல்படுத்தப்பட்டதோ, செயல்படுத்தப்பட்டபடியே தேவையான நிதி வழங்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்து ஆண்டுகளாக எத்தனையோ அறிவிப்புகளை விதி 110–ன்கீழ் இங்கு அறிவித்தேன். அவைகளெல்லாம் செயல்படுத்தப்பட்டபடியே இந்தத் திட்டங்களுக்கும் தேவையான நிதி வழங்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் வரவு–செலவுகளைப் பொறுத்தவரையில்,* B.E., R.E., F.M.A. *என மூன்று நிலைகள் உள்ளன. இதைப்பற்றி தெரிந்திருந்தால், எந்தவித குழப்பமும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கரி. இராமசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்கள், நன்றி சொல்ல வாய்ப்புக் கேட்கவில்லை. தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தவுடனே, இப்போது நீங்கள் திடீரென்று எழுந்து நின்று, என்ன கேட்கப்போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) இது முறையல்ல. அதாவது, விதி 110–ன்கீழ் விவாதம் செய்வதற்கு வாய்ப்பே இல்லை. விதி 110–ன்கீழ் ஓர் அறிக்கையை மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்தார்கள் என்று சொன்னால்,*

2016 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

அதன்மீது மேற்கொண்டு விவாதம் செய்ய முடியாது. நன்றி தெரிவித்து, பாராட்ட வேண்டுமென்று சொன்னால், அதற்குமட்டும்தான் வாய்ப்புத் தரப்படும். நீங்கள் விவாதம் செய்வதற்கு வாய்ப்பில்லை. ஆனால், இதே முறையை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து இன்றைக்கு இந்த அவையிலே வந்து, வேண்டுமென்றே, அவர்கள் விதிகளைப் பின்பற்றாமல், இதுமாதிரி சின்னாபின்னப்படுத்துவது மிக வன்மையாகக் கண்டிக்கக்கூடியதாக இருக்கிறது. இவ்வளவு விளக்கங்களையும் அளித்ததற்கு பின்னரும், வேண்டுமென்றே, அவர்கள் திட்டமிட்டு இந்த அவையிலே குழப்பம் விளைவிக்க வேண்டுமென்பதற்காக வந்து, இதுபோல இந்த அவையிலே குழப்பத்தை விளைவித்துவிட்டு, இன்றைக்கு வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். திரு. கரி. இராமசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்களும், அவர்களைப்போன்று, விதிகளைப் பின்பற்றாமல் நடக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. இதற்குமேல், விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் *12–35*

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவாக விளக்கம் சொல்லிவிட்டார்கள். அதாவது, முழுமையாக நிதி ஆதாரங்களைப் பார்த்துவிட்டுத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் இந்த அவையில் அறிவிப்புகளை வெளியிடுகிறார்கள். (குறுக்கீடுகள்) நிதியை ஒதுக்குவதற்கு பல வழிமுறைகள் இந்த மன்றத்திலே இருக்கின்றன. அந்த மரபுகளை, விதிகளையெல்லாம் பின்பற்றித்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்கு இந்த மன்றத்திலே அதை அறிவித்திருக்கின்றார்கள். அவர்கள் எல்லா விதிகளையும் நம்மைவிட மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஆகவே, விதிகளையெல்லாம் நீங்கள் ஒன்றும் சுட்டிக்காட்ட வேண்டாம். அதாவது, நிதிநிலை அறிக்கை இருக்கிறது, திருத்திய மதிப்பீடுகள் இருக்கின்றன. அந்த நிதியை ஒதுக்குவதற்கு பல வாய்ப்புகள் இந்த மன்றத்திலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் பார்த்து, அந்த முறைகளையெல்லாம் பின்பற்றித்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கி, இந்த நாட்டு

மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி திட்டங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை உங்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லையென்று சொன்னால், அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? விதிகளின்படிதான் இந்த அவை நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அதில் நீங்கள் தயவுசெய்து குறுக்கிட வேண்டாம். விதி 110–ன்கீழான அறிவிப்புகளின்மீது எந்த விவாதத்திற்கும் நான் அனுமதி தர முடியாது. திரு. இராமசாமி அவர்களே, நீங்கள் அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மிகவும் அமைதியானவர். தனியாக வரும்போது நன்றாகப் பேசுகிறீர்கள். ஆனால், தி.மு.க.வினர் வெளிநடப்புச் செய்துவிட்டால், நீங்களும் வெளிநடப்புச் செய்வதற்கு திட்டம்போட்டு இப்படி எழுந்து நின்று பேசுவது, அவையின் நேரத்தை வீணடிப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. உங்களுக்கு நான் வாய்ப்பு தர மாட்டேன். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள்அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு காவேரி நீரின் உரிமையைப் பெறுவதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து நான்கு நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு, அறப்போராட்டம் நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகள் நெஞ்சத்தில் நீங்கா இடம்பெற்றவர். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு அணையில், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட, சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டவர், நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மழை நீர் சேகரிப்புத் திட்டத்தினை அறிவித்து, செயல்படுத்தி, இந்திய நாட்டிற்கே வழிகாட்டியவர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு வளம்பெற தொலைநோக்குச்

2016 ஆகஸ்ட் 12] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

சிந்தனையுடன், பன்மாநில நதிகளையும் இணைத்திட பல்வேறு கட்டங்களில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வலியுறுத்தி வருபவர் நமது அன்புத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 5 ஆண்டுகால பொற்கால ஆட்சியில் பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கு பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து, நிதி ஒதுக்கீடு செய்து சாதனை மேல் சாதனை படைத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொடரும் பொற்கால ஆட்சியில், இன்றைய தினம், நீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்கு, நிலத்தடி நீர் வளத்தைச் செறிவூட்ட தடுப்பணைகள் அமைக்கவும், பாசனப் பகுதிகளை மேம்படுத்த ஏரிகளை நவீனப்படுத்தி புனரமைக்கவும், கால்வாய்களைச் சீரமைக்கவும் 7 திட்டங்களை 153.68 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளவும், (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலத்தில் போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைத்து, பாதுகாப்பான, விரைவான பயணத்தை மேற்கொள்ள வசதியாக புறவழிச்சாலை, வெளி வட்டச் சாலை, சாலை உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் பாலப் பணிகள் அமைத்தல் போன்ற 5 திட்டங்களை 1,163.74 கோடி ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளவும், (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110–ன்கீழ் மொத்தம் 12 புதிய திட்டங்களுக்கு 1,317.42 கோடி ரூபாய் மதிப்பில் (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது துறைகளின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை பொற்பாதம் பணிந்து வணங்கி, சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வண்டமிழர் வாழ்வுக்கு வந்துதித்த காவியமாகி, சத்தியாகிரகம் நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) 'சத்யமேவ ஜெயதே' என்னும் சட்டப் போர் நடத்தி, முல்லைப் பெரியாற்று உரிமைதனைக் கைவசமாக்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு, இனி இல்லை தண்ணீர் தகராறு என முல்லைப் பெரியாற்றிலும் முடிசூடியவர், மாண்புமிகு*

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி உரிமைதனில் வெண்தாள் வழி சென்று, தரணி வியக்கும் வெற்றிக் கனியைப் பெற்றவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மண் பயனுற, மாநிலத்து உரிமைக்கே ஓயாது ஒலிக்கின்ற ஒப்பில்லா போர் முரசு, (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண்மை காத்திட்ட பேராண்மை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மண்ணோடு மண்ணாகியதை தன் மாண்பினால் தமிழ் மண்ணுக்குப் பொன்னாக்கியவர், வாழும் வள்ளலார், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் உரிமைதனைக் காப்பது மட்டுமல்ல, பெற்ற உரிமைகள் அனைத்தும், பெறும் நீர் முழுவதும் மக்களைச் சென்றடையும் வண்ணம், எண்ணற்ற பாசனத் திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

சாலைகள், பாலங்கள் ஒரு நாட்டின் மூலதனங்கள். நாட்டின் மூலதன மதிப்பை உயர்த்த எண்ணற்ற அறிவிப்புகள். 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்று சொல்வார்கள். ஆடி மாதம் மட்டுமல்ல, இன்றைக்கு ஆடி வெள்ளி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்ல நாளில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ள அறிவிப்புகள், விவசாயிகளுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். (மேசையைத் தட்டும் ஒலி)

வரங்களை அள்ளித் தரும் வரலட்சுமியைத் துதித்திடும் வரலட்சுமி நோன்பு நாளில், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு, தமிழ் இனத்திற்கு வளங்களை அள்ளித் தரும் ஐஸ்வர்ய லட்சுமியாக, இப்பூவுலகில் அவதரித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்று சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளோடு என்னுடைய உணர்வுகளையும் தெரிவித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி.

4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(இ) கோரிக்கை எண் 30—எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

— — —

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016–2017 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் தொடர்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கையின்மீது இதற்கு முன்பு தி.மு.க. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் தெரிவித்த சில கருத்துகளைப் பற்றி ஒரு சரியான விளக்கத்தை இங்கே அளிக்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள் பேசும்போது தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கடற்கரை சாலையில் நிறுவப்பட்ட செவாலியர் நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்களது திருவுருவச் சிலை நிறுவப்பட்டதைப்பற்றி தெரிவித்ததுடன், உச்ச நீதிமன்றத்தில் உத்தரவு பெறவேண்டியது பற்றியும் ஒரு அறிவுரையை வழங்கினார். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிலை நிறுவப்பட்டதுபற்றி சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12–45

திரு. சிவாஜி கணேசன் சிலை, கடந்த தி.மு.க. ஆட்சியில் 21–7–2006 அன்று திறப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. இச்சிலை அந்த இடத்தில் நிறுவப்பெறுவதை எதிர்த்து திரு. சீனிவாசன் என்பவரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கு 19–7–2006 அன்று

நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அவ்விசாரணையின்போது நீதிமன்றம் தமிழ்நாடு அரசால் ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் தற்காலிக அல்லது நிரந்தர அமைப்புகள் எதையும் போக்குவரத்தைப் பாதிக்கும் வகையில் முக்கிய சாலைகளில் அமைக்கப்பட மாட்டாது என்று அளிக்கப்பட்ட உத்தரவாதத்தை கவனத்தில் எடுத்துக்கொண்டது. இதன் காரணமாக அரசுத் தலைமை வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்தில் தெளிவுரை மனு Clarification Petition ஒன்றைத் தாக்கல் செய்வதாகத் தெரிவித்து, அவகாசம் கோரினார். அதன்படி, உச்ச நீதிமன்றத்தில் தெளிவுரை மனு அப்போதைய தி.மு.க. அரசால் தாக்கல் செய்யப்பட்டது. அதாவது, திரு. கருணாநிதி அவர்கள் முதல்வராக இருந்த தி.மு.க. அரசால் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், உச்ச நீதிமன்றம் இதற்கான தெளிவுரையை வழங்கவில்லை. உச்ச நீதிமன்றத்தில் தெளிவுரையைப் பெறுவதற்கோ அல்லது உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கை அரசுக்கு சாதகமாக முடிக்கவோ தி.மு.க. அரசு, அதாவது, திரு. கருணாநிதி அவர்களின் தலைமையிலான அரசு, எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எனவே, உயர் நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளின்படி செயல்படுவதற்கு எந்தவித அறிவுரையையும் மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள் வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.

திரு. அ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாவது முறையாக அன்னைத் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று, தமிழ்நாட்டை எழில்மிகு மாநிலமாய் மாற்ற வல்ல ஆற்றல்மிக்க கருணைத் தாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன், தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை புறநகர் மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், எட்டிமடை கிராமத்தில் அய்யாசாமி, அய்யம்மாள் ஆகியோரின் புதல்வராக, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, கழகத்தின் கடைக்கோடித் தொண்டனாக இணைந்து பணியாற்றிய என்னை எட்டிமடை பேரூராட்சி கழகச் செயலாளராகவும், கிணத்துக்கடவு தொகுதி இணைச் செயலாளராகவும், எட்டிமடை பேரூராட்சி

மன்றத் தலைவராகவும், எட்டிமடை பேரூராட்சி மன்ற துணைச் செயலாளராகவும், இன்றுவரை மதுக்கரை ஒன்றியக் கழகச் செயலாளராகவும், நடந்து முடிந்த 2016 சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்ற வாய்ப்புகளை அள்ளித் தந்த கருணையின் வடிவம், வேண்டும் அனைத்தும் தரவல்ல எங்கள் குலதெய்வம், மாண்புமிகு அம்மா. நானும் என் குடும்பமும் வாழ்நாளெல்லாம் நன்றி மறவாது இருப்போம் அம்மா என்று சொல்லி, எனது நன்றி மலர்களைத் தங்கள் பாத மலர்களிலே சமர்ப்பிக்கின்றேன், அம்மா. என்னை சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த கிணத்துக்கடவு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கழக வெற்றிக்காக இரவு, பகல் பாராது அயராது பணியாற்றிய கழக உடன்பிறப்புகளுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

சுற்றுச்சூழல், செய்தி மற்றும் விளம்பரம் மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீதான உரையைத் தொடங்குகிறேன், தாயே.

அம்மா, உங்கள் பொற்கால ஆட்சியில் இன்றைய இந்தியப் பேரரசின் இணையற்ற மாநிலமாய் தமிழகம் ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. நினைத்தாலே இனிக்கின்ற நிகரற்ற திட்டங்கள் நாள்தோறும் அணிவகுத்துக்கொண்டிருக்கின்றன, அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் சுற்றுச்சூழல் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தை முன்னேற்றப் பாதையிலே அழைத்துச் செல்ல தொலைநோக்குப் பார்வை—2023 என்ற ஆவணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் தொழில் துறையின் மேம்பாடு தேசிய சராசரி அளவைவிட கூடுதலாகவே வளர்ச்சி இலக்கைக் கொண்டிருந்தாலும், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலிருந்து விலகாமல், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது. தமிழகத்தில், வனப் பகுதிகளுக்கு வெளியே மரங்களை நட்டு, தமிழ்நாட்டினைப் பசுமைப்படுத்தவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான

முயற்சிகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சீரிய முறையில் செய்து வருகிறது.

பிற்பகல் 12–50

மாணவ சமுதாயமும், பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நில மாசு, நீர் மாசு, காற்று மாசு, தொழிற்சாலை மாசு மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் குறித்து விளக்க குறும்படங்கள் மற்றும் விளம்பரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது போற்றுதலுக்குரியது. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டம், பெரியகுளம், சிங்காநல்லூர் குளம் மற்றும் கிருஷ்ணாம்பதி ஏரியைச் சீரமைக்க நடவடிக்கை எடுத்ததற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோன்று, கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள புனித ஸ்தலமான மருதமலையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுத்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பல சிறப்பான திட்டங்களைத் தீட்டி மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் விதிகளின்படி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் மேலாண்மை, தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை, மருத்துவக் கழிவு மேலாண்மை, மின்னணுக் கழிவு மேலாண்மை, கட்டுமானம் மற்றும் இடிமானக் கழிவு மேலாண்மை போன்றவற்றை சிறப்பாகக் கண்காணித்து நடவடிக்கையும் எடுத்து வருவது பாராட்டுதலுக்கு உரியதாகும் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய நான் கடமைப்பட்டுள்ளேன்.

அண்டை மாநிலங்கள் அனைத்தும் இமைக்க மறந்து, இதயம் வியந்து, செயல் மறந்து பார்த்துக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு திட்டத்தையும் தத்தம் மாநிலத்தில் செயல்படுத்த துடிக்கின்றன, அம்மா. கருணையின் முழு வடிவாய், கற்பனைக்கும் எட்டாத

தியாகத் திருவுருவாய், தமிழகத்தின் நலன் யாவையும் விழி போல் காக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) கண் இமையாய் விளங்குகின்ற எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, உங்கள் சிந்தனைத் திறன் கொண்டு செயல்படுத்தும் திட்டங்கள் அனைத்தும் செயல் வடிவம் பெறும்பொழுது, உலகின் உச்சியில் தமிழகம் ஒளிவீசும் வெகு விரைவில் அம்மா.

உலக முதலீட்டாளர்கள் கவனம் எல்லாம் இன்று தங்கத் தமிழகத்தின் மீதல்லவா குவிந்திருக்கின்றது. அவர்கள் வேண்டுகிற தொழில், அமைதி, தடையற்ற மின்சாரம், திறன் மிக்க மனித ஆற்றல், நேர்மையான வெளிப்படை நிருவாகம், அனைத்தையும்விட இரும்புக் கவசமென காத்து நிற்கும் தொழில் பாதுகாப்பு இவையனைத்தும் தமிழகத்தைத் தவிர வேறெங்கு அவர்களுக்குக் கிடைக்கும்? அரை வயிற்றுக் கஞ்சிக்கு அல்லலுற்று, ஆதரவின்றி தவித்து வந்த முதியவர்கள், இன்று வயிறு நிறைந்து, அக மகிழ்ந்து, வாய் நிறைய வாழ்த்துதல் கண்டு, காண்போர் நெஞ்சமெல்லாம் குளிர்ந்து இருக்கின்றது, அம்மா.

“தன் குழந்தைகளுக்கு எது வேண்டுமென்பது தாயாகிய எனக்கு நன்கு தெரியும்” இதைவிட மிகச் சிறந்த உத்திரவாதத்தை உலகில் வேறு எவரால் தர இயலும்? இந்த வார்த்தைகளில் தமிழக மக்களின்மீது, தாயே, நீங்கள் கொண்ட பேரன்பின் வெளிப்பாடு பெரு வெளிச்சமாய் புலப்பட்டது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நாற்புறமும் தீண்டுவதற்கு நச்சரவம் சூழ்ந்தாலும், அம்மா உங்கள் திருநாமம் உச்சரித்து, அச்சமின்றி அவற்றை வெல்லுகின்ற, தைரியம் எங்களுக்கு ஏற்பட்டது அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, மின்வெட்டில் இருண்டு கிடந்தது நமது தமிழகம்; தொழில் முடங்கி, பொருளாதார வளர்ச்சியின்றி, முடங்கிக் கிடந்தது நமது தமிழகம்; ஆனால் இன்றோ, மின்வெட்டு என்ற பேச்சுக்கே இடமின்றி மின் மிகையால் ஜொலிக்கிறது நமது தமிழகம், அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா உணவகத்தின்மூலம், பட்டினி என்ற வார்த்தையே தமிழகத்தை விட்டே தொலைந்து விட்டது அம்மா. திட்டங்களை எவரும் தீட்டி விடலாம். தேன் தடவும் வார்த்தைகளால் பட்டியலிடலாம். ஆனால் அவை எல்லாவற்றையும் செயல்படுத்தும் செயல், ஆற்றல் மிக்க தாய்க்கு மட்டுமே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

உரிமையை சிலர் விட்டுத் தரலாம். உரிமைக்காக சிலர் குரல் கொடுக்கலாம். ஆனால் உரிமையை மீட்டெடுக்கும் துணிச்சலும், திறமையும் எங்கள் தாயைத் தவிர வேறு யாருக்கு உண்டு? காவேரித் தாயே, உங்களை வணங்குகின்றேன். கனிவு கொண்டு அருள் புரியும் நெஞ்சம், தவறு கண்டால் கண்டிக்கத் தயங்காத நேர்மை உள்ளம் கொண்டவர்தான் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

உள்ளம் அணுப்பிளவில் வெளிக்கிளம்பும் பேராற்றல் போல, மிகச் சிறப்பாய் தயாரித்து, மிகக் குறைவாய் விலை பெற்று, ஆரோக்கிய அமுதளிக்கும் அம்மா உணவகம். எவர் ஒருவருக்கும் உணவில்லை எனும் நிலை இனி இங்கு இல்லை என பறைசாற்றும் விலையில்லா 20 கிலோ அரிசித் திட்டம். உயிர் காக்கத் தேவையான உயர்ந்த விலை மருந்துகளை, உரிய விலைக்கும் குறைவாக உவந்தளிக்கும், அம்மா மருந்தகம். பசுமை மாறாத புதுமையுடன் தோட்டப் புத்துணர்வோடும், பசுமைக் காய்கறிகளை வழங்குகின்ற, பண்ணைப் பசுமைத் திட்டம். பாலாறு ஓடுகின்ற நாடு என வெண்மைப் புரட்சி கண்ட, எளியோரின் வாழ்வில் ஒளியேற்றிய, விலையில்லா கறவை மாட்டுத் திட்டம். ஏழ்மை நிலையில் இருந்தாலும், எனக்கும் கிடைக்குமா மடிக்கணினிப் பயிற்சி என ஏங்கிய மாணவர்களின் ஏக்கம் நீங்க, அமைந்திருக்கும் இலவச மடிக்கணினித் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—55

ஆறாம் முறையாக அரியணை ஏற்றவுடன் முனைப்போடு முதல் நாளே கையெழுத்தான முத்தான ஐந்து திட்டங்கள். ஒவ்வொரு இல்லத்திலும் மகிழ்ச்சி ஒளிரச் செய்த 100 யூனிட் வரை விலையற்ற மின்சாரம். நெசவாளர் வாழ்விலே மகிழ்ச்சியை நெசவு செய்த 750 யூனிட் வரை விலையில்லா மின்சாரம். இல்லத்தில் மங்கலம் பொங்க, மாங்கல்யம் செய்வதற்கு எட்டு கிராம் தங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) கடனுற்றுத் தவித்திட்ட சிறு, குறு விவசாயப் பெருமக்கள் பயன்பெற்று விளங்கிட விவசாயக் கடன் தள்ளுபடி. படிப்படியாக மதுவிலக்கு என்ற தெளிவோடு, மதுக்கடைகள் செயல்படும் நேரத்தையும் குறைத்து, 500 மதுக்கடைகளும் மூடப்பட்டன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியின் கோரிக்கைகள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கோவை மாவட்டத்தில் உள்ள வ.உ.சி. உயிரியல் பூங்கா 1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் சிங்கம், புலி, கரடி ஆகிய விலங்குகள் பராமரிக்கப்பட்டு வந்தன. போதிய இட வசதி இல்லாத காரணத்தால் சிங்கம், புலி, கரடி ஆகிய விலங்குகள் வண்டலூரில் உள்ள உயிரியல் பூங்காவிற்கு மாற்றம் செய்யப்பட்டன. தற்போது உள்ள பூங்கா 4.5 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே அமைந்துள்ளது. உயிரியல் பூங்கா அமைக்க குறைந்தது 10 ஏக்கர் நிலமாவது தேவை. மத்திய உயிரின ஆணைப்படி இட வசதியில்லாத காரணத்தால் அதற்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்து செய்யப்பட்டு, உரிய இடம் தேர்வு செய்ய வேண்டினர். இதனடிப்படையில், டெல்லி உயிரியல் பூங்கா அதிகாரிகள் கோவை மாவட்டத்தில் எனது தொகுதிக்குட்பட்ட நான்கு இடங்களை ஆய்வு செய்து, எட்டிமடை பகுதியில் இயற்கை சூழ்நிலையில் அமைந்துள்ள 64.8 ஏக்கர் நிலத்தினைத் தேர்வு செய்தனர். இதில் உயிரியல் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டனர். இதற்கு மாஸ்டர் பிளானும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

மத்திய வன உயிரின ஆணைப்படி, உயிரியல் பூங்கா நகர்ப்புறத்தில் அமைக்கக் கூடாது எனவும், நகர்ப்புறத்திலிருந்து வெளிப்பகுதியில் அமைக்க வேண்டும் என்றும் கூறியிருந்தனர். மத்திய வன உயிரின ஆணையத்தின் அனுமதி கிடைக்காத காரணத்தால் தற்போது உரிமம் இரத்து செய்யப்படும் சூழ்நிலை உள்ளது. இப்பூங்காவிற்கு ஆண்டுதோறும் சுமார் 30 இலட்சம் அளவிற்கு மக்கள் வந்து செல்கிறார்கள். தற்போது பறவைகள், மான்கள் மற்றும் முதலைகள் மட்டுமே பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனவே, எட்டிமடை பேரூராட்சியில் இயற்கை சூழ்ந்த பகுதியில் 64.8 ஏக்கர் நிலம் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதியில் வ.உ.சி. பூங்கா அமைக்க வேண்டுமென மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை புறநகர் மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதி, மதுக்கரை ஒன்றியத்திற்குட்பட்ட தமிழ்நாடு மற்றும் கேரள

எல்லையான மாவுத்தம்பதி ஊராட்சியில் வற்றாத நீரோடை ஒன்று உள்ளது. அதை துறைரீதியாக அதிகாரிகளின்மூலம் ஆய்வு மேற்கொண்டு, சோளக்கரை பகுதியிலிருந்து மாவுத்தம்பதி, எட்டிமடை, திருமலையாம்பாளையம், பிச்சனூர் மற்றும் மதுக்கரை பேருராட்சி ஆகிய பகுதிகளுக்கு புதிய குடிநீர் திட்டத்தின் வாயிலாக அங்குள்ள தண்ணீரை மேற்கண்ட பகுதிகளுக்குக் கொண்டு வருவதனால், அங்கு நீராதார வரத்துப் பகுதியான தடுப்பணைகள் மற்றும் கிணறுகள் பாசன வசதி பெற்று, அங்குள்ள விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் குடிநீர் கிடைக்க வழிவகை செய்யுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுமார் 1200 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலத்தில், விவசாயிகள் தக்காளி பயிர் செய்து வருகின்றனர். எனவே, அங்கு குளிர்சாதனக் கிடங்கு ஒன்று அமைத்துத் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட தொண்டாமுத்தூர் பகுதியிலே கோவைப்புதூரிலிருந்து போல்வான்பட்டி வரை வன விலங்குகள் காட்டுக்குள் இருந்து ஊருக்குள் வருவதால், அங்கு சோலார் மின் வேலியிட்டு பொது மக்களைப் பாதுகாக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் இருக்கக்கூடிய கோரிக்கைகளையெல்லாம் நான் இந்த அவையில் சமர்ப்பிக்கிறேன். அதை நான் படித்ததாகக் கருதி, அவை நடவடிக்கைக் குறிப்பிலே பதிவு செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

மதுக்கரை முதல் வாளையார் வரை விவசாயிகளின் பயிர்களை யானைகளிடமிருந்து காப்பாற்ற சுமார் 7 கிலோ மீட்டருக்கு சோலார் மின் வேலி அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிச்சி குளம், வெள்ளலூர் குளம் மற்றும் கோதவாடி குளம் ஆகிய மூன்று குளங்களைத் தூர் வாரி, நீர் நிரப்ப ஆவன செய்ய வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிணத்துக்கடவு தொகுதியில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிச்சி 97–வது டிவிசன் பகுதியில் சுமார் 1,000 குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள். அங்கு ஒரு நகர்ப்புற சுகாதார நிலையம் அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிச்சி நகராட்சியில் உள்ள 7 டிவிசன்களிலும் கிட்டத்தட்ட 1.5 இலட்சம் பொது மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்களின் மருத்துவ வசதிக்காக போத்தனூரில் தற்போது இயங்கிவரும் சுகாதார நிலையத்தில் நான்கு படுக்கை வசதியுடன்கூடிய பிரசவ சுகாதார நிலையம் உள்ளது. அது மக்களின் வசதிக்குப் போதுமானதாக இல்லை. எனவே, அங்கு 1 ஏக்கர் அளவில் இடமும் உள்ளதால், 30 படுக்கை வசதிகளுடன்கூடிய உள் நோயாளிகள் பிரிவுடன் சுகாதார நிலையம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிச்சி நகராட்சி, 94–வது டிவிசன் இடையார்பாளையம் மெயின் ரோட்டில், செங்கப்பா நகரில் சுமார் 300–க்கும் மேற்பட்ட ஆதி திராவிட குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் வசிக்கும் இடம் தனியாருக்குச் சொந்தமானது. ஆதலால், அவர்களுக்கு கழிப்பிட வசதிகூட செய்து தர முடியாத நிலையில் இருந்து வருகிறது. எனவே, அவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் வழங்குமாறும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிச்சி நகராட்சி, பொள்ளாச்சி மெயின் ரோடில் உள்ள நான்கு ரோடு சந்திப்பில் பொது மக்கள் பாதையைக் கடப்பதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால், அங்கு சுரங்கப் பாதை அல்லது நடைபாதை மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சுந்தராபுரம் பொது மக்கள், அலுவலகம் மற்றும் கல்லூரிகளுக்குச் செல்ல ஏதுவாக சுந்தராபுரம்–மருதமலை, சுந்தராபுரம்–பேரூர் வழியாக தொண்டாமுத்தூர், சுந்தராபுரம்–துடியலூர், சுந்தராபுரம்–ஒண்டிப்புதூர், சுந்தராபுரம்–செட்டிப்பாளைம் பிரிவு வழியாக வேலந்தாவளம் வரை பேருந்து வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொண்டாமுத்தூர் ஒன்றியம், மாதம்பட்டி ஊராட்சியில் வெள்ளாளச்சிகுட்டை மற்றும் குமரன்குட்டை பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர் வார வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாதம்பட்டி மெயின் ரோடு முதல் அய்யாசாமி கோவில் மலை வரை ரோடு அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தீத்திபாளையம் ஊராட்சி, தீத்திபாளையம் முதல் அறிவொளி நகர் வழியாக சுகுணாபுரம் வரை புதிய ரோடு வசதி அமைக்க ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தீத்திபாளையம், மாதம்பட்டி எல்லையான அய்யாசாமி மலை அடிவாரத்தில் வன விலங்குகள் ஊருக்குள் வருவதைத் தவிர்க்கவும், நீர்ப் பாசன வசதிக்கு உபயோகமானதாக இருக்கவும், புதிய செக் டேம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரூர் செட்டிப்பாளையம் ஊராட்சி, சொட்டையாண்டி குட்டையினைத் தூர்வாரி நீர் நிரப்பினால் குடிநீர் தட்டுப்பாடும், விவசாயிகளுக்கு பாசன வசதியும் கிடைக்கப்பெறும். எனவே, தூர்வார வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய கிணத்துக்கடவு தொகுதியில் உள்ள பூங்காக்கள் பற்றியும், வாழும் உயிரினங்கள் பற்றியும், அவற்றால் ஏற்படும் இன்னல்களைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். வன பூங்காக்களைப் போற்றிப் பாதுகாக்க இருக்கின்ற நிதிநிலை ஆதாரங்களை வைத்து, மாண்புமிகு அம்மா அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–00

வன விலங்கு தடுப்பு நடவடிக்கைகளை எப்படியெல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பது பற்றி பலமுறை இந்த அவையிலே அறிவித்திருக்கிறோம். விரைவிலே வன இலாகா,

வன விலங்குகளைத் தடுப்பதற்கு அகழிகள் வெட்டுவது மற்றுமுள்ள தடுப்பு நடவடிக்கைகளை நல்ல விதமாக நம்முடைய வன அலுவலர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். வனத்திலே எந்தப் பிரச்சினையும் இல்லாமல் வன விலங்கு தடுப்புப் பணிகள் செய்யப்படும் என்ற உறுதியை நான் இந்த அவையில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

***திருமதி மு. சந்திரபிரபா**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம், தமிழகத்தின் காவல் தெய்வம், ஏழைகளின் இதய தெய்வம், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் நலனே தன் நலன் என்று தவ வாழ்வு வாழும் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மனிதர் குல மாணிக்கம், எங்களின் குல தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகின்றேன், தாயே!

மகத்தில் பிறந்து, ஜெகத்தினை ஆளும் தென்னாட்டு ஜான்சி ராணியாய், (மேசையைத் தட்டும் ஒலி) மங்கையரைக் காத்து நிற்கும் மகாசக்தியாய், தாலிக்குத் தங்கம் கொடுத்த தங்கத்தாரகையாய், ஏழைகளுக்கு வயிறார உணவளிக்கும் அம்மா உணவகம் அமைத்துக் கொடுத்த அட்சயபாத்திரம் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) விழிநோக்கி வேல் வருமுன் கண் இமைக்காத புறநானூற்று வீரம் கொண்ட தமிழர் குல சாமி, எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற கருத்தினை வாழ்க்கையின் கருப்பொருளாகக் கொண்ட கருணைக் கடலே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியை மீட்டெடுத்த காவியத் தாய்! முல்லைப் பெரியாறு அணையை 142 அடியாக உயர்த்தி, சரித்திரம் படைத்த சாதனைத் தலைவி எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளும் வியக்கும் அளவிற்கு தமிழகத்தில் தொடர்ந்து நல்லாட்சி புரிந்துகொண்டிருக்கும் தமிழக மக்களின் ஒரே தலைவி, எங்கள் புரட்சித் தலைவி அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) சோதனைகளையும் சாதனைகளாக்கும் சரித்திரத் தலைவி,

எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) காலம் நமக்கு அளித்த வற்றாத ஜீவ நதி, நம் தாய் புரட்சித் தலைவி அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைக்குத் தேர் தந்தான் பாரி, மக்களுக்காக தனது வாழ்க்கையையே அர்ப்பணித்த ஆருயிர் அன்னை, புரட்சித் தலைவி அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் வழியிலே சமுதாய சீர்திருத்தத் தலைவியாகவும், பேரறிஞர் அண்ணாவின் வழியிலே அறநெறி அரசியல் பண்பாளராகவும், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழியிலே ஏழைகளைக் காக்கும் காவல் தெய்வமாக இருந்து, புதிய சமுதாயம் காண புரட்சித் திட்டங்களை அறிவித்து, அதனை நிறைவேற்றிவரும் புரட்சித் தலைவி எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம், புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த 5 ஆண்டுக் கால பொற்கால ஆட்சியில் தமிழ்நாட்டு மக்களுக்காக எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களைக் கொடுத்து, அதனை சிறப்பான முறையில் செயல்படுத்தி, தமிழக மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து 6–வது முறையாக அரியணையேறி, (மேசையைத் தட்டும் ஒலி) 32 ஆண்டுகளுக்குப் பிறகு, தொடர்ந்து வெற்றி பெற்ற சாதனைத் தலைவி எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த அம்மாவின் விசுவாசியாகிய என்னை, தொடர்ந்து இரண்டு முறை ஊராட்சி மன்றத் தலைவராகவும், கழகத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை துவக்கப்பட்ட நாள் முதல் விருதுநகர் மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை இணைச் செயலாளராகவும், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அம்மாவின் வேட்பாளராக என்னை அறிவித்து, அம்மா அவர்களின் மாபெரும் மக்கள் சக்தியால் 36,763 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை மாபெரும் வெற்றி பெறச் செய்து, சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாபெரும் சட்டமன்றத்திலே பேசுவதற்கும் வாய்ப்பளித்த, சரித்திரச் சாதனைத் தலைவி, தங்கத்தாரகை, (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித்

தலைவி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும் எனது குடும்பமும் உயிருள்ளவரை நன்றியோடு இருப்போம், தாயே!

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்து, வெற்றிக்கனியினை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்த ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களுக்கும், கழக வெற்றிக்குப் பாடுபட்ட கழக நிருவாகிகளுக்கும் எனது கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏழையெளிய மக்கள் சிறப்பாகப் பயன்பெறும் வகையில் அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட், இப்படி எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி மக்கள் நலனுக்காகவே செயல்படுத்தும் ஒரே அரசு நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிப் படிப்பை முடித்து மேல்படிப்பிற்குச் செல்லும் மாணவ, மாணவியருக்கும், உள்ளங்கையில் உலகத்தைக் கொண்டுவந்த அம்மாவின் விலையில்லா மடிக்கணினி வழங்கி மாணவச் செல்வங்களின் வாழ்வைத் தரம் உயர்த்தியவர் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவ, மாணவிகளுக்கு பள்ளி செல்வதற்கு விலையில்லா மிதிவண்டி, சீருடைகள், புத்தகப் பை, காலணிகள் மற்றும் பிற கல்வி உபகரணங்கள் வழங்கிய அரசு நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிப் படிப்பை முடித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாக ரூ.25,000/–மும், பட்டப் படிப்பு முடித்த பெண்களுக்குத் திருமண உதவித் தொகையாக ரூ.50,000/–மும் வழங்கி, தாலிக்குத் தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்த்தி வழங்கியவர் நம் மாண்புமிகு தங்கத்தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறு கால உதவித் தொகை ரூ.12,000/–லிருந்து ரூ.18,000/– ஆக உயர்த்தியவர் தாயுள்ளம் கொண்ட நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

பிறந்த குழந்தைகளின் பராமரிப்புக்குத் தேவையான பதினாறு வகையான அம்மா குழந்தைகள் நலப் பரிசுப் பெட்டகம் பிறந்த அன்றே வழங்கியவர் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, உங்கள் கட்சி உறுப்பினர்கள் தனித்தனியாக குழுக் கூட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தி அவை நடவடிக்கைகளை கவனிக்கச் சொல்லுங்கள். உறுப்பினர் நீங்கள் பேசுங்கள் (குறுக்கீடு) நீங்கள் அவர்களைக் கட்டுப்படுத்துங்கள். தனித்தனியாக குழுக் கூட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துங்கள். அவர்களைக் கட்டுப்படுத்தி, அவை நடவடிக்கைகளைக் கவனிக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அவை நடவடிக்கைகளைக் கவனியுங்கள். நீங்கள் பேசுங்கள், திருமதி சந்திரபிரபா.

திருமதி மு. சந்திரபிரபா: அனைவருக்கும் 100 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கி அனைவருடைய வாழ்விலும் ஒளியேற்றியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். கைத்தறி நெசவாளர்களுக்கு 250 யூனிட் கட்டணமில்லா மின்சாரமும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் கட்டணமில்லா மின்சாரமும் வழங்கி நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

பூரண மதுவிலக்கை படிப்படியாக நிறைவேற்றும் விதமாக தமிழ்நாடு முழுவதும் 500 மதுக்கடைகள் மூடுவதற்கான உத்தரவைப் பிறப்பித்து பதவியேற்றவுடன் அமலுக்குக் கொண்டு வந்தவர் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

சிறு, குறு, விவசாயிகளின் பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்து விவசாயக் குடும்பங்களின் நலன் காப்பவர் நம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்

தலைவி அம்மா அவர்களின் திட்டங்களை வரிசையாகச் சொல்லிக்கொண்டே போகலாம். அதனைச் சொல்லி முடிப்பதற்கு இன்று ஒரு நாள் போதாது, ஓராண்டு போதாது, ஓராயிரம் ஆண்டுகள் வேண்டும் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்வதில் அம்மாவின் விசுவாசமிக்க தொண்டன் என்ற முறையில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல், செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அரசுத் திட்டங்களால் மக்கள் அடைந்துள்ள பயன்களைக் கண்காணிக்கும் முக்கிய நோக்கத்துடன் முதன்முதலாக தலைமைச்செயலகத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் தகவல் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி உருவாக்கிய அரசு நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட தமிழிசை மூவர் மணிமண்டபமும், விழுப்புரம் மாவட்டம், ஓமந்தூரில் ரூ.69 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மார்பளவுச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், விருப்பாச்சியில் ரூ.69 இலட்சம் மதிப்பீட்டில் கோபால் நாயக்கர் முழு உருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 20—2—2013 *(மேசையைத் தட்டும் ஒலி)* அன்று திறந்து வைத்து பெருமை சேர்த்த அரசு நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மொழிப்போர் தியாகி சிதம்பரநாதன் மற்றும் கீழப்பழுவூர் சின்னசாமி மற்றும் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை ஆகியோருக்கு முறையே ரூ.8.50 இலட்சம், ரூ.8.79 இலட்சம், ரூ.10.80 இலட்சம் மதிப்பீட்டில் முழு உருவச் சிலை அமைத்து

பெருமைப்படுத்திய அரசு, நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை இராயபுரத்தில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கு ரூ.2.43 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபங்கள் மற்றும் நூலகங்கள் அமைத்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 29–9–2014 அன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு என்று பெயர் சூட்ட உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு விருதுநகர் மாவட்டத்தில் ரூ.77 இலட்சத்தில் மணிமண்டபம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 18–6–2015 அன்று திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

சிவகங்கை மாவட்டத்தில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் மற்றும் மணிமண்டபம்; தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மணிமண்டபம்; திண்டுக்கல் மாவட்டத்தில் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோருக்கு மணிமண்டபங்களை அமைத்து பெருமைப்படுத்தியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைந்த அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா 8–4–2012 அன்றும், தென்னிந்திய திரையுலகத்தின் முதல் பெண் இயக்குநர் மற்றும் முதல் பெண் படத் தயாரிப்பாளர் டி.பி. ராஜலட்சுமி அவர்களுக்கு நூற்றாண்டு விழா 19–9–2013 அன்றும் கொண்டாடப்பட்டது. இரட்டைமலை சீனிவாசனின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடவும், கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைந்த நாளை கொண்டாடும் விதமாக, அதற்குப் பாடுபட்ட தந்தை மார்ஷல் நேசமணி அவர்களின் சிலைக்கு மாலை அணிவிக்க உத்தரவிட்ட ஒரே தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருப்பூர் குமரனின் பிறந்த நாளை அரசு விழாவாகவும், செங்கோட்டையில் வீர வாஞ்சிநாதன் பிறந்த நாளை அரசு விழாவாகவும், மன்னர் திருமலை நாயக்கர் பிறந்த நாளை அரசு விழாவாகவும் கொண்டாடுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி, தங்கத் தாரகை அம்மா அவர்கள் உத்தரவிட்டு, கொண்டாடப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

புதுடெல்லியில் ஆண்டுதோறும் மலர்ப் பேரணி விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று, 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து முதல் பரிசைப் பெற்றது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

சென்னையில் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு தின அலங்கார ஊர்தி அணிவகுப்பில் முதல் பரிசும் மற்றும் 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் இரண்டாம் பரிசும் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், 2014 இல் புதுடெல்லியில் நடைபெற்ற அலங்கார ஊர்தி அணிவகுப்பில் பொங்கல் விழாவினைச் சித்தரிக்கும் தமிழ்நாடு அலங்கார ஊர்தி முதல்முறையாக இந்திய அளவில் இரண்டாம் பரிசைப் பெற்றது மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கிடைத்த பரிசாகும். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கடைசி வரிசையில் உள்ள மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்கிறீர்கள். அவை அலுவல்களைக் கவனியுங்கள். உறுப்பினர் திருமதி சந்திரபிரபா அவர்கள் முக்கியமான கருத்துகளை சொல்லிக்கொண்டிருக்கிறார். உங்கள் இஷ்டத்திற்கு தனி கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். உறுப்பினர் பேசுவதைக் கவனியுங்கள். தனித்தனியாகக் கூட்டம் நடத்தாதீர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் நான்கு கட்டமாக சிறு புகைப்பட கண்காட்சிகள் நடத்தப்பட்டு, இக்காட்சிகளை 20,77,410 பேர் பார்த்துப் பயன்பெற வைத்தது மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அரசின் சாதனைகள், மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தையும் பாமர மக்களும் அறியும் வண்ணம் செய்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுற்றுச்சூழல். பள்ளியில் பயிலும் மாணவர்கள் மத்தியில் சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தேசிய பசுமைப் படை, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்களை அமைக்க உத்தரவிட்டு, இம்மன்றங்களுக்கு மத்திய அரசுக்கு இணையாக வழங்கப்பட்டு வந்த தொகையான ரூ.2,500—ஐ ரூ.5,000 ஆக உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிளாஸ்டிக் கழிவுகள் குறித்து மாணவர்கள், பொது மக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யும் மாவட்டத்திற்கு ரூ.50,000 வழங்குதல்; தொழிற்சாலைகள் அனைத்தும் வெளியேற்றும் கழிவுநீர் பூஜ்ய நிலை அடைவதற்கான சுத்திகரிப்பு அமைப்பினை இந்தியாவிலேயே முதன்முதலாக நிறுவி சாதனை படைத்த ஒரே தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சிகளில் சேகரிக்கும் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி, சாலைகளை அமைக்க சிறப்பானதொரு திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள வத்திராயிருப்புப் பகுதியைப் பிரித்து, தனி வட்டமாக அமைத்துத் தருமாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு கலைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போதுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையம் போக்குவரத்துக்கு நெருக்கடியாக உள்ளது. எனவே, நகருக்கு வெளியே புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் அரசு நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள தொகுதிக் கோரிக்கைகளைத் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

திருமங்கலம்–தென்காசி தேசிய நெடுஞ்சாலை தற்போது இருவழிச்சாலையாக உள்ளது. இந்த சாலை வழியாகத்தான் சபரிமலை செல்லும் வாகனங்களும், குற்றாலம் செல்லும் வாகனங்களும் செல்கின்றன. அதிக அளவு போக்குவரத்து நெரிசல் உள்ளதால், இச்சாலையில் அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகின்றன. எனவே, இந்தச் சாலையை நான்கு வழிச்சாலையாக அமைத்திட வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூர்–இராஜபாளையம் ஆகிய இரு நகரங்களையும் இணைக்கின்ற வகையில், செயல்படுத்தப்பட உள்ள புறவழிச்சாலைப் பணியை விரைவாக முடித்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இனமே எனது உயிர்! தமிழ் இனமே எனது உணர்வு! தமிழ் இனமே எனது உறவு! தமிழ் இனமே எனது கனவு! தமிழ் இனமே எனது பாசம்! தமிழ் இனமே எனது சுவாசம்! என தமிழ் இனத்திற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே தலைவி இதய தெய்வம் “மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்று தமிழக மக்களின் நலனுக்காகவே தவ வாழ்வு வாழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு, எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கோரிக்கைகள் சிலவற்றை எழுத்துமூலம் தருகிறேன். அவற்றை அவைக் குறிப்பில்

பதிவு செய்து, எனது தொகுதி மக்களுக்காக நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன், நன்றி.

தொகுதி கோரிக்கைகள்:

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் அமைக்க வேண்டும். பிளவக்கல் அணையைத் தூர்வாரி அனைத்துக் கால்வாய்களும் புனரமைக்கப்பட வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பொது நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டும். வத்திராயிருப்பிலிருந்து மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர், சென்னை ஆகிய ஊர்களுக்கு பேருந்து இயக்க வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மதுரைக்கு 3 புதிய பேருந்துகள் இயக்க வேண்டும். மம்சாபுரம் பேரூராட்சியிலிருந்து மதுரைக்கு காலை, மாலை வேளைகளில் புதிய பேருந்து இயக்க வேண்டும். மல்லி ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். வத்திராயிருப்பு ஒன்றியம், கான்சாபுரம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும். அரசு மருத்துவமனையை பல்நோக்கு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும். சதுரகிரி அல்லது மகாராஜபுரத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும். இந்த நகராட்சியில் பூங்கா அமைக்க வேண்டும். அனைத்துச் சாலைகளையும் சரி செய்ய வேண்டும். தார்ச் சாலைகள் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மன்றத்திலே இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த சட்டமன்றத் தேர்தலில் முதுகுளத்தூர் தொகுதியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக போட்டியிடுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்கள் ஒப்பற்ற தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரம் இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்து எங்களை வழிநடத்திய ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதுகுளத்தூர் தொகுதியில் நான் வெற்றிபெறுவதற்கு வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு அமைந்துள்ள சட்டமன்றத்தைப்போல இதற்கு முன்பு அமைந்தது இல்லை. ஆளும் கட்சி வரிசையில் 133 பேரும், எதிர்க்கட்சி வரிசையில் 98 பேரும் அமர்ந்திருக்கிற வகையில் இந்த சட்டமன்றம் அமைந்திருக்கிறது. கடந்த கால சட்டமன்ற நிகழ்வுகளைப் பார்ப்பவர்களுக்கு இன்றைய சட்டமன்ற நிகழ்வுகள் மிகவும் வித்தியாசமாகவே இருப்பதைப் பார்க்க முடியும். இதன்மூலம் தமிழக சட்டமன்றத்தில் ஒரு காலத்தில் நிலவிய ஆரோக்கியமான விவாதங்கள், கருத்து மோதல்கள் நடப்பதற்கான சூழல் உருவாகும் என்று நம்புகிறேன். இது ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றியாகவே நான் பார்க்கிறேன்.

இன்று சுற்றுச்சூழல், செய்தி மற்றும் விளம்பரத் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக பங்கேற்று எனது கன்னிப் பேச்சை தொடர விரும்புகிறேன். கன்னிப் பேச்சை தொடர விரும்புவதற்கு முன்னதாக என்னைப் பொறுத்தமட்டில் 10 வயதில் மலேசிய நாட்டுக்குச் சென்று 10 வயதிலிருந்து 55 வயதுவரை உழைத்து பலவிதமான துன்பங்களுக்கு இடையில் உயர்ந்த தொழில்நுட்பங்களைக் கற்று தொழில் செய்து, நான் பிறந்த தொகுதியான முதுகுளத்தூர் தொகுதியில் 2001 சட்டமன்ற தேர்தலிலே போட்டியிடுகின்ற வாய்ப்பினைப் பெற்று, 2,600 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தவன் நான். இரண்டு விரல்களைக் காட்டினால் இரட்டை இலை என்று சொல்வார்கள். அந்த இரட்டை இலைக்கே வாக்களித்து அனுபவப்பட்ட அந்த மக்களிடத்தில் இரண்டு கைகளையும் கூப்பி வணங்கி, வணங்கி 15 ஆண்டுக்காலம் சுற்றித் திரிந்து, மக்களுடைய மனதிலே, உள்ளத்திலே இடம் பிடித்து, அதன் பிறகு 2016 சட்டமன்ற தேர்தலிலே நான் வெற்றி பெற்றிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் என்னுடைய உழைப்பு. 16 ஆண்டுக்காலம் அந்த தொகுதியிலே சுற்றிச் சுற்றி வந்திருக்கிறேன். அதுமட்டுமல்ல; நான் ஒரு சட்டமன்ற உறுப்பினராக ஆவதற்கு எனது குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் எனக்கு ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார்கள். இந்த சட்டமன்ற உறுப்பினர் பதவியை என் வாழ்நாளில் கிடைத்த பெரிய பதவியாக நான் கருதுகிறேன். அந்த வகையிலே இரண்டு நாட்களுக்கு முன்பு கூடங்குளம் அணுமின் திட்டத்தை காணொலி

காட்சிமூலம் நமது முதலமைச்சர் பங்கேற்று நாட்டுக்கு அர்ப்பணித்ததை இந்த அவையிலே பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, சுற்றுச்சூழலுக்கு எவ்வகையிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் அணுசக்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாகக் கூறியதை இன்றைக்கு நினைவுகூர விரும்புகிறேன். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நன்றியோடு பாராட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

அணுசக்தி என்று சொன்னால், பண்டித ஜவஹர்லால் நேருவைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்தியாவை சாண யுகத்திலிருந்து அணுசக்தி யுகத்திற்கும், அண்டவெளி யுகத்திற்கும் அழைத்துச் சென்றவர், இந்தியாவின் இணையற்ற பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. அணுசக்தியை ஆக்கபூர்வமான பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று மிகப்பெரிய கனவு கண்டவர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள். அவரது கனவின் அடிப்படையில்தான், அவரது பேரன், அன்றைய பிரதமராக இருந்த திரு. ராஜீவ் காந்தி அவர்களும், சோவியத் நாட்டின் பிரதமர் திரு. கார்ப்பசேவ் அவர்களும் 1988–ல் கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். எத்தனையோ தடைகளைக் கடந்து 28 ஆண்டுகளுக்குப் பின்பு, அந்தக் கனவு நிறைவேறியிருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேறியதால், இன்றைக்கு ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகத்திற்கு 565 மெகா வாட் மின்சாரம் நிரந்தரமாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

சுற்றுச்சூழலைப் பாதிக்காத வகையில் மின் உற்பத்தியைப் பெருக்க, அணுசக்தி மின்சாரத்தை விட்டால் நமக்கு வேறு வழியில்லை. உலக நாடுகளெல்லாம் அணுசக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும்போது, இந்தியாவும் அதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. மழை பெய்தாலும், வெயில் அடித்தாலும், மின் உற்பத்திக்குப் பாதிப்பு ஏற்படாமல், சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அணுசக்தி மின்சாரத்தின்மூலம் ஆண்டு முழுவதும் மின் உற்பத்தி செய்ய முடியும்.

தூய்மையான, புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான புதிய வாயிலாக, நவீன அறிவியல் நமக்கு வழங்கியதுதான் அணுசக்தி மின்சாரம். நமது சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அங்கே எவ்வளவு தூய்மையாக, மாசுக் கேடு இல்லாமல் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை நேரில் அறிந்துகொள்ள முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இதையே, இன்றைய சுற்றுச்சூழல் துறைக்கான மானியக் கோரிக்கையில் எனது வேண்டுகோளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைக்க விரும்புகிறேன்.

எனது தொகுதியின் முன்னேற்றத்தில் நான் எடுத்துக்கொள்கின்ற அக்கறையின் காரணமாக, நான் உங்களிடம் வேண்டுகோள் வைக்க விரும்புகின்றேன். பொதுவாக, முதுகுளத்தூர் தொகுதி என்பது மிகவும் பின்தங்கிய, பலதரப்பட்ட சமுதாய மக்கள் வாழ்கின்ற பகுதி. அங்கு எங்கே பார்த்தாலும் காட்டுக் கருவைதான் அதிகமாக இருக்கும். அதுமட்டுமல்ல, அங்கே நிலத்தைத் தோண்டினால், குடிநீரோ அல்லது வேறு நீர் ஆதாரமோ இருப்பதில்லை. ஆகவே, முதுகுளத்தூர் தொகுதி முழுவதும் நீர்த் தட்டுப்பாடு இருக்கும். அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 5 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அது, 400 கிராமங்களை உள்ளடக்கிய, ஏறக்குறைய 2,97,000 வாக்காளர்களைக் கொண்ட பெரிய தொகுதி. அந்தத் தொகுதியிலுள்ள மக்கள் எல்லோருமே எனக்குத் தெரிந்தவர்கள்தான். அப்படிப்பட்ட தொகுதியிலே நின்று வெற்றி பெற்றிருக்கிறேன். அந்தத் தொகுதி மக்களோடு நான் நெருங்கிய தொடர்புடையவன் என்ற முறையிலும், என்னுடைய உரிமையின் காரணமாகவும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், நான் வெற்றி பெற்ற, அந்தத் தொகுதியிலே பிறந்த ஒரு குடிமகன் என்ற முறையிலும் நான் கேட்பதெல்லாம் “நரிப்பையூரில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை விரைந்து முடித்து குடிநீர் வழங்க வேண்டும்” என்பதுதான். என் தொகுதி மக்களுக்காகத்தான் கேட்கிறேன். எனக்காக நான் எப்பொழுதும் எதையும், யாரிடமும் கேட்பதில்லை.

முதுகுளத்தூர் தொகுதியிலுள்ள அரசுக் கல்லூரி கட்டடப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டுகிறேன்.

பிற்பகல் 1–25

நான் வெற்றி பெற்ற தொகுதி மிக முக்கியமான தொகுதி. பசும்பொன் தேவர் திருமகனார் நின்று வெற்றி பெற்ற தொகுதி. அதிலே ஒரு சாதாரணமான சமுதாயத்தில் பிறந்த நான், நின்று வெற்றி பெற்றிருக்கிறேன் என்றால், அதுவும் எனக்கு சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களும், தியாகி இமானுவேல் சேகரன் அவர்களும் பிறந்த முதுகுளத்தூர் தொகுதியில் வளர்ச்சி ஏற்படுத்த தமிழ்நாடு அரசு தனிக் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான கருத்தை இங்கே நான் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். யாதவர் சமூகத்தையும், நாடார் சமூகத்தையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான கோரிக்கை. 1969 ஆம் ஆண்டு முதல் யாதவ சமூகம் நடத்தி வந்த, மதுரை யாதவர் ஆண்கள் கல்லூரி, 2012 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் கல்லூரிக் கல்வித் துறையின் இணை இயக்குநர் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. ஜனநாயகம் மலர, மீண்டும் அக்கல்லூரியை யாதவர் சமூகத்தினரிடம் ஒப்படைத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகிகளால் அந்தக் கல்லூரி நடைபெற நிரந்தர உதவி செய்யவேண்டும். நான் ஏன் இதை வலியுறுத்திச் சொல்கிறேன் என்றால், கிட்டத்தட்ட 47 ஆண்டுகளுக்கு முன்னதாக, அரசு வழங்கிய நிலத்தில் துவங்கப்பட்டது யாதவர் கல்லூரி. அன்றைய காலக்கட்டத்தில், எனக்கு 20 வயது இருக்கும். மலேசியாவில் வசூல் செய்து, பல இலட்சம் ரூபாய்களை நாங்கள் மலேசியாவிலிருந்து இந்த இரண்டு கல்லூரிகளுக்காக அனுப்பியிருக்கிறோம். யாதவர் ஆண்கள் கல்லூரி, யாதவர் பெண்கள் கல்லூரி இரண்டையும் உருவாக்கியது மலேசியாவிலிருந்து வந்த பணத்திலிருந்துதான். தனியாரால் இடங்கள் வழங்கப்பட்டிருந்தாலும், அரசு வழங்கியிருந்தாலும், அதிலே கட்டப்பட்ட கல்லூரிக் கட்டடங்கள் அத்தனையும், மற்ற ஏழையெளிய ஆடு மேய்ப்பவர்களிடமிருந்துகூட 250 ரூபாய், 300 ரூபாய் வசூல் செய்து நாங்கள் கட்டிய கட்டடங்களாகும். ஒரு குழு அமைத்து நடத்தப்பட்டு வந்த அந்தக் கல்லூரி, இன்று அரசிடமும், தனியாரிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் கல்லூரிகள் மீண்டும் சமுதாயத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

அதற்குப் பிறகு முக்கியமான ஒரு விஷயம். ஆடு வளர்ப்போர் நல வாரியம் அமைத்து, அந்த வாரியத்திற்குத் தலைவராக யாதவர் ஒருவரையே நியமிக்கவேண்டும். ஏனென்றால், அதிகமான ஆடுகளை வளர்த்து வருபவர்கள் யாதவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆகையால், ஆடு வளர்ப்போர் நல வாரியம் கண்டிப்பாக அமைத்திட வேண்டும். எங்கள் மதுரை மாவட்ட அமைச்சரிடம்கூட நான் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறேன். ஆகையினால், அந்த நல வாரியத்திற்கு யாதவரைத் தலைவராக நியமனம் செய்து, ஆடு வளர்ப்போரைக் காப்பாற்ற வேண்டும். தலைவர், திரு. பி.டி.ஆர் அவர்கள் இருந்த காலத்தில் ஆடுகளுக்கான மேய்ச்சல் நிலங்களை நாங்கள் கேட்டோம். அதைக்கூட அவர்கள் எங்களுக்கு வழங்கினார்கள். ஆகையினால், தயவுகூர்ந்து இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும்.

இன்னும் ஒரு முக்கியமான வேண்டுகோள் என்னவென்றால், என்னுடைய முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள மக்கள் என்னிடம் கோரிக்கையைப் படத்தோடு கொடுத்திருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும், மின் கம்பிகளைக் கையில் தொட்டுவிடலாம். அந்த அளவிற்குத் தாழ்வாக மின் கம்பிகள் பல இடங்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

(உறுப்பினர் ஒரு புகைப்படத்தைக் காட்டினார்.)

நான் தொகுதியில் நன்றி சொல்லச் சென்றபோது, பல இடங்களில் இந்தப் பிரச்சினையைப் பற்றி மக்கள் என்னிடம் சுட்டிக்காட்டினர்கள். பல இடங்களில் மின் கம்பிகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. ஆபத்தான விஷயமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, சமீபத்திலே இந்த மின் கம்பிகள் அறுந்து விழுந்து, தந்தையும், மகனும் இறந்துவிட்டார்கள். அந்தக் குடும்பத்திற்கு அரசு எந்தவித உதவியும் செய்யவில்லை. அவற்றையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் இரண்டு வாரத்திற்கு முன்னதாக, மருத்துவ வாகனமும், அரசு பேருந்தும் மோதியதில், மூன்று பேர் அதே இடத்தில் இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு அரசு இன்னும் எந்தவித உதவியும் செய்து கொடுக்கவில்லை. ஆக, இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, என்னுடைய இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையில் இது என்னுடைய

கன்னிப்பேச்சு என்பதாலும், இந்த அவையில் முதன்முதலாகப் பேசுகிறேன் என்பதாலும் பதற்றம் இருக்கிறது. எல்லோருக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நன்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்துச் சொன்னார்கள். கூடங்குளம் அணுமின் நிலையத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளால்தான் இன்றையதினம் அந்த அணுமின் நிலையம் நமது நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

இன்னொன்று, (குறுக்கீடு) அங்கு மின் கம்பிகள் தாழ்வாகச் செல்வதால் விபத்துகள் ஏற்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே இதுகுறித்து எங்கள் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதுபோன்று தாழ்வாகச் செல்லும் மின் கம்பிகளை மழைக் காலத்திற்கு முன்பாக மாற்றுவதற்கான பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு பேர் இறந்துவிட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் நிவாரண நிதியைப் பெற்றுத் தருவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு*

நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நரிப்பையூர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியம், நரிப்பையூர் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் 35.48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசாணை வழங்கப்பட்டு, 12–7–1999 அன்று நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டம் தனியார் உதவியுடன் செய்யப்பட்ட திட்டம். இந்தத் திட்டம் 1999–லிருந்து இயக்கப்பட்டது. அந்த 7 ஆண்டுக் கால இயக்குதல், பராமரிப்பு ஒப்பந்தம் M/s. Doshion, Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்ததாரர் சரியான முறையிலே இந்த நிலையத்தை இயக்க முன்வரவில்லை என்பது உறுப்பினருக்குத் தெரியும். எனவே, அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஒப்பந்தமும் ரத்து செய்யப்பட்டது. மேலும், நிலையத்தின் தொழில்நுட்பம் காலாவதியானதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 28–7–2015 அன்று கடல் நீரைக் குடிநீராக்கும் அற்புதமான திட்டங்களை இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து அறிவித்தார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் 3.25 இலட்சம் மக்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் 8.50 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 60 மில்லியன் லிட்டர் கடல்நீரை நன்னீராக்கும் இரண்டு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுக் கேட்ட அவருடைய மாவட்டப் பகுதிக்கு மட்டும் 625 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப ரீதியாக, பல துறைக்கு நிருவாக ஒப்புதல் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சியர் மூலமாகக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கூடிய விரையில் இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வரும். அதேபோல நரிப்பையூரில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின்கீழ் பயன்பெற்று வந்த 104 குடியிருப்புகளுக்கு இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இப்போது நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டாலும், 1999–ல், முன்னாள் தி.மு.க. ஆட்சியில் தொழில்நுட்பம் சரியில்லாத காரணத்தால்

கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட, 625 கோடி ரூபாய்க்கு கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் வந்தபின்னால் முழுமையாக அந்தக் குடிநீர் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி, நீங்கள் உரையை முடித்துவிட்டீர்கள் அல்லவா? மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றார்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது யாதவர் கல்லூரியை அரசு நிருவாகத்திடமிருந்து யாதவர் சங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். இக்கல்லூரியானது தமிழ்நாடு சங்கம் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கல்லூரியாகும். இக்கல்லூரி நிருவாகம், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி மன்றக் குழுவினால் நிருவகிக்கப்பட்டு வந்தது. இக்கல்லூரி ஆரம்பிக்கப்படும்போது இந்தச் சமுதாய மக்கள் ஒரே சங்கத்தின்கீழ் இருந்ததால் கல்லூரி சுமூகமாக நடைபெற்று வந்தது. சங்க நிருவாகிகளிடையே நிதி மற்றும் நிருவாக உட்பூசல் காரணமாக பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டதால், குழப்பநிலை ஏற்பட்டது. அதன்பிறகு நீதிமன்றத்தினுடைய உத்தரவின் அடிப்படையிலே அந்தக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர் சமுதாயத்தை முன்னிட்டு, அவர்களுடைய நலனைக் கருதி, நீதிமன்றத்தின் ஆணையின்படி கல்லூரிக் கல்வியின் மண்டல இணை இயக்குநர் தலைமையில் அந்தக் கல்லூரியானது மாணவர்களின் நலன் கருதி இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. உரிமையியல் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அனைத்து வழக்குகளும் வாபஸ் பெறப்பட்ட பின்னர், நீதிமன்ற ஆணையைப் பெற்று 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள யாதவர் கல்வி நிதி சங்கத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நிருவாகக் குழுவிடம், இந்தக் கல்லூரியை ஒப்படைக்கின்ற நிலையில், இன்றைக்கு அந்தக் கல்லூரிக் கல்வியின் மண்டல இணை

இயக்குநர் அவர்கள் தலைமையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி, நீங்கள் பேசி முடித்துவிட்டீர்கள். உட்காருங்கள். இன்றைக்கு வெள்ளிக்கிழமை அல்லவா? எல்லோரும் ஊருக்குச் செல்ல வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் என்ன அத்தனை பேரும் அவருக்கு சிபாரிசு செய்கின்றீர்கள்? (குறுக்கீடு) சரி, உறுப்பினர் நீங்கள் பேசுங்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் முக்கியமான ஒரு விஷயத்தைத்தான் பேசுகின்றேன். நான் ஒன்றும் மற்ற விஷயங்களைப் பற்றி பேசப் போவது இல்லை. 9–1–2009–ல் திரு. கே.பி. நவநீதகிருஷ்ணன் யாதவர் கல்லூரிச் செயலாளராகப் பதவி ஏற்றார். அவருடைய பதவிக் காலம் 9–1–2012–ல் முடிவடைந்துவிட்டது. அவருடைய பதவிக் காலம் முடிந்தும் தேர்தல் நடத்தாமல், தானே கல்லூரிச் செயலாளராக தொடர்ந்து பதவியில் இருந்த காரணத்தினால், தமிழக அரசு அரசாணை எண் 1021–ன்மூலம் கல்லூரி நிருவாகத்தை கல்லூரிக் கல்வி இயக்குநர் வசம் ஒப்படைத்து 27–2–2012–ல் ஆணை பிறப்பித்தது. 9–1–2013–ல் மதுரை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. ராமசுப்பிரமணியன் கல்லூரிக்குத் தனி அலுவலர் ஒருவரை நியமித்து, தேர்தல் நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களிடம் கல்லூரி நிருவாகத்தை ஒப்படைக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். ஆனால், இதுவரை அதற்கான எந்த முயற்சியும் அரசின் சார்பாக எடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, யாதவர் சமுதாயத்தைக் காப்பாற்ற கல்லூரி நிருவாகத்தைப் பற்றி நன்கறிந்த கல்வியாளர்மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 13–7–2013 அன்று உயர் நீதிமன்றம்

மதுரை கிளையின் சார்பாக வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில்தான் இன்றைக்கு மாவட்ட நிருவாகம் உடனடியாக கல்லூரியைத் திறக்க வேண்டும்; கல்லூரிக் கல்வித் துறை புதிய வங்கிக் கணக்கைக் துவங்கி, ஆசிரியர் மற்றும் ஆசிரியல்லாதவர்களின் சம்பளத்தை நிலுவையுடன் வழங்க வேண்டும்; மண்டல இணை இயக்குநரின் கண்காணிப்பின்கீழ் விடுதியின் அன்றாட செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்; எவரேனும் இடையூறு செய்தால், காவல் துறைமூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்; ஆசிரியர் மற்றும் பணியாளர்கள் மண்டல இணை இயக்குநருக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்; வழக்குத் தொடர்புடைய அனைவரும் மாணவர் நலனுக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென்ற இந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேதான், இணை இயக்குநர் அவர்களின் தலைமையிலே இன்றைக்குக் கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டி, உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு முடிந்து விட்டது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கான வாய்ப்பு முடிந்துவிட்டது, நன்றி சொல்லிவிட்டு அமருங்கள். (குறுக்கீடு) மேற்கொண்டு இதில் விவாதம் தேவையில்லை, உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, கூடங்குளம் அணுமின் நிலையத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் செல்ல வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அது உச்சபட்ச பாதுகாப்பு உள்ள இடம். அன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்களோடு நாங்கள் அணுமின் நிலையத்திற்குச் சென்றபொழுது, மத்திய தொழில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த அதிகாரிகள்தான் அங்கே பாதுகாப்புப் பணியில் இருக்கின்றார்கள். தமிழ்நாடு காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகள்கூட, அணுமின் நிலையத்தின் Gate-க்கு வெளியேதான் நிற்க வேண்டும். நாங்கள் பாதை மாறிச் சென்றுவிட்டதால், எங்களை ஒரு மணிநேரத்திற்கு*

மேல் காத்திருக்க வைத்து, அனுமதி பெற்ற பின்னர்தான் உள்ளே அனுமதித்தார்கள். அந்த அளவிற்கு அந்த இடம் பாதுகாப்புப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துச் செல்வதற்கு வாய்ப்பு இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள், உட்காருங்கள். நன்றி சொல்லி முடித்தாகிவிட்டது, இன்னொரு வாய்ப்பு வரும்போது பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், நீங்கள் பேசுங்கள்.

***திரு. சி.வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். கழகத்தின் காவல் தெய்வம், எங்கள் குல சாமி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி, அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

15—வது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் எனது கன்னிப் பேச்சை துவங்குகிறேன். 'தாயில்லாமல் நானில்லை, தானே எவரும் பிறந்ததில்லை, எனக்கொரு தாய் இருக்கின்றார், என்றும் எங்களைக் காக்கின்றவர்' (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தான் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலகம் வணங்கும் முகராசி, எங்கள் அம்மா; உரிமை மீட்கும் கைராசி, எங்கள் அம்மா; உழவினைக் காத்த மகராசி, எங்கள் அம்மா; உண்மையைப் போற்றும் செயலரசி, எங்கள் அம்மா; உழைப்பவரை உயர்த்தும் அருளரசி, எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) பரிவால் சிறந்த பண்பரசி, எங்கள் அம்மா; தமிழகத்தை ஆளும் தமிழரசி, எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

தொழிலாளர்கள், விவசாயிகள், தொழில்முனைவோர், நுகர்வோர் ஆகியோரின் உயிர் மூச்சாய், சுவாசக் காற்றாய்த் திகழும் உயிர் காத்த உத்தமத் தலைவி அம்மா அவர்களை

வணங்குகிறேன். ஈரம் மிகுந்த மனம்; ஈகை நிறைந்த குணம்; வீரம் நிறைந்த உரம்; வெற்றி குவிந்த கரம்; 8 கோடி தமிழர்களின் மந்திரச் சொல்லாய் விளங்கும் தாயே, தங்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

'தமிழகமே எனது குடும்பம்; தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்; தமிழ் மக்களின் நலனே என் நலன்' என்று இலட்சிய வாழ்க்கை வாழும் மனிதப் புனித தெய்வம் அம்மா! தங்களை வணங்குகிறேன். அன்பை மறந்து, அறத்தைத் துறந்து, பகைமை பாராட்டி பிறரைப் பழி வாங்குவதையே கணக்கிட்டு செய்த அரசியல்வாதிகளின் மத்தியில், அன்பையே சிந்தித்து, அன்பையே மூச்சுக் காற்றாய் சுவாசித்து, அன்பின் மொத்த வடிவமாக இருக்கும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களை இன்று உலகமே வியந்து பாராட்டுகிறது.

பிற்பகல் 1–40

அறிவார்ந்தவர்களும், தன்னலம் துறந்தவர்களும் தேச நலனில் நாட்டம் உள்ளவர்களும் மட்டுமே இனி அரசியலில் இருக்க முடியும். தொண்டு மனம் கொண்டவர்கள் மட்டுமே இனி அரசியலில் நீடிக்க முடியும் என்பதை இச்சமுதாயத்திற்கு சொல்லும் விதமாக பணித் துணிவைவிட பரிசுத்தமாக இத்துறைகளை மாற்றிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களால் தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்ட, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மாங்குயில் கூவிடும் பூஞ்சோலைகள் நிறைந்த சிந்தகம்பள்ளி என்னும் குக்கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, கிளைக் கழகச் செயலாளர், ஒன்றியக் கழக துணைச் செயலாளர், ஒன்றியக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர், மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர், இரண்டு முறை ஊராட்சி மன்றத் தலைவர், என் மனைவிக்கும் ஒன்றியக் குழுத் தலைவர், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் என பல பதவிகளை வழங்கி கழகப் பணியாற்ற வாய்ப்பு வழங்கி, என்னை இந்த நாட்டுக்கு அடையாளம் காட்டினீர்கள், தாயே! தங்களின் மலர்ப் பாதங்களில் கோடானுகோடி நன்றியினை சமர்ப்பித்துக்கொள்கிறேன், தாயே!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் முதலமைச்சராக ஆட்சி புரிந்தும், ஆன்றோர்கள், சான்றோர்கள் அமர்ந்து வாதமும் விவாதமும் புரிந்த இந்த மாமன்றத்தில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு வரலாற்றுச் சாதனையாக ஆட்சியில் இருக்கின்ற கட்சியையே, தொடர்ந்து இரண்டாவது முறையாக வெற்றி பெறச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) ஆறாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்ற இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சி புரியும் இந்த பொற்காலத்தில், கடைக்கோடி தொண்டனாக இருந்த என்னை மாண்புமிகு அம்மா அவர்கள் பர்கூர் சட்டமன்றத் தொகுதியினுடைய வேட்பாளராக அடையாளம் காட்டி, சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, தாயது வருகைகேட்ட தனி இளம்குழவி போல, நேயமிக்க உடையவனாகி என் நெஞ்சினிலே உவகை பூக்க, மனமெனும் தேரிலேறி, காற்றினும் கடிதுவந்து, எம் அன்னையின் பொற்பாதத்தில் நானும் என் குடும்பமும் கோடானுகோடி நன்றி மலர்களைச் செலுத்துகின்றோம், தாயே! மாண்புமிகு அம்மா அவர்களின் வாக்குறுதிகளை ஏற்று, வாக்களித்த பர்கூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும், வெற்றிக்காக இரவு பகல் பாராமல் அயராது உழைத்த மாவட்ட, ஒன்றிய, பேரூராட்சி கிளைக் கழகங்களின் பொறுப்பாளர்கள், கழகத்தைக் கட்டிக் காக்கின்ற கழகத் தொண்டர்கள் என அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்ற உன்னத அரசியல் சித்தாந்தத்துடன் “எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்ற தாயின் பரிவுடன் ஆட்சி நடத்தும் நம் அன்னையை வணங்குகின்றேன். தமிழ்நாட்டு மக்கள் எந்தவிதமான இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாகக் கூடாது என்பதற்காக உலகம் பாராட்டும் வரியில்லாத பட்ஜெட்டை நாட்டு மக்களுக்கு வழங்கிய தாயே, ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்ற வள்ளலாரின் வடிவில் தங்களைக் காண்கின்றேன் தாயே. ‘மாதராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திடல் வேண்டும்’ என்ற புரட்சிக் கவியின் வார்த்தைக்கிணங்க ஆட்சி நடத்தும் மாண்புமிகு அம்மா அவர்கள், பாரத நாட்டில்

முதன்முதலில் மகளிர் காவல் நிலையம், இந்தியாவில் முதன்முதலில் பெண்கள் கமாண்டோ படை, பெண்களுக்கு இட ஒதுக்கீடு 33% தந்து, தற்போது ஆணுக்குப் பெண் சமம் என்று ஏட்டில் இருந்த வார்த்தையை நாட்டிலே கொண்டு வந்து 50% தந்த மாண்புமிகு அம்மா அவர்களை தந்தை பெரியாரின் வடிவமாய்க் காண்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தனக்காகவும், தன் பிள்ளைகளுக்காவும், பேரன் பேத்திகளுக்காகவும் கட்சியையும், ஆட்சியையும் நடத்தி, தமிழ், தமிழ் என்று சொல்லி பிழைப்பு நடத்தி, தங்களை வளர்த்துக் கொண்டவர்களும் இந்த தமிழகத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், தாயே! (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உறுப்பினர் யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) இதில் உங்களுக்கு என்ன நஷ்டம்? உட்காருங்கள்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. சி.வி. இராஜேந்திரன்: *தன்னையும் தான் பெற்ற பிள்ளைகளையும் மற்றும் பேரப் பிள்ளைகளையும் காப்பாற்றிக் கொள்வதற்காக தமிழ்நாட்டு மக்களின் ஜீவாதார மற்றும் வாழ்வாதார உரிமைகளான காவேரி, முல்லைப் பெரியாறு, கச்சத் தீவு பிரச்சினைகளில் தமிழகத்தின் உரிமைகளை காற்றிலே பறக்க விட்டதோடு மட்டுமல்லாமல்... (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *தமிழகத்திற்கு அப்பால், இலங்கையில் வாழ்ந்து தங்கள் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருந்த தமிழ் இன மக்கள் இலட்சோப இலட்சம் பேரைக் கொன்றவர்களுக்கு உடந்தையாக இருந்து, லாலி பாடிக் கொண்டு... (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். என்னவென்று பார்க்கிறேன் இருங்கள். (குறுக்கீடுகள்) இப்போதுதானே வந்தேன். என்னவென்று பார்க்கிறேன், உங்கள் இடத்திற்கு சென்று உட்காருங்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: இலங்கைக்கு தன் மகளை அனுப்பி விருந்துண்டு, தமிழின துரோகி, சிங்களத்து இராஜபக்சேவிடம் பரிசுப் பொருட்களை பெற்றவர்களும் இங்கேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நான் என்னவென்று பார்க்கிறேன். இப்போதுதானே வந்தேன். நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் இப்போதுதான் அறையிலிருந்து வந்திருக்கிறேன். என்னவென்று பார்த்துவிட்டு, பிறகு சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் பார்த்துவிட்டு சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், நான் அதைப் பார்த்துவிட்டு சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். உட்காருங்கள், நான் என்னவென்று பார்க்கிறேன். அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இரவிச்சந்திரன், உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. சி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுக் கால ஆட்சியில், (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி, (குறுக்கீடுகள்) 54 திட்டங்களை நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், (குறுக்கீடுகள்) சொல்லாத திட்டங்களான அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா பரிசுப் பெட்டகம் போன்ற எண்ணற்ற, மக்களுக்குப் பயன்படும் திட்டங்களை, (குறுக்கீடுகள்) சாதனைகளைப் புரிந்த, சாதனைத் தலைவி (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் நான் பார்க்கிறேன், நீங்கள் உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பார்க்கின்றேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான்தான் பார்க்கிறேன் என்று சொல்கிறேனே, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

நான்தான் பார்க்கிறேன் என்று சொல்கிறேனே! (குறுக்கீடுகள்) முதலில் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முதலில், உங்கள் இடத்திற்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. சக்கரபாணி, நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் என்னுடைய அறைக்கு போய்விட்டு, இப்போதுதான் வருகிறேன். அதற்குள் problem *ஆகியுள்ளது. (குறுக்கீடுகள்) நான் என்னவென்று பார்த்த பிறகு, சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) நான் என்னவென்று பார்க்காமல், எப்படி நடவடிக்கையை எடுப்பது? (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்க்கிறேன், இருங்கள். (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான்தான் சொல்கிறேனே, அறையிலிருந்து இப்போதுதான் வந்தேன். என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது, (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதை எல்லாம் கேட்டுக்கொண்டு, நான் நடவடிக்கை எடுக்க முடியுமா? (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு, நடவடிக்கை எடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, முதலில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா? (குறுக்கீடுகள்) முதலில் உங்களுக்குத் தெரியுமா? என்ன சம்பவம் என்பது உங்களுக்குத் தெரியுமா? (குறுக்கீடுகள்) நீங்கள் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, நீங்கள் பேசுங்கள்.*

***திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னிப் பேச்சு என்று பேசிக்கொண்டிருந்தார். அதில், நாங்கள் குறுக்கிடக்கூடாது என்று இருந்தோம். இன்றைக்கு எங்கள் தலைவர் குடும்பத்தையும், தலைவரின் பேரன், பேத்திகள் எல்லோரும் இந்த நாட்டிற்கு எதுவும் செய்யவில்லை. இலங்கையில் சென்று*

ராஜபக்சேயிடம் விருதுகளை, பரிசுகளை வாங்கினார்கள் என்று சொல்கிறார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில், ** (குறுக்கீடு)

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவையில்லாததை எல்லாம் நீங்கள் பதிவு செய்யக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இது எல்லாம் தேவையில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தேவையில்லாததை எல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் வேண்டாம். நீங்கள், தேவையில்லாத வார்த்தைகளைப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, நான் உங்களுக்கு வாய்ப்புத் தந்தேன். நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன், (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் பேசுவதற்குக்கூட உரிமை இல்லையா? (குறுக்கீடுகள்) நான் என்ன நடவடிக்கை எடுப்பேன் என்பது பற்றி இப்போது உங்களுக்கு எப்படித் தெரியும்? (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடுகள்) தேவையில்லாமல், இங்கு ஏன் நிற்கிறீர்கள்? உங்கள் இருக்கைக்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இரவிச்சந்திரன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் என்னவென்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) இவ்வாறு நடந்துகொள்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) தேவையில்லாததை எதற்குப் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) இவ்வாறு நடந்துகொள்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையில் இல்லையென்றாலும், நான் வந்ததற்குப் பிறகு அதைக் கேள்விப்பட்டேன். தொடர்ந்து ஒவ்வொரு முறையும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், மாண்புமிகு அமைச்சர்களாக இருந்தாலும் அல்லது சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் தேவையற்ற வகையில், விவாதத்திற்கு சம்பந்தமில்லாத சில செய்திகளை, அதிலும் எங்களைக் கோபப்படுத்திட வேண்டும், நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு, அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிட வேண்டும் என்று தொடர்ந்து ஒவ்வொரு முறையும் நாங்கள் சொல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை வந்து கொண்டிருக்கிறது.

நீங்களும் சில நேரங்களில் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறீர்கள். அதற்காக நாங்கள் நன்றி தெரிவித்திருக்கின்றோம். இன்று காலையில்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பேச்சையே அவைக் குறிப்பிலிருந்து நீக்கினீர்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கினீர்கள். அதை நாங்கள் மேசையைத் தட்டி வரவேற்று இருக்கிறோம். ஆனால், நீங்கள் சில நேரங்களில் அவைக் குறிப்பை படித்துப் பார்த்ததற்குப் பிறகு முடிவு எடுக்கிறேன் என்று சொல்லிவிடுகிறீர்கள்; அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினை அத்துடன் முடிந்துவிடுகிறது. இந்த நிலை தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. நீங்களும், மானியக் கோரிக்கையின்மீது மட்டும் பேசுங்கள் என்று சில நேரங்களில் உத்தரவை வழங்கிக் கொண்டிருக்கின்றீர்கள். அதையும் நாங்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். எனினும், அதையும் மீறி சில நேரங்களில் அதுபோன்று வருகிற நேரத்தில், அதைத் தவிர்க்க முடியாமல் நாங்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தால், அது எங்களுக்கு அவமானமாக இருந்து கொண்டிருக்கிறது. எனவே, எங்களுடைய மரியாதையை நாங்கள் காப்பாற்றிக் கொள்வதற்காக, நாங்கள் எழுந்து, எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். சில நேரங்களில் நீங்கள் எங்களுக்கு வசதியான தீர்ப்பை வழங்கவில்லை என்றால், நாங்கள் வெளிநடப்பு செய்துவிட்டு, மீண்டும் அவைக்கு உள்ளேதான் வருகிறோம். ஆனால், நாங்கள் தொடர்ந்து ஏதோ திட்டமிட்டு, வெளிநடப்பு செய்வதற்காகவே வந்திருக்கின்றோம் என்பதைப்போன்றுகூட நேற்றைக்கு ஓர் உறுப்பினர் பேசி, அவையில் பதிவு செய்திருக்கின்றார். ஆகவே,

இந்த நிலை நீடிக்கக்கூடாது. எனவே, தயவுகூர்ந்து நான் உங்களை மீண்டும் மன்றாடி கேட்டுக்கொள்ள விரும்புவது, ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசிய அந்த சொற்றொடரை தயவுகூர்ந்து நீக்கிட வேண்டும் என்று நான் உங்களை மீண்டும் வலியுறுத்தி, அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, நான் அவையில் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பிடிவாதமாக பேரவைத் தலைவரையே பேச விடாமல் தடுக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசினார். நான் அவருக்கு வாய்ப்புக் கொடுத்து, அவர் பேசியதை* record *பண்ணி கேட்டுக்கொண்டிருக்கிறேன். அப்புறம் நான் பேசுவதை நீங்கள் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். உங்கள் சௌகரியத்திற்கு நீங்கள் சொல்வதை நான் கேட்கவேண்டுமென்று சொன்னால் எப்படி? (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. உட்கார்ந்துகொண்டு பேசுகின்ற முறையை முதலில் மாற்றுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னதான் சொன்னாலும், நீங்கள் உட்கார்ந்துகொண்டு பேசுகின்ற முறை சரியில்லாத முறை. ஆகவே, அதை முதலில் மாற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். நான் கண்டிப்பாக சில உத்தரவுகளை அவையிலே தொடர்ந்து பிறப்பித்துக்கொண்டிருக்கிறேன். அவையை சிறப்பாக நடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். அதற்காக நான் இரு பக்கத்திலும் சுமுகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கித்தான் இந்த அவையை நடத்திக்கொண்டிருக்கிறேன். ஆகவே, அந்த வகையிலே இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது நான் இந்த இருக்கையில் இல்லை. நான் என்னுடைய அறையில் இருந்து கவனிக்கவும் இல்லை. மற்ற உறுப்பினர்கள் வந்தார்கள், நான் வேறு ஒரு பிரச்சினையில் அவர்களிடத்திலே பேசிக்கொண்டிருந்ததால் அவையினுடைய நடவடிக்கைகளை என்னால் கவனிக்க முடியவில்லை. நான் அறையிலிருந்து வந்தேன். வந்தவுடனே பிரச்சினையைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நீங்கள் சொல்லியிருக்கின்ற ஒரு சாரார் நிலையை வைத்து, நான் எந்த முடிவும் எடுக்க முடியாது. நான் முறையாக அவைக்குறிப்புகளையெல்லாம் வரவழைத்துப் பார்த்த பின்னர், நிச்சயம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதற்குரிய*

நடவடிக்கையை எடுப்பேன். நீங்கள் அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு தாருங்கள். மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கையில் மட்டும் பேசுங்கள். நீங்கள் வேறு எதுவும் பேச வேண்டாம் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் மாண்புமிகு அம்மா அவர்கள் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், கொஞ்சம் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னதை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். மீண்டும் ஏதோ உங்களை கட்டாயப்படுத்துவதாக தயவுகூர்ந்து கருதிவிடக்கூடாது. உங்கள் உரிமையில் நான் தலையிட விரும்பவில்லை. படித்துப் பார்த்ததற்குப் பிறகு, விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக நீங்கள் உறுதி தந்ததை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் மாலையில் பத்திரிகையில் வரக்கூடிய செய்திகளெல்லாம் எப்படி வரும் என்று உங்களுக்கும் தெரியும். எனவே முடிந்தவரை அந்த உறுப்பினர் பேசியதற்குப் பிறகு, எங்களுடைய உறுப்பினர் அடுத்து பேசவிருக்கிறார். அதைத் தொடர்ந்து அமைச்சர் அவர்கள் இங்கே பதிலுரை வழங்க இருக்கிறார்கள். அதற்கு முன்பே உங்களுடைய தீர்ப்பு வரும் என்று நாங்கள் எதிர்பார்த்து இருக்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், நீங்கள் பேசுங்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தலில் வாக்குறுதி அளித்தபடி 54 திட்டங்களையும் நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல், சொல்லாத திட்டங்களான அம்மா உணவகம், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா மருந்தகம், அம்மா குடிநீர், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா உப்பு, அம்மா சிமென்ட், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா பரிசுப் பெட்டகம் போன்ற மக்களுக்குப் பயன்படும் எண்ணற்ற திட்டங்களையும் நிறைவேற்றி, சாதனைகள் செய்த*

சாதனைத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

தனக்காக வாழாமல் தமிழ்நாட்டு மக்களுக்காக வாழ்ந்து, இந்தத் தமிழகத்தில் தன் தலைமையில் ஆட்சியில் அமரும்போதெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்கு பல நல்ல திட்டங்களைத் தந்து, தமிழ்நாட்டு மக்களை வாழவைத்துக்கொண்டிருப்பது தாங்கள்தான் அம்மா. தங்கள் தியாகம் கண்டு எங்கள் மனம் பூரிப்படைகிறது, தாயே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 2016–2017 ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை மீதான மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் எனது நன்றியினைப் பதிவு செய்துகொள்கிறேன். மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்து, துரித நடவடிக்கைகள் மேற்கொண்டு, தொலைநோக்குப் பார்வையோடு அகிலம் போற்றும் திட்டங்களால், ஆளுமை திறத்தால், அபரிமிதமான மக்கள் செல்வாக்கால், அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலால், சுற்றுச்சூழல், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இன்று மக்களின் அல்லல் தீர்க்கவந்த துறைகளாக மாறியுள்ளன. பஞ்சபூத சேர்க்கையான விண்ணையும், மண்ணையும், நீரையும், நெருப்பையும், காற்றையும் காப்பதன்மூலம் மனிதகுலம் மாண்பு பெறுகிறது என்பதை பல்வேறு திட்டங்களால் இத்துறை எடுத்துச் சொல்லியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. சி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி குறித்து சில கோரிக்கைகளை மட்டும் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்வதற்கு வாய்ப்பு வழங்கவேண்டுமென்று தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன், அதையெல்லாம் எழுதிக்

கொடுங்கள், பதிவு செய்து கொள்ளலாம். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் சட்டமன்ற தொகுதியில் கொண்டுவரப்பட்டுள்ள பள்ளிகள், கல்லூரிகள் அனைத்தும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களால்தான் கொண்டுவரப்பட்டன என்பதை இந்த அவைக்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் அரைநூற்றாண்டு காலத்திற்கும் மேலாக பர்கூர் தொகுதி மக்களின் கோரிக்கையான, கிருஷ்ணகிரி பெரிய ஏரியிலிருந்து காட்டாகரம், சந்தூர், காசிம்கான் ஏரி வரை சுமார் 30–க்கும் அதிகமான ஏரிகளை இணைக்கும் திட்டமான படேதலா ஏரிக் கால்வாய் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் 2001–2006 ஆம் ஆண்டு ஆட்சியில் விவசாய மக்கள் பயன்பெறுகின்ற வகையில், ரூ.13 கோடி அளவில் நிதியொதுக்கி நிறைவேற்றித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்பிறகு, 2006–2011 ஆம் ஆண்டு வரை ஆட்சியிலே இருந்த, தி.மு.க. ஆட்சியாளர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அந்த உன்னத திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள். அன்று வெட்டப்பட்ட கால்வாய், இன்று பருவமழை சரியாக பொழியாத காரணத்தினால், இன்று வரை வறண்டுபோய் உள்ளது. பெருமளவில் விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்ட பர்கூர் தொகுதி மக்களின் விவசாயம் செழிக்கவேண்டுமென்று சொன்னால், வறண்டுபோய் இருக்கும் படேதலா ஏரிக்கு தண்ணீர் வரவேண்டும். படேதலா ஏரிக்கு தண்ணீர் கொண்டு வர கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு நீர் ஆதாரமாக உள்ள தென்பெண்ணை ஆற்றில் எண்ணேகோல் அணைக்கட்டு என்ற இடத்திலே இருந்து சுமார் 23 கி.மீ. நீளத்திற்கு நீர்வரத்துக் கால்வாய் வெட்டி, நீண்ட நாள் கனவோடு படேதலா ஏரிக்கு தண்ணீர் வரும் என்ற எதிர்பார்ப்போடு காத்திருக்கின்ற பர்கூர் தொகுதி மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றித் தருமாறு விவசாயிகளின் விடிவெள்ளி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய பல்வேறு கோரிக்கைகளை இந்த மன்றத்திலே படித்ததாக எண்ணி, அதை பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதி கோரிக்கைகள்:

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணகிரி தொகுதியில் உள்ள பாசன கால்வாய்கள்மூலம் பாளேகுளி ஏரி, தட்ஹள்ளி, பாரூர் ஏரிகளுக்கு வரும் தண்ணீரைக் கீழ்க்கண்ட ஏரிகளுக்குச் செல்லும் வகையில் பாசன கால்வாய் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாப்பாரப்பட்டி, கொட்டாவூர் ஏரிக்கு சந்தனூர் ஏரியில் இருந்து கால்வாய் சுமார் இரண்டரை கிலோ மீட்டர் தூரமும், சந்தனூர் ஏரியில் இருந்து பண்ணந்தூர் சின்ன ஏரிக்கு 1 கி.மீ. தூரமும், பையூர் அன்னார் குட்டை ஏரியில் இருந்து கரிமலை ஓரமாக ஒட்டப்பட்டி ஏரிக்கு 3 கி.மீ. தூரமும், ஒட்டப்பட்டி கரிமலை ஓரத்தில் இருந்து ராமசாமிகொட்டாய் ஏரிக்கு ஒன்றரை கி.மீ. தூரமும், கிருஷ்ணகிரி பெரிய ஏரியிலிருந்து மேலேரிகொட்டாய் வழியாக கூரம்பட்டி ஏரிக்கும், அதிலிருந்து பட்டனூர் ஏரிக்கு 3 கி.மீ. தூரமும், பாளேகுளி ஏரியிலிருந்து எருமப்பட்டி வழியாக காட்டாகரம் ஏரிக்கு 2 கி.மீ. தூரமும், பச்சனம்பட்டி ஏரியிலிருந்து சாதிநாயக்கம்பட்டி பகதூர் கொல்லை வழியாக பட்டகரஹள்ளி ஏரிக்கு 3 கி.மீ. தூரமும் கால்வாய் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாளேகுளி ஏரியிலிருந்து சென்றாயம்பட்டி ஏரி, தட்டகல்கள் ஏரி, நாகரசம்பட்டி ஏரி, சம்மகாலபட்டி ஏரி, வீரமலை ஏரி, கல்லேரி, ஆவலப்பம்பட்டி ஏரி, ஜிட்மாண்டியூர் ஏரி, தொப்படிகுப்பம் ஏரி, கூச்சானூர் ஏரி போன்ற ஏரிகளுக்கு வருகின்ற நீர்வரத்துக் கால்வாய் அகலம் குறைவாக உள்ளதால், தண்ணீர் வரத்து தாமதமாகின்றது. எனவே கால்வாயை அகலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பையூர், வடமேற்கு ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைத்து, மாவட்ட விவசாயிகளின் நீண்டநாள் கனவை நனவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து மாங்காய் மற்றும் மாங்கூழ் குஜராத், டில்லி போன்ற மாநிலங்களுக்கும், அயல் நாடுகளுக்கும் கொண்டு சென்று விற்கப்படுகின்றது. இதனால் விவசாயிகளுக்கும், மாங்கூழ் உற்பத்தியாளர்களுக்கும் உரிய விலை கிடைக்காமல் நஷ்டம் அடைகின்றனர். எனவே, மத்திய அரசின் நிறுவனமான APEDA மூலம் வெளிநாட்டிற்கும், உள்நாட்டிற்கும் தரமான பழங்களை சுகாதாரமான முறையில் ஏற்றுமதி செய்ய Pack House அமைத்துத் தரவும், மேலும் மாங்காயை ஊறுகாய் செய்யவும், மாம்பழத்தில் மதிப்பூட்டப்பட்ட உணவு வகைகள் தயார் செய்யவும், சூரிய சக்தியால் இயங்கும் உலர்விப்பு சாதனத்தின்மூலம் ஈரப்பதத்தைக் குறைத்து உணவு பொருட்களின் ஆயுட்காலம் நீடிப்பதால், Solar Driar கூடங்கள் அமைத்து, மாம்பழங்களைச் சீவி கட்செய்து, 18 டிகிரிக்குக் குளிர்வித்து, IQF தொழில்நுட்பம்மூலம் தரமான மாம்பழத் துண்டுகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும், அணுகதிர் வீச்சுமூலம் மாம்பழங்களை GAMA Radiation மூலம் சுத்தம் செய்து, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யவும், மேலும், Hot water treatment செய்யவேண்டுமென்றும், கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளி கிராமத்தில் 20 வருடங்களாக பயன்பாட்டில் இல்லாமல் இருக்கும் சூரியகாந்தி விதையில் இருந்து எண்ணெய் பிழியும் தொழிற்சாலையைச் சீர்செய்து மேற்கண்ட பணிகளைச் செய்ய இடம் ஒதுக்கித் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மா ஏற்றுமதி மண்டலம் ஏற்படுத்தித் தருமாறும் மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதியில் தமிழகத்திற்கு பெருமளவில் அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் கிரானைட் ஏற்றுமதிக்கு, ஏற்றுமதி மண்டலம் ஒன்றினை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

போச்சம்பள்ளி பகுதியில் உள்ள மாணவர்கள் சுமார் 40 முதல் 50 கி.மீ. தூரம் சென்று கல்வி பயிலுகின்றனர். எனவே, போச்சம்பள்ளியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் தாலுகாவில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார மருத்துவமனையை, வட்டார சுகாதார மருத்துவமனையாக தரம் உயர்த்தித் தரவும், போச்சம்பள்ளி தாலுகாவில் உள்ள பாரூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனையாக உள்ளது. அதை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்றும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அஞ்சாத துணிவும், அளவற்ற அறிவும், நெஞ்சார்ந்த கனிவும், ஒரு கோடி தடைகளைத் தகர்த்தெறிந்து, தமிழகத்தில் இல்லையென்ற சொல்லுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது தாங்கள்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நேர்மைதான் தங்களின் கேடயம், நியாயம்தான் தங்களின் தராசு, மன்னிப்பு உங்களின் குணம், அடிக்கற்களை படிக்கற்களாக மாற்றுவது உங்களின் பண்பு, ஊக்கமே உங்களின் திறவுகோல், அத்தனை மரியாதைக்குரிய பண்புகளையும், பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் கண்ணாகப் பாவிக்கும் உலகத்தின் ஒப்பற்ற தலைவர் தாங்கள்தான் அம்மா. எல்லோரும் ஏற்கக்கூடிய தர்ம நெறியை நாளும் வாழ்க்கைப் பாடமாக எங்களுக்குக் கற்று தந்து, அன்பையே விதைத்து, அன்பையே அறுவடை செய்யும் தாயே, எங்கள் அடிமனதில் இருந்து, அன்பை, பண்பை பணிவை நேர்கோட்டில் நிறுத்தி, தங்களைத் தாள்பணிந்து வணங்கி, நன்றி சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

பிற்பகல் 2–05

***திரு. எஸ். சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், எழுதுபொருள் மற்றும் அச்சு ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது முதன்முதலாக எனக்கு பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், தமிழக மக்களின் பாதுகாவலர், ஐந்து முறை தமிழகத்தில் முதல்வராக இருந்து பல சாதனைகளைப் புரிந்தவர், போட்டியிட்ட தேர்தல் அனைத்திலும் வென்று, 13–வது முறையாக தற்போதும்

தமிழகத்தில், மற்ற எல்லா எதிர்க்கட்சி, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களைவிட அதிக வாக்கு வித்தியாசத்தில் வென்று, (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய துணைக் கண்டத்திலே, ஏன் உலகத்திலே எந்த அரசியல் தலைவரும் ஆற்றாத ஜனநாயகக் கடமையை, தன்னுடைய 93–வது வயதிலும் திறம்பட பணியாற்றிக்கொண்டிருக்கின்ற எங்களுடைய கழகத் தலைவர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்புகள், மக்கள் தொடர்பு, கடுமையான உழைப்பு, உண்மைக்கு மாறான விமர்சனங்களையும் தாங்கிக்கொள்கிற சகிப்புத் தன்மை, பொறுமையையும் ஒருங்கேபெற்று, என்னைப் போன்ற தம்பிகளுக்கெல்லாம் உரிய பண்புகளையெல்லாம் பயிற்றுவித்து, எங்களை ஊக்குவித்து, ஒன்றரைக் கோடி மக்களை இரண்டே மாதங்களில் சந்தித்து, (மேசையைத் தட்டும் ஒலி) நான்கரை இலட்சம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, ஒரு சட்டமன்ற உறுப்பினர் எப்படியிருக்க வேண்டும் என்பதற்குச் சான்றாய், தொகுதி மக்களையும், நாட்டு மக்களையும் தினம் தினம் சந்தித்துக்கொண்டிருக்கின்ற எங்கள் வழிகாட்டியும், இன்றைய பலமான எதிர்க்கட்சித் தலைவரும், (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய தமிழகத்தினை வழிநடத்திட இருக்கும் எங்களது அண்ணன் எதிர்க்கட்சித் தலைவர் தளபதியார் அவர்களையும் வணங்கி, தங்களையும் வணங்கி, எனக்கு 1 இலட்சத்து 22 ஆயிரத்து 82 வாக்குகளை நம்பிக்கையோடு அளித்து, மாதவரம் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த எனது தொகுதி மக்களுக்கும், என்னை ஈன்றெடுத்த தாய், தந்தையருக்கும், எனது வெற்றிக்காக உழைத்திட்ட கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சியினருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த மானியக் கோரிக்கைகளின்மீது சில கருத்துகளைத் தெரிவிப்பதற்கு முன்பு, என் தொகுதியில் நிலவும் சில முக்கியமான கோரிக்கைகளைத் தெரிவிப்பதற்கு முன்பு, நம்மை எதிர்நோக்கியுள்ள ஒரு நிகழ்வைப் பற்றி பேச விரும்புகின்றேன். நாமெல்லாம் நாம் பேசும் தமிழை உயிராக மதிக்கின்ற சூழ்நிலையில், அகில இந்திய வானொலியிலே தமிழ் உள்ளிட்ட பிற மொழிகளில் செய்திகள் ஒலிபரப்புவதில்லை என்று முடிவு செய்துள்ள மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சகத்தின் நடவடிக்கையைக் கடுமையாகக் கண்டித்து, பழைய நிலையே

தொடர தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாதவரம் சட்டமன்றத் தொகுதியில்தான், சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் புழல் ஏரியும், சோழவரம் ஏரியும் அமைந்துள்ளன. கடந்த 2011 ஆம் ஆண்டிலே என்னுடைய தொகுதியிலே வாக்காளர் எண்ணிக்கை 2,79,000 பேர். தற்போது, எனது தொகுதியினுடைய வாக்காளர் எண்ணிக்கை 3,97,000 பேர் ஆவர். எனது தொகுதியில் சுமார் 50 சதவிகிதம் மக்கள்தொகை இந்த ஐந்து ஆண்டுகளிலே பெருகியுள்ளது என்பதை நான் உணர்ந்திருக்கின்றேன். மக்கள்தொகை பெருக்கத்தினால் பல்லாயிரக்கணக்கான வீடுகள், புதிய குடியிருப்புகள் இந்த area–வின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலே உருவாக்கப்பட்டு, இந்தப் பகுதி மக்கள் வெளியேற்றும் கழிவுகள் மற்றும் திடக் கழிவுகள், இந்த ஏரியின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலே குவிந்து, ஏரியிலுள்ள நீரை மாசுப்படுத்துகின்றன. ஆகவே, இந்த அவை உறுப்பினர்களை உள்ளடக்கி, சுற்றுச்சூழல் வல்லுநர்களுடன் ஒரு குழு அமைத்து, அதை நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்று நான் இங்கே பதிய வைக்க விரும்புகின்றேன்.

அதேபோன்று, மாதவரம் பகுதியிலே இருக்கின்ற, நீர்நிலை ஆதாரமாக இருக்கின்ற, ரெட்டை ஏரியைப் பாதுகாக்கும்பொருட்டு, அதையொட்டியுள்ள தொழிற்சாலைகளிலிருந்தும், வீடுகளிலிருந்தும் கொண்டுவரப்படுகின்ற திடக்கழிவுகளையெல்லாம் கட்டுப்படுத்தி ரெட்டை ஏரியைப் பாதுகாக்க வேண்டுமென்று, வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே 14 மாநகராட்சி வட்டங்கள் இருக்கின்றன. எங்களுடைய தளபதியார் அவர்கள் 9–6–2006 அன்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே நடைபெற்ற ஆய்விலே, மாதவரம் நகரத்திலே நிலத்தடி நீர் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து, ரூ.52 கோடி ஒதுக்கி, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கடந்த 7, 8 ஆண்டுகளாக, உங்கள் ஆட்சியிலே ஐந்து ஆண்டுகளாக அந்த வேலை சரிவர முடிக்கப்படாமல், 75 சதவிகிதம்தான் முடிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் 305 தெருக்களிலே பாதாளச் சாக்கடை கொண்டுவரப்படாமலே உள்ளது. அதுமட்டுமல்லாமல், புதிதாகத் தோன்றியுள்ள நகர்களில், விஸ்தரிக்கப்பட்ட

பகுதிகளிலெல்லாம் நிலத்தடி நீர் வெகுவாகப் பாதிக்கப்பட்டு, அவையும் மாசுப்பட்டிருக்கின்ற நிலையிலே, அந்தப் பகுதிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று, நான் இங்கே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன். நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளதைக் கருத்தில்கொண்டு, 11—2—2011 அன்று நிருவாக அனுமதியுடன் அன்றைய துணை முதல்வரும், உள்ளாட்சித் துறை அமைச்சருமாக இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 55 கோடி ரூபாய் செலவிலே விரிவான குடிநீர்த் திட்டத்தை மாதவரம் நகராட்சிக்கு அமைத்துத் தர Japan International Co-operative Agency என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து, 21—2—2011—ல் அரசாணை பிறப்பித்து, குடிநீர்க் குழாய்கள் பதிக்கும் பணி 17—10—2012 அன்று தொடங்கப்பட்டு, அந்தப் பணி இதுவரை முடிவு பெறாமல் இருக்கின்றது.

பிற்பகல் 2—10

இதுவரை 45 சதவிகிதப் பணிகளை மட்டுமே முடித்திருக்கிறார்கள். என்ன காரணம் என்று எங்களுக்கே தெரியவில்லை. தண்ணீர் கேட்டால் உடனே கொடுக்க வேண்டுமென்பது குடும்பத்திலிருக்கின்ற அனைவருக்கும் தெரியும். பாதுகாக்கப்பட்ட தண்ணீரைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏறக்குறை 6 வருடங்களை எடுத்துக்கொள்வது என்பது வேதனையாக இருக்கிறது. இதை நான் குறை சொல்வதாகக் கருத வேண்டாம். கோரிக்கையாக வைக்கின்றேன். ஆகவே, தயவுசெய்து, அதனை உடனடியாக முடித்துத் தர வேண்டும். நீங்கள் கொடுத்திருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட அப்பணிகள் இந்த வருடம் நவம்பர் மாதத்தில் முடித்துத் தரப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால், அங்கு இருக்கின்ற நிலையைப் பார்த்தால், நவம்பர் மாதத்தில் முடிக்கின்ற நிலையாக அது இல்லை. இன்னும் இரண்டு அல்லது மூன்று வருட காலம் ஆகும் என்கின்ற நிலை இருக்கிறது. அதை விரைவுபடுத்தி, உடனடியாக முடித்து, மாதவரம் மக்களுக்கு குடிநீர் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாதவரம் பகுதி வழியாக சுமார் 60 கி.மீ. தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலையான GNT road சென்று கொண்டு, 60 ஆவது கிலோ மீட்டரில் அது ஆந்திர மாநிலத்தில் நுழைகின்றது. இது தேசிய நெடுஞ்சாலை என்ற காரணத்தினால், அங்கு நடக்கின்ற விபத்துகளினால் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக

மருத்துவமனைக்குக் கொண்டு வர முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களை ஸ்டான்லி மருத்துவமனை அல்லது ராஜீவ் காந்தி பொது மருத்துவமனைக்குத்தான் கொண்டுவர வேண்டும். அதனால் மருத்துவமனைக்குக் கொண்டுவரும் வழியிலேயே பலர் உயிரிழக்க நேரிடுகின்றது. ஆகவே, தாம்பரத்தில் இருப்பதுபோன்று, புறநகரிலே இருக்கின்ற ஒரு பெரிய பொது மருத்துவமனை போன்று, மாதவரம் பகுதியில், மாதவரம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் எல்லா வசதிகளும் கூடிய ஒரு பெரிய பொது மருத்துவமனையை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, மாதவரம் தொகுதியின் விளிம்பிலுள்ள மணலி, திருவொற்றியூர், எண்ணூர் போன்ற பகுதிகளில் பல ஆண்டுகளாக உள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை மற்றும் இதனைச்சார்ந்த தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயனக் கலவைகள் நிறைந்த கழிவுப் பொருட்கள், நச்சுத் தன்மையுடன்கூடிய அமில வாயுக்கள், கழிவுநீர் எல்லாம் வெளியேற்றுவதனால், இதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் எவ்வித பயன்பாட்டிற்கும் உதவாமல் உள்ளது. மேலும், நச்சு, அமில வாயுக்கள் வெளியேற்றத்தினால் மக்கள் தோல் சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் மூச்சடைப்பு போன்ற இன்னல்களை தினம் தினம் சந்திக்கின்றனர். இந்தப் பகுதி மக்கள் படும் இன்னல்களுக்கு இதுவரை எந்த நிரந்தரத் தீர்வும் காணப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள், 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்று ஒரு முறை சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை, வட சென்னை தேய்ந்து கொண்டிருக்கிறது; தென் சென்னை வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று என்னுடைய கருத்தாக நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். வட சென்னை பகுதியில் வாழும் நாங்கள் மாசுபட்ட நீரைப் பயன்படுத்தியும், மாசு நிறைந்த காற்றினை சுவாசித்தும், மாசடைந்த சப்தங்களை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிறுவனம், திருவள்ளூர் மாவட்டம்,

மாதவரம் வட்டம், மணலி கிராமம், மணலி விரைவு நெடுஞ்சாலை, சென்னை–600 068, புல எண் 37–ன்கீழ் அமைந்துள்ளது. இது தனது இயக்கத்திலிருந்து வாரிய இசைவாணை பெற்று, அதனை 31–12–2013 வரை புதுப்பித்து வந்துள்ளது. இந்நிறுவனம், common salt *மற்றும்* ammonia *ஆகியவற்றின் மூலப்பொருட்களைக் கொண்டு,* caustic soda, **திரவ குளோரைடு,** Hydrogen, Hydrochloric Acid, Sodium Hydrochloride *போன்ற உற்பத்திப் பொருட்களை செய்து வருகிறது. இந்நிறுவனம் ஒரு நாளைக்கு 310 கிலோ லிட்டர் கழிவுநீர் மற்றும் நாளொன்றுக்கு 10 கிலோ லிட்டர் அன்றாடக் கழிவுநீரை வெளியேற்றுவதற்கு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையைப் பெற்றுள்ளது. குளிரூட்டும் கோபுரங்கள் மற்றும் கொதிகலன்கள் ஆகியவற்றில் வெளியேறும் கழிவுநீர் போன்றவற்றால் வர்த்தகக் கழிவுநீர் உருவாகின்றன. இந்த வர்த்தகக் கழிவுநீர் மற்றும் அன்றாடக் கழிவுநீர் ஆகியவற்றை சுத்திகரிப்பு செய்ய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை இந்நிறுவனம் நிறுவி, இயக்கி வருகின்றது. இந்நிறுவனத்தில் ஏற்படக்கூடிய காற்று மாசினைத் தடுக்கும்பொருட்டு, புகை மாசு நீக்கிகள், புகை போக்கிகள் மற்றும் தானியங்கு காற்று எரிபொருள் விகித கட்டுப்பாட்டுக் கருவிகளை இந்நிறுவனம் நிறுவி, இயக்கி வருகின்றது. இந்நிறுவனத்திலிருந்து வரக்கூடிய அபாயகரமான கழிவுகளைக் கையாள நிறுவனம் வாரியத்தின் அபாயகரமான கழிவு மேலாண்மைத் திட்டத்தின்மூலம் வாரியத்தின் அனுமதியை 17–8–2014–ல் பெற்றுள்ளது. சுற்றுப்புறக் காற்று மற்றும் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளில் அமைந்துள்ள புகைபோக்கிகளை தொடர்ந்து கண்காணிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதனால், கிண்டியில் அமைந்துள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள வாரிய காற்று மாசு தொடர் கண்காணிப்பு மையத்துடன் இணைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்றது.*

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய கன்னிப் பேச்சு, எனக்கு எதிர் வரிசையில் அமர்ந்திருக்கின்ற ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் பேசும்போது, நீங்கள் யாருமே*

குறுக்கிடுவதில்லை. இறுதியாக அவர்களுடைய பதிலை, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் சொல்லி வருகிறார்கள். ஆனால், நாங்கள் பேசுகின்ற இந்த நேரத்திலே குறுக்கிட்டால், நாங்கள் சொல்ல வந்ததைச் சொல்ல முடியாமல் போய்விடுகிறது. அதனால், தயவுசெய்து நீங்கள் குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

வட சென்னை பகுதியில்தான் நமது மாண்புமிகு முதல்வர் தொகுதியான ஆர்.கே. நகர் தொகுதியும் உள்ளது. அங்கே உள்ள பொது மக்கள் மிகுந்த அளவுக்கு மாசுபட்ட நீரைப் பயன்படுத்தியும், மாசு நிறைந்த காற்றை சுவாசித்தும், மாசு அடைந்த சப்தங்களைக் கேட்டும், தினம் தினம் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் வேதனையோடு இங்கே பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தப் பகுதியிலே இருக்கின்ற பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் கேப்டன் கால்வாய் தூர் வாரப்படாமல், (குறுக்கீடு) சார், நான் பேசி முடித்துவிடுகிறேன். தயவு செய்து நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். முடித்தபிறகு என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், நான் முடித்தபிறகு என்ன பதில் வேண்டுமானாலும் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் கொஞ்சம் உட்காருங்கள், நான் இந்த வாக்கியத்தை முடித்துவிடுகிறேன். இந்தப் பொருளை முடித்து விடுகிறேன். உள்வாங்கி அதன் பிறகு சொல்லுங்கள். பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் கேப்டன் கால்வாய் தூர்வாரப்படாததால், கடந்த முறை ஆர்.கே. நகர் பகுதி மக்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டார்கள் என்று இங்கு இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு நன்றாகத் தெரியும். ஏறக்குறைய மார்பளவு தண்ணீரிலே அவர்கள் பாதிக்கப்பட்டு, வீடுகளில் எல்லாம் தண்ணீர் புகுந்து மிகவும் பாதிக்கப்பட்டார்கள். ஆனால், அந்த பக்கிங்ஹாம் கால்வாயும், கேப்டன் கால்வாயும் இதுவரை தூர்வாரப்படவில்லை என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோன்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொகுதியான ஆர்.கே. நகர் தொகுதியில்தான் Indian Oil Lubricant Plant, கிரி தெருவில் Bharat Petroleum, Hindustan Petroleum Distribution and Storage Plant, கொருக்குப்பேட்டையில்

Indian Oil Distribution and Storage Plant ஆகியவை உள்ளன. இந்த நிறுவனங்கள் எல்லாம் 40 ஆண்டுகளுக்கு முன்னால் சென்னை துறைமுகத்திலிருந்து Crude Oil, Petroleum உள்ளிட்ட எரி பொருட்களைக் கொண்டுவர, பூமிக்கு அடியில் குழாய்கள் பதிக்கப்பட்டன. இந்தக் குழாய்கள் எல்லாம் இப்பொழுது துருப்பிடித்து மிகவும் பழுதாகிவிட்டதால், பல இடங்களில் குழாய்கள் உடைந்து, அதிலிருந்து எரிபொருள் எண்ணெய் வெளியேறி பூமியில் பரவி விடுகிறது. இந்தக் குழாய்கள் பூமியின் கீழே பதிக்கப்பட்டுள்ளதால், பழுதடைந்த குழாய்கள் வழியாக வெளியேறும் எண்ணெய் வெளியேற்றத்தினை அறிய முடிவதில்லை. இதனால் இந்த நிறுவனங்களைச் சுற்றியுள்ள தண்டையார்பேட்டை, வி.பி. கோயில் தெரு, பிள்ளையார் கோயில் தெரு, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, கேசவன் தெரு, உள்ளிட்ட பகுதிகளில் நிலத்தடி நீர் மாசுபட்டும், குழாய்களில் வரும் குடிநீருடன் அந்த பெட்ரோலியப் பொருட்கள் எல்லாம் கலந்தும் வருகின்றன. இதனால், இந்தப் பகுதி மக்கள் பயன்படுத்துகின்ற நிலத்தடி நீரும், குடிநீரும் மாசடைந்து வாழ்வாதாரத்திற்கு உகந்ததாக இருப்பதில்லை என்பதை நான் இங்கே பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகவே, இந்த எண்ணெய் Distribution கம்பெனிகள் எல்லாம் ஆர்.கே. நகர் தொகுதியில் இருக்கின்றன. அது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தொகுதி, நான் குறை சொல்வதாக நினைக்க வேண்டாம். முதல்வர் தொகுதி என்ற காரணத்தினால் அங்கே வசிக்கின்ற மக்கள் எல்லாம் நிறைய எதிர்பார்க்கின்றார்கள். பல அடிப்படை வசதிகள் நீங்கள் செய்து கொண்டிருந்தாலும், இதுபோன்ற பெரிய காரியங்களை நீங்கள் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். தி.மு.க. கட்சிக்கு ஓட்டுப்போட்ட 55 ஆயிரம் பேர் எங்களிடமும், தளபதியாரிடமும் மனு கொடுக்கிறார்கள். ஆகவே, அதை வைத்துத்தான் இந்தக் குறிப்புகளை எல்லாம் நான் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகின்றேன். தயவு செய்து இதிலே நீங்கள் அக்கறை எடுத்து அங்கே இருக்கின்ற எண்ணெய் கம்பெனிகளை எல்லாம் வேறு இடத்திற்கு மாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, பெரம்பூர் பகுதியிலே இருக்கின்ற. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னிப் பேச்சு பேசுகிறார் என்ற காரணத்தால் அவர் பேசி முடித்தபிறகு பதில் சொல்ல வேண்டும் என்று நானும் பார்த்துக் கொண்டிருந்தேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொகுதியான, ஆர்.கே. நகர் தொகுதியில் இருக்கக்கூடிய மக்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அத்தனை திட்டங்களும் கிடைத்த மகிழ்ச்சியில் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் தொகுதியைப் பற்றி பேசிவிட்டு, குறிப்பாக ஆர்.கே. நகர் தொகுதியைப் பற்றியே பதிய வைத்துக் கொண்டிருக்கிறார். அங்கே குடிநீர் திட்டமாக இருந்தாலும் சரி, பாதாளச் சாக்கடைத் திட்டமாக இருந்தாலும் சரி, அனைத்துத் திட்டங்களும் போர்க்கால அடிப்படையிலே, உடனடியாக சரி செய்யப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொகுதி மக்களுக்கு ஒரு சிறிய பிரச்சினையாக இருந்தாலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சம்பந்தப்பட்ட துறைக்கு உடனடியாக தகவல் கொடுத்து, நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதுவும் முதலமைச்சரின் தனிப் பிரிவு, தனி அலுவலர் அவர்களை நியமனம் செய்தும், அனைத்து செவ்வாய்க்கிழமைகளிலும் அந்தத் தொகுதி மக்களுடைய குறைகள் மட்டுமல்ல, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் குறைகளைக் கேட்கிறார்கள். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தொகுதியில் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிப் பேசியதால் நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

பிற்பகல் 2—20

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, அவர்களுடைய தொகுதியைப் பற்றித் தவறான புள்ளிவிவரங்களைப் பதிய வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்த திட்டங்களையெல்லாம், எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அவர்களுடைய தலைவர் கொண்டு வந்ததாக ஒரு தவறான புள்ளிவிவரத்தைச் சொன்னார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க மாதவரம் வட்டம், 26, 27, 28, 30, 31, 32, 33 ஆகிய பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகள் ரூ.55 கோடி மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியின்மூலம் 11-2-2012 அன்று நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. 2012–ல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இப்பணிகள் யாவும் நவம்பர் 2016–க்குள் முடிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் நடந்துகொண்டிருக்கும் பணிகளைப் பற்றி தவறான விவரங்களைச் சொல்லிவருகிறார்கள். ஆகவே, 2016 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தப் பணிகளை முடித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது பொற்கரங்களால் இத்திட்டத்தைத் தொடங்கிவைப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.37.81 கோடி மதிப்பீட்டில் மாதவரம் 26, 27, 28, 30, 31, 33 ஆகிய பகுதிகளுக்கான கழிவு நீர் திட்டப் பணிகள் முடிவடைந்து, 21–2–2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்துவைக்கப்பட்டது. பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே பேசும்போது குறிப்பிட்டபடி, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய 3 மாநகராட்சிகளுக்கு JnNURM திட்டத்தின்மூலம் 2001–2006 வரையிலான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதற்குப் பின்னால் வந்த தி.மு.க. ஆட்சியில் குறிப்பிட்ட பணிகளைத்தான் செய்து முடித்தார்கள். அவர்கள் முடித்த பணிகள் ஓரிடத்தில் 18 சதவீதம் என்றும், இன்னோர் இடத்தில் 12 சதவீதம் என்றும் இருந்தது. மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் எஞ்சிய பணிகளைச் செய்து முடித்தார்கள். சில இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்களின் பிரச்சினைகள் இருக்கின்றன. அதனால், நிலம் தேர்வு செய்யும்

பிரச்சினைகளும் இருக்கின்றன. அதனால்தான் சில இடங்களில் காலதாமதம் ஏற்படுகிறது. உங்கள் ஆட்சியில் அதற்குக்கூட நடவடிக்கை எடுக்கவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில்தான் நடவடிக்கை எடுத்தார்கள். அதேபோன்று, விடுபட்ட பகுதிகளுக்கும்கூட ஆய்வு செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, 335 விடுபட்ட வீடுகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றி இன்னும் தெளிவாகப் பார்த்தோமானால், கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 55 திட்டங்களை அறிவித்தார்கள். அதில், 35 திட்டங்களை அறிவிப்போடு அப்படியே விட்டுவிட்டார்கள். 20 திட்டங்களை எடுத்துக்கொண்டு, அதில் ஒரே ஒரு திட்டத்தை மட்டும்தான் முடித்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான் விடுபட்ட 19 திட்டங்களையும் செயல்படுத்த திட்டமிட்டு, அதில் சில திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. சில திட்டங்கள் முடியும்தருவாயில் உள்ளன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், ஆர்.கே. நகர் தொகுதியில் மட்டுமல்ல, உங்கள் தொகுதியிலும் குடிநீர் திட்டப் பணிகள் உள்ளிட்ட எல்லா திட்டப் பணிகளும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் கோரிக்கை மட்டுமல்ல, 234 தொகுதிகளுக்கும், அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு என்ன பிரச்சினையாக இருந்தாலும், அதை உடனடியாகத் தீர்த்து வைக்கக்கூடிய முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மன்னிக்கவும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களே, தயவுசெய்து கொஞ்சம் அமருங்கள். (குறுக்கீடு) நான் பேசிய பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) முக்கியமான விஷயம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆர்.கே. நகர் தொகுதியிலே மிகப் பெரிய அளவில் மகத்தான வெற்றியைப் பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொகுதியை தமிழ்நாட்டிலேயே ஒரு முன்மாதிரியான தொகுதியாக உருவாக்குவதற்காக சபதம் மேற்கொண்டு, அதனடிப்படையில், தமிழ்நாட்டில், ஆர்.கே. நகரை சிங்கப்பூர்போல மாற்றிக் காட்டியவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

2006 முதல் 2011 வரையான உங்களுடைய ஆட்சிக் காலத்தில் வேண்டுமானால் எந்தப் பணிகளும் நடக்காமல் இருந்திருக்கலாம். (குறுக்கீடுகள்) ஆனால், அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் சாலை வசதி, தெரு விளக்கு வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, பக்கிங்ஹாம் கால்வாய் தூர்வாரும் பணி போன்ற எல்லா வசதிகளும், ரூ.117 கோடி செலவில் பாலங்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இவ்வளவுபேர் எழுந்து நின்றால் எப்படி? உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்களும் மாதவரத்திலிருந்து இராயபுரம் வரவேண்டுமென்றால், விரைவில் உருவாகவுள்ள, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ள அந்தப் பாலத்தின் வழியாகத்தான் வர வேண்டும். (குறுக்கீடுகள்)*

பிற்பகல் 2—25

அதேபோன்று, வடசென்னையில், இராயபுரம் சுற்றுவட்ட மேம்பாலத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் 16 கோடி ரூபாயில் கட்டிக் கொடுத்தார்கள். Subway *ஒன்று 13 கோடி ரூபாயில் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கட்டிக்கொடுத்த இராயபுரம் பாலம் வழியாகத்தான் நீங்கள் அனைவரும் செல்ல வேண்டும்.*

(குறுக்கீடுகள்) அப்படி, வடசென்னையில் அதிகமான அளவுக்கு பாலங்களைக் கட்டிக்கொடுத்து, ஆர்.கே.நகரில் 117 கோடி ரூபாய்க்கு பாலம் கட்டிக்கொடுத்து, (குறுக்கீடு) பக்கிங்ஹாம் கால்வாய் முழுவதையும் தூர்வாரி, water pollution *இல்லாமல், தரமான குடிநீர் வழங்குகின்ற ஒரே முதலமைச்சர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், பக்கிங்ஹாம் கால்வாய் தூர் வாருவது குறித்து நீங்கள் சொல்லலாமா? (குறுக்கீடுகள்) கூவம் என்றாலே உங்கள் ஞாபகம்தான் வருகிறது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள். பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சுதர்சனம், பேசுங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசுகிறார். நீங்கள் ஊருக்குச் செல்ல வேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நீங்கள். நீங்கள் ஊருக்குச் செல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார். முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் கூறிய அந்த உண்மைக்குப் புறம்பான . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசியதற்கு பிறகு பேசட்டும்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியிலிருந்து ஈரப்பத நிலங்களிலிருந்து திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் இரட்டை ஏரி, அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளில் சுற்றுச்சூழலைச் சீரமைத்து செயல்படுத்தும் பணிகளுக்காக ஒட்டுமொத்தமாக ரூ.85 கோடி நிதி தயார் செய்யப்பட்டு, பின்னர் 59.18 கோடி ரூபாய் அளவில் திருத்தி அமைத்து, ஒப்புதல் அரசாணை (3*D*) எண் 80, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 10—9—2014—ன்மூலம் வெளியிடப்பட்டு, மேற்கண்ட 3 ஏரிகளிலும், புனரமைப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் மேற்கொண்டு, முதற்கட்டமாக 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்கண்ட ஏரியின்*

எல்லையினை நிர்ணயம் செய்தல், ஆகாயத் தாமரை மற்றும் பலவித தாவரங்களை ஏரியிலிருந்து அகற்றுதல், ஏரியின் உள்ளே படிந்து கிடக்கும் படிமானங்கள், கழிவுகள் போன்றவற்றை மிதவைகள் மற்றும் கனரக இயந்திரங்கள் மூலம் அகற்றுதல் மற்றும் ஏரிக்கரையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக கிரானைட் கல் பதித்து நடைபாதை அமைத்தல், ஏரிக்கரையில் மரக்கன்றுகள் நடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டு, ரூபாய் 20 கோடி செலவில் முதற்கட்ட பணிகள் முடிக்கப்பட்டன. ஏரியில் படிந்து கிடக்கும் படிமங்கள் மற்றும் கழிவுகளை அகற்றுதல், கரை அமைத்தல் போன்ற இதர பணிகளுக்காக, இரண்டாம் கட்டமாக 13 கோடி ரூபாய் 2015–2016 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் ரூ.10.23 கோடி அளவில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒதுக்கீட்டில் எஞ்சிய பணிகளோடு கழிவுகள் ஏரியில் உட்புகுவதைத் தடுத்து, கான்கிரீட் சுவர் அமைத்தல் போன்ற இதர பணிகளும் செய்யப்பட்டுள்ளன. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கவனியுங்கள். எவ்வளவு முக்கியமான பதில் சொல்கிறார். நீங்கள் கேட்டதற்குத்தான் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) இருங்கள். அவர் சொல்லி முடிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்தவுடன் நீங்கள்தான் பேசப்போகிறீர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதன்மூலம் ஏரியைச் சுற்றியுள்ள நிலத்தடி நீர் மட்டம் உயர்வதுடன் ஏரியின் கொள்ளளவு 37 மில்லியன் கன அடி தண்ணீராக அதிகரித்துள்ளது. சுமார் 60 ஏக்கர் நிலப்பரப்பில், ஏரியைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, ஏரியின் பரப்பளவு சுமார் 1,390 ஏக்கரிலிருந்து 1,450 ஏக்கராக அதிகரிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரின் முக்கிய பகுதிகள் இயற்கை எழிலோடு கூடிய மேற்படி ஏரிகளில் சுற்றுச்சூழலுடன் கூடிய ஓர் இணக்கமான சூழ்நிலையை உருவாக்கி உள்ளூர் மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதுடன். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். உங்கள் உறுப்பினர்தான் பேசப்போகிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: உள்ளூர் மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதுடன், ஆக்கிரமிப்புகளை அகற்றி...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: நீரின் தரத்தை சீராக்குவது மட்டுமின்றி (குறுக்கீடுகள்) ஏரியைச் சுற்றி அமைந்துள்ள சென்னை பெருநகர மக்களுக்கு ஒரு பொழுதுபோக்கு அம்சமாகவும், சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து, ஒரு சுகாதாரமான சூழலோடு விளக்குவதோடு, (குறுக்கீடுகள்) மக்கள் வாழ்வாதாரம் மேன்மையடைய பெரிய வாய்ப்பாகும் என்பது திண்ணம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பதில்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார். கேட்க மனமில்லையா? (குறுக்கீடுகள்) அவர் பதில்தான் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்கார்ந்து கேட்டால்தானே உங்களுக்கு புரியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சருடைய பதிலைத் தடுப்பது எப்படி நியாயமாக இருக்கும்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கொறடா சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், உங்கள் கட்சி கொறடா சொன்னால் கேட்கமாட்டீர்களா?(குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், பேசுங்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் சத்தம் போடலாம். நாம் இரண்டு வரி சேர்த்து சொல்லும்போது, அவர்களால் கேட்க முடியவில்லை. (குறுக்கீடுகள்) ஒரு சின்ன பிரச்சினைக்கு எவ்வளவு சத்தம் போடுகிறார்கள். நாங்கள் எவ்வளவு அமைதியாக இருக்கிறோம். (குறுக்கீடுகள்) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது குறித்து அவர்களைக் கண்டிப்பாக கண்டியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: அவர்கள் வெளிநடப்பு செய்கிறார்கள். எவ்வளவு சத்தம் போடுகிறார்கள். நாங்கள் அமைதியாகத்தானே இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அனைத்து உறுப்பினர்களும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2—30

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: வடசென்னை அனல் மின் நிலையம், எண்ணூர் மற்றும் புழுதிவாக்கம் கிராமங்களில், பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள அனல்மின் நிலையத்திலிருந்து சாம்பல் குழம்புகள் சாம்பல் குளத்திற்கு கொண்டு செல்வதற்கு பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே குழாய் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சாம்பல் குளத்திலிருந்து தெளிந்த நீரினை மறுசுழற்சி மேற்கொள்ளும்பொருட்டு, மீண்டும் அனல்மின் நிலையத்திற்கு எடுத்துச் செல்லும் குழாயும் அமைக்கப்பட்டுள்ளது. அந்த அனல் மின் நிலையத்திலிருந்து அதிக உப்புத் தன்மை வாய்ந்த சாம்பல் குழாயினைக் கொண்டு செல்வதாலும், மிகவும் பழமையானதாலும் அடிக்கடி குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு, பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் கொசஸ்தலை ஆற்றின் சில பகுதிகளில் சாம்பல் தேங்கியிருப்பது அறியப்பட்டது. அவ்வாறு வெளியேற்றப்படுவதை உடனடியாகத் தடுக்கவும், மேலும் வடிகட்டிய தெளிந்த நீரை மறு சுழற்சி செய்யவும் அறிவுறுத்தப்பட்டது. வட சென்னை அனல் மின் நிலைய அதிகாரிகள் சாம்பல் குளத்திற்கு எடுத்துச் செல்லும் குழாயில் உடைப்புகள் ஏற்படாவண்ணமும், ஏற்பட்ட உடைப்புகளை சரி செய்யவும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். இதுகுறித்த வழக்கு தென் மண்டல பசுமைத் தீர்ப்பாணையத்தில் நிலுவையில் உள்ளது. அதனால், எந்தக் குழாயும் இப்போது உடைந்துபோகவில்லை. அனைத்துக் குழாய்களும் மாற்றப்பட்டு சீராகச் சென்று கொண்டிருக்கின்றது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மணலியிலிருந்து கொண்டு செல்லும் பைப்புகளில் சிறு உடைப்புகள், கசிவுகள் இருந்தவையெல்லாம் நீக்கப்பட்டு, இன்றைக்கு I.O.C.–க்கு புதிய பாதை அமைத்து, சீராக எடுத்துச் செல்லப்படுகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத்

தலைவர் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், பேசுங்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகரில் வசிக்கும் மக்கள். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உங்கள் கட்சியின் துணைத் தலைவர், உங்களை சீக்கிரம் பேசி முடிக்கச் சொல்கிறார். (குறுக்கீடுகள்)*

திரு. எஸ். சுதர்சனம்: *மன்னிக்கவும், தொகுதி பிரச்சினைதான் இது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், ஆர்.கே. நகர் தொகுதியைப் பற்றிப் பேசுவதற்கு ** (குறுக்கீடுகள்) உங்கள் தொகுதியைப் பற்றி பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்களெல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்கார்ந்தால்தான் உங்கள் கட்சியின் தலைவர் பேச முடியும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்களும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இரு தரப்பிலும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அமருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவைத் தலைவர் எழுந்து நின்றால் அனைத்து உறுப்பினர்களும் அமர வேண்டும் என்பது விதி. அதைப் பின்பற்றுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் உறுப்பினர் பேசியதில் தவறு இருந்தால் அமைச்சர்களோ, அதையும் தாண்டி அவை முன்னவர் அவர்களோ. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அமருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களுக்கு எல்லாவித உரிமையும் உண்டு. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள், ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இரு தரப்பு உறுப்பினர்களும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரே உங்களை உட்காரச் சொல்கிறார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி, உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சபையை நடத்த வேண்டும். அடிக்கடி இதுமாதிரியெல்லாம் செய்து கொண்டிருக்கக் கூடாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 2—35

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாதவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இந்த policy note, கொள்கை விளக்கக் குறிப்பிலே ஏதாவது subject சொல்வதாக இருந்தால் சொல்லலாம். உங்களுடைய தொகுதியைப் பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மற்ற தொகுதிகளைப் பற்றிப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) முதலில் என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) எங்களுக்கும் தெரியும். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர், அவை முன்னவர் பேசிவிடட்டும் (குறுக்கீடுகள்) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்குப் பேச subject இருந்தால், அவர்கள் தொகுதியைப் பற்றி பேசட்டும், கேட்கிறோம். அதற்குப் பதில் சொல்கிறோம். தேவையில்லாமல் அவர்கள் வீண்வம்பை இழுப்பதற்கு ஆர்.கே. நகர் தொகுதி பற்றி தொடர்ந்து பேசிக் கொண்டேயிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) உரிய பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பின்னாலும், திரும்பத் திரும்ப அவர்கள் ஆர்.கே. நகர் தொகுதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தால், அவர்கள் கட்சி ஆட்சி செய்தபோது அவர்கள் தலைவரின் தொகுதி இருந்த இலட்சணத்தைப் பற்றியெல்லாம் நாங்கள் பேச ஆரம்பித்தால் தாங்குவார்களா? (குறுக்கீடுகள்) தேவையா இது? (குறுக்கீடுகள்) இந்த விவாதம்

தேவையா? *(குறுக்கீடுகள்)* தேவையில்லாத விவாதத்தை அவர்கள் ஆரம்பித்து வைக்கிறார்கள். ** இன்றைக்கு மக்கள் எங்களை ஆளுங்கட்சியில் அமர்த்தியிருக்கின்றார்கள். *(குறுக்கீடுகள்)* *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் தேவையா என்று கடைசியிலே நம்முடைய முன்னவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதைத்தான் நானும் திரும்பக் கேட்கிறேன். அவர் சொன்னதிலே தவறு இருந்தால் சொல்லுங்கள். திருத்திக்கொள்கிறோம். அல்லது பேச வேண்டாமென்று சொன்னால், பேசாமல் விட்டுவிடுகிறோம். *(குறுக்கீடுகள்)* அந்தத் தொகுதியிலே *(குறுக்கீடுகள்)* ஆர்.கே. நகர் தொகுதியிலே. . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: ஆனால், அவை முன்னவர் அவர்கள் சபையை ஒழுங்காக நடத்திச் செல்வதற்கு முன்வரவேண்டுமென்பது அவருக்கும் தெரியும், எங்களுக்கும் புரியும். ஆனால், அவரே எங்களுடைய உறுப்பினரைப் பார்த்து, ** என்று கேட்கிறாரென்று சொன்னால், யார் இந்த அவையை வேறு வழியில் திருப்பிச் செல்வது என்பது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்கார்ந்து கொண்டுதான் இருக்கிறார். மாதவரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் பேசியதையெல்லாம் அவர் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார். *(குறுக்கீடுகள்)* அவரே உண்மையைச் சொல்லட்டும். ஆர்.கே. நகர் தொகுதியைப்பற்றி வீண் வம்பை இழுக்கும் வகையில் பேசினாரா, இல்லையா? அவருக்கு என்ன அக்கறை இருக்கிறது? *(குறுக்கீடுகள்)* அவர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாதவரம் தொகுதியைக் குறித்துப் பேச வேண்டியதுதானே? (குறுக்கீடுகள்) எங்களுக்குத் தெரியும். ஆர்.கே. நகர் தொகுதிக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்பது எங்கள் அம்மாவுக்கு நன்றாகவே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அதை நாங்கள் செய்துகொண்டுதான் இருப்போம். (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகர் தொகுதியிலே தி.மு.க.–வுக்கும் 50,000 பேர் வாக்களித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) எனவே, அவர்களுக்காக நாங்கள் பேசுவதிலே என்ன தவறு? (குறுக்கீடுகள்) என்ன தவறு? அதற்காக, ** என்று அவை முன்னவர் கேட்கலாமா? அதுதான் என்னுடைய கேள்வி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதையே திரும்பக் கேட்கின்றேன். அவர் மேயராக இருந்தபோது நடந்ததை நாங்கள் எழுந்து பேசினால் சரியா? (குறுக்கீடுகள்) அதைச் செய்யலாமா? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள். இந்தச் சபையிலே பேசுகிற உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதி குறித்த கோரிக்கைகளைத்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஏதாவது ஒரு நாள் இந்தமாதிரி சம்பவங்கள் நடந்தால், பேரவைத் தலைவரோ, மற்றவர்களோ ஏதாவது நடவடிக்கை எடுத்து, ஏதாவது செய்ய முடியும். இன்று காலையிலே வந்ததிலிருந்து ஆரம்பித்து, இப்படியே செய்துகொண்டிருந்தால் நான் அவையை எப்படித்தான்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

நடத்துவது? (குறுக்கீடுகள்) நான் என்ன சொல்கிறேன் என்றால், (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, நான் நியாயமாகப் பேசுகிறேன். (குறுக்கீடு) சற்று பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) முதலில் நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சற்று பொறுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதை சற்று கேளுங்கள்.

பிற்பகல் 2–40

நீங்கள் தினமும் அவைக்கு வந்து இப்படி பிரச்சினையைக் கிளப்பி, ஒவ்வொரு நாளும் நடந்துகொண்டிருந்தால், நான் சபையை எப்படி நடத்துவது? (குறுக்கீடு) நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) பேரவைத் தலைவரையே நீங்கள் பேச விடமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் நினைத்தபடியே சபையை நடத்தவேண்டுமென்றால், எப்படி நடத்தமுடியும்? இரண்டு பக்கமும், balance செய்துதான், நான் அவையை நடத்தவேண்டும். (குறுக்கீடு) உங்களுக்குப் புரிகிறதா? முதலில் என்னையே பேச விடமாட்டேன் என்கிறீர்களே? பேரவைத் தலைவராகிய நான், யாரிடத்தில் permission கேட்கவேண்டும்? பேரவைத் தலைவரையே நீங்கள் இப்படித்தான் பேசவேண்டும் என்று dictate செய்கிறீர்கள். நீங்கள் சொல்கிறபடியே நான் எப்படி கேட்பது? நீங்கள் சொல்கிறபடியே, நான் இந்தப் பக்கமும் கேட்டால், நான் எப்படித்தான் இந்தச் சபையை நடத்தமுடியும்? அவைக்கு என்று சில விதிகள் இருக்கின்றன. அவைக்கு என்று சில அதிகாரங்கள் இருக்கின்றன. அவையை சுமூகமாக நடத்துவதற்கு நான் அனைத்து முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறேன். அப்படியிருக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் தேவையில்லாமல் இன்னொரு தொகுதி குறித்து ஏன் பேசுகிறார்? அவர் தொகுதி எது? அவர் தொகுதியைப் பற்றித்தானே அவர் பேசவேண்டும்? (குறுக்கீடு)

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். நீங்களும் இந்த அவையின் நடவடிக்கையைப் பார்த்திருக்கிறீர்கள். நானும் பல ஆண்டுகளாக இந்த அவையின் நடவடிக்கைகளைப் பார்த்திருக்கிறேன். பேசுகிற உறுப்பினர்கள், எப்போதும் அவர்களுடைய தொகுதி குறித்த கோரிக்கைகளைத்தான் வைப்பார்கள். அவர்களுடைய தொகுதியைப் பற்றித்தான் பேசுவார்கள். மற்றபடி பொது விமர்சனங்களை சபையில் வைப்பது உண்டு. அது இரண்டு

தரப்பிலும் நடக்கும். ஆனால் ஒரு தொகுதியின் உறுப்பினர், இன்னொரு தொகுதியைப்பற்றி எதற்காகப் பேசவேண்டும்? தேவையில்லாமல் மாண்புமிகு முதலமைச்சருடைய தொகுதியை ஏன் இழுக்கிறீர்கள்? (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன், சற்று பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் எங்களுடைய உறுப்பினர் மா. சுப்பிரமணியன் அவர்கள் உரையாற்றுகிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, 'சென்னையை விட்டு, தமிழ்நாட்டுக்கு வாருங்கள்' என்று சொல்லி, தமிழ்நாடு முழுவதையும் பற்றி பேசச் சொல்லி மாண்புமிகு முதலமைச்சரே சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் எங்களுடைய உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இருந்தால் எந்த உறுப்பினரும் பொதுவான சப்ஜெக்ட்டைப் பேசலாம். அன்றைக்கு ஆதாரம் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பேசிக்கொண்டேயிருந்தார். அதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் அவ்வாறு சொன்னார்கள். ஆதாரம் இருந்தால் நீங்கள் கொண்டுவந்து கொடுங்கள். நீங்கள் ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி தந்தால், பேசுங்கள். அதை விட்டுவிட்டு, நீங்கள் ஏன் வீண் வம்பை இழுக்கிறீர்கள்? மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நன்றாகவே தெரியும். விதி 110–ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையின்மீது விவாதம் இல்லை என்று நன்றாகவே தெரியும். அப்படியிருக்கும்போது, இன்று காலையில் விதி 110–ன்கீழ் அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டபோது, முதன்முதலில் நீங்கள்தான் விவாதத்தை ஆரம்பித்து வைத்தீர்கள். இதெல்லாம் தேவையா? மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். (குறுக்கீடு) 2006 முதல் 2011*

வரை நீங்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, நாங்கள் எவ்வளவு அமைதியாக உட்கார்ந்திருந்தோம் என்று உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். மாண்புமிகு அம்மா அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களுடைய நோக்கம்போல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் கவனம் சிதறுகிறது. (குறுக்கீடு) இதுவெல்லாம் தவறான மரபு. இது மரியாதைமிக்க ஒரு சபை. இந்த சபைக்கென்று ஒரு மரபு இருக்கிறது. உறுப்பினர்கள் அனைவரும் கண்டபடி எழுந்து பேச முடியாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் யாராவது பேசவேண்டுமென்றால் எழுந்து நின்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் அனுமதியைப் பெற்றுவிட்டு, அதற்குப் பிறகு, அவர்களைப் பேசச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அவர்கள் இஷ்டம்போல் 10 பேர், 20 பேர், 30 பேர், 40 பேர் எழுந்து நின்று பேசிக்கொண்டிருந்தால், நாம் எப்படி சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள். முதலில், உங்களுடைய உறுப்பினர்களையெல்லாம் அமைதியாக இருக்கச் சொல்லிவிட்டு, அப்புறம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

பிற்பகல் 2–45

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரை விமர்சிக்க முடியாது என்பதை பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் அவையில் நடந்துகொள்வதைத்தான் நான் சொல்கிறேனேயொழிய, அவையில் நடக்காததை ஒன்றும் நான் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) உங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

LEGISLATIVE ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கட்சி உறுப்பினர்கள் செய்கின்ற செயல்பாட்டைத்தான் நான் சொல்கிறேன். அது விமர்சனம். ஆகவே, உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், பேரவைத் தலைவரைக் குறித்து பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) நீங்கள் இந்தமாதிரி பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) ஒவ்வொரு நாளும் இந்த அவையில் உங்கள் கட்சி உறுப்பினர்கள் செய்யாத செயலை நான் சொல்லவில்லை. இந்த அவையில் அவர்கள் நடந்துகொள்கின்ற விதத்தைதான் நான் விமர்சனம் செய்கின்றேனேயொழிய, தனிப்பட்ட முறையில் உங்களை விமர்சனம் செய்ய வேண்டுமென்ற எந்தவிதமான எண்ணமும் எனக்குக் கிடையாது. அப்படி செய்யவேண்டிய அவசியமும் எனக்குக் கிடையாது.

இன்றைக்கு நீங்களே பார்த்தீர்கள். உங்கள் கட்சி உறுப்பினர்களை உங்களாலே கட்டுப்படுத்த முடிந்ததா? (குறுக்கீடுகள்) உங்களாலே உங்கள் கட்சி உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த முடிகிறதா? (குறுக்கீடுகள்) உங்களாலே அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் எவ்வளவு மூத்த உறுப்பினர் என்பது அனைவருக்கும் தெரியும். இருந்தும், நீங்கள் சொல்வதையே உங்கள் உறுப்பினர்கள் கேட்கமாட்டேன் என்கிறார்கள். அதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் சொல்கிறேன். நான் சொல்வது தவறு இல்லை. இந்த அவையில் நடப்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். (குறுக்கீடுகள்) அவையை நடத்த அனைவரும் ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இந்த அவையில் நடப்பதைத்தான் சொல்கிறேன். இரண்டு பக்கமும் balanced ஆகத்தான் சொல்கிறேன். எதிர்க்கட்சி பக்கமும் சொல்கிறேன். அதேசமயம், ஆளுங்கட்சிப் பக்கம் தவறு நடந்தாலும் கண்டிப்பாக நான் கேட்பேன். நீங்கள் பேரவைத் தலைவரையும் பேசவிட மாட்டேன் என்கிறீர்கள், அவை முன்னவரையும் பேசவிட மாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, உங்கள் கட்சி உறுப்பினர்கள் பின்னால் திரும்பிப் பேசுவது முறையா? ஒரு முதலமைச்சருக்கு மரியாதை கொடுக்க வேண்டும் அல்லவா? அந்த மரியாதையை உங்கள் உறுப்பினர்கள் கொடுக்காதபோது, அதைச் சுட்டிக்காட்ட

வேண்டியது பேரவைத் தலைவருடைய கடமையாகும். அதனால் அதை நான் சுட்டிக்காட்டுகிறேன். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்கள் அமைதியாக இருந்துவிட்டால், நான் எதற்கு அதைச் சுட்டிக்காட்டப் போகிறேன்? அப்படியில்லாமல் நான் அதைச் சுட்டிக்காட்டினால், அது தவறு. அத்தகைய தன்மை என்னிடத்தில் இல்லை. சம்பவம் நடக்கிறது; இல்லையென்று நான் சொல்லவில்லை. உங்கள் கட்சி உறுப்பினர்கள் அவையை நடத்தவிடாமல் செய்கின்றார்கள். இப்படி நீங்கள் என்னை நிர்ப்பந்தம் செய்தால், எப்படி என்னால் சபையை நடத்த முடியும் என்று நீங்களே சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவையை நடத்த முழு ஒத்துழைப்புக் கொடுப்போம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்று இதே அவையில் சொன்னார்கள். அவர் சொன்னதை நான் பொறுமையாகக் கேட்டுக்கொண்டேன். எதிர்க்கட்சித் தலைவர் சொல்லிவிட்டார், இனிமேல் சபையில் நல்ல ஒத்துழைப்பு இருக்குமென்று நான் நினைத்தேன். (குறுக்கீடுகள்) நான் ஒத்துழைப்புக் கொடுக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, இருங்கள். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பின்னர் பேசலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துழைப்புத் தருகிறோம் என்று அன்றைக்கு இந்த அவையிலே சொன்னார்கள்; மகிழ்ச்சி. அவையை நடத்த வேண்டுமென்பதுதான் அனைவருடைய நோக்கமாகும். அப்படி, அவையை நடத்துவதற்கு எனக்கு ஒத்துழைப்பு தருகின்றபோது அதை நான் ஏற்று, இரு பக்கமும் இருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, இந்த அவையை சுமுகமாக நடத்த நான் முயற்சி செய்கிறேன். அதை விடுத்து, பேரவைத் தலைவரையே நீங்கள் பேச விடமாட்டேன் என்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய வருத்தமாகும். இதற்குமேல் நான் உங்களுக்கு என்ன சொல்வது? நானும், இந்த அவை தொடங்கிய நாளிலிருந்து உங்களுக்கு அன்பாகவும் சொல்கிறேன், பொறுமையாகவும் சொல்கிறேன், கொஞ்சம் கோபமாகவும் சொல்கிறேன், ஒரு சில நேரங்களில் கோபமாகச் சொல்வதை விட்டு, கடுமையாகக்கூட உங்களை எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆனால், எந்த எச்சரிக்கையையும் நீங்கள் பொருட்படுத்துகிற மாதிரி தெரியவில்லை. அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தருவது மாதிரி தெரியவில்லை. இனியாவது ஒத்துழைப்புக் கொடுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் சொல்லுங்கள்.

பிற்பகல் 2—50

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பாகவும் சொல்லியிருக்கிறீர்கள், அதே நேரத்தில் வேதனையோடும் சொல்லியிருக்கிறீர்கள், ஏன், கோபத்தோடுகூட சொல்லியதாகவும் சொல்லியிருக்கின்றீர்கள். கோபம் இருந்தாலும், குணம் இருக்கும் என்பதை நாங்களும் உணர்ந்திருக்கிறோம்.*

நானும், ஏற்கெனவே இதே அவையில், "நாங்கள் சபைக்கு வர வேண்டும், சபையிலே முழு அளவிலே பங்கேற்க வேண்டும், சபை விவாதங்களிலே முழுமையாகப் பங்கேற்க வேண்டுமென்ற நிலையிலேதான் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறோம்" என்று அண்ணாமீது ஆணையிட்டு சொன்னேன். இப்போது மணி 3—00—ஐ நெருங்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலும் சபை நடவடிக்கைகளில் முழு அளவிலே பங்கேற்க வேண்டும் என்கிற நிலையிலேதான் இந்த அவையிலே நாங்கள் உட்கார்ந்திருக்கிறோம். அதையேதான் நான் தொடக்கத்திலே சொன்னேன்.

சில நேரங்களில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், சில நேரங்களில் அமைச்சர் பெருமக்களேகூட தேவையற்ற வார்த்தைகளைச் சொல்லுகிறபோதுதான் சர்ச்சைகள் எழுகின்றன. அப்படி சர்ச்சைகள் எழுகிறபோது, உடனடியாக நீங்கள் அதைத் தடுக்கிற முயற்சியிலே ஈடுபட்டு, ஒரு தீர்ப்பை வழங்கிவிட்டால், இந்தப் பிரச்சினை வருவதற்கு வாய்ப்பே இல்லை. அப்படி, ஒரு தீர்ப்பு வராத காரணத்தால்தான் ஒவ்வொரு முறையும் எங்களுடைய உறுப்பினர்கள் கொஞ்சம் emotion *ஆகிவிடுகிறார்கள். அதற்கு ஒரு முடிவு வர வேண்டும், தொடர்ந்து இதே நிலை நீடித்துக் கொண்டிருந்தால் சரியாக இருக்காது என்கின்ற நிலையிலேதான், அவர்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த நிலையிலேதான் நான் மீண்டும், மீண்டும் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே சொன்ன வார்த்தையையொட்டி, நான் சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன். ** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்ட சொற்றொடர் அவைக் குறிப்பில் இருந்தால், என்னுடைய சொற்றொடரும் இருக்க வேண்டும்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

இல்லையென்றால், இரண்டையும் நீக்குங்கள், நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ** சொன்ன வார்த்தையையும், எதிர்க்கட்சித் தலைவர் ** சொன்ன வார்த்தையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு . . .(குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஏன் அவசரப்படுகிறீர்கள்? உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க, இரண்டு பக்கமும் சொன்ன அந்த வார்த்தைகள், எதிர்க்கட்சித் தலைவர், அவை முன்னவர் அவர்கள் சொன்ன வார்த்தைகள், தேவையற்ற சொற்கள் என்று சொல்லி, அவற்றை நீக்கும்படி அவரே வேண்டுகோள் விடுத்ததனால், அவை முன்னவர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி நான் உத்தரவிடுகின்றேன். ஆனால், இன்றைக்கு இதை ஒரு முற்றுப்புள்ளியாக வைத்து, (குறுக்கீடு) எல்லாப் பக்கமும்தான் (குறுக்கீடு) இல்லை, அவர்களுக்கும்தான், எல்லோருக்கும்தான். எனக்கு இந்த அவையை நடத்த ஒத்துழைப்புக் கொடுங்கள்.*

பேச வேண்டுமென்று விரும்புகிற உறுப்பினர்கள், அவர்களுடைய இருக்கையிலிருந்து கையைத் தூக்கினால், அவையினுடைய நேரம் கருதி, வாய்ப்பு இருந்தால், நிச்சயம் நான் அனுமதிக்கிறேன். அதிலே எனக்கு மாற்றுக் கருத்தே

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

கிடையாது. ஜனநாயக முறைப்படி இந்த அவையை நடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். அந்த நோக்கத்திற்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுங்கள்.

நீங்கள் எல்லோரும் நெருக்கியடித்துக்கொண்டு இங்கே வருவதனால் மட்டும் என்னுடைய முடிவை மாற்ற முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நான் மாற்றவே மாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முடிவெடுத்தால், அந்த முடிவை தெளிவாகச் செயல்படுத்த வேண்டும் என்பதிலே நான் உறுதியாக இருப்பவன். நீங்கள் அத்தனைபேரும் என்னை வந்து நெருக்கினாலும், என்னுடைய இருக்கையைச் சுற்றி நின்றாலும், என்னுடைய முடிவை நான் எப்பொழுதும் மாற்றமாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியெல்லாம் நீங்கள் நிர்ப்பந்தம் தர முடியாது. ஆகவே, விதிகளின்படி, எனக்குக் கொடுத்திருக்கிற விதிகளின்படி, நீங்களெல்லாம் வகுத்துக் கொடுத்த விதிகளின்படிதான் நான் இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கிறேன். அதற்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுங்கள். மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ். சுதர்சனம், நீங்கள் நிறைய நேரம் எடுத்துக்கொண்டீர்கள். நிறைய நேரம் ஆகிவிட்டது. ஒரே ஒரு நிமிடத்தில், உங்கள் தொகுதியைப்பற்றி மட்டும் நீங்கள் பேசி, அமருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் பார்க்கிறேன்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என் தந்தையாருக்கு நல்ல மகனாகவும், வாத்தியாருக்கு நல்ல மாணவனாகவும், எங்களுடைய தலைவருக்கும், தளபதி அவர்களுக்கும் நல்ல தொண்டனாகவும், உங்களுக்கு நல்ல சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்க விரும்புகிறேன். தயவுசெய்து, என்னுடைய கருத்துகளைச் சொல்ல, ஒரு சில மணித்துளிகள் ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சில மணித் துளிகள் எல்லாம் கொடுக்க இயலாது.

திரு. எஸ். சுதர்சதனம்: நான் பேசி முடித்து விடுகிறேன். இவ்வளவுதான், பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: சீக்கிரம் முடித்துவிடுகிறேன். தமிழ் தாய்க்கு மதுரையிலே ரூ.100 கோடி செலவிலே, அமெரிக்காவில் இருக்கின்ற சுதந்திர தேவி சிலையைப்போல, Statue of Liberty சிலையைப்போல, மிகப் பிரமாதமான மரங்களுடன், மிகப் பிரமாதமான ஒரு park–ஐ மதுரையிலே ஏற்படுத்தப் போகிறோம் என்று 14–5–2013 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அந்த தமிழ்த்தாயை நாங்களும் காண ஆவலாக இருக்கின்றோம். இதைக் கோரிக்கையாகத்தான் வைக்கின்றேன். *(குறுக்கீடு)*

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜன் செல்லப்பா, உட்காருங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: அதேபோன்று, பவானி ஆற்றில் நேரடியாகக் கலக்கும் இரசாயனக் கழிவு நீரால் மூன்று மாவட்ட மக்களின் குடிநீர் மாசுபட்டு, நிறம் மாறி, அலங்கோலமாகக் காட்சியளிக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளில் உருவாகி, பில்லூர் அணை வழியாக கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் தூய்மையாக நுழைகிறது பவானி ஆறு. அது, கோவை, ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 25 இலட்சம் மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது. மேலும், 2.5 இலட்சம் ஏக்கர் விளை நிலத்தின் பாசன ஆதாரமாகவும் பவானி ஆறு விளங்குகிறது. மேட்டுப்பாளையத்தில் நுழையும் வரை தூய்மையாக இருக்கும் பவானி ஆறு, மேட்டுப்பாளையத்தில் இயங்கிவரும் தனியார் ஆலைகளால் முற்றிலும் மாசடைந்து, நுரையுடன் நிறம் மாறி காட்சியளிக்கின்றது. மேட்டுப்பாளையத்தின் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உள்பட மூன்று குடிநீர்த் திட்டங்கள், திருப்பூர் நகருக்கான இரண்டு குடிநீர்த் திட்டங்கள், சிறுமுகை மற்றும் காரமடை பேரூராட்சிகளுக்கான குடிநீர்த் திட்டங்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டு மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகும் அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதைப்பற்றி பலமுறை நேரடியாகவும், மனுக்கள் மூலமாகவும் ஆதாரத்துடன் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதை இந்த அரசு கவனிக்கவேண்டுமென்று வேண்டுகிறேன். பவானி ஆற்றிலிருந்து ஆப்பக்கூடல் செல்லும் வழியிலுள்ள சாயப்பட்டறையில் சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப்படும் சாயக் கழிவு நீர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் தவறான கருத்தை அவையில் பதிவு செய்து கொண்டிருக்கின்றார். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பவானி, காடையம்பட்டி, கொமாரபாளையம், பள்ளிப்பாளையம், ஈரோடு மற்றும் கரூர் வரைக்கும் அனைத்து சாயப் பட்டறைகளும் மூடப்பட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கெல்லாம் 700 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்து, அனைத்து இடங்களிலும் treatment plant போட்டு, இன்றைக்கு அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை தவிர, தனியார் ஆலைகளும் zero liquid discharge முறையைப் பின்பற்றி, ஒரு சொட்டு கழிவுநீர் கூட வெளியே விடாமல் இன்றைக்கு அந்தத் தொழில்கள் நல்லபடியாக நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு சிறந்த தென்னிந்திய மான்செஸ்டர் என்று அழைக்கக்கூடிய திருப்பூரில், இன்றைக்கு அன்னிய செலவாணியை அள்ளிக் கொடுக்கின்ற திருப்பூரில், இவர்கள் 2010–2011–ல் ஆட்சியில் இருந்த காலத்தில் ஒரு சிறிய கோர்ட் உத்தரவை வைத்து அனைத்து தொழிற்சாலைகளையும் மூடினார்கள். இலட்சக்கணக்கானவர்கள் வேலையிழந்தார்கள். வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் நாடு திரும்பாமல் கஷ்டப்பட்டு திருப்பூர் மாவட்டம் இருளில் மூழ்கியது. அதற்குப் பின்னால் மாண்புமிகு அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டு ஆட்சியில் அமர்ந்த உடனேயே, அனைத்து தொழிலதிபர்களையும் அழைத்துப்பேசி, 200 கோடி ரூபாயை வட்டியில்லா கடனாகக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுது, சட்டமன்ற உறுப்பினர்களாகிய இவர்கள் அவையில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு இதெல்லாம் தெரியும். zero liquid discharge முறையில் அரசு கொடுத்த வட்டியில்லா கடனால் அனைத்து தொழில் நிறுவனங்களும் தொடர்ந்து நடைபெறுகின்றன. இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 550 கோடியாக இருந்த ஏற்றுமதி, இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 900 கோடி ரூபாயாக இருக்கிறது என்பதை நான் அன்போடு சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் கன்னிப் பேச்சு என்று குறிப்பிட்டார்கள். ** என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் பேசிய வார்த்தை தேவையில்லாதது. நீங்களே அது தேவையில்லை என்று சொல்லிவிடுங்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் ** என்ற வார்த்தையை* withdraw *செய்து கொள்ளுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய முடிவிற்கு விட்டுவிடுகிறேன். நீங்கள் எந்த முடிவெடுத்தாலும் எனக்கு சம்மதம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள், நீங்களே அதைச் சொல்லிவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ** என்று சொன்ன வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* பேசும்போது, நீங்கள் சொன்னதற்குப் பிறகும், வேறு சப்ஜெக்ட்டில் பேசினார். எங்களிடம் ஆதாரம் இருக்கிறது; கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்று பேசினார். *(குறுக்கீடுகள்)* அவர் கோவை மாவட்ட குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி பேசினார். குடிநீர்ப் பிரச்சினைக்கு அமைச்சர் என்ற முறையில் பதில் தருகிறேன். *(குறுக்கீடுகள்)* கோவை மாவட்டத்தின் முக்கிய நீராதாரமான பவானி ஆற்றின்மூலம் குடிநீர் சிறப்பான முறையில், சீராக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பவானி ஆறு மாசுபட்டிருக்கிறது; நாங்கள் பல கோரிக்கைகள் வைத்தோம்;

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அதைச் சரி செய்யவில்லை என்று பேசியிருக்கிறார். குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, இன்றைக்கு பொது மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சிறப்பான முறையில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து தவறான தகவலை அவைக்கு தந்துகொண்டிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆர்.கே. நகர் தொகுதியில் குடிநீருடன் oil கலந்து வருவதாகத் தெரிவித்தார். அந்தத் தகவல் வந்தவுடன் அந்தக் குழாய்கள் மாற்றப்பட்டன. அது எப்போதோ வந்த தகவல். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, குழாய்கள் ஏற்கெனவே மாற்றப்பட்டுவிட்டன. அதனை மாண்புமிகு உறுப்பினர் இப்போது பிரச்சினை இருப்பதுபோல பேசுகிறார்.

பிற்பகல் 3—00

அதேபோல, கேப்டன் கால்வாயைத் தூர் வாருவது குறித்துப் பேசினார். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 4.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பின்லாந்திலிருந்து வரவழைக்கப்பட்ட நவீன இயந்திரம்மூலம் Amphibian என்று கருவியை வைத்து தூர் வாரப்பட்டது. ஆகாயத் தாமரையை அகற்றினார்கள். அந்தக் கருவி நிலத்திலும் வேலை செய்யும், நீரிலும் வேலை செய்யும். இந்தமாதிரி தீர்க்கப்பட்ட பிரச்சினைகளெல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு R.K. Nagar தொகுதியில் மெட்ரோ இரயிலை நீட்டிப்பு செய்திருக்கின்றார்கள். எங்கள் துறையில் விதி 110—ன்கீழ் 117 கோடி ரூபாய்க்கு இன்றைக்கு ஒரு பாலத்திற்காக டெண்டர் விடப்பட்டிருக்கின்றது. இதனால் 2 இலட்சம் பேர் பயனடைவார்கள். இப்படி பல நல்ல திட்டங்களைச் செய்திருக்கின்றார்கள். இப்போது உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான தகவலைச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். சரியான புள்ளிவிவரத்தோடு அவர் பேச வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களுக்கு அரசு வழங்கும் விளம்பரங்களிலிருந்து 3 சதவிகிதத் தொகையை பத்திரிகை நல நிதியத்திற்குச் செல்லும்படி அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று வேண்டுகின்றேன். மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள மதீதியா ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம், உட்காருங்கள் போதும். (குறுக்கீடு) சரி, உரையை முடியுங்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே நிமிடங்களில் என்னுடைய உரையை முடித்துவிடுகின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அதைக்கூட ஏன் கோபமாக சொல்கின்றீர்கள்?*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்கள் பற்றியது. ** பத்திரிகையாளர் குடும்பத்திற்கு 5 இலட்சம் மதிப்பிலான காப்பீட்டுத் திட்டத்தை, . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் **பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. நீங்கள் தேவையில்லாமல் எதற்குப் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள்? சபையை எப்படி நடத்த வேண்டும் என்ற விதிகள் எனக்குத் தெரியும். நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர் குடும்பத்திற்கு காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். இதில் 33 சதவிகிதம் பத்திரிகையாளர் செலுத்த வேண்டும், மீதி 67 சதவிகிதத்தை அரசு செலுத்த*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

வேண்டும். இது ஏற்கெனவே ஆந்திர மாநில அரசில் நடைமுறையில் உள்ளது. இங்கும் இதைப் பின்பற்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பேசியது போதும், உட்காருங்கள். பதிலுரை. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இரண்டே வரியில் எல்லாம் அவர் உரையை முடிக்கமாட்டார். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்கட்சிக் கொறடா, நீங்கள் கொடுக்கின்ற உறுதிமொழி எதையும் உங்கள் உறுப்பினர்கள் காப்பாற்றமாட்டார்கள். நீங்கள் அவர்களை நம்பி உறுதிமொழி எதையும் என்னிடம் கொடுக்க வேண்டாம். (குறுக்கீடு) உட்காருங்கள், நீங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் திரு. சந்திரசேகர் அவர்கள் பேசுகின்றபோது சீமைக் கருவேல மரங்கள் அகற்றப்பட வேண்டும் என்றும் அந்த இடங்களில் மரங்களை நட வேண்டும் என்றும் கூறினார்கள். அவர் அவையில் இருக்கும்போது பதில் சொல்லலாம் என்று இருந்தேன். இப்போது அவர் வெளியில் நின்றுகொண்டு என்னுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கின்றார். அவருடைய தகவலுக்காகச் சொல்லுகின்றேன். சீமைக் கருவேல மரங்களை அகற்ற வேண்டும் என்ற உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்படி வன அலுவலர்கள் 55,900 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள ஏரி மற்றும் குளங்களில் வளர்க்கப்பட்டுள்ள கருவேல மரங்களுக்கு இடையே இயற்கையாக வளர்ந்துள்ள கருவேல மரங்களையும் மற்றும் reserve forest என்று சொல்லப்படுகின்ற காப்புக் காடுகளில் 46,065 ஹெக்டேர் பரப்பளவில் வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களையும் படிப்படியாக 10 ஆண்டுகளில் அகற்ற வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கின்றார்கள். அதை அகற்றிவிட்டு அந்த இடங்களில் மரக் கன்றுகளை நட்டு, பராமரிக்க வேண்டும் என்று அந்த உயர் நீதிமன்றத்தின் ஆணையின்படி நம்முடைய அரசு ஒரு பிரேரணையை அறிவித்து, அது பரிசீலனையில் உள்ளது. படிப்படியாக இது மேற்கொள்ளப்படும் என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் மரியாதை கொடுக்கின்றேன். உறுதியாக நான் சொல்கின்றேன், நீங்கள் உட்காருங்கள். நான் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவேன், நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று நாட்டு மக்களையும், கழகத்தையும் கண் இமைபோல் காத்திடும் காவல் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) மனித சக்தியைக் கடந்த மகாசக்தியே, தமிழ் இனத்திற்கும், தமிழ் மண்ணிற்கும் பெருமை சேர்த்த தங்கத்தாரகையே, (குறுக்கீடு) தமிழக அரசியலின் சிம்மசொப்பனமே, (குறுக்கீடு) திக்கெட்டும் புகழ் மணக்க தீந்தமிழர் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும், நாங்கள் தினந்தோறும் வணங்கும் திருமகளே! (குறுக்கீடு) அலைகடலாய் போய் மக்களிடம் அன்பு மழை பொழியும் ஆற்றல் அரசியே! (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் பார்க்கின்றேன், இருங்கள்.* Secretary *அவர்களைப் பார்க்கச் சொல்லியிருக்கின்றேன். அதைப் பார்த்துவிட்டு சொல்கின்றேன். (குறுக்கீடு)*

பிற்பகல் 3–05

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித்து நின்று தன்னந்தனியாய் கருத்திலே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) கிண்டல் செய்வதுபோல் பேசினால், சபையை நான் எப்படி நடத்துவது? (குறுக்கீடு) இது சட்டமன்றமா அல்லது நீங்கள் ஏதாவது திரைப்படத்தைப் பார்த்துவிட்டு வந்து இப்படிப் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்*

வற்புறுத்தியதால், நான் அவை நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்துவிட்டு, சிறிது நேரம் கழித்து என்னுடைய தீர்ப்பைச் சொல்லலாம் என்றிருந்தேன். நீங்கள் கேட்டதால் இப்போது என்னுடைய தீர்ப்பைச் சொல்லலாம் என்றிருக்கிறேன். (குறுக்கீடு) பேரவைத் தலைவரை அவமானப்படுத்துகிற மாதிரி பேசிக் கொண்டிருக்கிறீர்களே, இது என்ன நியாயம்? இதையெல்லாம் இங்கிருக்கிற பத்திரிகையாளர்களும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள், கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். சபையில் என்ன நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்குமேல் நான் இதைப்பற்றி சொல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள் பேசுகிறபொழுது சில கருத்துகளைச் சொன்னதற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் என்னிடத்திலே சொன்னார்கள். அந்த நேரத்திலே நான் அவையிலே இல்லை, என் அறையில் இருந்தேன். சபை நடவடிக்கைகளை நான் பார்த்துவிட்டு என்னுடைய தீர்ப்பைத் தெரிவிக்கிறேன் என்று சொன்னேன். சபை நடவடிக்கைக் குறிப்பை நான் வாங்கிப் பார்த்து, தீவிரமாகப் பரிசீலித்தேன். பரிசீலனைக்குப் பின், பழைய சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளையும் வாங்கிப் பார்த்தேன். சீர்தூக்கி பார்த்தபின், இப்பொழுது என்னுடைய தீர்ப்பை கீழ்க்கண்டவாறு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள், தனிப்பட்ட முறையில் யாருடைய பெயரையும் குறிப்பிட்டு எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. அதற்கு மாறாக, அவர் கூறிய கருத்துகள் ஏற்கெனவே பலமுறை இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அது புதிய வார்த்தைகளும் அல்ல. புதிய வார்த்தைகளாக இருந்தால், நிச்சயம் நீங்கள் சொன்னவுடன் அதை நீக்குவதற்கு நான் தக்க நடவடிக்கை எடுத்திருப்பேன். ஆனால், ஏற்கெனவே, இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்புகளிலே பதிவாகியிருக்கிற காரணத்தினாலே யாருடைய பெயரையும் அவர் குறிப்பிடாத காரணத்தினாலே அதை நீக்கத் தேவையில்லை” என்று நான் உத்தரவிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். அதாவது,

பேரவைத் தலைவர் ஒரு தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு, அந்தத் தீர்ப்பின்மீது எந்த விவாதமோ, விளக்கமோ கேட்கக்கூடாது என்பது விதி. அந்த விதிமுறைக்குட்பட்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவார் என்று நம்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால வரலாற்று நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி, பதிவாகியிருக்கிறது; எனவே, இதை நீக்க வேண்டியதில்லை என்ற தீர்ப்பைத் தந்திருக்கிறீர்கள். கடந்த காலத்திலே அதுபோன்ற நிகழ்வுகள் நடந்திருக்கக் கூடாதுதான். ஆனால், நீக்கப்படவில்லை என்பது வருத்தப்பட வேண்டிய ஒன்று. அதே தவறு மீண்டும் தொடர வேண்டுமென்ற நிலை இருந்து வந்தால், அது நியாயமாக இருக்காது. எனவே, நீங்கள் தந்த தீர்ப்பை மாற்றிக்கொள்ள வேண்டும். இப்படித்தான் தீர்ப்பு இருக்க வேண்டுமென்று நான் சொல்ல விரும்பவில்லை. நீங்கள் தீர்ப்பைத் தந்துவிட்டீர்கள். எனவே, ** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரையை நாங்கள் புறக்கணித்து வெளிநடப்புச் செய்கிறோம்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று நாட்டு மக்களையும், கழகத்தையும் கண்ணிமைபோல் காத்திடும் கழகத்தின் காவல் தெய்வமே! மனித சக்தியை கடந்த மகாசக்தியே! தமிழினத்திற்கும் தமிழ் மண்ணுக்கும் பெருமை சேர்த்த தங்கத் தாரகையே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசியலின் சிம்மசொப்பனமே! திக்கெட்டும் புகழ் மணக்க, தீந்தமிழர்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் நாங்கள் தினம் தொழும் திருமகளே! அலைகடலாய் குவியும் மக்களிடம் அன்பு மழை பொழியும் ஆற்றலரசியே! தனித்து நின்று கோட்டையை வென்றெடுத்த தன்னிகரில்லா தலைவி எங்கள் குல தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழர்களின் தன்னிகரில்லா தலைவி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பிற்பகல் 3–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நல்ல நாள். வரலட்சுமி விரதம். மிக மிக நல்ல நாள். மக்கள் எல்லோரும் தேடும் செல்வத்திற்கு அதிபதியான மகாலட்சுமியை வழிபடும் நாள். அந்த வரலட்சுமியை நோன்பு விரதமிருந்து வழிபடுவது சிறப்புக்குரியது. வரலட்சுமியின் அருளையும், பொருளையும் பெற வேண்டும் என்றால் விரதம் இருக்க வேண்டும் என்பது மரபு. தெய்வத்தை வேண்டிய பிறகுதான் தாங்கள் கேட்டது கிடைக்கும் என்பது மக்களின் நம்பிக்கை. அந்த தெய்வத்தினிடம்கூட வேண்டினால்தான் கிடைக்கும்; ஆனால், வேண்டாமலேயே, கேட்காமலேயே மக்களின் தேவையை அறிந்து, அவர்களுக்கு வேண்டியதை எல்லாம் வாரி வழங்கும் வள்ளல், நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் வேட்டைக்காரன் திரைப்படத்தில் 'உன்னை அறிந்தால், நீ உன்னை அறிந்தால்' என வரும் பாடலில் 'பூமியில் நேராக வாழும் மனிதர்கள் சாமிக்கு நிகர் இல்லையா? பிறர் தேவை அறிந்து கொண்டு வாரிக் கொடுப்பவர்கள் தெய்வத்தின் பிள்ளை இல்லையா?' என்று புரட்சித் தலைவி அம்மா அவர்களை நினைத்து, 40 ஆண்டுகளுக்கு முன்பே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பாடி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாட்டு மக்களுக்கு தனலட்சுமியாக, தைரியலட்சுமியாக, வீரலட்சுமியாக, விஜயலட்சுமியாக, கஜலட்சுமியாக, அஷ்டலட்சுமியாக, மக்களின் வரலட்சுமியாக திகழ்பவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என எண்ணுபவர் நம் அம்மா. உழைப்பவர் உயர

உன்னதத் திட்டம் தந்தவர் நம் அம்மா. நாட்டுக்கு உழைத்த நல்லவர்களுக்கு, தமிழுக்குப் பெருமை சேர்த்த பெரியவர்களுக்கும் புகழ் மணக்க மணிமண்டபங்கள் தந்தவர் நம் அம்மா. ஆறாவது முறையாய் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, பொறுப்பேற்ற அன்றே நம் முதலமைச்சர் அம்மா அவர்கள் தேர்தலில் சொன்ன வாக்குறுதிகளில் ஐந்தினை உடனடியாய் நிறைவேற்றி ஆணையிட்டு சாதனைச் சரித்திரம் படைத்தவர் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களின் இதயங்களில் நீங்காத இடம் பெற்று திகழ்பவர் நம் அம்மா. நம்பி வருபவர் எவரும் கெட்டதில்லை; என்றும் அவர்கள் வீழ்ந்ததில்லை. காலத்தை வென்றவர், மக்களின் உள்ளங்களில் நிறைந்தவர், காவியமானவர், வெற்றிச் சரித்திரம் படைத்தவர் நம் அம்மா. மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்கள் பார்த்தால் கல்லும் கனியாகும்! நீங்கள் தொட்டால் புல்லும் பூவாகும்! நீங்கள் நினைத்தால் கோடையும் குளிராகும்! நீங்கள் ஆணையிட்டால் தண்ணீரும் தேனாகும்! உங்கள் விழி அசைந்தால் உலகமே மலரும்! உங்கள் விரல் அசைந்தால் தீய சக்தி அழியும்! உங்கள் பேனா அசைந்தால் ஏழ்மை ஒழியும்! உங்கள் நா அசைந்தால் துயரங்கள் தொலையும்! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களைப்போல் உலகத்தில் கொடுத்து வைத்தவர்கள் எவரும் இல்லை! ஏனென்றால் அம்மா நீங்களே எங்கள் நிரந்தர முதல்வராய் வந்ததால்!

மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்களே எங்களுக்கு எல்லாம்! ஆதியும் நீங்கள்! அந்தமும் நீங்கள்! ஜோதியும் நீங்கள்! சொந்தமும் நீங்கள்! தமிழும் நீங்கள்! தரணியும் நீங்கள்! அன்பும் நீங்கள்! அருளும் நீங்கள்! பிரபஞ்சத்தின் திலகமே நீங்கள்! எங்கள் உலகமே நீங்கள்! எங்களது மூச்சும் நீங்கள்! பேச்சும் நீங்கள்! வான வண்ணமும் நீங்கள்! எங்கள் எண்ணமும் நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் சிந்தனை நீங்கள்! உலக விந்தையும் நீங்கள்! பேசும் சொற்களும் நீங்கள்! மானுட அர்த்தமும் நீங்கள்! எங்கள் பிரபஞ்சமும் நீங்கள்! இந்த பூமியும் நீங்கள்! எங்கள் சாமியும் நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) ஆம்! எங்கள் குல தெய்வம் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடம்பூர் அருகே சிதம்பரபரம் என்னும் குக்கிராமத்தில் சாதாரண ஆசிரியர் குடும்பத்தில் பிறந்து 1980—ல் கிளைக் கழகச் செயலாளராக

பணியை தொடங்கிய என்னை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1982–ல் எம்.ஜி.ஆர் மன்ற ஒன்றியச் செயலாளர், 1984–ல் எம்.ஜி.ஆர். இளைஞர் அணி ஒன்றியச் செயலாளர், 1988–ல் புரட்சித் தலைவர் மறைவிற்குப் பிறகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் செயல்பட்ட அம்மா அணியில் மாவட்ட பொருளாளராகவும், தொடர்ந்து 1992–ல் அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளராக, கழக பொதுக் குழு உறுப்பினராக, மாவட்டக் கழக துணைச் செயலாளராக இன்று வரை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய திருநாமத்திலே இயங்குகின்ற மாண்புமிகு அம்மா பேரவைச் செயலாளராக பல்வேறு நிலைகளில் கழகப் பணியாற்ற வாய்ப்பளித்து, 2011–ல் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் கோவில்பட்டி தொகுதியில் சட்டமன்ற வேட்பாளராக எனக்கு போட்டியிட வாய்ப்பினையும் வழங்கி, வெற்றியையும் பெற வைத்து, 5 ஆண்டுகள் மக்கள் பணியாற்ற நல்வாய்ப்பினை வழங்கியதோடு, அதே கோவில்பட்டி தொகுதியில் 2016–ல் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் மீண்டும் எனக்கு போட்டியிடுகின்ற வாய்ப்பையும் வழங்கி என்னை அம்மா அவர்களுடைய ஆசியால் வெற்றி பெறச் செய்து, சாமானியனும் சட்டமன்றம் செல்லலாம் என்ற வரலாற்றை உருவாக்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதையும் தாண்டி கொடி பிடித்த சாமானிய தொண்டனும், கோட்டையில் அமரலாம் என்கின்ற வரலாற்றை உருவாக்கி என்னை செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சராக்கி இம்மானியக் கோரிக்கைகளுக்கு பதிலுரை வழங்கிடும் நல்வாய்ப்பினை வழங்கிய எங்கள் குல தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, நான் மட்டும் அல்ல, என்னுடைய குடும்பமும், வம்சமும், காலம் உள்ள வரை நன்றி உள்ளவர்களாக எப்பிறப்பிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் விசுவாசமுள்ளவர்களாகப் பிறந்திட, இறைவனை வணங்கி, இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வேண்டுகோளை ஏற்று, என்னை வெற்றிப் பெறச் செய்த கோவில்பட்டி தொகுதி வாக்காளர்களுக்கும், வெற்றிக்குப் பணியாற்றிய கழகத் தொண்டர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து எனது பதிலுரையை தொடங்குகின்றேன்.

பிற்பகல் 3–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா”

என்றுரைத்த முண்டாசுக் கவிஞர் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, மக்கள் நலனை மட்டும் மையமாகக் கொண்டு, மனதில் தோன்றும் கருத்துகளை அச்சமின்றி வெளிக் கொணரும் ஆற்றல்மிகு பெருந்தகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற காலம்தான், மக்களுக்கு வசந்த காலம், வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும் இனிய காலம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் வாழ்வு உயர திட்டங்கள் பல தந்தவர்; இதன் மூலம் மக்கள் வாழ்வில் வளம் கண்டவர்.

“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்”

என்பது வள்ளுவர் வாக்கு. அத்தகைய வள்ளுவர் வாக்கிற்கு வளம் சேர்க்கும் வகையில் இதனை மனதில் கொண்டுதான், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வாக்களித்து, அளப்பரிய வெற்றியை அளித்ததோடு தொடச்சியாக இரண்டாவது முறையாக சரித்திர வெற்றியை மக்கள் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் எண்ணங்களும், எதிர்பார்ப்புகளும் நிறைவேறும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியும் இருக்கும். தொலைநோக்குச் சிந்தனை, மக்களின் முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, வறுமை ஒழிப்பு, தொழில் புரட்சி, வேளாண்மை வளர்ச்சி, விவசாயிகளின் வாழ்வில் வளர்ச்சி, நெசவாளர்களின் துயர் துடைப்பு, மீனவர் நலன்கள் பாதுகாப்பு போன்ற ஒவ்வொன்றிலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டுகின்ற ஆர்வமும், அதன் வாயிலாக ஏற்படுகின்ற முன்னேற்றமும் எண்ணிலடங்கா!

“மக்களால் நான், மக்களுக்காகவே நான், உங்களால் நான், உங்களுக்காகவே நான்” என்னும் தாரக மந்திரத்தைத் தந்தவர். தமிழகத்தின் எட்டு திக்கும் வெற்றி கண்டு, வெற்றி வாகை சூடியவர் நம் அம்மா. மக்களின் உள்ளமே கோயில் எனும் மாசற்ற கொள்கையிலே வாழ்ந்து கொடுத்து சிவந்த கரத்தின்

கொள்கை வீரராக, ஆற்றல் அரசியாக, அன்புக் கடலாக, அமைதியின் இருப்பிடமாக, அறிவுப்பெட்டகமாக, அஞ்சாநெஞ்சமாக, சொல்லின் செல்வராக, தமிழின் மணமாக, மக்களின் உணர்வாக, தமிழகத்தின் ஒளிவிளக்காக, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் இதய சிம்மாசனத்தில் கொலுவீற்றிருக்கும் எங்கள் தாய், இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளில், ஏற்றமிகு வளர்ச்சிகளை நாம் கண்டோம். "நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனை" "சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு" "மூன்றாண்டு ஆட்சி முழுமையான வளர்ச்சி" "நாடு போற்றும் நான்காண்டு ஆட்சி, என்றும் அம்மாவின் ஆட்சி" ஐந்தாம் ஆண்டினைத் தொடர்ந்து மீண்டும் அம்மாவின் ஆட்சியை மலரச் செய்து மக்கள் மகிழ்ந்துள்ளனர்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வளர்ச்சி எந்த ஆட்சியிலும் கண்டிராத இமாலய வளர்ச்சி. அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் சிறப்பான பணிகளை செய்தி–மக்கள் தொடர்புத் துறை திறம்பட நிறைவேற்றி வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில், செய்தி மக்கள் தொடர்புத் துறை மக்கள் பணியில் அளப்பரிய சாதனைகளைப் படைத்துள்ளது. செய்தி மக்கள் தொடர்புத் துறையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளும் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, சாதனை படைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்புகள், செய்திக் குறிப்புகள், அரசின் செய்தி வெளியீடுகள், நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றையும், அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சி விவரங்கள் இது குறித்த வண்ணப் புகைப்படங்கள், குறும்படங்கள், குறும்பாடல்கள் ஆகியவற்றை நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டு, அரசின் செயல்பாடுகளை, மக்கள் உடனுக்குடன் அறியச் செய்கின்ற அளப்பரிய பணியினை அனைத்து நாட்களிலும், 24 மணி நேரமும் செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவு சிறப்புற மேற்கொண்டு

வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்! இந்தப் பாரிடைத் துயில்வோர் கண்ணில் பாய்ந்திடும் எழுச்சி நீதான்! ஊரினை, நாட்டை இந்த உலகினை ஒன்று சேர்க்கப் பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே! என்று பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அரசின் திட்டங்களை விளக்கும் முகம் பார்க்கும் கண்ணாடியாக செய்தித் துறை விளங்குகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பத்திரிகையாளர் நலனில் என்றென்றும் அக்கறை கொண்டவர். அவர்களின் வாழ்வு சிறக்க, நல்ல பல திட்டங்களைத் தந்தவர்.

பிற்பகல் 3–20

கடந்த 2011–2016 ஆம் ஆண்டுகால ஆட்சியில் முதல் ஐந்து ஆண்டுகளில் மூன்று முறை பத்திரிகையாளர்கள் ஓய்வூதியத்தை உயர்த்திய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மட்டுமே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) பத்திரிகையாளர்களுக்கு ரூ.5,000/– என வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியம், 14–9–2011 முதல் ரூ.6,000/– ஆகவும், 7–10–2013 முதல் ரூ.7,500/– ஆகவும், அதனைத் தொடர்ந்து 11–1–2016 முதல் ரூ.8,000/– ஆகவும் உயர்த்தி வழங்கி, சாதனை படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெற பணிக்கொடை உச்சவரம்புத் தகுதி 2012 ஆம் ஆண்டு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பணியிலிருந்தபோது, பத்திரிகையாளர்கள் பெற்ற ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்புத் தகுதி, 2012 ஆம் ஆண்டு ரூ.1.20 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியத்தை 14–9–2011 முதல் ரூ.2,500/–லிருந்து ரூ.3,000/– ஆகவும், 7–10–2013 முதல் ரூ.4,500/– ஆகவும், இதனைத் தொடர்ந்து 11–1–2016 முதல் ரூ.4,750/– ஆகவும் உயர்த்தி வழங்கிய பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால்,

அவர்களது குடும்பத்திற்கு ரூ.2 இலட்சம் வரை குடும்ப நிதியுதவி வழங்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகைக் குடியிருப்புகள், மாவட்டங்களில் வருவாய்த் துறை மூலம் பத்திரிகையாளர்களுக்கு சலுகை விலையில் வீட்டுமனைகள், செய்தியாளர்களுக்கு அங்கீகார அட்டை, காலமுறை இதழ்களில் பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கு செய்தியாளர் அடையாள அட்டை, செய்தியாளர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டை, செய்தியாளர்கள் செய்திகளை உடனுக்குடன் அனுப்பி வைக்க செய்தி மக்கள் தொடர்புத் துறையின் வலைதளம், செய்தியாளர்கள் ஊடக மையம், ரூ.25 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்ட செய்தியாளர் அறை போன்ற பல்வேறு வசதிகளை செய்தியாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்து, தொடர்ந்து அவர்களின் நல்வாழ்விற்கு என்றென்றும் உறுதுணையாக இருப்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் வாயிலாக செய்தியாளர்கள் குடும்பத்தின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது மட்டுமன்றி, அவர்களது குடும்பமும் மகிழ்ச்சியடைந்துள்ளது.

“தன்னை அறிந்தவன் ஆசைப்படமாட்டான்; உலகை அறிந்தவன் கோபப்படமாட்டான்; இந்த இரண்டையும் உணர்ந்தவன் துன்பப்பட மாட்டான்” என்பது பகவத் கீதையின் வாசகம். கடந்த தேர்தலின்போது, எத்தனையோ பேர் முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டார்கள் என்பதை இந்த நாடே அறியும். அவர்களின் எண்ணம் நிறைவேறியதா? இல்லை. ஆசைப்பட்டதை எல்லாம் எல்லோராலும் அடைய முடியாது; அவர்கள் எண்ணத்திற்கு மக்கள் அளித்த தீர்ப்புதான் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய ஆசை, விருப்பமெல்லாம் நமது அம்மா அவர்களே முதலமைச்சராகத் தொடர வேண்டும் என்பதுதான். அதற்கேற்ற தீர்ப்பை மக்கள் அளித்தார்கள். மீண்டும் ஆறாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரியணையில் அமர்ந்தார்கள். தமிழகத்தின் ஒளி விளக்கு, மக்கள் துயர் களையும் அகல் விளக்கு, ஓய்வின்றி உழைக்கும் தியாகத்

திருவிளக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாடென்ன செய்தது நமக்கு எனக் கேள்விகள் கேட்பது எதற்கு, நீ என்ன செய்தாய் அதற்கு என நினைத்தால் நன்மை உனக்கு" என்று பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் வாழ்ந்த தலைவர்களுக்கும், தமிழுக்குத் தொண்டாற்றிய அறிஞர் பெருமக்களுக்கும், அவர்களின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் மணிமண்டபங்கள், நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் திறக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 5 ஆண்டுகளில் மட்டும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால், ரூ.73 கோடியே 43 இலட்சம் மதிப்பீட்டில் தியாகி சுப்பிரமணிய சிவா, தமிழிசை மூவர், விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை, தியாகி வாஞ்சிநாதன், மார்ஷல் நேசமணி, வீரமங்கை வேலுநாச்சியார், வீரத்தாய் குயிலி, தியாகி சங்கரலிங்கனார், வீரபாண்டிய கட்டபொம்மன், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுய மரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம், விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் ஆகியோருக்கு மணிமண்டபங்களையும், நினைவுச் சின்னங்களையும் எழுப்பி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தனது பொற்கரங்களால் திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி நடைபெறும் காலங்களில் எல்லாம் நாட்டுக்கு உழைத்த தலைவர்கள் பெருமைப்படுத்தப்படுகின்றனர். இதன் அடிப்படையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில், கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம், களியக்காவிளையில் தியாகி சிதம்பரநாதன் மற்றும் திருச்சிராப்பள்ளியில் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி, இராமநாதபுரத்தில் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி ஆகியோருக்கு திருவுருவச் சிலைகள் அமைக்கப்பட்டு, 8—2—2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 3—25

மேலும் நாட்டிற்கு உழைத்த நல்லவர்களை பெருமைப்படுத்தும் வகையிலே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விடுதலைப் போராட்ட வீரர் கொடி காத்த திருப்பூர் குமரன் அவர்களுக்கும், தியாகி வாஞ்சிநாதன் அவர்களுக்கும் வீரமங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்த இரட்டைமலை சீனிவாசன், மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் தலைசிறந்த மன்னராக விளங்கிய திருமலை நாயக்கர் ஆகியோருடைய பிறந்த நாட்களை அரசு விழாவாகக் கொண்டாட ஆணை பிறப்பித்து, அதன் மூலம் மாண்புமிகு அம்மா அவர்கள் பெருமை சேர்த்து, இன்றைக்கு அந்த விழா கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை இந்த அவையிலே பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைய அரும்பாடுபட்ட மார்ஷல் நேசமணி அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில், தமிழ்நாட்டுடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைந்த நாளான நவம்பர் 1 ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சக்கரவர்த்தி திருமகள் திரைப்படத்திலே கலையுலகச் சக்கரவர்த்தி என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் பாடும்போது உலகத்திலே பயங்கரமான ஆயுதம் எது என்ற வினா எழுப்பி பாடுவார். அதற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நிலைகெட்டுப்போன நய வஞ்சகரின் நாக்குதான் என்று பதிலளிப்பார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* இவ்வாறு மக்களின் சிந்தனைகளைத் தூண்டிய சீர்மிகு கருத்துகளுக்குச் சொந்தக்காரராகத் திகழ்ந்த கலையுலகச் சக்கரவர்த்தி திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் பெயரிலே அமைந்த கலைவாணர் அரங்கம் ரூபாய் 63 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் 14—2—2016 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ரூபாய் 21 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா நினைவிடம், பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம், கும்பகோணம் மகாமகம் பல்நோக்கு கலையரங்கம், கிண்டி காந்தி மண்டப வளாகம், வைக்கம் தந்தை பெரியார் நினைவகம் ஆகிய மணிமண்டபங்கள் புனரமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ரூபாய் 4 கோடியே 4 இலட்சம் மதிப்பீட்டில், சென்னையில் பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம், இராஜாஜி மண்டபம், காஞ்சிபுரத்திலே பேரறிஞர் பெருந்தகை அண்ணா நினைவில்லம், நாகப்பட்டினத்தில் தில்லையாடி வள்ளியம்மை நினைவில்லம், பட்டுக்கோட்டையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், சென்னையில் மகாகவி பாரதியார் நினைவில்லம், கிண்டி காந்தி மண்டப வளாகம் ஆகியவற்றில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ரூபாய் 36 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில், பேரறிஞர் அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர் நினைவிடம், சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகம் ஆகியவற்றில் குடிநீர் வசதி, எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பு போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ரூபாய் 11 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில், திருவாரூரில் மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம், திண்டுக்கல்லில் ஹைதர் அலி மற்றும் திப்புசுல்தான் மணிமண்டபம், சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா மணிமண்டபம், பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவகம் ஆகியவை அமைக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. இப்பணிகள் நிறைவுபெற்றதும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்திலுள்ள மூன்று ஏக்கர் பரப்பிலான இடத்தினை மேம்படுத்தி, இயற்கை எழில் கொஞ்சும் பூங்கா அமைக்கும் பணிகள் சென்னைப் பெருநகர மாநகராட்சி மூலம் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லும், செயலும் மக்கள் நலனையே நாடியிருக்கும், நடப்பவை அனைத்தும் அவர்களையே சார்ந்திருக்கும், அம்மாவின் ஆட்சியில் அனைவருக்கும் அனைத்தும் கிடைத்திருக்கும். தமிழகத்தில், குக்கிராமங்களில் உள்ள மக்களும் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை நேரடியாக அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பரப்படுத்துவதையும், அனைத்துத் துறைகள் வாயிலாக செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் வாயிலாக மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க களவிளம்பரம் என்னும் புதிய பிரிவு தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 20 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் அதிநவீன தொழில்நுட்ப முறையில் மின்னணு விளம்பரத் திரை பொருத்திய 32 புதிய மின்னணு விளம்பரத் திரை வீடியோ வாகனங்களை அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கியுள்ளார்கள் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொலைநோக்குச் சிந்தனையுடன் திரைப்பட தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்வு சிறக்க வழிகண்டவர், வாழ்வளித்தவர் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 3–30

திரைப்படத் துறையினர் சின்னத் திரையினர் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலமுடன் வாழவேண்டும் என்பதற்காக அரசால் திரைப்படத் துறையினர் நல வாரியம் துவக்கி வைக்கப்பட்டு, 1,346 பயனாளிகளுக்கு ரூ.39 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்களை எளிதில் ஈர்க்கும் வல்லமை திரைப்படத் துறைக்கு மட்டுமே உண்டு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவின் வளர்ச்சிக்கு ஏற்றமிகு பல திட்டங்களை அள்ளித் தந்துள்ளார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் 116 படக் காட்சி செய்தி மலர்களும், 45 குறும் பாடல்கள்கொண்ட ஆறு தொகுப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கும் பொன்மனச் செம்மல் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரைத் தாங்கி நிற்கும், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவர், மாணவர்களின் நலனுக்கு திட்டங்கள் பல தந்தவர், மாணவர்களின் எதிர்காலம் சிறப்புடன் அமைய எண்ணுபவர், ஒளிமயமான வாழ்வு அவர்களுக்குக் கிடைக்கவேண்டுமென்று உளமார விரும்புபவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு அங்கீகாரத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வந்த, பட்டய படிப்புகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இளங்கலைக் காட்சிக் கலை நான்காண்டு பட்டப் படிப்புகளாக மாற்றப்பட்டு, 2016—2017 ஆம் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்துடன் இணைந்து பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றது. மேலும், மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. 2012—2013 ஆம் நிதியாண்டு முதல் பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்பு செலவிற்காக ஒரு மாணவருக்கு ஒரு பட்டயப் படம் தயாரிக்கப்படும் நிதியுதவியை ரூ.8,000/—லிருந்து மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.15,000/— ஆக உயர்த்தி, பெருமை சேர்த்துள்ளார்கள் என்பதை இந்த நல்ல நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சென்னையிலே நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் 5 பட்டய குறும்படங்கள் போட்டியிட்டு, “ச்சீ” என்ற குறும்படமும், 2015—2016 ஆம் ஆண்டில், 10 குறும்படங்கள் போட்டியிட்டு “புர்ர்ரா” என்ற பட்டய குறும்படமும் அம்மா விருதினை வென்றுள்ளது. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் பயிற்சி நிறுவனம்

செயல்படத் துவங்கி, 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, பொன்விழா முகப்பு வளைவு மற்றும் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் மார்பளவு சிலை ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளிலே இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்நிறுவனத்திற்கு ரூ.13 கோடியே 55 இலட்சத்து 15 ஆயிரம் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார்கள். ரூ.10 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டடங்களையும், ரிச்மேன் ஹவுஸ் மற்றும் டப்பிங் தியேட்டர், முன்காண் திரையரங்கம், புதிய மாணவர் விடுதி, மாணவர் விடுதிக்கு அறைகலன்கள் கொள்முதல், முன்காண் திரையரங்கில் உயர்தர டிஜிட்டல் டால்பி பார்கோ மற்றும் நவீன ஒலி அமைப்புடன்கூடிய புனரமைப்புப் பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

“ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்” என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தவறு செய்கின்றவர்கள் எவராய் இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று எண்ணுபவர் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துபவர். திருட்டு வீ.சி.டி தயாரிப்பவர்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கிட வேண்டும் என ஆணை பிறப்பித்தவர். மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியிலே திருட்டு வீ.சி.டி தயாரித்து, விற்பனை செய்ததற்காக 12,705 பேர் கைது செய்து செய்யப்பட்டு, அவர்களின்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டில், வீடியோ திருட்டு சம்பந்தமான குற்றங்களில் ஈடுபட்ட 11 நபர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து ரூபாய் 83 கோடியே 28 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச்சினிலே சுவையிருக்கும், பார்வையிலே பொருளிருக்கும்,

பக்குவமும் அதிலிருக்கும், அவர்தான் சிறப்புமிகு தலைவி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் திட்டங்களை, சாதனைகளை, செய்திகளை, அரசாணைகளை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களின் செயல்பாடுகளை, மக்களுக்குக் கொண்டு செல்லும் அற்புதப் பணிகளை அரசு வெளியீடான "தமிழரசு" இதழ் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சிறப்புற மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சகத்திற்கு சொந்தமாக அதிக இடவசதியுடன்கூடிய கட்டடம் கட்ட ஆணையிட்டு, அதற்கிணங்க, சென்னை தரமணியிலே ரூபாய் 6 கோடியே 23 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் 29–9–2015 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழரசு அச்சகத்தை நவீனமயமாக்கிட ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் கணினியிலிருந்து அச்சுத்தட்டு இயந்திரம் வாங்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேலும், ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் நான்கு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம் வாங்கப்பட்டு, புதிய கட்டடத்தில் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் தமிழரசு சார்பில் 49 சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பிற்பகல் 3–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் திட்டங்களை, சாதனைகளை கடைக்கோடியில் வாழுகின்ற பொது மக்கள் நேரடியாக அறிந்து, பயன்பெற ஏதுவாக மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்கிணங்க, தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 10 மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. இப்பொருட்காட்சியில் 27 அரசுத் துறை அரங்குகள் அமைக்கப்பட்டு, அத்துறைகள் சார்ந்த அனைத்து விவரங்களும் அரங்கில் இடம்பெற்று வருகின்றன. மேலும், நலிந்த கலைஞர்களின் நல்வாழ்விற்கு ஆக்கமும், ஊக்கமும் தரும் வகையில் இப்பொருட்காட்சியில் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள்

நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மக்கள் போற்றும் கடந்த 5 ஆண்டு கால மகத்தான நல்லாட்சியில், நடைபெற்ற 46 அரசுப் பொருட்காட்சிகளின் வாயிலாக ரூபாய் 12 கோடியே 2 இலட்சம் வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. இப்பொருட்காட்சிகளை 81 இலட்சம் நபர்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர். அரசுப் பொருட்காட்சிகளுக்குத் தேவையான தளவாடப் பொருட்கள் மற்றும் உபகரணங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு ஏதுவாக ரூபாய் 1 கோடியே 23 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் மாவட்டம், கடத்தூர் அக்ரஹாரத்தில் நவீன வசதிகளுடன்கூடிய பொருட்காட்சிக் கிடங்கு கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களால் கடந்த 9–2–2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கலைவாணர் அரங்கத்தின் பின்பகுதியில் ரூபாய் 2 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாநில செய்தி நிலைய கட்டடத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 14–2–2016 அன்று திறந்து வைத்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி செய்தித் துறைக்கு ஒரு பொற்காலம் என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை கண்டிராத அளப்பரிய வளர்ச்சிகளை செய்தித் துறைக்கு ஏற்படுத்தித் தந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். புதிய பணியிடங்கள், பதவி உயர்வுகள், புதிய நவீன வாகனங்கள், விளம்பரப் பணிகளை மேற்கொள்ள நவீன இரக வாகனங்கள், கட்டமைப்புகள், மின்னணு சாதனங்கள் போன்ற வரலாற்றில் கண்டிராத எண்ணற்ற சாதனைகளை செய்தித் துறையில் ஏற்படுத்தி, பெருமை சேர்த்த பெருந்தகை எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை கருத்தில்கொண்டு, இத்துறையின் அலுவலர்களும், பணியாளர்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்ட சரித்திர சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஒப்பற்ற பணிகளை மிகச் சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை

இப்பேரவைக்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

எழுதுபொருள் அச்சுத் துறை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மண்ணைக் காத்து நிற்கும் தங்கத் தாரகை, தமிழகம் செழிக்க இறை தந்த கொடை நம் அம்மா, உரிமைகளை மீட்டெடுத்த உன்னதத் தலைவி, உலகம் உள்ளளவும், உங்கள் புகழ் நிலைத்து நிற்கும். கருணைக் கடலாய், கலங்கரை விளக்காய், காவேரித் தாயாய், துன்பங்கள் நீக்கும் சுடரொளியாய், எளியோரின் ஏந்தலாய் என்றும் திகழ்பவர் நம் அம்மா. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் எண்ணத்திற்கேற்ப, நவீன தொழில்நுட்பத்துடன் எழுதுபொருள் அச்சுத் துறை அளப்பரிய வளர்ச்சி கண்டு, சிறப்பான முறையில் மக்கள் பணியாற்றி வருகிறது. சிறிய அளவில் தொடங்கப்பட்ட அச்சகமானது 185 ஆண்டுகளில் படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது 10 அலகுகளுடன் செயல்பட்டு வருகிறது. சென்னையில் இயக்ககம் மற்றும் எழுதுபொருள் அலுவலகமும், மாநிலம் முழுவதும் 8 அச்சகங்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன. 8 அச்சகங்களில் சென்னை மற்றும் மதுரையில் தலா இரண்டு கிளை அச்சகங்களும், இதைத்தவிர நான்கு கிளை அச்சகங்கள் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1,696 பணியாளர்கள் பணியாற்றும் இத்துறையில் 221 பணியாளர்கள் மாற்றுத்திறனாளிகளாவார்கள். இத்துறை 13 விழுக்காடு மாற்றுத் திறனாளிகளுக்கு பணி வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில் முன்மாதிரி துறையாக விளங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகளில் கருணை அடிப்படையில் நியமனம், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் செய்தித்தாள் விளம்பரம்மூலம் நேரடி நியமனம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நியமனம் என இதுவரை மொத்தம் 678 பணியாளர்கள் அச்சுத் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். தீ விபத்தினால் சேதமடைந்த இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்திடவும், இதர கட்டடப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 22 கோடியே 64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தார்கள். இதில் புதிய இயந்திரங்கள் ரூபாய் 19 கோடியே 47 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. கட்டடப் பணிக்கென ரூபாய் 3 கோடியே 17 இலட்சத்து 20 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. தீ விபத்தால் பாதிப்படைந்த சிவப்பு கட்டடத்திற்குப் பதிலாக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் சதுர அடியில் புதிய கட்டடம் கட்ட கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 21 கோடியே 51 இலட்சத்து 30 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்தார்கள். பொதுப் பணித் துறையினால் கட்டடம் கட்டும்பணி 22–1–2015 அன்று தொடங்கப்பட்டு, பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, விரைவில் முடிவுறும் தருவாயில் உள்ளது. இப்பணிகள் நிறைவுற்றதும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரைவிலேயே தங்கள் பொற்கரங்களால் திறந்து வைக்கவுள்ளார்கள். தீ விபத்தினால் பகுதி சேதமடைந்த பிற கட்டடங்களுக்கு ரூபாய் 1 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூபாய் 4 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் மதுரை, சேலம், விருத்தாசலம், திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சகங்களில் வண்ண வெப் ஆப்செட் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளன.

பிற்பகல் 3–40

தமிழ்நாட்டிலுள்ள ஏழரைக் கோடி மக்களுக்கு இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி, ஆதார் அட்டை தயாரிப்பதற்கு ஆதாரமான தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பதிவேடுகள், இத்துறையின் அனைத்து அச்சகங்களில் உள்ள பணியாளர்களை ஈடுபடுத்தி, விரைவாகச் செயல்பட்டு அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. இதுவரை இந்திய வரலாற்றிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலே உள்ள தமிழகத்தில் மட்டும்தான் அரசுத் துறை அச்சகம் மூலமாக அச்சிடும் பணிகள் நடைபெற்றன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பிற

மாநிலங்களில் எல்லாம் தனியார் அச்சகத்திலே அச்சிடப்பட்டுள்ளன. இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், தமிழ்நாட்டில் அரசு அச்சகத்தில் ஒரு மாத காலத்தில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் அச்சகங்களில் அரசு பணிகள் தொடர்பாக அச்சிடும் நிலை மாறி, குக்கிராமங்கள் முதல் கோட்டை வரையிலான அனைத்து அரசின் அச்சிடும் பணிகளையும் 100 சதவீதம் முழுமையாக நவீன இயந்திரங்களைக் கொண்டு இத்துறை அச்சிட்டு வழங்குவதால் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை அரசின் இயந்திரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் நலனை மையமாய்க் கொண்டு, வாழ்வு சிறக்க வழி வகுத்தவர் எங்கள் அம்மா! உழைக்கும் மக்கள் உயர்ந்தோங்க உன்னதத் திட்டம் கொண்டு வந்தவர் எங்கள் அம்மா! சொன்னதையும் செய்தவர் எங்கள் அம்மா! சொல்லாததையும் செய்தவர் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையை நிறைவு செய்வதற்கு முன்னால் நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் நடந்த நிலைமைகளை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு படத்திலே ‘இந்த நீதிமன்றம் எத்தனையோ விசித்திரமான வழக்குகளைச் சந்தித்திருக்கிறது’ என்று ஒரு வசனம் வரும். அதேபோல நடைபெற்று முடிந்த 2016 சட்டமன்றத் தேர்தலிலும் நாட்டு மக்கள் பல விசித்திரமான தீர்ப்புகளை வழங்கினார்கள். முதலமைச்சர் ஆக வேண்டுமென்று நினைத்தவர்கள் எல்லாம் ஒவ்வொரு முழக்கத்தை வைத்து தேர்தலைச் சந்தித்தார்கள். அதிலே ஒருவர், புதிதாய் கட்சியைத் துவக்கி 2006 சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்து தனி ஒருவராய் வெற்றிபெற்று, பூம்புகார் படத்திலே கே.பி. சுந்தராம்பாள் பாடிய ‘தப்பித்து வந்தானம்மா பாவம், தனியாக நின்றானம்மா’ என்ற பாடல் வரிகளைப்போல தனியாய் நின்றவர், தனி மரமாய் நின்றவர், 2011 தேர்தலிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் சரணடைந்தார். அதனால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற அந்தஸ்தையும் பெற்றார். ‘பேராசை பெரு நஷ்டம்’ என்பதை

அறியாதவராக, தன்னிலை மறந்தவராக, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பாணியிலே 'நான் கிங்காப்பா? இல்லை, கிங் மேக்கராப்பா என்று தெரியலையப்பா' என்று வசனம் பேசி, 2016–ல் மெகா கூட்டணி அமைத்து, தேர்தலைச் சந்தித்தார். மக்கள் தெளிவாகத் தீர்ப்பளித்து, 'நீ கிங்கும் இல்லை, கிங் மேக்கரும் இல்லை, நீ ஒரு ஜோக்கர்' என்று தீர்ப்பளித்து தோற்கடித்ததோடு, (மேசையைத் தட்டும் ஒலி) காப்புத் தொகையையும் இழக்க வைத்து, ஒரு புதிய வரலாற்றை இந்தத் தேர்தலிலே உருவாக்கியுள்ளார்கள். இன்னொரு கட்சியோ 'மாற்றம், முன்னேற்றம்' என்ற முழக்கத்தோடு, முதலமைச்சர் வேட்பாளர் என்று தேர்தலைச் சந்தித்தது. மக்கள் பார்த்தார்கள்; எங்களுக்கு வாழ்வில் ஏற்றத்தையும் முன்னேற்றத்தையும் தருவதற்கு தமிழகத்திலே ஒப்பற்ற தலைவர் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, 'மாற்றம், முன்னேற்றம்' என்றால், அது அப்பாவிற்கும் மகனுக்கும்தான் இருக்கும் என்று மக்கள் தெளிவாகத் தீர்ப்பளித்து, அவரை மட்டுமல்ல; அவரது கட்சியை ஒரு இடத்தில்கூட இல்லாமல் முழுவதுமாக புறக்கணித்துவிட்டார்கள்.

பிற்பகல் 3–45

அடுத்து ஒரு கூட்டணி, தமிழகத்திலே தேசியக் கட்சிகளில் ஆரம்பித்து, வந்த கட்சி, போன கட்சி, வாழ்ந்த கட்சி, வீழ்ந்த கட்சி என தமிழகத்திலிருக்கின்ற கட்சிகளையெல்லாம் கூட்டணி சேர்த்து, 'நமக்கு நாமே' என்ற கொள்கை முழக்கத்தோடு தேர்தலைச் சந்தித்தார்கள். இவர்கள் 'நமக்கு நாமே' என்று சொல்லச் சொல்ல அது மக்களின் செவிகளுக்கு தமக்குத் தாமே என்றுதான் கேட்டது. ஏனென்றால், இவர்கள் தமக்குத் தாமே எதையும் வைத்துக்கொள்வார்கள் என்று மக்களுக்குத் தெரியும். எனவே, இவர்களையும் மக்கள் புறக்கணித்து விட்டார்கள். ஆனால், இவர்களை மட்டும் மக்கள் மன்றம் ஏன் சட்டமன்றத்திற்கு அனுப்பியது என்றால், வாழ்க்கை வாழ்வதற்கே என்ற படத்திலே ஒரு பாடல் வரும் 'ஆத்தோரம் மணலெடுத்து, அழகழகாய் வீடு கட்டி, தோட்டமிட்டு செடி வளர்த்து' என்று ஆரம்பித்து அவர்களுடைய நிலை என்ன ஆனது தெரியுமா? பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடியிருந்த மணல் வீடு மழை நீரில் கரைந்ததம்மா, கரைந்தது மட்டுமல்ல கொண்டு வந்த

ஆசையெல்லாம் நாங்கள் நாடெல்லாம் நடந்து நடந்து கொண்டு வந்த ஆசையெல்லாம் வந்த வழியே சென்றதம்மா. சென்றதோடு விடவில்லை, இப்போது அவர்களுடைய மனதிலே இருள் வந்து வாட்டுதம்மா. இப்படி ஒரு நிலைமையாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதேபோன்று இன்னொரு பாடல் நினைவுக்கு வருகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த மதுரை வீரன் படத்திலே ஒரு பாடல் வரும். 'வாங்க மச்சான் வாங்க வந்த வழியைப் பார்த்துப் போங்க, ஏங்கி ஏங்கி நீங்க ஏன் இப்படி பார்க்கிறீங்க' என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்கள், முதலமைச்சராகத் தொடர்கின்ற அழகைப் பார்த்து, ஏன் ஏங்கி ஏங்கி நீங்க இப்படிப் பார்க்கிறீங்க? உங்கள் பார்வை எப்படி இருக்கிறது தெரியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) 'உப்பில்லாத பத்தியக்காரன் ஊறுகாயைப் பார்த்தானாம், உதட்டாலே சப்புக் கொட்டி ஒண்டி போல நின்றானாம், கற்பனையாய் பேசிப் பேசி கஞ்சித் தொட்டியில் விழுந்தானாம்' என்ற கதையைப் போல, ஆளை மிரட்டி காளை போல துள்ளாதீர்கள் என்று அந்த பாடல் வரிகள் முடியும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களோ இந்தத் தேர்தலில் ஒரே முழக்கம், கொள்கை முழக்கம். 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்கிற கொள்கை முழக்கத்தோடு, தெம்போடு, திராணியோடு, அறிவோடு, ஆற்றலோடு, தமிழக அரசியல் வரலாற்றில் புதிய சரித்திரம் படைத்து, 234 தொகுதிகளிலும் கழக வேட்பாளர்களை நிறுத்தி, எவர் துணையுமின்றி தனி ஒருவராய் தேர்தலைச் சந்தித்து, 32 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் தொடர் வெற்றியைப் பெற்று, புதிய சகாப்தம் படைத்து, 6-வது முறையாக தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சராக பொற்கால ஆட்சியைப் படைத்துள்ளார்கள் என்பதை மிகப் பெருமையோடு இந்த அவைக்குத் தெரிவித்து, எனக்கு இந்த நல்வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையை தயாரிக்க உறுதுணையாக இருந்த முதன்மைச் செயலாளர், இயக்குநர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும்

செய்தித் துறை), எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) சார்ந்த புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன், நன்றி.

செய்தி மற்றும் விளம்பரம்

1) அரசுப் பொருட்காட்சிகளில் எல்.இ.டி. மின் விளக்குப் பலகைகள் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, அரசுப் பொருட்காட்சிகளுக்கு வருகைதரும் பொது மக்கள் அரசின் நலத் திட்டங்கள், சாதனைகள் மற்றும் அறிவிப்புகள் குறித்த விவரங்களை அறிந்து பயன்பெறும் வகையில், மாவட்டத் தலைமையிடங்களில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சிகளில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் எல்.இ.டி. மின் விளக்குப் பலகைகள் அமைக்கப்படும்.

2) சென்னை மாநில செய்தி நிலைய நூலகத்தினை நவீனமயமாக்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, மாநில செய்தி நிலைய நூலகத்தில் தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், அறிவியல், ஆன்மீகம், சிறுவர் நூல்கள், ஆங்கில நூல்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாறு நூல்கள் என பல்வேறு தலைப்புகளில் உள்ள சுமார் 50,000 நூல்களை கணினியில் பதிவு செய்து எளிதாகத் தேடி எடுப்பதற்கு ஏதுவாக நவீன மென்பொருள் ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் பொருத்தப்படும்.

3) வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கேற்ப புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கேற்ப செய்தி மக்கள் தொடர்புத் துறையில் பணியாற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும்.

4) மணிமண்டபங்கள்/நினைவகங்கள் மற்றும் கலைவாணர் அரங்கம்

நவீன முறையில் 360° பரிமாணத்தில் படம் எடுத்து அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, பொதுமக்களும், வெளிநாட்டினரும் வலைதளங்களின் வாயிலாக மணிமண்டபங்கள் மற்றும் நினைவகங்களைப் பார்வையிட ஏதுவாக, சென்னைப் பெருநகரில் உள்ள 14 மணிமண்டபங்கள்/நினைவகங்கள் மற்றும் கலைவாணர் அரங்கம் ஆகியவற்றை ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் 360° பரிமாணத்தில் படம் எடுத்து அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

5) மாவட்டத் தலைநகரங்களில் சுழற்சி முறையில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, ஆண்டுதோறும் பத்து மாவட்டத் தலைநகரங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

மீதமுள்ள நான்கு அரசுப் பொருட்காட்சிகள் வெவ்வேறு மாவட்டத் தலைநகரங்களில் சுழற்சி முறையில் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

பிற்பகல் 3–50

எழுதுபொருள் மற்றும் அச்சு

1) அரசு அலுவலகங்களுக்கு தேவைப்படும் புத்தகங்களை சீரிய முறையில் வடிவமைக்க நவீன சிறப்பு புத்தகம் கட்டும் இயந்திரம் கொள்முதல் செய்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சென்னை, அரசு மைய அச்சகத்தில் செயலாக்கப்படும் அச்சுப் பணிகளை உயர் தொழில்நுட்பம் கொண்ட சிறப்புமிக்க வழியில் புத்தகமாக வடிவமைத்திட புத்தகம் கட்டும் இயந்திரம் ஒன்று 60 இலட்சம்

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ரூபாய் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

2) திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சகத்தில் அச்சடிக்கப்படும் புத்தகங்களின் பக்கங்களில் எண்கள் இட நவீன தொழில் நுட்பம் கொண்ட டிஜிட்டல் எண்கள் இடும் இயந்திரம் கொள்முதல் செய்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள அச்சு இயந்திரத்தில் அச்சு பிரதிகளின் பக்கங்களில் எண்கள் இட புதிய தொழில்நுட்பம் கொண்ட டிஜிட்டல் எண்கள் இடும் இயந்திரம் ஒன்று 21 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

3) சென்னை, அரசு மைய அச்சகத்தில் நவீன கட்டமைப்புடன் கட்டப்பட்டுவரும் புதிய கட்டடத்தில் பல்வேறு பிரிவுகளை தொடர்பு கொள்ள உள்தொடர்புபேசி வசதி ஏற்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சென்னை அரசு மைய அச்சகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் கட்டடத்தில் இயங்க உள்ள பல்வேறு பிரிவுகளை தொடர்பு கொள்ள உள்தொடர்பு பேசி (Intercom) *வசதி 5 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.*

4) சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அச்சுப்பணிகளைச் செயலாக்கிட ஏதுவாக பன்முக அச்சுப்பொறி வாங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அரசு மைய அச்சகத்தில் அச்சிட உபயோகிக்கப்படும் அச்சுத் தகடுகளைத் தயாரிக்க தேவைப்படும் மென்தாளில் தரமான பிரதிகள் எடுக்க சென்னை அரசு மைய அச்சகத்திற்கு பன்முக அச்சுப் பொறி ஒன்று 3.60 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

5) தனித்தாள்களாக அச்சிடப்படும் பிரதிகளை புத்தக வடிவில் ஒன்றிணைக்க கம்பியடிக்கும் இயந்திரம் வாங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அச்சிடப்பட்ட படிவங்களைப் பதிவேடுகளாகவும், சிறு புத்தகங்களாகவும்

கட்டுமானம் செய்திட மதுரை, சேலம், விருத்தாசலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய அரசு கிளை அச்சகங்களுக்கு ஐந்து கம்பியடிக்கும் இயந்திரங்கள், தலா 1.70 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 8.50 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

6) சென்னை, அரசு எழுதுபொருள் கிடங்கில் கொள்முதல் செய்யப்படும் காகித உருளைகளில் ஏற்படும் சேதங்களைத் தவிர்த்திட பளுதூக்கும் இயந்திரம் வாங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அரசு எழுதுபொருள் கிடங்கில் காகித உருளைகளை சுமை ஊர்தியிலிருந்து இறக்கவும், பணியிடத்திற்குக் கொண்டு செல்லவும் பளுதூக்கும் இயந்திரம் ஒன்று 8.50 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

பளுதூக்கும் இயந்திரத்தினை இயக்க ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் எரிபொருள் தொடர் செலவினம் ரூ.68,400/- மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்படும்.

7) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் இயக்ககம், எழுதுபொருள் கிடங்கு மற்றும் அரசு அச்சகங்களில் மின்கசிவால் ஏற்படக்கூடிய விபத்துகளைத் தவிர்த்திட மின்வசதிகளை புதுப்பித்து மேம்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம், எழுதுபொருள் கிடங்கு, மதுரை, விருத்தாசலம், சேலம் அரசு கிளை அச்சகங்களில் உள்ள கட்டடங்களில் மின்கசிவினால் ஏற்படக்கூடிய தீ விபத்தினைத் தடுத்திடும் வகையில் 48 இலட்சம் ரூபாய் செலவில் மின் வசதிகள் புதுப்பித்து மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கை சார்பாக 18 மாமன்ற உறுப்பினர்களும், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை சார்பாக 10 மாமன்ற உறுப்பினர்களும் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவற்றுக்கு போதுமான விளக்கங்களை எனது பதிலுரையில் தெரிவித்திருப்பதாகக் கருதுகிறேன். இருப்பினும் விடுபட்டுப்போன வெட்டுத் தீர்மானங்கள்மீது துறையுடன் நான் ஆய்வு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று கூடுமானவரையில் நிறைவேற்றுவேன் என்று கூறி வெட்டுத் தீர்மானம் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, பறவையின் அற்புதம் மயில், பாசத்தின் அற்புதம் தாய், வானத்தின் அற்புதம் நிலா, காலத்தின் அற்புதம் வசந்தம், கற்பனையின் அற்புதம் கவிதை, கவிதையின் அற்புதம் பாரதி, அற்புதங்களில் அற்புதம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அன்பின் கருவூலம் அம்மா, பண்பின் பல்கலைக்கழகம் அம்மா, தமிழர்கள் குலதெய்வம் அம்மா, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் தொட்டு வணங்குகிறேன் அம்மா. அர்ப்பணிப்பு என்ற சொல்லுக்கு அகராதியில் பொருள் தேடவேண்டாம். அர்ப்பணிப்பு என்றால் அம்மா. அம்மா என்றால் அர்ப்பணிப்பு. மக்களுக்காகவே தவ வாழ்க்கை வாழ்கின்ற கண்கண்ட தெய்வம் புரட்சித் தலைவி அம்மா. கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவு படைத்தான் பரந்தாமன். அணுவுக்குள் இருக்கும் அணுவாய் இருக்கும் கருவறைக்குள் உருவாய் இருக்கும் உயிருக்கு உணவு படைக்கும் தாயுமானவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். கருவறையில் துயில் கொள்ளும் குழந்தைகளுக்கு சத்துணவு, கருவுற்ற தாய்மார்களுக்கு ரூபாய் 18 ஆயிரம் வழங்குகின்ற தாயுள்ளம் கொண்டவர் அம்மா; கண்விழித்துப் பிறக்கின்ற மழலை எல்லாம் காணத் துடிக்கின்ற அமுத முகம் அம்மா முகம். தமிழகத்தை தாயாகத் தாங்கி நிற்கும் தெய்வ முகம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முகம். பதினாறும் பெற்று பல்லாண்டு நீ வாழ்க என அம்மா வாயார வாழ்த்துச் சொல்வதுபோல் பிறந்த குழந்தைகளுக்கு சட்டை முதல் பொம்மை வரை 16 பொருட்களையும் வழங்கி வளரும் மழலைக்கெல்லாம் நம்பிக்கை ஊட்டுகின்ற தன்னிகரில்லா தாயை, பாதம் தொட்டு, தலைவணங்குகிறேன் அம்மா. பாலூட்டும் தாய்மார்களுக்கு பேருந்து நிலையங்களில் தனி அறை, தாயும் சேயும் மகிழும்வண்ணம் மகத்தான திட்டம்;

பிற்பகல் 3—55

"வரப்புயர நீருய ரும்
நீருயர நெல்லுய ரும்
நெல்லுயரக் குடியுய ரும்
குடியுயரக் கோலுய ரும்
கோலுயரக் கோனுயர் வான்"

என்னும் மூதாட்டி ஔவையின் அமுத சொல்லைச் செயலாக்கும் விதமாக, விவசாயிகள் வாழ்வில் ஒளி தீபம் ஏற்றி வைத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அற்புத ஆட்சி; (மேசையைத் தட்டும் ஒலி) ஆறுகளை இணைக்கும் அற்புத முயற்சி அம்மா; அத்திக்கடவு—அவிநாசித் திட்டத்திற்கு உயிர்ப்பு அம்மா; வாழ்நாள் உழவர் பாதுகாப்பு, பேரிடர் பாதுகாப்பு, இருக்க இடமில்லா ஏழைகளுக்கு வீட்டு மனைகள், பசுமை வீடுகள் திட்டம் தந்து, முதல் கையெழுத்தில் முத்தான ஐந்து திட்டங்களைத் தந்திட்ட தாயே, தங்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன், அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்றார் வள்ளுவர். கொடும் பசியும், தீராத நோயும், கடும் பகையும் இல்லாத நாடே சிறந்த நாடாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் அருளாட்சி நடக்கும் தமிழகத்தில் உலகத்தில் உயர்ந்து, வளர்ந்துவரும் நாடான 'சைனா'வே வியக்கும்வண்ணம், அம்மா உணவகம் மற்றும் விலையில்லா 20 கிலோ அரிசி வழங்குவதால் நாட்டில் எங்கேயும் பசியும் இல்லை, பஞ்சமும் இல்லை அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா மருந்தகம், அம்மா மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆகியவற்றால் நீங்காத நோயும் இல்லை, அம்மா; தீராத பிணியும் இல்லை அம்மா; தீங்கற்ற அம்மா அவர்களது ஆட்சியில். சட்டம்—ஒழுங்கு, தருமம், நீதி எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் சரியாக இருப்பதால் பகையும் இல்லை, பயமும் இல்லை, தீங்கு இல்லை, தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கின்றது, அம்மா. பசியற்ற தமிழகம், பசுமையான தமிழகம், நோயற்ற தமிழகம், பகையற்ற தமிழகம், பாதுகாப்பான தமிழகம், கல்வியில் சிறந்தது தமிழகம், கலைமகள் வளரும் தமிழகம் என மாற்றிய மாசற்ற மணிமேகலை தாயே, தன்னிகரில்லா காவல் தெய்வமே, 2 கோடி தொண்டர்களின் காவல் தெய்வமே, தங்கள்

பாதம் பணிந்து வணங்குகின்றேன், அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியத் திருநாட்டின் இதயமாகத் தமிழ்நாட்டை மாற்றியவரே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா; உங்கள் ஆட்சியில் சத்தியத்திற்கு சாட்சி, நலமும் வளமும் நல்கிடும் ஆட்சி. என்றும் தேவை உங்கள் தலைமை அம்மா; தமிழகத்தின் நிரந்தர முதல்வர் அம்மா; தமிழகத்தை வாழ்விக்க வந்திட்ட மாமணியே அம்மா; மங்கையரின் மகுடமே அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர் வாழ்வில் பசுமை நிறைந்திட, இனிமை மலர்ந்திட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, உங்கள் பாதம் பணிந்து வணங்குகின்றேன், அம்மா.

கிளைச் செயலாளராக இருந்த என்னை, ஒன்றியப் பிரதிநிதியாக்கி, ஒன்றியச் செயலாளராக்கி, நகர் மன்றத் தலைவராக்கி, மூன்று முறை சட்டமன்ற வேட்பாளராக்கி, இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, “அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை, அவர் அடி தொழ மறுப்பவர் மனிதரில்லை” (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுபோல, ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் அருட்கடலாய்த் திகழும் அன்னையே! மக்கள் மனம் கவர்ந்த மாண்பே, தாய்க்குலத்தின் தாரகையே, தங்கள் திருநாமத்தை உச்சரிக்கும் தகுதி எனக்கில்லை, அதனால் நான் தங்கள் திருவடியை வணங்குகிறேன், அம்மா. இந்த எளியவனை அமைச்சராக்கிப் பார்க்கும் தங்கள் அருள் சேர்ந்த ஆற்றலுக்குத் தலைவணங்குகிறேன், அம்மா. என்னை ஈன்றெடுத்த தாய், தந்தையரை வணங்கி, எனக்கு மூன்று முறை இரட்டை இலைச் சின்னத்தில் வாக்களித்த பவானி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைச் சொல்லி எனது உரையைத் தொடங்குகின்றேன், அம்மா.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காற்று, நீர், நிலம், பூமியில் காணப்படும் மனிதன் உள்ளிட்ட உயிருள்ளவை மற்றும் உயிரற்ற பொருட்களுடன் நிலவி வரும் தொடர் உறவே சுற்றுச்சூழல் ஆகும். பூமியில் உயிரினங்கள் நலமுடன் வாழ்வதற்கு வளர்ச்சி மட்டுமின்றி, சுற்றுச்சூழல் பாதுகாப்பும் மிகவும் இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாட்டில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க 1982 ஆம் ஆண்டு அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர், பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் தமிழ்நாடு மாசுக்

கட்டுப்பாடு வாரியம் தோற்றுவிக்கப்பட்டது.

அதற்குப் பின்னால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திற்கு சிறப்பான முன்னேற்றம் கொடுத்து, 1995 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், சுற்றுப்புறச் சூழல் இயக்கம் என்ற ஒரு பெரிய இயக்கத்தை ஆரம்பித்து, மிகவும் திறம்பட செயல்களை நிறைவேற்றி வருகின்றது.

1982 ஆம் ஆண்டு 17 பணியாளர்களுடன் துவங்கப்பட்ட தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மொத்தம் 354 பணியாளர்கள் புதிதாகப் பணியமர்த்தப்பட்டு, தற்பொழுது 700 பணியாளர்களுடன் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சிறப்பாக தனது பணியினைச் செய்துவருகிறது. சென்னையைத் தலைமையிடமாக கொண்டும், கோவை, மதுரை, திருச்சி, வேலூர் மற்றும் சென்னை ஆகிய 5 இடங்களில் மண்டல அலுவலகங்களையும், 36 மாவட்ட அலுவலகங்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 354 பணியாளர்கள் புதிதாகப் பணியமர்த்தப்பட்டனர். ஆனால், தி.மு.க. ஆட்சியில் 187 பணியாளர்கள் மட்டுமே புதிதாகப் பணியமர்த்தப்பட்டனர். மேலும், பணியில் இருக்கும்பொழுது உயிரிழந்த வாரியப் பணியாளர்களின் வாரிசுதாரர்களில், 13 வாரிசுதாரர்கள் கருணை அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் பணியமர்த்தப்பட்டனர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆலோசனைப்படி தொழில்முனைவோருக்கு இசைவாணை வழங்குதலில் வெளிப்படையான அணுகுமுறையோடு காலதாமதத்தைத் தவிர்க்கும்வகையிலும், தொழில்முனைவோருக்கு உதவும் வகையிலும், வாரியத்தின் பணிகள் கணினிமயமாக்கப்படும் என்று 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்யப்பட்டது. இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து இணைய வழி இசைவாணை வழங்கும் நடைமுறை 20–1–2015 முதல் ஒளிவு மறைவு இல்லாமல் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்

செயல்படுத்தப்படுகின்றது.

இந்த வழிமுறையை அறிமுகப்படுத்திய பிறகு, தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்குவதில் காலதாமதம் இல்லாமல் 36 மாவட்டங்களிலும் 27–7–2016 நிலவரப்படி, 24,219 தொழிற்சாலைகள் இயக்குவதற்கு உரிய இசைவாணையும், 2,683 தொழிற்சாலைகளுக்கு, தொழிற்சாலை தொடங்குவதற்குண்டான இசைவாணையும் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனைப்படி நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டம் தொழில்முனைவோரிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

பிற்பகல் 4–00

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆலோசனையின்படி, 2–8–2016 முதல் தொழிற்சாலைகளுக்கு இசைவாணைகளின் செல்லுபடியாகும் கால அளவினை உயர்த்திக் கொடுத்து, சிகப்பு வகை தொழிற்சாலைகளுக்கு ஒரு வருடமாக இருந்த லைசன்ஸ் 5 வருடங்களாகவும், ஆரஞ்சு வகை தொழிற்சாலைகளுக்கு 4 வருடங்களாக இருந்ததை 10 வருடங்களாகவும், பச்சை வகை தொழிற்சாலைகளுக்கு 4 வருடங்களாக இருந்ததை 14 வருடங்களாகவும் நீட்டித்து வழங்க ஆணையிடப்பட்டது. அதன்படி, தொழில்முனைவோர் இசைவாணைகளை அடிக்கடி புதுப்பிக்க வேண்டிய சிரமம் தவிர்க்கப்பட்ட காரணத்தினால், இம்முறையானது தொழில்முனைவோரிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனைப்படி, தொழிற்சாலைகள் கழிவு மேலாண்மை அங்கீகாரம் பெறுவதற்கான விண்ணப்பங்களையும் இணையதளம்மூலம் பரிசீலனை செய்து, அங்கீகாரம் வழங்கும் மென்பொருள் 1–3–2016 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதுவரை 5 மாத கால அளவில் 453 விண்ணப்பங்கள் இணையதளம்மூலம் பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு, அங்கீகாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “மக்களை

நோக்கி அம்மா அரசு" என்ற திட்டத்தின் அடிப்படையில் "அம்மா கால் சென்டர்" என்ற திட்டமானது, 19–1–2016 முதல் தொடங்கப்பட்டு, சுற்றுச்சூழல் குறித்து 836 புகாரானது வாரியத்திற்கு அனுப்பப்பட்டு, அதன்மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சுற்றுச்சூழல் மாசு அளவினைக் கண்காணிக்க மணலியில் 23–11–2002, மறைமலை நகரில் 11–9–2012 இரண்டு புதிய ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதோடு சேர்த்து, மொத்தம் 15 ஆய்வகங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ரூ.13.54 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்தான் ஒரே நேரத்தில் 5 ஆய்வகங்களுக்கு தேசிய சான்றிதழ் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் சாதனை படைத்துள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் காற்றின் தரம் மிகவும் கவனமாகக் கண்காணிக்கப்படுகின்றது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தற்போது தமிழ்நாட்டில் 28 இடங்களில் தேசிய காற்று மண்டலம் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் சுற்றுப்புறக் காற்றின் தன்மையை அளவீடு செய்து வருகின்றது. மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி சென்னை பெரு நகரில் கோயம்பேடு, இராயபுரம், பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் என 4 இடங்களிலும் மொத்தம் ரூ.4 கோடி செலவில் தொடர் சுற்றுப்புறக் காற்றின் தர கண்காணிப்பு நிலையம் அமைக்கப்பட்டு ஜூலை 2015 முதல் இயக்கத்தில் உள்ளன. நடமாடும் கண்காணிப்பு நிலையம் 1–3–2016 அன்று மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. மேலும், 2–6–2016 நாளிட்ட டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை செய்தியின்படி, சென்னை மாநகரத்தில் காற்று மாசின் அளவு மிகவும் குறைந்துள்ளது என்றும், மும்பை, டெல்லி, பெங்களூரு, கொல்கத்தா மாநகரங்களைக் காட்டிலும், சென்னையில் காற்று மாசின் நிலை குறைவாக உள்ளதென்றும் தெரிவித்துள்ளது, மாண்புமிகு அம்மா அவர்களின் செயல்திறனுக்கு அளிக்கப்பட்ட சான்றாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மாசின் அளவுகள் கண்டறியும் கருவிகள், பெரிய சிகப்பு வகை தொழிற்சாலைகள் மற்றும் 17 வகையான அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளில் வைக்கப்பட்டு, மாசின் அளவுகளைக் கண்காணிக்க சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் ஒரு தொடர் காற்று தர கண்காணிப்பு மையத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது வரை 351 தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டு காற்று தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு, மின் அஞ்சல்மூலம் உடனுக்குடன் செய்தி அனுப்பப்பட்டு நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “நீரின்றி அமையாது உலகு” என்றார் வள்ளுவர். உலகில் குடிநீரின் அளவு மிகவும் குறைந்து வருகிறது என்றும் உலகத்தில் உள்ள நீர் ஆதாரங்களில், இந்தியாவில் 4 சதவீதம்தான் உண்டு என்றும் ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். இதனால் மாண்புமிகு அம்மா அவர்களின் 2002 ஆம் ஆண்டு மழைநீர் சேகரிப்பு என்ற உலகம் போற்றும் உத்தமத் திட்டத்தினைக் கொண்டுவந்து நீர் ஆதாரத்தில் வெகுவாக ஏற்றம் கண்டார்; (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு உலக நாடுகள் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டுகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டில் மொத்தம் 55 இடங்களில் நீர்நிலைகளில் நீரின் தன்மை கண்காணிக்கப்பட்டு வருகின்றது. 2014 ஆம் ஆண்டு முதல் நொய்யல், காளிங்கராயன் வாய்க்கால், தாமிரபரணி ஆகிய நீர் ஆதாரங்களில் 9 இடங்களில் தொடர் நீர் தர கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு, நீரின் தரம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவது அம்மா ஆட்சியில் ஒரு பெரிய சாதனையாகும். மேலும், காவேரி ஆற்றில் நீரின் தரத்தைக் கண்காணிக்க தொடர் நீர் தர கண்காணிப்புக் கருவிகள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பிற்பகல் 4–05

இணையதளம்மூலம் நீர் தர கண்காணிப்பு மையம். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், சென்னையில் உள்ள வாரியத் தலைமை அலுவலகத்தில் ஜூலை

2015 முதல் ஒரு நீர் தர கண்காணிப்பு மையத்தினை அமைத்து, திருப்பூர், வேலூர், வாணியம்பாடி, ஈரோடு ஆகிய பகுதிகளில் இயங்கும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் இயங்கும் சுத்திகரிப்பு நிலையங்களை இணையவழி தொடர்புமூலம் 24 மணி நேரமும் தொடர்ந்து இம்மையத்தில் கண்காணிக்கப்பட்டு வருவது அம்மா ஆட்சியில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் நகரம், இந்தியத் திருநாட்டிலேயே முன்னோடி நகரமாகத் திகழ்ந்தது. அன்னியச் செலாவணியை அதிக அளவில் அள்ளிக் கொடுக்கின்றது. இருந்தபோதிலும், உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலையை எட்டக்கூடிய சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்காததால், கடந்த தி.மு.க. ஆட்சியின்போது திருப்பூரில் இயங்கிவந்த 754 சாயத் தொழிற்சாலைகள் மற்றும் 20 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஒரே நாளில் 2011–ல் மூடப்பட்டன. இதனால் பீகார், ஒடிசா, சிக்கிம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இடங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்தும், ஏற்றுமதி பாதிக்கப்பட்டும், அன்னியச் செலாவணி ஈட்டுவது வெகுவாகக் குறைந்தது. தி.மு.க. ஆட்சியில், திருப்பூர் நகரத் தொழில் இருளில் மூழ்கியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 2011–ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும்வகையில் ஜூலை 2011–ல் சாயப்பட்டறை உரிமையாளர்களை அழைத்துப் பேசி, கழிவுநீர் சுத்திகரிப்பில் பூஜ்ஜிய நிலையினை எட்டக்கூடிய 0% discharge நிலையம் அமைப்பதற்கு 20 பொது சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் தலா ரூ.10 கோடி வீதம், ரூ.200 கோடி வட்டியில்லா கடன் வழங்க ஆணையிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுக்காததால், 279 சாய மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதி வருமானமானது தி.மு.க.

ஆட்சியில் 2006–2011 ஆம் ஆண்டுகளில் மிகவும் குறைந்து காணப்பட்டது. 1996–2001 தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்றுமதி ரூ.13.419 கோடி. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் 2001–2006–ல் ரூ.30.12 கோடியாக அதிகரித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில் 2006–2011 ஆம் ஆண்டுகளிலே ரூ.56 ஆயிரத்து 200 கோடியாக இருந்த ஏற்றுமதி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய ஆட்சியில் 2011–2016 ஆம் ஆண்டுகளில் ரூ.87,550 கோடியாக உயர்ந்தது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நாமக்கல், ஈரோடு, சேலம் மற்றும் கரூர் மாவட்டங்களில் அமைந்துள்ள குறு மற்றும் சிறு சாயப்பட்டறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்வகையில் மேற்படி குறு மற்றும் சிறு சாயப்பட்டறைகளுக்கு பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புடன்கூடிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தொழிற்பேட்டை ஏற்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களால் 2014–2015 ஆம் நிதியாண்டில் ரூ.700 கோடி அளவில் திட்டம் இம்மாமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில், ஈரோடு, சேலம், பள்ளியபாளையம், குமாரபாளையம், பவானி, காடையாம்பட்டி ஆகிய ஊர்களுக்கு திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் மானியம் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 0% டிஸ்சார்ஜ் நிலைமையை மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பு கவனத்துடன் செயல்படுத்துவதால் இன்றைக்கு அனைத்து தொழிற்சாலைகளிலும் உபரி நீரை வைத்து இலட்சக்கணக்கான மரங்கள் வளர்க்கின்றனர். இந்தப் பெருமை மாண்புமிகு அம்மாவையே சேரும் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில், தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கென 9 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. மொத்தமுள்ள 13 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், 8 நிலையங்கள் வேலூர் மாவட்டத்திலும், தலா ஒரு நிலையம்

ஈரோடு, திருச்சி, காஞ்சிபுரம், திண்டுக்கல், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. 11 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவுநீர் வெளியேற்றத்தில் பூஜ்ஜிய நிலை அமைப்பினை நிறுவி இயங்கி வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், சிறப்புத் திட்ட செயலாக்கமாக தமிழ்நாட்டில் 3,545 தொழிற்சாலைகள் திடக் கழிவுப் பொருட்களை ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் என கண்டறியப்பட்டு, அவற்றிற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், அக்கழிவுகளை கையாளுவதற்கான அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலைகளிலிருந்து, வருடத்திற்கு 6.92 இலட்சம் டன் தொழிற்சாலை திடக் கழிவுகள் உருவாகின்றன. அவற்றில் 2.97 இலட்சம் டன் கழிவுகள் நிலநிரப்பு செய்யப்படுபவை, 3.43 இலட்சம் டன் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுபவை மற்றும் 0.52 இலட்சம் டன் கழிவுகள் எரிப்பான்மூலம் அழிக்கப்படுபவை ஆகும்.

பிற்பகல் 4—10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2016 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம், 2016 ஆம் ஆண்டின் மின்னணு கழிவு மேலாண்மை விதிகளை அறிவிக்கை செய்துள்ளது. இதன்படி காலாவதியான தொலைபேசி, கைப்பேசி, கணினி, மடிக்கணினி, தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி, துணி சலவை இயந்திரம், பாதரசம் கொண்ட விளக்குகள் போன்ற மின் மற்றும் மின்னணு சாதனங்கள் சேகரிப்பட்டு, மறுசுழற்சிக்காக அனுப்பப்பட வேண்டும். இதுவரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் மின்னணுக் கழிவுகள் முறையாகச் சேகரிக்கப்பட்டு, மறு சுழற்சி செய்வதற்கான அங்கீகாரம் 35 தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டு, மின்னணுக் கழிவுகள் முறையாக மறுசுழற்சி செய்யப்படுவது கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு வாரியம் சிறந்து செயல்படுகிறது என்பது இதன்மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு

அம்மா அவர்களின் ஆட்சியில் பிளாஸ்டிக் இல்லாத தமிழகத்தை ஏற்படுத்த 2016 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் சுற்றுசூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம் 2016 ஆம் ஆண்டின் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளை அறிவிக்கை செய்துள்ளது. அந்த விதிகளின்படி, புதிய மற்றும் மறு சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக்குகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் பைகள் 50 மைக்ரான் தடிமனுக்குக்கீழ் இருக்கக்கூடாது. இதுவரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 477 பிளாஸ்டிக் பைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் 140 பிளாஸ்டிக் பொருட்கள் மறுசுழற்சி செய்யும் தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, இவற்றுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சான்றிதழ் வழங்கியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் ஒரு சிறந்த திட்டமாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் 1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம் துவக்கப்பட்டன, சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின் ஒரு முக்கிய குறிக்கோள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்குப் பயிற்சி அளித்தல் ஆகும். இந்தப் பயிற்சி நிலையத்தின் மூலம் 2015–2016 ஆம் ஆண்டில் 27 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 1,468 நபர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதன்மூலம் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் பொறியாளர்கள் மற்றும் பிற பணியாளர்கள், தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான அலுவலர்கள் ஆகியோரின் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், அரசு ஊழியர்களுக்கு அளவில்லாத சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் கடந்த 34 ஆண்டுகளாக இயங்கி வரும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீட்டுக் கடன் வசதி வழங்கப்படவில்லை என்பது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. கோரிக்கையை கனிவுடன் ஏற்று, வாரியப் பணியாளர்களுக்கு 2013–2014 ஆம் நிதியாண்டிலிருந்து வீட்டுக்

கடன் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்தார்கள். அதன்படி வாரியப் பணியாளர்களுக்கு தற்போது வீட்டுக் கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், 'இதிலும் சாதனை, எதிலும் சாதனை' என்பதற்கு ஏற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2011–2012 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்புற பணியாற்றும் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சிறந்து விளங்கும் தொழிற்சாலைகளுக்கு பசுமை விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டு முதல் மாவட்ட ஆட்சியர்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் பசுமை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை தொழிற்சாலைகளுக்கு 18 விருதுகளும், மாவட்ட ஆட்சியர்களுக்கு 11 விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. இது தொழிற்சாலைகளுக்கும், ஆட்சியாளர்களுக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சீரிய பணியினை ஆற்ற வேண்டுமென்பதற்கு ஓர் ஊக்கமாக அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

2012 ஆம் ஆண்டு விருது பெற்ற மாவட்ட ஆட்சியர்கள், திருச்சி, தேனி, கரூர், கிருஷ்ணகிரி. 2013 ஆம் ஆண்டு திருச்சி, நாமக்கல், வேலூர், பெரம்பலூர். 2014 ஆம் ஆண்டு தருமபுரி, தேனி, கோயம்புத்தூர். அதேபோல, தொழிற்சாலைகளுக்கான பசுமை விருதுகள் வழங்கப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டு டால்மியா சிமெண்ட்ஸ், அல்ட்ராடெக் சிமெண்ட்ஸ், மெட்ராஸ் சிமெண்ட்ஸ், தமிழ்நாடு காகித ஆலை, எல் அண்ட் டி, டிரஸ்சர் வால்வ், ஃபோர்டு, ஹுண்டாய், ஜி.எம்.ஆர் பவர், சுந்தரம் ஃபாஸ்ட்னர்ஸ், ஃபென்னர் இண்டியா, டாஃபே, 2013 ஆம் ஆண்டு ஐ.டி.சி. லிமிடெட், பிரேக்ஸ் இண்டியா, சென்னை பெட்ரோலியம், 2014 ஆம் ஆண்டு வாப்கோ, ஐ.டி.சி. லிமிடெட், சென்னை பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்களுக்கு பசுமை விருதுகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா ஆட்சியில் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்படும்

அரசு சாரா நிறுவனங்கள், வல்லுநர்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோரை அடையாளம் கண்டு அவர்களின் சீரிய பங்களிப்பினைச் சிறப்பிக்கும் வகையில் சுற்றுச்சூழல் விருதுகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் ரூ.1.13 இலட்சம் மதிப்பில் 10 சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. பொதுநலன் சார்ந்து பணிபுரிவோரைப் பாராட்டி மகிழ்வது தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மாவின் குணமாகும்.

அதேபோல், விருது பெற்றவர்கள், திரு. கி.பெர்னாடிக், இராமநாதபுரம், ஜெயகோபால் கரோடியா அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, விருகம்பாக்கம், சென்னை, டி.ஏ.வி. பொதுப் பள்ளி, வேளச்சேரி, சென்னை, 'அரும்புகள்' அறக்கட்டளை, திருநெல்வேலி, பெருந்துறை பசுமை இயக்கம், பெருந்துறை, சக்தி மசாலா (பி) லிமிடெட், ஈரோடு, திரு. எஸ். வெங்கடபதி, மதுரை, திரு. ஜெ.சோமு, வேலூர், திரு. பா. முத்துமுருகன், கோவில்பட்டி, முனைவர் கே. ரேவதி, சென்னை.

பிற்பகல் 4—15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, பிளாஸ்டிக் பயன்பாட்டினைக் குறைப்பதில் முக்கிய பங்காற்றிடும் மூன்று சுய உதவிக் குழுக்கள், மூன்று சிறந்த கிராமங்கள் மற்றும் மூன்று சிறந்த சுத்தமான பசுமைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் முறையே ரூ.5 இலட்சம், ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.2 இலட்சம் வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.30 இலட்சம் செலவில் விருதுகள் வழங்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

2013—2014 ஆம் ஆண்டிற்கு சிறந்த மூன்று பிளாஸ்டிக் இல்லா கிராமங்கள்—பாப்பரம்பாக்கம் ஊராட்சி, திருவள்ளூர் மாவட்டம், டி. கருங்குளம் ஊராட்சி, இராமநாதபுரம் மாவட்டம், குலசேகரபுரம் ஊராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் ஆகும்.

சிறந்த மூன்று பசுமையான, தூய்மையான பிளாஸ்டிக் இல்லா பள்ளிகள்—ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, கஞ்சனூர், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,

சிவாயம் (மேற்கு), அய்யர்மலை, கரூர் மாவட்டம், அரசு மேல்நிலைப் பள்ளி, அனுப்பர்பாளையம், திருப்பூர் மாவட்டம் ஆகும்.

சிறந்த மூன்று சுய உதவிக் குழுக்கள்–சேரி ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு, வேலூர் மாவட்டம், பிள்ளையார்பட்டி ஊராட்சி அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பு, தஞ்சாவூர் மாவட்டம், செட்டிப்பாளையம் ஊராட்சி அளவிலான மகளிர் கூட்டமைப்பு, அங்கேரிப்பாளையம், திருப்பூர் மாவட்டம் ஆகும்.

2014–2015 ஆம் ஆண்டு சிறந்த மூன்று பிளாஸ்டிக் இல்லா கிராமங்கள்–சுள்ளிப்பாளையம் ஊராட்சி, ஈரோடு மாவட்டம், வாளமிரான்கோட்டை ஊராட்சி, தஞ்சாவூர் மாவட்டம், கோவிந்தநகரம் ஊராட்சி, தேனி மாவட்டம் ஆகும்.

சிறந்த மூன்று பசுமையான, தூய்மையான பிளாஸ்டிக் இல்லா பள்ளிகள்–அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம், அரசு மேல்நிலைப் பள்ளி, அறச்சலூர், ஈரோடு மாவட்டம், அரசு உயர்நிலைப் பள்ளி, பாலேகுளி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகும்.

சிறந்த மூன்று சுய உதவிக் குழுக்கள், கணிசப்பாக்கம் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு, கடலூர் மாவட்டம், கூரைக்குண்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, விருதுநகர் மாவட்டம், அயப்பாக்கம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, திருவள்ளூர் மாவட்டம் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், சுற்றுச்சூழல் மாசற்ற மாநிலத்தை உருவாக்குவது இறைவனுக்குச் செய்யும் மிகப் பெரிய தொண்டு என்ற கொள்கை கொண்டவர்; அனைத்து மதத்தினராலும் மதித்து பெருமைப்படுத்தப்படுபவர். அதனடிப்படையில், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்போடு பொது மக்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இப்பணிகளுக்காக புண்ணியஸ்தலம் ஒன்றுக்கு ரூ.5 இலட்சம் வீதம் 11 தலங்களுக்கு மொத்தம் ரூ.55 இலட்சம் இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. பிளாஸ்டிக் பயன்பாட்டினைத்

தவிர்ப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் நன்மைகள் குறித்தும் பொது மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த மாநிலம் முழுவதும் 32 மாவட்டங்களில் வாகன பிரச்சாரம் ரூ.64 இலட்சம் செலவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சாரா அமைப்புகள்மூலம் மேற்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் பள்ளி மாணவர்களிடையே மாசு, பருவநிலை மாற்றம், பூமி வெப்பமயமாதல் ஆகியவற்றால் ஒவ்வொரு நாளிலும் ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்த தகவல்களைப் பரப்புவதற்கு ஏதுவாக 57 கல்வி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மையங்கள் மாவட்டத்தின் முக்கிய இடத்தில் பொது மக்கள் பார்வைக்காக அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 2002 ஆம் ஆண்டு தேசிய பசுமைப் படை உருவாக்கப்பட்டது. தற்போது தமிழகத்தில் மாவட்டம் ஒன்றிற்கு 250 பள்ளிகள் வீதம் 32 மாவட்டங்களில் 8,000 பள்ளிகளில் தேசிய பசுமைப் படை செயல்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் தேசிய பசுமைப் படை சூழல் மன்றத்தின் செயல்பாட்டுக்கு பள்ளி ஒன்றிற்கு ரூ.2,500/- வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சூழல் விழிப்புணர்வு இயக்கத்தில் 3,20,000 மாணவ, மாணவியர்கள் தங்களை இணைத்துக்கொண்டுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அசாதாரண காலநிலையால் ஏற்படக்கூடிய அவசரகால சூழ்நிலையைச் சமாளிக்கும் உத்திகளை வலுப்படுத்தவும், இயற்கை வளம் மற்றும் சிறந்த சுற்றுச்சூழலை நமது எதிர்காலச் சந்ததியினர் உகந்த முறையில் பெறுவதற்கும், தமிழக கடற்கரையோர மக்களின் முன்னேற்றத்தினைக் கவனத்தில்கொண்டும் ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் அடிப்படையில், தமிழ்நாட்டில் ரூ.697.68 கோடி மதிப்பில் பகுதி–2 திட்டத்தின்கீழ், ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மை திட்டத்தினைச் செயல்படுத்த, விரிவான திட்ட அறிக்கை 2015–2016 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு, மைய அரசின்

ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி சிறந்த ஆட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக பிளாஸ்டிக் கழிவுகள் இல்லாத மாநிலமாகத் தமிழகத்தினை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகளை மறுசீரமைக்க முடிவெடுக்கப்பட்டது. இதுவரையில், 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ரூ.218.67 கோடி செலவில் 1,596 கி.மீ நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி சாலைகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

பிற்பகல் 4—20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூழலியல் நமது மானிட சமுதாயத்திற்கு இயற்கை அளித்த வரம் என்பதில் முழு நம்பிக்கை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதனைப் பராமரிக்கவும், மேம்படுத்தவும், பாதிப்புகளைச் சீர்படுத்தவும் சீரிய பல திட்டங்களை வகுத்துள்ளார்கள். இயற்கை அன்னையின் மாண்பினைப் பாதுகாப்பதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு வீராங்கனையாக நிரூபித்து வருகின்றார்கள்.

இதனடிப்படையில், சென்னை, சேத்துப்பட்டில் விளையாட்டு மீன்பிடி மற்றும் சூழல் பூங்கா உருவாக்க ரூ.42 கோடிக்கு திட்டம் வகுக்கப்பட்டு, அதில் ரூ.34.50 கோடி செலவிடப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம், அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஆகிய ஏரிகளை மறுசீரமைக்க மற்றும் மீளச்செய்ய மொத்தம் ரூ.59.18 கோடிக்கு திட்டம் வகுக்கப்பட்டு, ரூ.33 கோடி முதற்கட்டமாக விடுவிக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட பணிகளால் சுமார் 60 ஏக்கர் பரப்பளவு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, ஏரியின் பரப்பளவு 1,390 ஏக்கரிலிருந்து 1,450 ஏக்கராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த மூன்று ஏரிகளில் மொத்தக் கொள்ளளவு 37 மில்லியன் கன அடி தண்ணீர் கூடியுள்ளது.

ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அய்யர்குளம், குயவன்குட்டை மற்றும் கருமாண்டிசெல்லிபாளையத்தில் உள்ள சித்தம்பட்டி குளங்களைச் சூழல் மீட்பளிப்புச் செய்ய ரூ.4.50 கோடி விடுவிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஈரோடு மாவட்டம், பேரோடு பஞ்சாயத்திற்குட்பட்ட குட்டைத்தயிர்பாளையம் குளம் மற்றும் புஞ்சைக்காளமங்கலம் பஞ்சாயத்திற்குட்பட்ட கம்பத்தீஸ்வரன் குளம் போன்றவற்றில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் சூழல் மீட்பளிப்புச் செய்யும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியில் பூங்கா, கிண்டி தேசிய பூங்கா, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம், கரிக்கிள்ளி பறவைகள் சரணாலயம், புலிகாட் பறவைகள் சரணாலயம் மற்றும் அமிர்தி குறு உயிரியல் பூங்கா ஆகியவற்றில் சூழல் மீட்பளிப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்காக ரூ.10.01 கோடி நிதி விடுவிக்கப்பட்டு, இப்பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன.

சோலைக்காடுகளில் உள்ள தாவரங்களை மறு உற்பத்தி செய்யும் திட்டத்திற்காக, ரூ.3.92 கோடியும் வனத் துறைக்கு விடுவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வன உயிரியல் மற்றும் பறவைகள் சரணாலயங்களிலுள்ள 19 நீர்நிலைகளை சூழல் மீட்பளிப்புச் செய்ய ரூ.3.59 கோடி நிதி வனத் துறைக்கு விடுவிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், சர்க்கார்பெரியபாளையம் ஏரியினை சூழல் மீட்பளிப்புச் செய்ய ரூ.6.41 கோடி பொதுப் பணித் துறைக்கு விடுவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய செயல் திறனால் இன்று நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று திட்டங்கள் கடந்த தி.மு.க. ஆட்சியில் ஒன்றுகூட செயல்படுத்தப்படவில்லை.

பசுமைப் போர்வைத் திட்டம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறந்த நாளை ஒவ்வொருவரும் எப்படி கொண்டாடுகிறார்கள் என்று இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உண்டியல் வைக்கிறார்கள்; பையனை பார்க்கச் சொல்கிறார்கள்; பிள்ளையைப் பார்க்கச் சொல்கிறார்கள்.

ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எப்படி பிறந்த நாள் கொண்டாடி இருக்கின்றார்கள் என்று சொன்னால், ஒவ்வொரு வருடமும் 64 இலட்சம், 65 இலட்சம், 66 இலட்சம், 67 இலட்சம் மரக்கன்றுகள் என்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒவ்வொரு பிறந்த நாளின்போதும் நடுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், வனத் துறை மற்றும் பொதுமக்களின் உதவியுடன், மொத்தம் 2 கோடியே 62 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு வனத் துறைக்கு, இதுவரை மொத்தம் ரூ.83.662 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு, தமிழகத்தின் பசுமைப் பரப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் மரம் வளர்க்கும் மகத்தான திட்டத்தால் இன்னும் பத்து ஆண்டுகளில் இந்த மரங்கள் எல்லாம் ஓங்கி வளர்ந்து, ஆசிய கண்டத்திலேயே தமிழகத்தில்தான் அதிக மரங்கள் உள்ளன என்ற பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே வந்துசேரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், கிண்டியில் உள்ள வாரியத் தலைமை அலுவலகத்தின் சொந்தக் கட்டடம் 1994 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. தற்போது 36 மாவட்ட அலுவலகங்களில் 17 மாவட்ட அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவற்றில், 9 கட்டடங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும். இதில் குறிப்பாக, 2011–2016 ஆம் ஆண்டுகளில் மட்டும் 2–5–2013 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதினே 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட 4 கட்டடங்கள் உட்பட துவங்கப்பட்ட 17 சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணிகளில் 8 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன. 6 கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. 3 கட்டடங்களுக்கு நிலம் வாங்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதுதவிர, நடப்பு நிதியாண்டில் மேலும் 2 மாவட்ட அலுவலங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தையில் உதித்த ‘அம்மா உணவகம்’ திட்டத்தைச் செயல்படுத்தியபோது, அதை அகில இந்தியாவே பார்த்து வியந்தது. தற்போது சீன நாட்டின் சாங்கிங் நகரின் மேயர் அவர்கள் இத்திட்டத்தை வியந்து பாராட்டி, அவருடைய நகரிலும் செயல்படுத்த இருப்பதாக தெரிவித்துள்ளார் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *4–25*

இதுபோன்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாசுக் கட்டுப்பாட்டிற்காகவும், சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காகவும் பல்வேறு முன்னோடித் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறார்கள் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது உரையில் ஏற்கெனவே தெரிவித்தபடி, காற்றின் தன்மையைக் கண்டறிவதற்கு நடமாடும் ஆய்வகத் திட்டம் இந்திய அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் காரணமாக, தமிழ்நாட்டில், குறிப்பாக சென்னை மாநகரத்தில் காற்றின் தரம் மிகவும் மேம்படுத்தப்பட்டுள்ளது என Times of India நாளிதழ் *2–6–2016* ஆம் நாளிட்ட செய்தியிலே குறிப்பிட்டுள்ளது தமிழர்களாகிய நாம் அனைவரும் மிகவும் மகிழத்தக்கதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி உருவாக்கப்பட்ட தொலைநோக்குத் திட்டம், *2023* ஆவணத்தின் கருத்துரு, *8* மனித நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த சூழலில் அடிச்சுவடுகளின் பாதுகாப்பினை வலியுறுத்துவதாக உள்ளது. அக்கருத்துருவானது, காடுகளின் பரப்பை அதிகரித்தல்; சதுப்பு நிலப் பாதுகாப்பு; நிலத்தடிநீரைப் பாதுகாத்தல்; ஆறுகள் மற்றும் ஏனைய நீர்நிலைகள்; கடற்கரை மண்டலங்களின் பாதுகாப்பு; எளிதில் அழியக்கூடிய மற்றும்

இயற்கை வளங்களின் பாதுகாப்பு; நாட்டின் பலவகையான தாவர மற்றும் விலங்கினங்கள் பாதுகாப்பு; மண் மற்றும் இதர இயற்கை அமைப்புகளை மனித நடவடிக்கைகளால் ஏற்படும் அழிவிலிருந்து பாதுகாத்தல்; திடக் கழிவுகளை சீரிய முறையில் மறுசுழற்சி செய்து சுற்றுச்சூழலுக்கு மிகக் குறைந்த பாதிப்பு மட்டுமே ஏற்படும் என்பதை உறுதி செய்தல்; காற்று மண்டலத்தில் மாசினைக் குறைத்தல் மற்றும் மாநிலத்தின் சுற்றுச்சூழல் சமன் நிலையை பராமரித்தல் போன்றவற்றினை வலியுறுத்துகிறது.

நாம் பேசுகின்ற மொழியை தாய்மொழி என்று சொல்கிறோம்; நாம் வாழ்ந்துகொண்டு இருக்கிற நாட்டை தாய்த் திருநாடு என்று சொல்கிறோம்; வானத்தை வான்மகள் என்று சொல்கிறோம்; பூமியை பூமாதேவி என்று சொல்கின்றோம்; நதியைப் பார்த்து, நடந்தாய் வாழி காவேரி என்று சொல்கிறோம். இப்படி, பரந்து கிடக்கிற இயற்கை வளங்களை எல்லாம் பெண்ணாகப் பாவித்து, பெண்களைத் தெய்வமாகப் போற்றி வணங்கக்கூடிய நாடு நம் பாரத தாய்த் திருநாடு. (மேசையைத் தட்டும் ஒலி)

“நீரின்றி அமையாது உலகு” என்றார் வள்ளுவர். ஆனால், “அம்மா இன்றி இயங்காது இந்த தாய்த் திருநாடு” என்ற நிலை இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மற்ற மாநிலங்களைவிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளும் தமிழ்நாடுதான் தொழில் தொடங்க ஏற்ற பூமி என்று இந்திய திருநாட்டில் உள்ள அனைத்து தொழிலதிபர்களும் தமிழகத்தை நோக்கி வந்து கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நாட்டில்தான் உயிர்ப் பாதுகாப்பு, உடமைப் பாதுகாப்பு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களெல்லாம் போய்விட்டார்கள். இல்லையென்றால், மிகவும் நன்றாக இருந்திருக்கும். சுற்றுச்சூழலுக்கு அம்மா அவர்கள் நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பது முழுவதும் இதில் இருக்கிறது.

தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு இசைவாணை வழங்கியது, தி.மு.க. ஆட்சியில் 9,532, அம்மா அவர்களுடைய ஆட்சியில் 10,241;

(மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, தொழிற்சாலைகள் தொடங்குவதற்காக வழங்கப்பட்ட இசைவாணைகள் தி.மு.க. ஆட்சியில் 12,472, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 22,087; (மேசையைத் தட்டும் ஒலி) கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 19, தி.மு.க. ஆட்சியில் வெறும் 5; அதேபோல, ஆய்வகங்களில் வாங்கப்பட்ட கருவிகளின் மதிப்பு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ரூ.13.54 கோடி, தி.மு.க. ஆட்சியில் வெறும் ரூ.4 கோடி; புதிதாக நியமனம் செய்யப்பட்ட மொத்த பணியாளர்கள் அம்மா அவர்களுடைய ஆட்சியில் 354, தி.மு.க. ஆட்சியில் 187; சாயமிடும் தொழிற்சாலைகள், பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு தமிழக அரசு வழங்கிய வட்டியில்லா கடன் தொகை ரூ.2,003.29 கோடி அம்மா அவர்களுடைய ஆட்சியில், தி.மு.க. ஆட்சியில் ஒன்றுமே செய்யவில்லை, zero; பூஜ்ய திரவக்கழிவு வெளியீடு நிலை அடைந்த தனி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களைக் கொண்ட சாயமிடும் தொழிற்சாலைகள் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 85, தி.மு.க. ஆட்சியில் 44; தோல் தொழிற்சாலைக்கான பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டது அம்மா அவர்களுடைய ஆட்சியில் 9, தி.மு.க. ஆட்சியில் 4; மேற்கண்ட பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மாநில அரசு வழங்கிய மானியத் தொகை ரூ.15.60 கோடி, தி.மு.க. ஆட்சியில் ரூ.11 கோடி; பூஜ்ய திரவக் கழிவு வெளியீடு நிலையை அடைந்த தோல் தொழிற்சாலைகளுக்கு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அம்மா அவர்களுடைய ஆட்சியில் 4, தி.மு.க. ஆட்சியில் 2; வாரியத்தின் காற்று தொடர் கண்காணிப்பு நிலையத்துடன் இணைக்கப்பட்ட தொழிற்சாலைகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 299, தி.மு.க. ஆட்சியில் 52; வாரியத்தின் தொடர் கண்காணிப்பு நிலையத்துடன் இணைக்கப்பட்ட தொழிற்சாலைகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 82, தி.மு.க. ஆட்சியில் ஒன்றுமே இல்லை; இயக்கத்திலுள்ள பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 7, தி.மு.க. ஆட்சியில் வெறும் 4; புதிதாக அமைக்கப்பட்ட கட்டுமானப் பணி நடைபெற்றுவரும் பொது மருத்துவக் கழிவுகள் சுத்திகரிப்பு நிலையங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 3, தி.மு.க. ஆட்சியில்

எதுவுமே இல்லை. மரம் வளர்ப்புத் திட்டத்திற்காக வனத் துறைக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.8.3662 கோடி, தி.மு.க. ஆட்சியில் எதுவும் இல்லை; ஒரு மரம்கூட நடவில்லை.

பிற்பகல் 4—30

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் பெரிய முதலீட்டுடன் தொடங்கப்பட்டு, இயக்கத்தில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறித்த விவரம். அனல்மின் நிலையங்கள்—மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஐந்தாண்டுக் கால ஆட்சியில் 55, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 46; சிமெண்ட் தொழிற்சாலைகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 8, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 11; அதிலே மட்டும் மூன்று அதிகம். வேறு எதுவும் அதிகமாக இல்லை. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 114, தி.மு.க. ஆட்சியில் 65; மருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 15, தி.மு.க ஆட்சியில் 7; வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் தயாரிப்பு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 11, தி.மு.க. ஆட்சியில் 9.

தமிழ்நாடு மக்களின் இதயங்களில் என்றென்றும் குடிகொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து நலத் திட்டங்களையும் வெற்றிகரமாகச் செயல்படுத்தி நிறைவேற்றி உள்ளதுபோல, இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அத்துணை நலத் திட்டங்களையும் நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளார். தமிழக மக்களின் நல்வாழ்வே என் உயிர்மூச்சு என பொது மக்களுக்காக 24 மணி நேரமும் நல்ல பல திட்டங்களைச் சிந்தித்துச் செயல்படுத்திவரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான நலத் திட்டங்களில் சொன்னதையும் செய்வார், சொல்லாததையும் செய்வார், இன்னும் பல நலத் திட்டங்களையும் செய்வார். இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க, மக்கள் நல்வாழ்வினை மேம்படுத்த, சுற்றுச்சூழல் துறைமூலம் செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களினால் தமிழ்நாட்டின்

சுற்றுச்சூழல் தரம் மிகவும் மேம்பட்டுள்ளது என்பதை இந்தியத் திருநாடே போற்றிப் புகழ்கின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுற்றுச்சூழல் மேம்பாட்டிலும், மாசுக் கட்டுப்பாட்டிலும் தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்கின்றது. நீடித்து நிலைத்த வளர்ச்சியை அடைய ஊக்க சக்திகளாக அமைந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் கனவுத் திட்டமான ‘தொலைநோக்குத் திட்டம் 2023’–ன் இலக்குகளை அடையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத திருநாட்டில் பருவமழை தவறாது பொழிய வேண்டும், பூமி வெப்பமாவது தடுக்கப்பட வேண்டும், நதிகள் இணைக்கப்பட வேண்டும், வேளாண்மை செழித்திட வேண்டும், நீர்நிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும், மாசற்ற காற்றை உயிரினங்கள் சுவாசிக்க வேண்டும், நாட்டின் தொழில்வளம் பெருக வேண்டும், நாட்டு மக்கள் நலமுடனும் வளமுடனும் வாழ வேண்டும் என்ற முறையில் மிக சிறப்பான ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், ஆரோக்கியமான வாழ்க்கையையும் எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டும் என்று வேண்டி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு, பணிந்து வணங்கி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, 2016–2017 ஆம் ஆண்டுக்கான சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) தொடர்பான அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் தெரிவிக்கிறேன்.

1) தமிழ்நாட்டில் உள்ள 69 கல்வி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் அமைக்கப்படாத மீதமுள்ள 12 கல்வி மாவட்டங்களில் மையம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, பருவகால மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதல் ஆகியவை மனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து பொது மக்களும்,

மாணவர்களும் அறிந்துகொள்ள ஏதுவாக, தமிழ்நாட்டில் உள்ள 69 கல்வி மாவட்டங்களில் 57 கல்வி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மையங்களில் சுற்றுச்சூழல் குறித்த புத்தகங்கள் அடங்கிய நூலகம், சுற்றுச்சூழல் குறித்த தகவல்களை விளக்கும்வகையில் அறிவிப்புப் பலகைகள், அட்டவணை ஆகியவை தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம் பெற்றுள்ளன. சுற்றுச்சூழல் குறித்த தகவல்களை அறிந்துகொள்ள ஏதுவாக ஒலிபெருக்கி சாதனங்கள், கணினி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 12 கல்வி மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி நடப்பு நிதியாண்டில் மையம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டு இலட்சம் வீதம் மொத்தம் ரூ.24.00 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2) 32 மாவட்டங்களில் உள்ள தேசிய பசுமைப்படை மன்ற மாணாக்கர்களுக்கு சூழல் போட்டிகள் நடத்தி, அவற்றில் வெற்றி பெறுபவர்களை மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவில் சூழல் சுற்றுலா அழைத்துச் செல்லுதல்

தற்போது தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு 250 பள்ளிகள் வீதம், 8,000 தேசிய பசுமைப்படை சூழல் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பள்ளியிலும் ஏறத்தாழ 40 முதல் 50 மாணாக்கர்கள் இம்மன்ற உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். இம்மன்ற உறுப்பினர்கள், பேரணிகள், மனிதச் சங்கிலி, கருத்தரங்குகள், கருத்துப்பட்டறைகள், மரம் வளர்த்தல், பள்ளி வளாகத்தினைத் தூய்மையாக்குதல், மழைநீர் சேகரித்தல், திடக்கழிவு மேலாண்மை போன்ற பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, அனைத்து 32 வருவாய் மாவட்டங்களிலும், தேசிய பசுமைப்படை மன்ற மாணாக்கர்களுக்கு வினாடி வினா, பேச்சுப் போட்டி மற்றும் வரைதல் ஆகிய மூன்று இனங்களில், எட்டாம் வகுப்பிற்குக்கீழ் மற்றும் எட்டாம் வகுப்பிற்குமேல் என இரண்டு பிரிவுகளாக சூழல் போட்டிகள் நடத்தப்படும். ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும், சூழல் போட்டிகளில் வெற்றி பெற்ற

18 மாணாக்கர்கள், நடப்பு நிதியாண்டில் மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் 32 மாவட்டங்களில் மொத்தம் ரூ.32.00 இலட்சம் செலவில் அருகில் உள்ள சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு, சுற்றுச்சூழல் குறித்த விவரங்களை களத்தில் நேரடியாக மதிப்பீடு செய்ய ஏதுவாக சூழல் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள்.

பிற்பகல் 4—35

3) இணையவழி கற்றல்—இணையவழி சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

பள்ளிகளில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் 57 சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இணையவழி கற்றல்—இணையவழி சுற்றுச்சூழல் விழிப்புணர்வு என்ற திட்டத்தின்கீழ், நடப்பு நிதியாண்டில் ரூ.14.44 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் துறையின் வலைதளத்துடன் இணைக்கப்படும். அனைத்து சுற்றுச்சூழல் தகவல் மையங்களிலும் வலைதள வசதிகள் அமையப் பெற்றுள்ளதால், அம்மையங்கள் சுற்றுச்சூழல் துறை வலைதளம் மூலமாக செயல்பட இயலும். உலகச் சுற்றுச்சூழல் தினம், உலக வன தினம் போன்ற சுற்றுச்சூழல் தொடர்புடைய கொண்டாட்டங்களின்போது, சுற்றுச்சூழல் துறையில் உள்ள வல்லுநர்களோடு அனைத்து சுற்றுச்சூழல் மையங்களிலிருந்தும் மாணாக்கர்கள் இணையதளம் வழியாக நேரடியாக தொடர்புகொள்ளும் நேர்காணல் நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மாணாக்கர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

4) சிறந்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்களுக்கு சிறு ஒளிபரப்பு உபகரணங்கள் (எல்.சி.டி. புரொஜெக்டர்கள்) வழங்குதல்

தமிழ்நாட்டில் தற்போது 57 சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் இயங்கி வருகின்றன. மேலும் 12 சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பருவகால மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதல் ஆகியவை மனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து பொது மக்களும் மாணவர்களும் அறிந்துகொள்ள ஏதுவாக, இது குறித்த தகவல்கள், இம்மையங்கள்மூலம் அளிக்கப்படுகின்றன. இம்மையங்களின்

செயல்பாட்டை மேலும் மேன்மையடையச் செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நடப்பு நிதியாண்டில் ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.40,000/- வீதம் 69 மையங்களுக்கு மொத்தம் ரூ.27.60 இலட்சம் செலவில் சிறு ஒளிபரப்பு உபகரணங்கள் (எல்.சி.டி. புரொஜக்டர்கள்) வாங்கி வழங்கப்படும்.

5) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய தலைமை அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களுக்கு இடையே காணொலி மூலம் கூட்டம் (Video Conferencing) நடத்தும் வசதி ஏற்படுத்துதல்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூன்று நிலை அமைப்பாக, சென்னையில் தலைமை அலுவலகத்தையும், சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் 5 மண்டல அலுவலகங்களையும் மற்றும் 36 மாவட்ட அலுவலகங்களையும் கொண்டு செயல்பட்டு வருகின்றது. மண்டல அலுவலகங்களில் உள்ள இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் விவாதங்களில் கலந்து கொள்வதற்காக தலைமை அலுவலகத்திற்கு ஒவ்வொரு முறையும் அழைக்கப்படுகிறார்கள். தலைமை அலுவலகத்திற்கு அடிக்கடி வருகை தருவதனால் அவர்களது வேலை நேரம் வீணாகின்றது. அவர்களுக்கான போக்குவரத்துச் செலவு, தங்கும் செலவு மற்றும் கூட்டம் நடத்துவதற்கான செலவும் வாரியத்திற்கு ஏற்படுகின்றது. இதனைக் கருத்தில்கொண்டு, மண்டல இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் விவாதங்களில் சிரமமின்றி கலந்துகொள்ளும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நடப்பு நிதியாண்டில் ரூ.30.00 இலட்சம் செலவில் தலைமை அலுவலகம் மற்றும் ஐந்து மண்டல அலுவலகங்களில் காணொலி மூலம் கூட்டம் (Video Conferencing) நடத்தும் வசதி ஏற்படுத்தப்படும்.

6) சென்னை மற்றும் பத்து மாவட்ட தலைநகரங்களில் “அம்மா சுற்றுச்சூழல் அரங்கம்” (Amma Eco Pavilion) அமைத்தல்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சுற்றுச்சூழலை மேம்படுத்துவது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் கடமைகளில் ஒன்றாகும். இதனைச்

சிறப்பாக செயல்படுத்தும்வண்ணம், சுற்றுச்சூழல் மாசு மற்றும் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வினை கிராம மற்றும் நகர்ப்புற மக்களிடையே ஏற்படுத்தி, அவர்களையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பங்குபெறச் செய்வது மிகவும் அவசியம் ஆகும். இதனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் நடப்பு நிதி ஆண்டில் சென்னை மற்றும் 10 மாவட்ட தலைநகரங்களிலும் ரூ.5.50 கோடி செலவில் "அம்மா சுற்றுச்சூழல் அரங்கம்" (Amma Eco Pavilion) ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வரங்கத்தில் பொது மக்களுக்கு திடக்கழிவு, மின்னணுக் கழிவு, பிளாஸ்டிக் கழிவு, தொழிற்சாலைக் கழிவு, மருத்துவக் கழிவு, கட்டுமான மற்றும் இடிமான கழிவு மேலாண்மை குறித்தும் மற்றும் வாகனப் புகை மாசு, ஒலி மாசு, இயற்கை வளங்கள் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு மற்றும் சுற்றுக்சூழல் பாதுகாப்பு குறித்த கருத்துகளைக் கொண்ட சுவரொட்டிகள், மாதிரி வடிவமைப்புகள், ஒலி, ஒளி காட்சிகள் ஆகியவற்றின்மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

7) திருவண்ணாமலை மற்றும் தேனி மாவட்ட அலுவலகங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 36 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 15 மாவட்ட ஆய்வகங்களைக்கொண்டு செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 17 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 13 மாவட்ட ஆய்வகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்குகின்றன. மேலும் 6 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 1 மாவட்ட ஆய்வகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நடப்பு நிதியாண்டில், திருவண்ணாமலை மற்றும் தேனி ஆகிய இரண்டு மாவட்ட அலுவலகங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடம் ரூ.4.00 கோடி செலவில் கட்டப்படும்.

8) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் ஒரு தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் பதவியை ஏற்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நீர், காற்று மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச்சட்டங்கள் மற்றும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வாரியத்தின் பணிகளைத் திறம்பட செயலாற்றி சுற்றுச்சூழல் தொழில்நுட்பத்தில் மிகுந்த அனுபவம் கொண்ட நபர் வாரிய தொழில்நுட்பப் பிரிவினை வழிநடத்திச் செல்வது மிகவும் அவசியமாகின்றது. இதனைக் கருத்தில்கொண்டு, பிற மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியங்களில் உள்ளது போன்றும், தமிழ்நாட்டில் மற்ற அரசு பொறியியல் துறைகளில் உள்ளது போன்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் ஒரு தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் பதவி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி நடப்பு நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

பிற்பகல் 4—40

9) சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் ஒரு புதிய மண்டல அலுவலகம் ஏற்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, தொழிற்சாலைகளைச் சிறந்த முறையில் கண்காணிப்பதற்கு ஏதுவாகவும், சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள சலவை மற்றும் சாயமிடும் தொழிற்சாலைகளுக்காக ஏற்படுத்தப்படவுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கும்பொருட்டும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, நடப்பு நிதியாண்டில் ரூ.75.00 இலட்சம் செலவில் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு சேலம், நாமக்கல், ஈரோடு மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி, தமிழ்நாட்டு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் ஒரு புதிய மண்டல அலுவலகம், இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்

தலைமையில் ஏற்படுத்தப்படுவதோடு, இவ்வலுவலகத்திற்குத் தேவையான இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர், சுற்றுச்சூழல் பொறியாளர், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், துணை மேலாளர், சுருக்கெழுத்தர், உதவியாளர், தட்டச்சர், அலுவலக உதவியாளர் மற்றும் ஓட்டுநர் ஆகிய 9 பணியிடங்கள் அலுவலகத்திற்குத் தேவையான உபகரணங்களுடன் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் துறை மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள், கொள்கை விளக்கக் குறிப்பின்மீதும், இதர பொருட்கள் குறித்தும் 39 வெட்டுத் தீர்மானங்களைத் தந்துள்ளார்கள். மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டு, தங்களின் மேலான கருத்துகளையும், நல்ல பல ஆலோசனைகளையும் இந்த அவையில் தெரிவித்துள்ளார்கள். அவற்றுக்கெல்லாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக நான் அளித்த பதில் திருப்திகரமாக இருக்கும் என நான் நம்புகிறேன். எனவே, என்னுடைய பதிலுரையை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொண்டு, என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.11,85,29,000/–, மூலதனக் கணக்கில் ரூ.15,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.20,00,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஆ) கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.67,37,52,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(இ) கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய 30 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.96,40,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,58,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 16–8–2016 (செவ்வாய்க்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

33. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் இருபத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)] (தமிழ், ஆங்கிலம்)

34. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

77. மானியக் கோரிக்கை எண் 15–சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

78. சுற்றுச்சூழல் துறை பற்றிய செயலாக்க வரவு–செலவு திட்டம், 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

79. மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

80. மானியக் கோரிக்கை எண் 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

81. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016–2017. (தமிழ்)

82. தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2016–2017. (தமிழ்)

2016 ஆகஸ்ட் 12]

இணைப்பு I

(521 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 15—சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

சுற்றுச்சூழல் என்பது காற்று, நீர், நிலம் மற்றும் இவற்றுடன் மனிதர்கள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களின் செயல்பாடுகளைக் குறிப்பதாகும். இது உயிரினம் மற்றும் உயிரினம் சாராத சூழல் மற்றும் இவைகளுக்கிடையே உள்ள பிணைப்புகளை உள்ளடக்கியதாகும். இயற்கைச் சூழலை சீர்குலைப்பதில் மனித செயல்பாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது புவியில் உள்ள உயிரினங்களின் வாழ்க்கையில் எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. இந்நவீன உலகின் அனைத்துச் செயல்பாடுகளும், ஒட்டுமொத்த சூழலியலில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்தும் காரணிகளாக உள்ளன. ஆறுகள் மற்றும் ஏரிகளின் மாசினைக் குறைத்தல், நீர்நிலைகளின் சூழலினை மீளப் பெறுதல் ஆகிய பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருவதோடு, பொது மக்கள் மற்றும் மாணாக்கர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மக்களின் நல்வாழ்க்கைக்கு தேவையான இயற்பியல் கலாச்சார, உயிரின மற்றும் பொருளாதாரத்தின் நிலைத்த தன்மையை உறுதி செய்யும் விதமாக, நிலைத்த, நீடித்த சுற்றுச்சூழலை உருவாக்கவும், ஆரோக்கியமான, ஆற்றல் நிறைந்த சூழல் அமைப்பை உருவாக்கவும் மாநில அரசு முயற்சித்து வருகிறது.

தமிழ்நாட்டின் தொழில் துறை மேம்பாடு, தேசிய சராசரி அளவினை விட கூடுதலான வளர்ச்சியை இலக்காக கொண்டிருந்தாலும், தமிழ்நாடு '2023 தொலைநோக்குப் பார்வை ஆவணமானது' சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலிருந்து விலகாமல் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அக்கறை

செலுத்த வலியுறுத்துகிறது. தமிழ்நாடு 2023 தொலைநோக்குப் பார்வை ஆவணத்தின் கருத்துரு 8-ல், மனித நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த சூழலியல் அடிச்சுவடுகளின் சூழல் பாதுகாப்பினை வலியுறுத்துவதாக உள்ளது. அக்கருத்துருவானது, காடுகளின் பரப்பை அதிகரித்தல், சதுப்பு நிலப் பாதுகாப்பு, நிலத்தடிநீரைப் பாதுகாத்தல், ஆறுகள் மற்றும் ஏனைய நீர்நிலைகள், கடற்கரை மண்டலங்களின் பாதுகாப்பு, எளிதில் அழியக்கூடிய இயற்கை வளங்களின் பாதுகாப்பு, நாட்டின் பலவகையான தாவர மற்றும் விலங்கினங்கள் பாதுகாப்பு, மண் மற்றும் இதர இயற்கை அமைப்புகளை மனித நடவடிக்கைகளால் ஏற்படும் அழிவிலிருந்து பாதுகாத்தல், திடக் கழிவுகளை சீரிய முறையில் மறு சுழற்சி செய்து சுற்றுச்சூழலுக்கு மிகக் குறைந்த பாதிப்பினை உறுதி செய்தல், காற்று மண்டலத்தில் மாசினைக் குறைத்தல் மற்றும் மாநிலத்தின் சுற்றுச்சூழலை சம நிலையில் பராமரித்தல் போன்றவற்றினை வலியுறுத்துகிறது.

2. சுற்றுச்சூழல் இயக்ககம்

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை 1995 ஆம் ஆண்டு மாநிலத்தில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி ஆறுகள் மற்றும் சென்னை நகர நீர்வழிகள் ஆகியவற்றின் மாசு தடுப்புப் பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. மேலும், தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம், கடற்கரை ஒழுங்குமுறை மண்டல மேலாண்மை மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் மேற்கொள்ளப்படாத, ஏனைய சூழல் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை இத்துறையின் பொறுப்புகளாகும்.

சுற்றுச்சூழல் இயக்ககம் கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் நிலையிலுள்ள இயக்குநர் தலைமையிலும், வனப் பாதுகாவலர் நிலையிலுள்ள கூடுதல் இயக்குநரின் கீழும் இயங்கி வருகிறது. மேலும், மூன்று துணை இயக்குநர்கள், ஒரு உதவி வனப் பாதுகாவலர், ஒரு உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், ஒரு கணக்கு அலுவலர், ஒரு சமூகவியலாளர், ஒரு வனச் சரகர், இரண்டு உதவிப் பொறியாளர்கள் மற்றும் 22 அமைச்சுப் பணியாளர்கள் உள்ளிட்ட 34 பணியிடங்கள் இத்துறைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

2016 ஆகஸ்ட் 12]

2.1 துறையின் பணிகள்:

- மாநில பருவ நிலை மாற்றம் குறித்த செயலாக்கத் திட்டத்தினை உருவாக்குதல் (State Action Plan on Climate Change)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையினை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்தல்
- அனைத்து நகரங்களுக்கான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தயாரித்தல்
- தேசிய பசுமைப்படை, சுற்றுச்சூழல் மன்றங்கள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மூலமாக பள்ளி மாணவர்களிடையே பலதரப்பட்ட சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுதல்
- பல்கலைக்கழகங்கள் / ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து சுற்றுச்சூழல் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மேற்கொள்ளுதல்.

3. பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டம்

பருவநிலை மாற்றம் மனித வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தமிழ்நாட்டின் பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டமானது, எதிர்பாராத நிகழ்வுகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்தல், ஆபத்துகளைக் குறைத்தல், இடர்களை ஒன்று திரட்டுதல், மாற்றுதல் மற்றும் பங்கிடுதல் மற்றும் எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்ள தயாராக இருந்து, அச்சூழ்நிலைகளில் சிறப்பாகச் செயல்படுதல் மற்றும் அவற்றை எதிர்கொள்வதற்கான திறனை மேம்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கிய துறை வாரியான செயல் திட்டத்தினை, தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை 2023-ஐ ஒட்டுமொத்தமாகக் கருத்திற்கொண்டு, மாநில அரசு அளவில் உருவாக்கி, வரையறுப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், தமிழ்நாடு பருவநிலை மாற்றம் குறித்த செயல்திட்டத்திற்கு, மார்ச் 31, 2015 அன்று இசைவினை வழங்கியுள்ளது. தமிழ்நாடு பருவநிலை மாற்றம் குறித்த

[2016 ஆகஸ்ட் 12

செயல்திட்டம், பாதிப்பிற்குள்ளாகும் கீழ்க்கண்ட ஏழு பிரிவுகளை அடையாளம் கண்டுள்ளது.

- நீடித்த வேளாண்மை
- நீர் ஆதாரம்
- கடற்கரைப் பகுதி மேலாண்மை
- வனம் மற்றும் உயிர்ப்பன்மயம்
- நீடித்த உறைவிடம்
- எரிசக்தி திறன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சூரிய சக்தி
- அறிவாற்றல் மேலாண்மை

தமிழ்நாடு பருவநிலை மாற்றம் குறித்த செயல்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் துறை தொடர்புத் துறையாக விளங்குகிறது, தமிழ்நாடு பருவநிலை மாற்றம் குறித்த செயல்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உத்திகள் மற்றும் செயல்திட்டத்தினை ஒத்த தொடர்புத் துறைகளுடன் இணைந்து, பருவநிலை மாற்றத்தின் ஒரு பகுதியான தழுவல் மற்றும் மட்டுப்படுத்தல் குறித்த திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது,

அதன்படி, சுற்றுச்சூழல் துறை, தேசிய பருவநிலை மாற்ற தழுவல் நிதி மற்றும் பசுமை பருவநிலை நிதி ஆகியவற்றின்கீழ், சர்வதேச அபிவிருத்தி துறை, தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு) ஆகியவற்றின் ஆலோசனைகளின்படி பிரேரணைகளைச் சமர்ப்பித்துள்ளது.

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், தேசிய பருவநிலை மாற்றம் தழுவல் நிதியின்கீழ் மன்னார் வளைகுடா பகுதியில் செயல்படுத்தும் "தமிழ்நாடு மன்னார் வளைகுடாவின் நீடித்த மற்றும் பருவநிலை மாற்றத்திற்கேற்புடையதான கடலோர வாழ்விடங்கள் மற்றும் பல்லுயிரினங்கள் மேலாண்மை மற்றும் மறுவாழ்வு" திட்டத்திற்கு ரூ.24.74 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. அதேபோல சம்பந்தப்பட்ட இதர துறைகளும் தேசிய பருவநிலை மாற்ற தழுவல் நிதி மற்றும் பசுமை பருவநிலை நிதி ஆகியவற்றின்கீழ் ஒப்புதல் பெற பிரேரணைகள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன.

2016 ஆகஸ்ட் 12]

2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், பருவநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பு மாநாடு (Patties-21(COP-21)) *பாரிஸில் நடைபெற்றது. இம்மாநாட்டில் மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், தனது பருவநிலை மாற்றம், குறித்த தேசிய செயல்திட்டத்தின்கீழ் மேற்கொண்ட பணிகள் மற்றும் சாதனைகளைக் காட்சிப்படுத்தியது. மாநில அரசின் பருவநிலை மாற்றம் குறித்தும், கடற்கரைச் சூழல் அமைப்புகளுக்கு உகந்த தழுவல் முறைகள் உருவாக்கம் மற்றும் அதனை செயல்படுத்துதல் குறித்தும் மாநாட்டில் காட்சிப்படுத்த, மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தால், தேர்வு செய்யப்பட்ட ஒரே ஒரு கடலோர மாநிலம், தமிழ்நாடு மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

2014-15 ஆம் ஆண்டில், பகுதி—2 திட்டத்தின்கீழ் பருவநிலை மாற்றம் குறித்த பிரிவை அமைக்க ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்பிரிவு சுற்றுச்சூழல் துறையில் செயல்பட்டு வருகிறது. பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டத்தினைச் செயல்படுத்தும் வழிமுறைகளைக் கண்டறிவது பருவநிலை மாற்றம் பிரிவின் பணியாகும். மேலும் விவசாயிகள், மீனவர்கள், பொது மக்கள், கொள்கை வடிவமைப்பாளர்கள், முடிவு மேற்கொள்வோர், செயல்படுத்துபவர்கள், நிருவகிப்பவர்கள் மற்றும் இதர பயனாளிகளுக்கு அண்மைக் கால பருவநிலை மாற்றம் குறித்த தகவல்களை அளிப்பதுடன், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள உலகம் முழுவதும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த விவரங்களை தெரிவித்து அவற்றை எதிர்கொள்வதற்கான திறன் மேம்படுத்தப்படும்.

4. ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம்

மோசமான தட்பவெப்பநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய அவசரகால சூழ்நிலையை சமாளிக்கும் உத்திகளை வலுப்படுத்தவும், இயற்கை வளம் மற்றும் சிறந்த சுற்றுச்சூழலை நமது எதிர்காலச் சந்ததியினர் உகந்த முறையில் பெறுவதற்கும், மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், தமிழக கடற்கரையோர மக்களின் முன்னேற்றத்தினைக் கவனத்தில் கொண்டும், ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 12

ஒருங்கிணைந்த கடற்கரைப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் அடிப்படையில், தமிழ்நாட்டில் ரூ.697.68 கோடி மதிப்பில் பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மை திட்டத்தினைச் செயல்படுத்த, மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிக்கையினை, மத்திய அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு முதற்கட்டமாக அறிக்கையை நடைமுறைப்படுத்த ஏதுவாக விரிவான திட்ட அறிக்கையினைச் சமர்ப்பிக்கக் கோரியது. அதனைத் தொடர்ந்து, சென்னையிலுள்ள நிலையான, தேசிய கடற்கரை மேலாண்மைக்கான அமைப்புமூலம் ஆதார அறிக்கை தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

5. சுற்றுச்சூழல் மன்றங்கள்

மாணவர்கள், தாங்கள் வாழும் சமுதாயம் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளை நேரடியாக உணர்ந்து கொள்ளவும், அதற்கான தீர்வுகளை சிந்திப்பதற்கும், மாநில அரசின் நிதியுதவியுடன் பள்ளிகளில் இது போன்றதொரு திட்டம் இந்தியாவில் முதன்முதலாக தமிழ்நாட்டில்தான் உருவாக்கப்பட்டு, ஒரு சிறந்த திட்டமாக பலராலும் பாராட்டப்படுகிறது. விழிப்புணர்வுப் பேரணிகள், மனிதச் சங்கிலி, கருத்தரங்கம், விவாதங்கள், மரம் நடுதல், வளாகம் தூய்மைப்படுத்துதல், மழைநீர் சேகரித்தல் மண்புழு உரம் தயாரித்தல் போன்ற பல்வேறு விழிப்புணர்வுப் பணிகளில் சூழல் மன்ற மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் 11,469 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

6. தேசிய பசுமைப்படை (தேபப)

மைய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதியுதவியுடன் இம்மாநிலத்தில் 2002 ஆம் ஆண்டில் தேசிய பசுமைப்படை உருவாக்கப்பட்டது. மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் அது தொடர்புடைய பிரச்சினைகளை புரிந்துணரச் செய்யவும், மரம் நடுதல், விழிப்புணர்வுப் பேரணிகள், மண்புழு உரம் தயாரித்தல், சுற்றுச்சூழல் கண்காட்சி, சுற்றுச்சூழல் போட்டிகள், பிளாஸ்டிக்கிற்கு எதிரான பிரச்சாரம், கலை நிகழ்ச்சிகள், இயற்கை

முகாம்கள், உள்ளிட்ட செயலாக்கப் பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதும் இதன் முக்கிய நோக்கமாகும். ஆண்டுக்கு குறைந்தபட்சம் ஆறு பசுமை தினங்கள், ஒவ்வொரு தேசிய பசுமைப் படை பள்ளியிலும்கொண்டாடப்பட்டு வருகிறது.

தற்போது தமிழகத்தில் மாவட்டம் ஒன்றிற்கு 250 பள்ளிகள் வீதம் 32 மாவட்டங்களில் 8000 பள்ளிகளில், தேசிய பசுமைப்படை செயல்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் தேசிய பசுமைப்படை சூழல் மன்றத்தின் செயல்பாட்டுக்கு பள்ளி ஒன்றிற்கு ரூ.2500/- வீதம் மத்திய அரசு நிதியுதவி வழங்குகிறது. ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமைப் பயிற்றுநர் மற்றும் ஆசிரிய ஒருங்கிணைப்பாளர்களுக்கு தேசிய பசுமைப்படை செயல்பாடுகள் குறித்த பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சூழல் விழிப்புணர்வு இயக்கத்தில் 3,20,000 மாணவ, மாணவியர்கள் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

7. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தூய்மையான எரிசக்திப் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 19.07.2010 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனம் (EC-2) துறை அரசாணை (3D) எண் 43-ன் மூலம் "சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியை" உருவாக்கியது. வனப் பகுதிகளுக்கு வெளியே மரங்கள் நட்டு தமிழ்நாட்டினைப் பசுமைப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான முயற்சிகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பினைத் தடுத்திடுதல், ஊக்குவித்தல் மற்றும் திட்டம் சார்ந்த செயல்பாடுகள் போன்ற பணிகளை அரசுத் துறைகள், பொதுத் துறைகள் அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், மரம் வளர்ப்போர் சங்கங்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் / அமைப்புகள் மற்றும் ஆர்வமுள்ள தனி நபர்கள் மூலம் மேற்கொள்ள இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

8. சூழல் நுண்பகுதிகளை மீளச் செய்வதற்கான நடவடிக்கைகள்

பூமியின் உயிர்க்கோளத்தில் நீர்நிலைகள் மற்றும் சதுப்பு நிலங்களும் ஒரு முக்கிய கூறுகளாக விளங்குகின்றன. அவைகள்

[2016 ஆகஸ்ட் 12

உயிரினங்களுக்குத் தேவையான நீராதாரமாக மட்டுமன்றி, தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் வாழ்வதற்கும், நிலப்பரப்பில் உள்ள இயற்கை அழகை அதிகரிக்கவும் உதவுகிறது. நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலிருந்து வரும் வண்டல் மண் படிமமாவதாலும், சுத்திகரிக்கப்படாத அல்லது ஓரளவு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர், தொழிற்சாலைக் கழிவுநீர், திடக்கழிவு, நிலங்களில் இருந்து வெளிவரும் பூச்சி மருந்து மற்றும் வனங்களின் கழிவுப் பொருட்கள் ஏரியில் கலப்பதாலும், வெள்ளநீர் / மழைநீர் ஏரியில் கலப்பது குறித்து சரியான பராமரிப்பு இல்லாததாலும், மிகுதியான நீரை ஏரியிலிருந்து அளவுக்கு அதிகமாக எடுப்பதாலும், ஏரிகளின் பராமரிப்பில் பல்வேறு பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகிறது. தூர்வாருதல், ஏரிக்கு வரும் கழிவு நீரைத் திருப்புதல் போன்ற நடவடிக்கைகளால் எதிர்பார்த்த நீரின் தரத்தைப் பெறுவதோடு உயிரினப் பல்வகைமை மற்றும் சூழல் அமைப்பை பாதுகாப்பதன்மூலம் ஏரிகளைப் பாதுகாப்பதோடு, அதனை மீளவும் பெறமுடியும்,

சூழல்மீட்புப் பணி நடவடிக்கைகள் குறித்த சில விவரங்கள் பின்வருமாறு:—

- சென்னை சேத்துப்பட்டில் விளையாட்டு, மீன் பிடி மற்றும் சூழல் பூங்கா ரூ.42.00 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

- திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் (ரெட்டை ஏரி), அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஆகிய பகுதிகளின் சதுப்புநிலப் பகுதிகளை மறுசீரமைத்தல் மற்றும் மீளச் செய்ய ரூ.33.00 கோடி விடுவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அய்யர்குளம், குயவன்குட்டை மற்றும் சித்தம்பட்டி குளங்களை சூழல் மீட்டளிப்பு செய்ய, ரூ.4.50 கோடி பேரூராட்சிகள் இயக்குநரகத்திற்கு விடுவிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- ஈரோடு மாவட்டம், பேரோடு பஞ்சாயத்திற்குட்பட்ட குட்டைத்தயிர்பாளையம் குளம் மற்றும் புஞ்சைக்காளமங்கலம் பஞ்சாயத்திற்குட்பட்ட கம்பத்தீஸ்வரன் குளங்களை சூழல் மீட்டளிப்பு செய்ய ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கு ரூ.3.00 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2016 ஆகஸ்ட் 12]

- திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், சர்க்கார்பெரியபாளையம் ஏரியினை சூழல் மீட்டளிப்பு செய்ய 2014—15 ஆம் ஆண்டில், ரூ.4.00 கோடியும், 2015-16-ஆம் ஆண்டில் ரூ.2.41 கோடியும் பொதுப் பணித் துறைக்கு விடுவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

9. கடற்கரைப் பகுதி மேலாண்மை

இந்தியக் கடற்கரையின் நீளத்தில் 15 சதவீதத்தைக் கொண்டுள்ள தமிழ்நாடு கடற்கரை 1076 கி.மீ. நீளத்தைக் கொண்ட, மிகப் பெரிய கடற்கரையாக விளங்குகிது. அலையாத்திக் காடுகள், பவளம், கடற்பாசி, கடற்புல்படுகை, உப்பளம், மணற்குன்று ஆகிய பல்வேறு இயற்கை வாழ்விடங்களை கொடையாகக் கொண்டு தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது,

கடலோர சூழலினைப் பாதுகாப்பதற்கும், கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி. அதன்மூலம் கடற்கரையோரங்களில் வசிக்கும் மீனவ சமுதாயம் மற்றும் இதர உள்ளூர் மக்களின் வாழ்வாதாரப் பாதுகாப்பினை உறுதி செய்யவும், கடலோரப் பகுதிகளின் சுற்றுச்சூழலை அதன் தன்மை மாறாது பாதுகாத்திடவும், கடலோரப் பகுதியில் நீடித்து நிலைத்து நிற்கும் வளர்ச்சியினை மேம்படுத்தவும், மைய அரசு திருத்திய கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை 2011-ஐ சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986-ல் வெளியிட்டுள்ளது.

இவ்வறிக்கையின்படி கடற்கரைப் பகுதி நான்கு மண்டலங்களாகப் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்-I (சூழல் முக்கியத்துவம் வாய்ந்தவை)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்-II (வளர்ச்சியடைந்த பகுதி)
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்-III (கிராமப் பகுதி) மற்றும்
- கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம்-VI (கடல்நீர் பகுதியில் உயர் பேரலை வரிசைக்கும் நாட்டின் கடல் எல்லை பகுதிக்கும் (12 நாட்டிகல் மைல்ஸ்) இடைப்பட்ட கடல் பகுதியும், பேரலை தாக்கமுள்ள நீர்நிலைப்பகுதிகளும்)

[2016 ஆகஸ்ட் 12

கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை பகுதியானது, உயர் பேரலை வரிசையிலிருந்து (HTL) 500 மீட்டர் வரையிலான தரைப்பகுதி, கடலோடு இணைந்துள்ள நீர்நிலைகளின் நிலம் நோக்கிய பகுதியில் பேரலை வரிசையிலிருந்து 100 மீட்டர் வரையிலான தரைப்பகுதி அல்லது நீர்நிலையின் அகலம் இரண்டில் எது குறைவானதோ அப்பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

தற்போது பொதுப் பணித் துறை, மீன் வளத் துறை போன்ற துறைகள் கடற்கரைப் பாதுகாப்புப் பணிகளுக்காக, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011-ன்கீழ் அதிக அளவில் ஒப்புதல் கோருகின்றன. மாநில கடற்கரை மேலாண்மைக் குழுமமானது, மேற்கண்ட பணிகள் தற்காலிக முறையில் செயலாக்கப்படாததினை உறுதி செய்கிறது. இக்குழுமமானது, ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைக்காக, உயர், மத்திய மற்றும் குறைந்த அளவிலான மண் அரிப்பு, கடலோர வண்டல் படிமங்கள், கடற்கரை வரைபடங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை மேற்கொள்கிறது. மேலும், கடின கட்டுமானங்களைக் கொண்டு கடற்கரைக்கு செங்குத்தாக அமைக்கப்படும் அமைப்புகள் கடற்கரையின் ஒரு பக்கத்தினை மண் அரிப்பிலிருந்து பாதுகாத்தாலும், மறு பக்கத்தில் மண் அரிப்பினை ஏற்படுத்துகிறது. எனவே, மென்மையான கட்டுமானங்களைக் கொண்ட அமைப்புகள் சாத்தியப்படாத பட்சத்தில் மட்டுமே கடின கட்டுமானங்கள் கொண்ட கடற்கரைப் பாதுகாப்பு பணிகளை ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மையின் ஒரு பிரிவாக இக்குழுமம் பரிசீலிக்கும்.

9.1 கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுமங்கள்

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் முதன்மை செயலரைத் தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர் செயலராகவும் கொண்ட மாநில அளவிலான கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுமத்தை நிறுவியுள்ளது. மாநில அரசு, மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுமங்களை 1998 ஆம் ஆண்டு அமைத்துள்ளது. இக்குழுமம் கடற்கரை மண்டலங்களில் எழும் பிரச்சினைகள்மீது நடவடிக்கை எடுப்பதற்காக, குறிப்பிட்ட கால இடைவெளியில் கூடுகிறது.

2016 ஆகஸ்ட் 12]

9.2 கடலோரப் பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டம்

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதிகளை மறுசீரமைத்திடவும், கடலோரப் பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டத்தினை உருவாக்கிடவும், உலக வங்கி நிதியுதவியுடன் கீழ்க்காணும் திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

9.2.1தமிழகக் கடலோரத்தின் பாலாறு முகத்துவாரம் முதல் குமரி மாவட்டத்திலுள்ள தேங்காபட்டினம் வரை உயர் அலைமட்டம் குறியிடுதல்

பாலாறு முதல் குமரி மாவட்டத்திலுள்ள தேங்காபட்டினம் வரை கடலோரப் பகுதிகளிலும், அலைகளின் தாக்கத்திற்கு உள்ளாகும் நீர்நிலைகளிலும் உயர் அலைமட்டக் குறியீட்டுப் பணிகள் சுற்றுச்சூழல் துறையால் மேற்கொள்ளப்பட்டன. உயர் அலைமட்டம், அதற்கான கிராம வரைபடங்களில் 1:5000 என்ற அளவீட்டில் குறியீடு செய்யப்பட்டுள்ளன. உயர் அலைமட்ட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு மாவட்ட நிருவாகங்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

9.2.2 உயர் அலைமட்டக் குறியீடு செய்யப்பட்ட இடங்களில் கல்தூண் நடுதல்

கடலோரத்தில் வசிக்கும் மக்கள் உயர் அலைமட்டத்தை அறிந்து கொள்ள ஏதுவாக, உயர் அலைமட்ட எல்லையைக் குறிக்கும் வகையில், 250 மீட்டர் இடைவெளியில் கடலோரத்தில் கல்தூண்கள் நடும் பணி வனத் துறைக்கு அளிக்கப்பட்டது. அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

9.2.3 ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம்

தமிழகக் கடலோரப் பகுதிகளுக்கான ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள தகவல்கள் கடலோரப் பகுதிகளில் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த அடிப்படையாக அமையும். பல அடுக்குகளைக் கொண்ட இத்தகவல்கள், கடலோரப் பகுதிகளில் இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பாதிப்புகளை மதிப்பீடு செய்யவும், கடற்கரையில் இயற்கைப் பேரிடர் காலங்களில் அதன் பாதிப்புகள் மட்டுப்படுத்துதற்கான திட்டமிடவும் உதவியாக இருக்கும்.

[2016 ஆகஸ்ட் 12

9.2.4 பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டம்

கடலோர மக்களுக்கும், தொடர்புடைய தரப்பினருக்கும், ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மை வரைபடம் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கென, 13 கடலோர மாவட்டங்களில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் திட்டங்களின் மீது முடிவு எடுக்கும் நிலையில் உள்ள அதிகாரிகள் மற்றும் நடுநிலை அதிகாரிகளுக்கும் சென்னையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

10. சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS)

மத்திய அரசின் நிதியுதவியுடன் 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS), சுற்றுச்சூழல் துறையில் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் தொடர்புடைய பல்வேறு தகவல்களை இச்சுற்றுச்சூழல் தகவல் மையம் வழங்கி வருகிறது. சுற்றுச்சூழல் குறித்த தகவல்களைச் சேகரித்தல், ஒப்பிடுதல், சேமித்தல், சீர்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் தகவல்களைப் பரப்புதல் ஆகிய செயல்பாட்டில் இம்மையம் ஈடுபட்டுள்ளது. மக்களோடு இணைந்து செயல்பட www.tnenvis.nic.in என்ற வலைதளத்தை நிறுவியும், செய்திமடல் வெளியிடுதல், வலைதளம் சார்ந்த தகவல் தொகுப்புகளை உருவாக்குதல், சுற்றுச்சூழல் தொடர்பான வினாக்களுக்கு விடையளித்தல் போன்றவை இம்மையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

11. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை (இமேட்):

தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமையானது, தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக 2002 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 22-01-2003 முதல் செயல்பட்டு வருகிறது. மேலும் இந்த முகமை தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்களை தேசிய நதிநீர் இயக்ககம், மைய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் மற்றும் இத்திட்டங்களை செயல்படுத்தும் பல்வேறு முகமைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமைக்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள் தலைவராகவும்,

2016 ஆகஸ்ட் 12]

சுற்றுச்சூழல் துறை இயக்குநர் அவர்கள் உறுப்பினர்—செயலராகவும், உள்ளார்கள்.

தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமை கீழ்க்கண்ட திட்டங்களை ஒருங்கிணைத்து வருகிறது.

11.1 தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் நதிகளின் மாசு தடுப்புப் பணிகள்

மைய அரசு 1996-97 ஆம் ஆண்டிலிருந்து ரூ.510.35 கோடி தொகையினை நதிநீர் செயல் திட்டம் / தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மாசு தடுப்பு பணிகளுக்காக ஒப்புதலளித்துள்ளது (காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி கரையோரங்களில் உள்ள நகரங்களிலிருந்து ஆற்றில் கலக்கும் கழிவுநீரைத் தடுத்து, அக்கழிவு நீரினை சுத்திகரிக்கும் ஆலைகள் மூலம் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக). இத்திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மூலமாக செயல்படுத்தப்பட்டன. மேற்கண்ட இத்திட்டத்திற்கு ரூ.506.53 கோடி செலவிடப்பட்டுள்ளது.

11.2 சென்னை மாநகர நதிநீர்ப் பாதுகாப்பு திட்டம்

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் தேசிய ஆறுகள் பாதுகாப்பு இயக்ககம், 2000 ஆம் ஆண்டு சென்னை நகரின் முக்கிய நீர் வழித் தடங்களான கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு, ஓட்டேரி ஓடை, கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் பகுதியாக சுத்திகரிக்கப்பட்ட / சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் சேர்வதைத் தடுத்து, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் மேம்படுத்த ரூ.491.52 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 264 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட நான்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின்மூலம் உருவாக்கப்பட்டு, பணிகள் நிறைவேற்ற ரூ.392.17 கோடி செலவிடப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 12

11.3 தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்

மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் தேசிய ஏரிகள் பாதுகாப்பு இயக்ககம் 2004 ஆம் ஆண்டு மாநிலத்திலுள்ள மாசடைந்த ஏரிகளைக் கண்டறியுமாறு கேட்டுக் கொண்டது. அதன்படி 2008 ஆம் ஆண்டின் தேசிய ஏரிகள் பாதுகாப்பு திட்ட வழிகாட்டுதல்களின்படி கீழ்க்கண்ட 15 ஏரிகள் கண்டறியப்பட்டு, கருத்துருக்கள் மத்திய அரசிற்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கண்டறியப்பட்ட 15 ஏரிகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

வ.எண்	மாவட்டம்	ஏரியின் பெயர்
1.	நீலகிரி	ஊட்டி
2.	திண்டுக்கல்	கொடைக்கானல்
3.	காஞ்சிபுரம்	கொளவாய்
4.	சேலம்	ஏற்காடு
5.	சென்னை	வேளச்சேரி
6.	காஞ்சிபுரம்	திருநீர்மலை
7.	கோயம்புத்தூர்	பெரிய குளம்
8.	காஞ்சிபுரம்	நாராயணபுரம்
9.	மதுரை	மாடக்குளம்
10.	கோயம்புத்தூர்	சிங்காநல்லூர் குளம்
11.	கோயம்புத்தூர்	கிருஷ்ணாம்பதி
12.	நாகப்பட்டினம்	தாமரைக்குளம்
13.	காஞ்சிபுரம்	நெமிலிச்சேரி
14.	காஞ்சிபுரம்	கடப்பேரி
15.	காஞ்சிபுரம்	பீர்க்கன்கரணை

2016 ஆகஸ்ட் 12]

12. துறையின் இதர நடவடிக்கைகள்

12.1 சுற்றுச்சூழல் விருதுகள்

சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்படும் அரசு சாரா நிறுவனங்கள், வல்லுநர்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோர்களை அடையாளம் கண்டு அவர்களின் சீரிய பங்களிப்பினைச் சிறப்பிக்கும் வகையில் சுற்றுச்சூழல் விருதுகள் மாநில அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. 2000-மாவது ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த விருது, ஆண்டுதோறும் உலக சுற்றுச்சூழல் தினமான ஜுன் 5 ஆம் நாளன்று வழங்கப்படுகின்றன. மேலே கூறிய இனங்கள் தவிர சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கும் சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கப்படுகின்றன. ஆண்டுதோறும் ரூ.1.13 இலட்சம் மதிப்பில் 10 சுற்றுச்சூழல் விருதுகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

12.2 ஊக்குவிக்கும் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள்

பிளாஸ்டிக் கழிவுகள் இல்லாத மாநிலமாகத் தமிழகத்தினை உருவாக்க வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, பிளாஸ்டிக் பயன்பாட்டினை குறைப்பதில் முக்கிய பங்காற்றிடும் மூன்று சுய உதவிக் குழுக்கள், மூன்று சிறந்த கிராமங்கள் மற்றும் மூன்று சிறந்த சுத்தமான பசுமைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.5.00 இலட்சம், ரூ.3.00 இலட்சம் மற்றும் ரூ.2.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.30.00 இலட்சம் செலவில் விருதுகள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

12.3 வெகுஜன விழிப்புணர்வுப் பிரச்சாரம்

12.3.1 மக்காத தன்மையுள்ள பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்தும், பிளாஸ்டிக் பயன்பாட்டினைத் தவிர்ப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் நன்மைகள் குறித்தும் பொது மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்த மாநிலம் முழுவதும் 32 மாவட்டங்களில் "Message on Wheels" என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு, ரூ.64.00 இலட்சம் செலவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சாரா அமைப்புகள்மூலம் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகள்

[2016 ஆகஸ்ட் 12

வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

12.3.2 போகிப் பண்டிகை அன்று டயர், பிளாஸ்டிக், இரப்பர் மற்றும் இதரப் பொருட்களை எரிப்பதால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து பொது மக்களுக்கு புரிந்துணர்தலை ஏற்படுத்தும் நோக்கத்தோடு மூன்று நாள் விழிப்புணர்வுப் பிரச்சாரம் சுற்றுச்சூழல் துறையினால், சென்னை மாநகரம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் போகிப் பண்டிகை குறித்த விழிப்புணர்வுப் பிரச்சாரம் சூழல் மன்றங்கள் மற்றும் தேசிய பசுமைப்படைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

12.3.3 பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவர்களிடையே மாசு, பருவநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல், அதனால் ஒவ்வொரு நாளிலும் ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்த தகவல்களைப் பரப்புவதற்கு ஏதுவாக 57 கல்வி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இம்மையத்தில் உள்ள நூலகத்தில் சுற்றுச்சூழல் தொடர்பான ஒளி மற்றும் ஒலி உபகரணங்கள், புத்தகங்கள், மாசு, பருவநிலை மாற்றம், நீடித்து நிலைக்கும் சுற்றுச்சூழல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் விளக்கப்படங்கள், தகவல் பலகைகள், ஆங்கிலம் மற்றும் தமிழில் இருக்கும். இம்மையங்கள் மாவட்டத்தின் முக்கிய இடத்தில் பொது மக்கள் பார்வைக்காக அமைக்கப்பட்டுள்ளன.

12.3.4 தமிழ்நாட்டிலுள்ள 11 புண்ணியத் தலங்களில் ரூ.55.00 இலட்சம் செலவில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு

தமிழ்நாட்டில் ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம், திருத்தணி, பழனி, திருச்செந்தூர், தஞ்சாவூர், மருதமலை, மதுரை, சிதம்பரம், சமயபுரம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகியவை 11 முக்கியமான புனித ஸ்தலங்களாகும். இந்து சமய அறநிலையத் துறை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஒத்துழைப்போடு பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி இத்தலங்களை சிறந்த சுற்றுச்சூழலைக் கொண்டுள்ள மேம்படுத்தப்பட்ட புண்ணிய தலங்களாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பணிகளுக்காக புண்ணியதலம்

ஒன்றுக்கு ரூ.5.00 இலட்சம் வீதம், 11 தலங்களுக்கு மொத்தம் ரூ.55.00 இலட்சம் இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக அரசு, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தினை நிதி விடுவிக்க ஆணையிட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இப்பணிகளுக்குத் தேவையான நிதியை விடுவித்து, பணிகள் நடைபெற்று வருகிறது.

12.4 சுற்றுச்சூழல் மற்றும் சூழல் பாதுகாப்பு முக்கியத்துவத்தினை விளக்கும் வகையில் ஐந்து பிரிவுகளில், ஐந்து குறும்படங்கள்/ விளம்பரங்கள் ரூ.15.00 இலட்சம் செலவில் தயாரித்தல்

மாணவ சமுதாயத்தினருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நிலமாசு, நீர்மாசு, காற்றுமாசு, தொழிற்சாலை மாசு மற்றும் சூழல் முக்கியத்துவம் குறித்து ஐந்து பிரிவுகளில் தனித்தனியே ஐந்து குறும்படங்கள் / விளம்பரங்கள் மொத்தம் ரூ.15.00 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை பள்ளி மாணவர்கள் மத்தியில் விளம்பரப்படுத்தி சுற்றுச்சூழல் மற்றும் சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 12

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்

1. முன்னுரை

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 (1974 - ஆம் ஆண்டு மத்திய அரசு சட்டம் 6)-ன்படி தமிழ்நாடு அரசு 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் நாள், தமிழ்நாடு நீர் மாசுக் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியம் என்ற நிறுவனத்தை உருவாக்கியது. பின்பு 1983 ஆம் ஆண்டு, இந்நிறுவனம் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981-ன்கீழ் காற்று மாசுக் கட்டுப்பாடு கண்காணிப்பு சம்பந்தமான கூடுதல் பொறுப்பும் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான அனைத்து சட்ட அம்சங்களையும் உள்ளடக்கிய சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986-ல் வெளியிடப்பட்டு, அதன்கீழ் பல்வேறு அறிவிக்கைகள் மற்றும் விதிகள் வெளியிடப்பட்டதன் காரணமாக வாரியத்தின் பணிகள் மேலும் விரிவடைந்தன. மாநிலத்தின் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் முக்கிய பங்கினை ஆற்றி வருகின்றது. தற்போது வாரியமானது மத்திய அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் சுற்றுச்சூழல் சட்டங்களையும், சட்ட விதிகளையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. அவையாவன:-

- *நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974*
- *நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1977*
- *காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981*
- *சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986*
- *சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள், 1986*
- *ஒலி மாசு (முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 2000*
- *மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2001*

2016 ஆகஸ்ட் 12]

- *தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டுசெல்லுதல்) விதிகள், 2016*

- *மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016*

- *திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016*

- *பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016*

- *மின்னணு கழிவு மேலாண்மை விதிகள், 2016*

- *கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள், 2016*

2. பணிகள்

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981-ன்கீழ் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணிகள் பின்வருமாறு:

- *நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் குறித்தும், நீர் மற்றும் காற்று மாசினைக் கருத்தில்கொண்டு தொழிற்சாலைகள் அமைவிடத்தை தேர்வு செய்வது குறித்தும் மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்;*

- *வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறை கழிவுநீர், தொழிற்சாலைகள், வாகனங்கள் மற்றும் பிற ஆதாரங்களிலிருந்து காற்று மண்டலத்தில் வெளியேற்றப்படும் வாயுக் கழிவுகள் ஆகியவற்றிற்கு வரையறைகளை விதித்தல்;*

- *வடிகால் கழிவுநீர், செயல்முறை கழிவுநீர் மற்றும் காற்று மாசு சுத்திகரிப்பு செய்வதற்கு நம்பகமான மற்றும் பொருளாதார சாத்தியமான முறைகளைக் கண்டறிதல்;*

- *மண் அமைப்பு மற்றும் பயிர் வகையினை கருத்தில் கொண்டு சுத்திகரிக்கப்பட்ட வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக் கழிவுநீரை விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்கான உத்திகளை வகுத்தல்;*

[2016 ஆகஸ்ட் 12

• காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981-ன்படி, காற்று மாசுக் கட்டுப்பாடு பகுதிகள் என அறிவிப்பு செய்ய வேண்டிய பகுதிகளை மாநிலத்தில் கண்டறிதல்;

• காற்று மற்றும் நீர் மாசினை தடுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் பொருட்டு தொழிற்சாலைகள், உற்பத்தி செயல்முறைகள், மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடுதல்;

• மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில அரசு குறிப்பிடும் பிற பணிகளையும் நிறைவேற்றுதல்.

3. நிறுவன அமைப்பு

வாரியம், மூன்று நிலை அமைப்பாக மாநில அளவில் சென்னையில் தலைமை அலுவலகத்தையும், மண்டல அளவில் மண்டல அலுவலகங்களையும், மாவட்ட அளவில் மாவட்ட அலுவலகங்களையும் கொண்டு மொத்தம் 705 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது. அதன்படி இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் 5 மண்டல அலுவலகங்கள் சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ளன. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் 36 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன. சாய மற்றும் சலவைத் தொழில் அதிகமாக உள்ள பகுதிகளில் தொழிற்சாலைகளைத் தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு சுற்றுச்சூழல் பொறியாளர்கள் தலைமையில் 2 பறக்கும் படைகள் ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள், நீர்நிலைகள் மற்றும் காற்றின் தன்மை ஆகியவற்றை சிறந்த முறையில் கண்காணிப்பு செய்வதற்காக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மொத்தம் 15 சுற்றுச்சூழல் ஆய்வகங்களை மாவட்டங்களில் ஏற்படுத்தியுள்ளது. இதில் சென்னை, சேலம், கோயம்புத்தூர், கடலூர் மற்றும் மதுரை ஆகிய 5 இடங்களில் உள்ள ஆய்வகங்கள் நவீன உபகரணங்களை பயன்படுத்தி, கூடுதல் காரணிகளை பகுப்பாய்வு செய்யும் வசதி கொண்ட, மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களாகும். இந்த 5 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களும் தேசிய ஆய்வக அங்கீகார வாரியத்திடமிருந்து தேசிய தரச் சான்றிதழ் பெற்றுள்ளன.

2016 ஆகஸ்ட் 12]

4. இசைவாணை மேலாண்மை

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974, பிரிவு 25-ன்படி தொழிற்சாலைகள், வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக்கழிவு நீரினை நீரோடை அல்லது கிணறு அல்லது வடிகால் அல்லது நிலத்தில் வெளியேற்றுவதற்காக மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் இசைவாணை பெற வேண்டும். மேலும், காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981, பிரிவு 21-ன்படி தொழிற்சாலைகள் காற்று மாசுக் கட்டுப்பாடு பகுதியில் இயக்குவதற்காக இசைவாணையை வாரியத்திடம் பெற வேண்டும். தமிழ்நாடு அரசு, 28.09.1983 நாளிட்ட சுற்றுச்சூழல் கட்டுப்பாடு துறை அரசாணை எண் 4-ல் தமிழ்நாடு முழுவதும் காற்று மாசுக் கட்டுப்பாடு பகுதியாக அறிவித்துள்ளது.

மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளின் மாசு அளவினைக் கணக்கிட்டு அவற்றினை சிகப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என வகைப்படுத்தியுள்ளது. இதனை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அமல்படுத்தி வருகின்றது. மேலும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிப்பதற்காக அவற்றின் மொத்த முதலீட்டு அளவினைக் கொண்டு பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழிற்சாலைகள் என வகைப்படுத்தியுள்ளது. அதன்படி தொழிற்சாலையின் மொத்த நிலையான சொத்து மதிப்பு ரூ.5 கோடிக்குகீழ் இருப்பின், அவை சிறுவகை தொழிற்சாலை எனவும், ரூ.5 முதல் 10 கோடிக்கு இடையிலிருப்பின் நடுத்தர வகை தொழிற்சாலை எனவும், ரூ.10 கோடிக்கு மேல் இருப்பின் பெரிய வகை தொழிற்சாலை எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது சுமார் 46,000 தொழிற்சாலைகள் வாரிய வரைமுறையின்கீழ் உள்ளன.

வாரியம் தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டமாக இசைவாணைகளை வழங்குகிறது. முதல் கட்டமாக தொழிற்சாலை நிறுவுவதற்கான இசைவாணை, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981-ன்கீழ், அது அமையவிருக்கும் இடத்தின் சுற்றுச்சூழல் தாக்கம், மாசு தடுப்பு முறைகள் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு சில நிபந்தனைகளின் அடிப்படையில்

வழங்கப்படுகிறது. இரண்டாவது கட்டமாக, தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த பிறகு, தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்குவதற்கு மற்றும் இயங்குவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது. தொழிற்சாலைக்கு இசைவாணை வழங்குவதை விரைவுபடுத்தும் வகையில் இசைவாணை வழங்கும் அதிகாரம் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு தொழிற்சாலையின் அளவு மற்றும் வகையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. வாரியத்தின் கள பொறியாளர்கள், தங்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து, செயல்முறைக் கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசுக் கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனைத் தொடர்ந்து கண்காணிக்கின்றனர். மேலும், பொது மக்கள் மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் மாசு பற்றிய புகார்களையும் ஆய்வு செய்கின்றனர். ஏப்ரல் 1, 2015 முதல் ஜூன் 30, 2016 வரை வாரியம் 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்கீழ், 1452 தொழிற்சாலைகளுக்கு, நிறுவுவதற்கான இசைவாணைகளையும், 2385 தொழிற்சாலைகளுக்கு இயங்குவதற்கான இசைவாணைகளையும் வழங்கியுள்ளது.

5. இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை (தொழில் புரிவதற்கு சுலபமான வழிமுறை)

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இசைவாணை மேலாண்மையில் மின் ஆளுமையை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதன்படி தொழில்முனைவோர், வாரிய இசைவாணை விண்ணப்பங்களை சுலபமாக இணையதளத்தின்மூலம் சமர்ப்பிக்கும் பொருட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமையை ஏற்படுத்தியுள்ளது. இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமையானது இணையதளத்தினை அடிப்படையாகக் கொண்ட பொதுவான பயன்பாட்டு மென்பொருளாகும். இந்த மென்பொருள், வாரியத்தின் அடிப்படை செயல்பாடுகளாக விளங்கக்கூடிய

இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பினை தானியங்கு முறையில் மேற்கொள்ள கூடியதாகும். நிறுவுவதற்கான இசைவாணை, இயங்குவதற்கான இசைவாணை, இசைவாணை புதுப்பித்தல், ஆவணங்கள் பதிவேற்றல், விளக்கங்கள் சமர்ப்பித்தல், விண்ணப்பங்களின் நிலையினை அறிதல் ஆகிய செயல்பாடுகளை தொழிற்சாலைகள் இணையதளம் மூலமாக தெரிந்து கொள்ள வழிவகுக்கிறது. இணையதளம் வழியாக இசைவாணை கட்டணம் செலுத்துதல் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

மேலும் விண்ணப்பம் மறு ஆய்வு, விளக்கங்கள் கேட்டல், ஆய்வு மேற்கொள்ளல், ஆய்வறிக்கை சமர்ப்பித்தல், இசைவாணை தயாரித்தல் ஆகிய இசைவாணை மேலாண்மை செயல்முறைகளை இணையதளம் மூலமாகவே மேற்கொள்ளவும் மற்றும் வாரியத்தின் செயல்பாடுகளை வாரிய அதிகாரிகள் இணையதளம் மூலமாகவே மேற்பார்வையிடவும் இந்த அமைப்பு வழி வகுக்கிறது. 20.01.2015 முதல் தொழிற்சாலைகளின் விண்ணப்பங்கள், இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதற்காக தொழிற்சாலைகளுக்கு உதவும் வண்ணம் வாரியம் தமது 36 மாவட்ட அலுவலகங்களிலும் உதவி மையத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்த இணையவழி வசதி, இசைவாணை மேலாண்மையில் வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தியுள்ளது.

6. இணையதளம்மூலம் புகார் தீர்வு காணும் முறை

இணையதளம் மூலமாக பொது மக்கள் புகார் தீர்வு காணும் முறையை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 1.3.2016 அன்று அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் தொழிற்சாலை மாசு குறித்தான புகார்களை பொது மக்கள் இணையதளம்மூலம் வாரியத்திடம் பதிவு செய்யலாம். இப்புகார்கள்மீது விசாரணை செய்து அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரம் மின்அஞ்சல்மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படும். ஜூன் 30, 2016 வரை 182 புகார்கள் இணையதளம்மூலம் பெறப்பட்டு, ஆய்வு செய்து தீர்வு காணப்பட்டுள்ளன.

7. தொழிற்சாலைகள் கண்காணிப்பு

தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்கும் நோக்கத்துடன் வாரியம் 25.02.2004 நாளிட்ட நடப்பாணை எண் 22-ல் தொழிற்சாலைகளின் அளவு மற்றும் வகையின்

அடிப்படையில் அவற்றினை ஆய்வு செய்தல் மற்றும் மாதிரிகள் சேகரிப்பு செய்வதற்கான கால அளவினை நிர்ணயம் செய்துள்ளது.

பிரிவு	தொழிற் சாலையின் வகை	ஆய்வுக்கான காலவரையறை	கழிவுநீர் மாதிரிகள் சேகரிப்பு காலவரையறை
பெரிய முதலீட்டில் இயங்கும் தொழிற்சாலைகள்	சிவப்பு	மூன்று மாதத்திற்கு ஒரு முறை	மாதம் ஒரு முறை
	ஆரஞ்சு	ஆறு மாதத்திற்கு ஒரு முறை	நான்கு மாதத்திற்கு ஒருமுறை
	பச்சை	இரண்டு வருடத்திற்கு ஒரு முறை	––
நடுத்தர முதலீட்டில் இயங்கும் தொழிற்சாலைகள்	சிவப்பு	நான்கு மாதத்திற்கு ஒரு முறை	மூன்று மாதத்திற்கு ஒரு முறை
	ஆரஞ்சு	ஆறு மாதத்திற்கு ஒரு முறை	ஆறு மாதத்திற்கு ஒரு முறை
	பச்சை	இரண்டு வருடத்திற்கு ஒரு முறை	––

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 12]

பிரிவு	தொழிற் சாலையின் வகை	ஆய்வுக்கான காலவரையறை	கழிவுநீர் மாதிரிகள் சேகரிப்பு காலவரையறை
சிறு முதலீட்டில் இயங்கும் தொழிற்சாலைகள்	சிவப்பு	வருடத்திற்கு ஒரு முறை	மூன்று முதல் ஆறு மாதத்திற்கு ஒரு முறை
	ஆரஞ்சு	இரண்டு வருடத்திற்கு ஒரு முறை	ஆறு மாதத்திற்கு ஒரு முறை
	பச்சை	இரண்டு வருடத்திற்கு ஒரு முறை	––
17 வகையான தொழிற்சாலைகள்		மாதம் ஒரு முறை	மாதம் ஒரு முறை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வாரியம், ஏப்ரல் 1, 2015 முதல் ஜூன் 30, 2016 வரை 1443 தொழிற்சாலைகளில் சுற்றுப்புற காற்று மாதிரி சோதனைகளையும் மற்றும் 8070 வடிகால் கழிவுநீர் மாதிரிகள் மற்றும் 19,850 செயல்முறைக் கழிவுநீர் மாதிரிகளும் எடுத்து பகுப்பாய்வு செய்துள்ளது.

8. காற்று தர கண்காணிப்பு மையம் (Care Air Centre)

தொழிற்சாலை புகைபோக்கியிலிருந்து வெளிவரும் வாயு கழிவுகளின் தரத்தையும் மற்றும் தொழிற்சாலையினை சுற்றியுள்ள காற்றின் தரத்தையும் கண்காணிக்கும் பொருட்டு சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் ஒரு காற்று தர கண்காணிப்பு

மையத்தினை வாரியம் அமைத்துள்ளது. சிகப்பு மற்றும் 17 வகையான அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டு வாரத்தின் ஏழு நாட்களிலும், 24 மணிநேரமும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய மையம் இந்தியாவில் வேறெங்கும் இல்லாத தனித்தன்மை வாய்ந்ததாகும். தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் வாயுக்களின் தன்மை மற்றும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை குறிப்பிட்ட தர அளவினை மீறும்பொழுது, அத்தொழிற்சாலைக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் உறுப்பினர் செயலருக்கும் உடன் நிவாரண நடவடிக்கை எடுக்கும் பொருட்டு குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் தானாக அனுப்பப்படும். ஜூன் 30, 2016 வரை 351 தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 334 தொழிற்சாலைகள் புகை மாசின் அளவை கண்காணிப்பதற்காகவும் மற்றும் 90 தொழிற்சாலைகள் சுற்றுப்புறக் காற்று மாசின் அளவை கண்காணிப்பதற்காகவும் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

9. நீர் தர கண்காணிப்பு மையம் (Water Quality Watch Centre)

வாரியம், சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் ஒரு நீர் தர கண்காணிப்பு மையத்தினை அமைத்துள்ளது. இம்மையம் ஜூலை 2015 முதல் செயல்பட்டு வருகின்றது. தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரத்தினை இணைய வழிமூலம் வாரத்தின் ஏழு நாட்களிலும், 24 மணி நேரமும் தொடர்ந்து இம்மையம் கண்காணிக்கின்றது. ஜூன் 30, 2016 வரை 82 தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 44 தொழிற்சாலைகள், அவற்றில் அமைக்கப்பட்டுள்ள பூஜ்ஜிய மாசுநிலை கழிவுநீர் வெளியேற்ற நிலையத்தினை கண்காணிப்பதற்காகவும், 38 தொழிற்சாலைகள் அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தரத்தினை கண்காணிப்பதற்காகவும் இணைக்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான கண்காணிப்பு முறை தொழிற்சாலைகளின் சுய கண்காணிப்பிற்கும்

2016 ஆகஸ்ட் 12]

மற்றும் வெளியேற்றப்படும் கழிவுநீரின் தர மேம்பாட்டிற்கும் வழிவகை செய்கின்றது.

10. பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சிறு தொழிற்சாலைகளின் முக்கியத்துவத்தையும் மற்றும் மாசுக் கட்டுப்பாடு குறியீடுகளை அடைவதற்கு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் சிரமத்தையும் கருத்தில் கொண்டு, சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் அவர்கள் தொழில் முன்னேற்றம் அடையும் வகையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், சிறு தொழிற்சாலைகளுக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவி செய்யும் திட்டத்தை அறிமுகம் செய்தது. இத்திட்டம் தொகுப்பாக அமைந்துள்ள சிறு தொழிற்சாலைகள், பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு நிதி உதவி பெறுவதற்கு வழிவகை செய்தது. அதன்படி, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொகுப்பாக அமைந்திருக்கும் சிறு தொழிற்சாலைகளுக்கு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் வாரியம் முக்கிய பங்காற்றி வருகிறது. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட அறிக்கையின்மீது தொழில்நுட்பப் பரிசீலனை செய்வதற்கு வாரியம் உதவி புரிகிறது. தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

தோல் பதனிடும் தொழிற்சாலைகள்	**13 திட்டங்கள்**
துணிச்சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள்	**30 திட்டங்கள்**
உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள்	**1 திட்டம்**

தோல் தொழிற்சாலைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள 13 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 11 பொதுக்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ஜிய நிலைப்பாட்டை அடையக்கூடிய அமைப்புகளைப் பொருத்தியுள்ளன. மீதம் உள்ள இரண்டு பொது சுத்திகரிப்பு நிலையங்களில், ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் முதல் மற்றும் இரண்டாம் நிலை சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவியுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை, சுத்திகரிக்கபட்ட வடிகால் கழிவுநீருடன் கலந்து வாரியம் நிர்ணயித்த தர அளவினை எட்டுவதற்கு முடிவு செய்துள்ளது. மற்றொரு பொது சுத்திகரிப்பு நிலையத்தில் பூஜ்ஜிய மாசு நிலை கழிவுநீர் வெளியேற்று நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது.

துணிச் சலவை மற்றும் சாய தொழிற்சாலைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள 30 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், 19 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ஜிய நிலைப்பாட்டை அடையக் கூடிய அமைப்பினை பொருத்தியுள்ளன. மீதமுள்ள 11 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ஜியநிலை கழிவுநீர் வெளியேற்றத்துடன் கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைக்காத காரணத்தால் மாண்புமிகு உயர்நீதிமன்ற ஆணையின்படி மூடப்பட்டுள்ளன. கொடைக்கானலில், கொடை ஏரியைச் சுற்றியுள்ள தங்கும் மற்றும் உணவு விடுதிகளிலிருந்து வெளியேறும் வடிகால் கழிவுநீரை சேகரித்து சுத்திகரிப்பு செய்வதற்கு ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருகின்றது.

11. திடக்கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016—ஐ அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின்படி, திடக்கழிவு என்பது வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் திட மற்றும் அரை திடக்கழிவுகள், சுகாதாரக் கழிவுகள், வணிகக் கழிவுகள், நிறுவனக் கழிவுகள், உணவகம் மற்றும் சந்தைக் கழிவுகள், குடியிருப்பு அல்லாத பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள், தெருக்களைச் சுத்தப்படுத்தும்போது ஏற்படும் கழிவுகள், வடிகால்களைத் தூர்வாரும்போது உருவாகும் கழிவுகள், தோட்டக் கழிவுகள், விவசாயம் மற்றும் கால்நடை வளாகக் கழிவுகள், சுத்திகரிக்கப்பட்ட மருத்துவக் கழிவுகள் ஆகியவை இதில் அடங்கும். தொழிற்சாலைக் கழிவுகள், மருத்துவக் கழிவுகள், மின்னணுக் கழிவுகள், மின்கலன் கழிவுகள், கதிர் இயக்க கழிவுகள் இதில் அடங்காது. மேற்படி திடக் கழிவுகளை சேகரித்து, சுத்திகரிப்பு

செய்து அகற்றுவது அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் கடமையாகும்.

மேற்படி விதிகள் முறையாகச் செயல்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பதும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு திடக் கழிவுகளைச் சுத்திகரிப்பு செய்து அகற்றுவதற்கான அங்கீகாரம் வழங்குவதும் வாரியத்தின் பொறுப்பாகும். அதன்படி உள்ளாட்சி அமைப்புகள், திடக்கழிவுகள் மேலாண்மை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்த தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அங்கீகாரம் வழங்குகிறது. இதுவரை வாரியம் 5 மாநகராட்சிகள், 48 நகராட்சிகள் மற்றும் 73 பேரூராட்சிகளுக்கு திடக் கழிவுகளைத் தரம் பிரித்து கையாள்வதற்கும் மற்றும் உரம் தயாரிக்கவும் அங்கீகாரங்களை வழங்கியுள்ளது. திடக்கழிவுகளை உருவாகுமிடத்திலிருந்தே பிரித்து கையாளுதல், குறைத்தல், மறு சுழற்சி செய்தல் மற்றும் மறு உபயோகம் செய்தல் போன்றவற்றை வாரியம் பரிந்துரை செய்கின்றது.

12. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016-ஐ அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின் படி, பிளாஸ்டிக் கழிவு என்பது, பயன்படுத்தப்பட்டு அல்லது பயன்படுத்தும் நோக்கம் நிறைவேறியவுடன் தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் ஆகும். பிளாஸ்டிக் கழிவுகளைத் தரம்பிரித்தல், சேகரித்தல், சேமித்தல், கொண்டு செல்லுதல், செயலாக்கம் செய்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும்.

இவ்விதிகளின்படி, புதிய மற்றும் மறு சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் பைகள் 50 மைக்ரான் தடிமனுக்குகீழ் இருக்கக்கூடாது. பிளாஸ்டிக் பைகள், பல அடுக்குகள் கொண்ட பேக்கேஜிங், பிளாஸ்டிக் சீட் அல்லது அதுபோன்ற பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்வோர் மற்றும் இறக்குமதி செய்வோர், மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். இவ்விதிகளின்படி பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பல அடுக்கு பேக்கேஜிங் பிளாஸ்டிக் உற்பத்தி செய்வோர் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவோர்களைப் பதிவு செய்து, கண்காணிப்பது மாநில மாசுக் கட்டுப்பாடு

[2016 ஆகஸ்ட் 12

வாரியத்தின் பொறுப்பாகும். இதுவரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 471 பிளாஸ்டிக் பைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் 140 பிளாஸ்டிக் பொருட்கள் மறு சுழற்சி செய்யும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்துள்ளது. இவற்றில் 219 தொழிற்சாலைகளுக்கு வாரியத்தின் பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம், ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் ஆண்டுதோறும் ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) 2015 ஆம் ஆண்டிலிருந்து வாரியம் வழங்கி வருகின்றது. மேற்படி விதிகளை திறம்பட செயல்படுத்த வேண்டும் என அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

13. தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016-ஐ அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின்படி தீங்கு விளைவிக்கும் கழிவு என்பது, அதனுடைய இயற்பியல், வேதியியல், மறுவினையாக்கம், நச்சு பண்பு, எரியக்கூடிய, வெடிக்கக்கூடிய அல்லது அரிமான பண்புகளுடையதும் அல்லது மனித நலம் அல்லது சுற்றுச்சூழலுக்கு அபாயம் தரவல்லது ஆகும். தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உற்பத்தி செய்வோர், அக்கழிவுகளை ஆரம்ப நிலையிலேயே தவிர்த்தல், குறைத்தல், மறு உபயோகம் செய்தல், மறு சுழற்சி செய்தல், மீளப்பெறுதல், இணை செயலாக்கத்திற்குப் பயன்படுத்துதல் மற்றும் பாதுகாப்பான முறையில் அகற்றுதல் போன்ற வழிமுறைகளை கையாளவேண்டும். இவ்விதிகளின்படி மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியம் தீங்கு விளைவிக்கும் கழிவுகளைக் கையாள்வதற்கான அங்கீகாரத்தை வழங்கவேண்டும்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், 3545 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்து, இவ்விதிகளின்கீழ் அங்கீகாரம் வழங்கியுள்ளது. தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்கு 6.92 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் உற்பத்தியாகின்றன. இவற்றில் 2.97 இலட்சம் டன் கழிவுகள் நில நிரப்பு செய்யப்படுபவை,

2016 ஆகஸ்ட் 12]

3.43 இலட்சம் டன் கழிவுகள் மறு சுழற்சி செய்யப்படுபவை மற்றும் 0.52 இலட்சம் டன் கழிவுகள் எரிப்பான் மூலமாக அப்புறப்படுத்தப்படுபவை. தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி, விஞ்ஞான முறையில் பாதுகாப்பாகக் கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. கும்மிடிபூண்டியில் அமைந்துள்ள சிப்காட் வளாகத்தில் தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்களை, பாதுகாப்பாக சுத்திகரித்து, நிலம்நிரப்பும் ஒரு பொது வசதி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் ஒரு பொது சுத்திகரிப்பு அமைப்பு விருதுநகர் மாவட்டம், உண்டுஉருமிகிடாக்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

துணிச் சலவை மற்றும் சாயமிடும் தொழிற்சாலைகளின் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து உருவாகும் தீங்கு விளைவிக்கும் திடக்கழிவினை, சிமென்ட் தொழிற்சாலைகளில் மூலப் பொருளாகவும் மற்றும் எரிபொருளாகவும் பயன்படுத்துவதில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் முன்னோடி முயற்சிகளை எடுத்துள்ளது. இதுவரை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்பட்ட சுமார் 50,000 டன் திடக்கழிவுகள் சிமென்ட் தொழிற்சாலையில் மூலப் பொருள்களுடன் கலந்து சிமென்ட் தயாரிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மற்ற தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளைச் சீரமைப்பு செய்து, அதனை சிமென்ட் தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இராணிப்பேட்டையில் தி/ள். குஜராத் சுற்றுச்சூழல் மற்றும் உட்கட்டமைப்பு நிறுவனம் ஒரு பொது வசதியை ஏற்படுத்தி இயக்கி வருகின்றது.

13.1 தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மைக்கு இணையதளம் மூலம் அங்கீகாரம் வழங்குதல்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், இணையதளம் மூலமாக தீங்கு விளைவிக்கும் கழிவுகளைக் கையாள்வதற்கான அங்கீகார விண்ணப்பங்களை பெற்று, பரிசீலனை செய்து, அங்கீகாரத்தையும் இணையதளம் மூலமாகவே வழங்குவதற்கான மென்பொருளை 01.03.2016 அன்று அறிமுகம் செய்துள்ளது. இதன்மூலம்

தொழிற்சாலைகள் தீங்கு விளைவிக்கும் கழிவுகளைக் கையாள்வதற்கான அங்கீகாரம் வேண்டி விண்ணப்பத்தினை இணையதளம்மூலம் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு, இணையதளம்மூலம் அங்கீகாரம் வழங்கப்படும். இவ்வசதியின்மூலம் தொழிற்சாலைகள் தங்களது விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை இணையதளம் மூலமாகவே அறிந்து கொள்ளலாம். ஜுன் 30, 2016 வரை 399 தொழிற்சாலைகளிலிருந்து விண்ணப்பங்கள் இணையதளம்மூலம் பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகின்றன.

14. மருத்துவக் கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள், 2016—ஐ அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின்படி மருத்துவக் கழிவு என்பது, மனித இனம் மற்றும் விலங்கினங்களுக்கு நோய் பரிசோதித்தல், சிகிச்சை அளித்தல், நோய் தடுப்பு செய்தல் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி செய்தல், மருத்துவ முகாம்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் கழிவுகளாகும். மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து சுத்திகரிப்பு செய்து அகற்றுவது, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவோர்களின் பொறுப்பாகும். மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகளை அனைத்து மருத்துவமனைகளும் சரிவர பின்பற்றுகின்றனவா என்பதை உறுதி செய்வது மாநில அரசு சுகாதாரத் துறையின் பொறுப்பாகும்.

மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, அந்நிறுவனங்கள் விதிகளை சரிவர கடைபிடிக்கின்றனவா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்தை சார்ந்ததாகும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இவ்விதிகளின்கீழ் 6261 தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அனைத்து மருத்துவமனைகளும் மருத்துவக் கழிவுகளைச் சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரிப்பு செய்தல் மற்றும் விஞ்ஞான முறைப்படி அகற்றுதல் பொருட்டு, பொது மருத்துவக்

2016 ஆகஸ்ட் 12]

கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களில் உயர் அழுத்த நீராவிமூலம் சுத்திகரிக்கும் கருவி, துரும்பாக்கும் கருவி, எரிப்பான் மற்றும் பாதுகாப்பான நிலநிரப்பு ஆகிய அமைப்புகள் உள்ளன. தமிழ்நாட்டில் 11 பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. இவற்றில் நாளொன்றுக்கு 43 டன் மருத்துவக் கழிவுகள் கையாளப்படுகின்றன. மேலும் 3 பொது மருத்துவக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் திருவள்ளூர், கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

15. மின்னணுக் கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், மின்னணு கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகள் அக்டோபர் 1, 2016 முதல் அமலுக்கு வருகின்றது. இவ்விதிகளின்படி, மின்னணு கழிவு என்பது பழைய, காலாவதியான தொலைபேசி, கைப்பேசி, கணினி, மடிக்கணினி, தொலைகாட்சி பெட்டி, குளிர்சாதனப்பெட்டி, துணிச் சலவை இயந்திரம், பாதரச விளக்குகள் போன்ற மின் மற்றும் மின்னணு சாதனங்கள் அடங்கும். மின் மற்றும் மின்னணு சாதனங்கள் உற்பத்தியாளர், தயாரிப்பாளர், நுகர்வோர், மொத்தமாக நுகர்வோர், சேகரிப்பு மையங்கள், வியாபாரம் செய்வோர், இணையம்மூலம் சில்லரை வர்த்தகம் செய்வோர், மின் மற்றும் மின்னணு சாதனங்களை சீர் செய்வோர், பிரித்தெடுப்போர் மற்றும் மின்னணு கழிவு, மின் மற்றும் மின்னணு சாதனங்களை மறுசுழற்சி செய்தல், விற்பனை செய்தல், இடமாற்றம் செய்தல், கொள்முதல் செய்தல், சேகரித்தல், சேமித்தல், செயல்முறை செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவோருக்கு இவ்விதிகள் பொருந்தும்.

இவ்விதிகளின்படி, மின் மற்றும் மின்னணு சாதனங்களை தயாரிப்போர், அவர்கள் தயாரிக்கும் பொருட்களால் உண்டாகும் மின்னணு கழிவுகளை ஒருமுகப்படுத்தி சேகரிப்பு செய்வது அவர்களின் பொறுப்பாகும். மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியம் மின் மற்றும் மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்வோர், பிரித்தெடுப்போர், மறுசுழற்சி செய்வோர், சீர் செய்வோர்,

[2016 ஆகஸ்ட் 12

ஆகியோருக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் செய்ய வேண்டும். மின் மற்றும் மின்னணு சாதனங்களை தயாரிப்போர், மின்னணுக் கழிவுகளை ஒருமுகப்படுத்தி சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் கையாளுகின்றார்களா என்பதை மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியம் கண்காணிக்க வேண்டும். மேலும் மின் மற்றும் மின்னணு சாதனங்களை பிரித்தெடுப்போர், மறுசுழற்சி செய்வோர் மற்றும் சீர் செய்வோர்களை மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியம் அவ்வப்போது ஆய்வு செய்து கண்காணிக்க வேண்டும். மேலும், மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியம் சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் மறுசுழற்சி செய்வதை ஊக்குவிக்கும் வகையில் அதற்கான தகவல்கள், அங்கீகாரம் வழங்கப்பட்ட விவரங்கள் மற்றும் விதிகளை மீறுவோர்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை இணையதளத்தில் வெளியிட வேண்டும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மின்னணு கழிவு மேலாண்மை விதிகளின்படி, 35 தொழிற்சாலைகளுக்கு (தயாரிப்பாளர்கள்-4, சேகரிப்பு மையங்கள்-13, பிரித்தெடுப்போர்-13, மறுசுழற்சி செய்வோர்-5) அங்கீகாரம் வழங்கியுள்ளது.

16. கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம், கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ அறிவிக்கை செய்துள்ளது. கட்டுமான செயல்களின்போது உண்டாகும் கழிவுகளை மேலாண்மை செய்வதற்காக பிரத்தியேகமாக இவ்விதிகள் புதிதாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இவ்விதிகள் தனி நபர் அல்லது நிறுவனம் அல்லது குழுமம்மூலம் மேற்கொள்ளப்படும் கட்டட கட்டுமானம், பழுதுபார்த்தல், இடித்தல் போன்ற செயல்களால் வெளியேற்றப்படும் கட்டுமான பொருட்கள், இடிமான கழிவுகள் ஆகியவற்றை மேலாண்மை செய்வதற்குப் பொருந்தும். உள்ளாட்சி அமைப்புகள் கட்டுமானம் மற்றும் இடிமான கழிவுகளை சரியான முறையில் மேலாண்மை செய்வதை உறுதி செய்ய வேண்டும். மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியம் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, விதிகளை சரியான முறையில் அமல்படுத்துகின்றார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும். கட்டுமானம் மற்றும் இடிமான கழிவுகளைச் சேகரித்து, மறுசுழற்சி செய்யும் வசதி ஏற்படுத்துவதற்கான இடத்தை தேர்வு

செய்யும்படி உள்ளாட்சி அமைப்புகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கேட்டு கொண்டுள்ளது.

17. நீரின் தன்மை கண்காணிப்பு

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் பெரிய நதிகள் மற்றும் அதன் உப நதிகளில் நீரின் தன்மையை மொத்தம் 55 இடங்களில் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டம் மற்றும் புவி சுற்றுப்புறச்சூழல் கண்காணிப்பு திட்டத்தின்கீழ் கண்காணித்து வருகின்றது. அதன் விவரம் பின்வருமாறு:

வரிசை எண்	நீர்நிலைகள்	கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை	நீர்நிலைகளின் தரம்
1.	காவிரி ஆறு மற்றும் உப நதிகள்	33	குளிப்பதற்கும் முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும், மீன்வளர்ப்பு மற்றும் வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது
2.	தாமிரபரணி ஆறு	12	குளிப்பதற்கும் முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது.
3.	பாலாறு	1	சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது

[2016 ஆகஸ்ட் 12

வரிசை எண்	நீர்நிலைகள்	கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை	நீர்நிலைகளின் தரம்
4.	வைகை ஆறு	1	சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது
5.	ஏரிகள்	8	முறையான சுத்திகரிப்பும், அதை தொடர்ந்து கிருமிநாசினிமூலம் சுத்திகரிப்பும் செய்து குடிநீர் பயன்பாட்டிற்கும் மற்றும் மீன்வளர்ப்பு, வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது.

17.1 தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள்

துணிச் சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளில் நீர் நிலைகளின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு, வாரியம் காளிங்கராயன் வாய்க்கால் மற்றும் நொய்யல் ஆற்றில் ஒவ்வொன்றிலும் மூன்று இடங்களில் தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள் அமைத்துள்ளது. இதுபோன்று தாமிரபரணி ஆற்றிலும் மூன்று இடங்களில் தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்களை வாரியம் அமைத்துள்ளது. இந்நிலையங்களின்மூலம் நீரின் அமில கார சமநிலை, மொத்தம் கரைந்துள்ள திடப் பொருட்கள், கரைந்துள்ள பிராண வாயு அளவு ஆகிய காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. இதுபோன்று காவிரி ஆற்றிலும் கண்காணிப்பு நிலையங்கள் அமைக்க வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

2016 ஆகஸ்ட் 12]

18. சுற்றுப்புற காற்றின் தர கண்காணிப்பு

தமிழகத்தின் முக்கிய நகரங்களில், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் நச்சு புகை மற்றும் வாகன புகையினால், சுற்றுப்புற காற்றின் தரம் பாதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் சுற்றுப்புற காற்றின் தரத்தினைக் கண்காணிக்கும் வண்ணம் மொத்தம் 28 இடங்களில், தேசிய காற்று மண்டல கண்காணிப்பு திட்டத்தின்கீழ் அதிக கொள்ளளவு மாதிரி சேகரிப்பான் கருவி கொண்டு காற்றின் தரத்தினை வாரியம் கண்காணித்து வருகின்றது. அதன் விவரம் பின்வருமாறு:

வரிசை எண்	நகரம்	இடம்	நில பயன்பாடு
1.	சென்னை	கத்திவாக்கம்	தொழிற்சாலைப் பகுதி
		மணலி	தொழிற்சாலைப் பகுதி
		திருவொற்றியூர்	தொழிற்சாலைப் பகுதி
		கீழ்பாக்கம்	வியாபார மற்றும் வாகன புழக்க பகுதி
		தியாகராய நகர்	வியாபார மற்றும் வாகன புழக்க பகுதி
		நுங்கம்பாக்கம்	வியாபார மற்றும் வாகன புழக்க பகுதி
		அண்ணாநகர்	குடியிருப்புப் பகுதி
		அடையாறு	குடியிருப்புப் பகுதி
2.	கோவை	மாவட்ட ஆட்சியர் அலுவலகம்	கலப்பு குடியிருப்பு பகுதி
		பொன்னையா ராஜபுரம்	குடியிருப்புப் பகுதி
		சிட்கோ கட்டடம்	தொழிற்சாலைப் பகுதி

3.	மதுரை	நெடுஞ்சாலைத் துறை கட்டடம்	குடியிருப்புப் பகுதி
		சுசி கார்ஸ் ட்ரக்ஸ் (பி) லிட்	தொழிற்சாலைப் பகுதி
		மதுரை மாநகராட்சி அலுவலகம் (தெற்கு)	கலப்பு குடியிருப்புப் பகுதி
4.	சேலம்	சௌடேஸ்வரி கல்லூரி	கலப்பு குடியிருப்பு பகுதி
5.	திருச்சி	காந்தி மார்க்கட்	வியாபாரப்பகுதி
		மெயின்கார்டு கேட்	போக்குவரத்துப் பகுதி
		பிஷப் ஹீபர் கல்லூரி	கலப்பு குடியிருப்பு பகுதி
		பொன்மலை	குடியிருப்புப் பகுதி
		மையப்பேருந்து நிலையம்	போக்குவரத்துப் பகுதி
6.	தூத்துக்குடி	இராஜா ஏஜென்சீஸ்	தொழிற்சாலைப் பகுதி
		சிப்காட்	தொழிற்சாலைப் பகுதி
		ஏ.விஎம். கட்டடம்	கலப்பு குடியிருப்பு பகுதி
7.	மேட்டூர்	இராமன் நகர்	குடியிருப்பு பகுதி
		சிட்கோ	தொழிற்சாலைப் பகுதி
8.	கடலூர்	ஈச்சங்காடு கிராமம்	குடியிருப்பு பகுதி
		இம்பீரியல் கல்லூரி	வியாபாரப் பகுதி
		சிப்காட்	தொழிற்சாலைப் பகுதி

2016 ஆகஸ்ட் 12]

இவ்விடங்களில் வாரம் இருமுறை 24 மணி நேரமும் கண்காணிப்பு நடத்தி, மாதிரிகள் எடுக்கப்பட்டு சுவாசிக்கும்போது உட்செல்லக்கூடிய 10 மைக்ரான் அளவுக்கு குறைந்த மிதக்கும் நுண்துகள்கள் (PM10), சல்பர்-டை-ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன்-டை-ஆக்ஸைடு ஆகிய வாயுக் கழிவுகளின் அளவுகள் கண்டறியப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டுக்கான சல்பர்-டை-ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன்-டை-ஆக்ஸைடுகளின் சராசரி அளவுகள், கண்காணிப்பு நடத்திய அனைத்து இடங்களிலும், பரிந்துரைக்கப்பட்ட காற்றுத்தர அளவீடுகளுக்குட்பட்டு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சுவாசிக்கும்போது உட்செல்லக்கூடிய மிதக்கும் நுண்துகள்களின் அளவு சில இடங்களில் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நுண்துகள்கள் அதிகமாக இருப்பதற்கு முக்கிய காரணம் வாகன போக்குவரத்தாகும்.

18.1 தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்

சுற்றுப்புற காற்று தரத்தினை, மனிதர்கள்மூலம் கண்காணிப்பு செய்வதுடன், தானியங்கிமூலம் தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், வாரியம் 6 இடங்களில் தானியங்கி தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. அதன்படி சென்னையில் 4 இடங்களில் அதாவது கோயம்பேடு, இராயபுரம், பெருங்குடி (சாய் நகர்), கொடுங்கையூர் ஆகிய இடங்களிலும், கும்மிடிப்பூண்டி சிப்காட் வளாகத்திலும் மற்றும் தூத்துக்குடி சிப்காட் வளாகத்திலும் அமைக்கப்பட்டு இயக்கத்தில் உள்ளன. இந்நிலையங்கள் மூலம் காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவுக்குக்கீழ் உள்ள நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்குகீழ் உள்ள நுண்துகள்கள், சல்பர்-டை-ஆக்ஸைடு, நைட்ரஜன்-டை-ஆக்ஸைடு, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு மற்றும் பென்சீன் ஆகிய வாயு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இத்தொடர் கண்காணிப்பு நிலையங்களின் முக்கிய அம்சங்கள்

i. ஒவ்வொரு 15 நிமிட இடைவெளியில் காற்றின் தரம் பதிவு செய்யப்படுகின்றது.

ii. காற்றின் தரம், நிர்ணயிக்கப்பட்ட தர அளவினைவிட அதிகரிக்கும் போது உடனடியாக தகவல் தெரிவிக்கப்படுகிறது.

iii. கருவியின் அளவிடும் திறன் மற்றும் காற்று காரணிகள் அளவீட்டினைக் கொண்டு பதிவு செய்யப்பட்ட தகவல்கள் சரிபார்க்கப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 12

iv. தொடர் கண்காணிப்பு நிலையங்கள் மாநிலத்தில் எவ்விடத்திலிருந்தாலும், அவற்றில் பதிவு செய்யப்படும் தகவல்களை ஒரு பொதுவான அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டு கண்காணிப்பு செய்யலாம்.

v. இந்நிலையங்களில் பதிவு செய்யப்படும் தகவல்களை கைப்பேசி மற்றும் தொலைப்பேசி வாயிலாக தெரிந்து கொள்ளும் வசதியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

vi. முந்தைய மற்றும் தற்போதைய காற்று தரம் பற்றிய தகவல்களை உடனடியாக தேவையான வடிவில் பெற்றுக் கொள்ளலாம்.

vii. இதில் உள்ள மென்பொருளைக் கொண்டு ஓர் இடத்தின் சுற்றுப்புற காற்று தரம் பற்றி ஒரு மணி நேரம், எட்டு மணி நேரம், மாதம் மற்றும் வருடம் ஆகிய கால இடைவெளியில் மற்ற இடங்களின் காற்று தரத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

18.2 நடமாடும் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் காற்று தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் ஒரு நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையத்தினை மார்ச் 2016-ல் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நடமாடும் நிலையத்தின்மூலம் காற்றில் கலந்துள்ள கந்தக-டை-ஆக்ஸைடு, நைட்ரஜன்-டை-ஆக்ஸைடு, அம்மோனியா, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு, பென்சீன், டொலுவின், ஈத்தைல் பென்சீன், சைலீன், காற்றில் 10 மைக்ரான் அளவிற்குகீழ் உள்ள நுண் துகள்கள் மற்றும் 2.5 மைக்ரான் அளவிற்குகீழ் உள்ள நுண் துகள்கள் ஆகியவற்றை அளவீடு செய்யலாம். மேலும், இந்நிலையத்தில் காற்றின் திசை, காற்றின் வேகம், சுற்றுப்புற வெப்ப நிலை, ஈரப்பதம், சூரிய கதிர்வீச்சு, மழை அளவு, காற்றின் அழுத்தம் போன்ற வானிலை சம்பந்தமான தகவல்களை அறியும் கருவிகள் உள்ளன. இந்த நடமாடும் நிலையத்தின்மூலம் சென்னை பெருநகரின் அதிக மாசு பகுதிகள் மற்றும் இதர பகுதிகளில் காற்றின் தரத்தினை அளவீடு செய்யலாம். இந்தியாவில் உள்ள மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களில் முதன் முதலில் நடமாடும் காற்று தர கண்காணிப்பு நிலையத்தை ஏற்படுத்திய பெருமை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தையே சாரும்.

2016 ஆகஸ்ட் 12]

19. வாரியத்தின் இதர முக்கிய பணிகள்

19.1 தூய்மையான தொழில்நுட்பங்கள்

முழுமையான சுற்றுச்சூழல் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்தியிலிருந்து வெளியேறும் கழிவுகளை இறுதியில் சுத்திகரிப்பு செய்வதை தவிர்த்து, கழிவுகளே உற்பத்தியாகாமல் உள்ள தூய்மையான தொழில்நுட்ப முறைகளை கையாளவேண்டும் என வாரியம் அறிவுறுத்தி வருகின்றது. அதன்படி தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகள் தூய்மையான தொழில்நுட்ப செயல்முறைக்கு மாறியுள்ளன. உதாரணமாக,

- எரிசோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல்.

- சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல்.

- பி.பி.சி சிமெண்ட் உற்பத்தியில் 25 முதல் 30 சதவிகிதம் வரை எரிசாம்பலைப் பயன்படுத்துதல்.

- கந்தக அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள், இருமுறை மாற்றம் மற்றும் உட்கிரகிக்கும் தொழில்நுட்பத்தைச் செயல்படுத்துதல்.

- சயனைடு அற்ற முலாம் பூசுதல் மற்றும் சயனைடு உப்புக்குப் பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்பக் கடினப்படுத்துதலுக்குப் பின்பற்றுதல்.

- மரக்கூழ் மற்றும் காகித தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ-குளோரின் உருவாவதைக் குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினைப் பின்பற்றுதல்.

- செறிவூட்டப்பட்ட கரி தயாரிக்கும் தொழிற்சாலைகள், தங்கள் உற்பத்திக்கு தேவைப்படும் நீராவியினை அதற்கென அமைக்கப்பட்ட எரிபொருளை கொண்டு இயங்கும் கொதிகலனை நிறுத்திவிட்டு, உபரி வெப்பத்தை கொண்டு இயங்கும் கொதிகலனை நிறுவியுள்ளன. இதனால் விறகு மற்றும் நிலக்கரி எரிபொருள் பயன்பாடு தவிர்க்கப்பட்டதுடன், பசுமைக்குடில் வாயுக்கள் வெளியேறுவதும் தவிர்க்கப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 12

19.2தொழில்நுட்ப செயல் விளக்க மையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இந்திய தொழில்நுட்ப கழகம், சென்னையுடன் இணைந்து ஐ.ஐ.டி வளாகத்தில் ஒரு தொழில்நுட்ப செயல் விளக்க மையத்தை ரூ.5 கோடி நிதியில் ஏற்படுத்தியுள்ளது. இதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. இந்த தொழில்நுட்ப செயலாக்க மையமானது, அரிசி ஆலை, சவ்வரிசி ஆலை, சிறுவகை சாயமிடும் தொழிற்சாலைகளுக்கான சுத்திகரிப்பு முறைகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டது. இந்த மையத்தின்மூலம் நிலநிரப்பினால் ஏற்படும் பிரச்சினைகளை கையாள்வது குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு உள்ளாட்சி துறை அதிகாரிகள், தீயணைப்பு துறை அதிகாரிகள் மற்றும் வாரிய அதிகாரிகளுக்கும் நடத்தப்பட்டது. மேலும் இம்மையத்தின்மூலம் சவ்வரிசி தொழிற்சாலைகளுக்கான தொழில்நுட்ப கருத்தரங்கம் நடத்தப்பட்டு, அதில் சவ்வரிசி தொழிற்சாலைகளின் கழிவுநீரின் தன்மையினை அறிந்து கொள்ளவும், காற்றில்லா சுத்திகரிப்பு முறை, எரிவாயு உற்பத்தி மற்றும் அதன் தன்மை, எரிவாயு உற்பத்தி அதிகரிப்பு போன்றவை பற்றி விளக்கப்பட்டது. மேலும் சவ்வரிசி தொழிற்சாலை கழிவுநீரைப் பயன்படுத்தி, காற்றில்லா சுத்திகரிப்பு செய்து எரிவாயு எடுப்பதற்கான சிறந்த தொழில்நுட்ப முறையை செயல் விளக்கம் செய்து காட்டுவதற்கு ஒரு 'மேல் நோக்கி நகரும் காற்றில்லா சேற்றுபடலம்' என்ற சுத்திகரிப்பு அமைப்பினை இம்மையம் வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இது சம்பந்தமாக மேலும் ஆராய்ச்சி நடந்து வருகின்றது.

19.3 மாபெரும் மரம் நடும் திட்டம்

தமிழ்நாட்டில் மாபெரும் மரம் நடும் திட்டம் செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வனத் துறை மூலம் 64 இலட்சம், 65 இலட்சம், 66 இலட்சம் மற்றும் 67 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதற்காக 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிதி உதவி செய்துள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரை வாரியம் ரூ.28.84 கோடி, ரூ.20 கோடி, ரூ.17.99 கோடி மற்றும் ரூ.16.832 கோடியினை முறையே

2016 ஆகஸ்ட் 12]

2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வனத் துறைக்கு வழங்கியுள்ளது.

19.4 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொது மக்கள் பங்கேற்பு

பல்வேறு மாசு கட்டுப்பாடு அளவீடுகளை, செம்மையான முறையில் அடைய, சுற்றுச்சூழல் பிரச்சாரம் ஒரு சிறந்த கருவியாக உள்ளது. வாழ்வதற்கான சிறந்த சூழல் என்ற முக்கிய இலக்கினை அடைய, அரசு இயந்திரம், சுற்றுச்சூழலுக்கு உகந்த விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை செயல்படுத்தி வருகிறது. இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு வகையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது.

- **விநாயகர் சதுர்த்தி:–**

நீர்நிலைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் விநாயகர் சிலைகள் தயாரிப்பதற்கு பிளாஸ்டர் ஆப் பாரீஸ் மற்றும் பெயிண்ட்டுகளை பயன்படுத்த கூடாது என்று விழிப்புணர்வு பிரச்சாரம் ஒவ்வொரு மாவட்ட தலைமையகத்திலும், நகரங்களிலும் நடத்தப்படுகிறது. மேலும், சிலைகள் கரைக்கப்படுவதற்கு முன்பும், கரைத்த பின்பும், கண்டறியப்பட்ட நீர் நிலைகளில் நீரின் தரம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் ஆண்டுதோறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

- **தீபாவளி பண்டிகை:–**

125 டெசிபெல் என்ற ஒலி அளவுக்கு மேல் ஒலி ஏற்படுத்தும் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது என்றும், மேலும் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை பட்டாசுகளை வெடிக்க வேண்டாம் என்றும், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வேலூர், சேலம், ஒசூர், திருப்பூர், திண்டுக்கல் மற்றும் கடலூர் ஆகிய நகரங்களில் சுற்றுப்புற காற்றுத்தரம் மற்றும் ஒலி அளவினை, தீபாவளிக்கு முந்தைய நாளிலும், தீபாவளி

[2016 ஆகஸ்ட் 12

நாளன்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது. இதன் முடிவுகள் வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

➢ **போகி பண்டிகை:—**

டயர்கள், டியூபுகள், பிளாஸ்டிக் பொருட்கள், துணிகள் போன்ற வீணான பொருட்களை எரிக்கக்கூடாது என்று விழிப்புணர்வு பிரச்சாரங்கள் வாரியத்தால் நடத்தப்படுகிறது. மேலும் சென்னை மாநகரில், 15 இடங்களில், போகி பண்டிகைக்கு முந்தைய நாட்களிலும், போகி பண்டிகை நாளிலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது சுற்றுப்புறக் காற்று தரத்தினைக் கண்காணிக்கிறது. இதன் முடிவுகள் வாரிய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

➢ **கார்த்திகை மகா தீபத் திருவிழா:—**

திருவண்ணாமலையில் நடைபெறும் கார்த்திகை மகா தீபத் திருவிழாவின்போது பிளாஸ்டிக் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் வாரியத்தின் மூலம் நடத்தப்படுகின்றன. அதன்படி, பிளாஸ்டிக் பைகளை தவிர்த்து அதற்கு மாற்றாக துணிப்பை, காகிதப் பை, சணல் பை போன்றவற்றை பயன்படுத்த ஊக்குவிக்கும் வண்ணம், கார்த்திகை மகா தீபத் திருவிழாவிற்கு துணிப்பை மற்றும் சணல் பையுடன் வரும் பொது மக்களுக்கு கூப்பன் வழங்கி, இறுதியில் குலுக்கல் மூலம் தேர்வு செய்து தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை வாரியம் பரிசாக அளிக்கின்றது. இந்நிகழ்ச்சி பொது மக்களிடையே பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

➢ **மகாமகம் திருவிழா:—**

ஜனவரி 2016-ல், கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகம் திருவிழாவில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பெரிய அளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியது. 7.1.2016 அன்று "மாசில்லா மகாமகம்" என்ற பொருளை முன்வைத்து கும்பகோணத்தில் ஒரு பெரிய பேரணியை நடத்தியது. இதில் 1000-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். 22-1-2016 அன்று "தூய்மை கும்பகோணம்" என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இதில்

2016 ஆகஸ்ட் 12]
500-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். 2-2-2016 அன்று பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இதில் 1000-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவியர்கள் பங்குபெற்றனர். 3-2-2016 அன்று "தூய்மை கும்பகோணம்" என்ற பொருளை முன் வைத்து, 1500-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவியர் பங்கேற்புடன் மனித சங்கிலி நடத்தப்பட்டது. மேலும் மகாமகம் திருவிழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறப்பு பொருட்காட்சியில் வாரியம் பங்குபெற்றது.

➢ **அரசு பொருட்காட்சிகள்:–**

வாரியம், சென்னை தீவுத்திடலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அரசு பொருட்காட்சியிலும் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சிகளிலும் சிறப்பாக பங்கேற்று வருகின்றது. இப்பொருட்காட்சிகளில் வாரியம் அரங்கம் அமைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், காற்று மாசுக்கட்டுப்பாடு சாதனங்கள், திடக்கழிவு மேலாண்மை பற்றிய மாதிரி வடிவமைப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்மந்தமான தகவல்களை பொது மக்களின் பார்வைக்கு வைக்கிறது. 2015-2016 ஆம் ஆண்டில் வாரியம் சென்னை தீவுத்திடல், திருவண்ணாமலை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அரசு பொருட்காட்சிகளில் பங்குபெற்றது. இதில் அமைக்கப்பட்டிருந்த வாரிய அரங்கினை அதிக அளவில் மாணவ மாணவியர்கள் மற்றும் பொது மக்கள் பார்வையிட்டு பயனடைந்தனர். தேனி மாவட்டத்தில் வைகை பெருவிழா என்ற திருவிழாவினை முன்னிட்டு நடைபெற்ற பொருட்காட்சியில் வாரியம் அரங்கம் அமைத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை பொது மக்களிடம் எடுத்துச் சென்றது.

19.5 சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஒரு பகுதியான சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம், 1994 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின் முக்கிய குறிக்கோள், மாசு

[2016 ஆகஸ்ட் 12

கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தல் ஆகும். இந்த பயிற்சி நிலையம் 2015-16 ஆம் ஆண்டில், 27 பயிற்சி வகுப்புகள் நடத்தி, 1464 நபர்களுக்கு பயிற்சியளித்துள்ளது. கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன:

- தீங்கு விளைவிக்கும் கழிவுகளைக் கண்டறிதல் மற்றும் அளவிடுதல்
- மாசு கட்டுப்பாடு சட்டங்கள் மற்றும் விதிகள்
- ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மை
- சுற்றுச்சூழல் பொருளாதாரம்
- காற்றின் தரம் மற்றும் சுகாதாரம்
- பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை
- கழிவுநீர் சுத்திகரிப்பு
- தகவல் அறியும் உரிமைச் சட்டம்.

19.6 அலுவலக கட்டடங்கள் கட்டுமானம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மொத்தம் உள்ள 36 மாவட்ட அலுவலகங்களில், தற்போது 17 மாவட்ட அலுவலகங்கள் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மீதம் உள்ள 19 மாவட்ட அலுவலகங்களில், 6 அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. அவையாவன, கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, ஒரகடம், ஈரோடு, பெருந்துறை மற்றும் வாணியம்பாடி. 3 மாவட்டங்களுக்கு, அதாவது, திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் சேலம் ஆகிய அலுவலக கட்டடங்களுக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை பொதுப் பணித் துறையின் மூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மற்ற 9 மாவட்டங்களான திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, திருவண்ணாமலை, தேனி, நாகர்கோவில், ஊட்டி, அரியலூர், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்ட அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டுவதற்கான நிலம் வாங்கப்பட வேண்டும். மற்றொரு மாவட்டமான, கரூர் மாவட்ட அலுவலகக் கட்டடப் பணி, உச்ச நீதிமன்ற வழக்கின் காரணமாக தற்போது

2016 ஆகஸ்ட் 12]
நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

19.7 பசுமை விருதுகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த வழிமுறைகளை மேற்கொண்டு புகை வெளியேற்றம், பசுமைப் போர்வை ஏற்படுத்துதல், கழிவுநீர் வெளியேற்றம், திடக்கழிவுகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மேலாண்மை போன்றவற்றில் சிறந்த தரத்தினை அடையும் தொழிற்சாலைகளுக்கு பசுமை விருதுகள் வழங்கப்படும் என 2011-2012 ஆம் நிதி ஆண்டில் சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்யப்பட்டு, அதன்படி விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதே போல் மாவட்டத்தின் சுற்றுச்சூழலினை மேம்படுத்த சிறப்பாகச் செயல்படும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் பசுமை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

19.8 மேல்முறையீட்டு ஆணையம்

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974-பிரிவு 28-ன்படியும், காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 பிரிவு 31-ன்படியும், மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எந்தவொரு நபரும், மாநில அரசினால் ஏற்படுத்தப்பட்ட மேல்முறையீட்டு ஆணையத்திடம் மேல்முறையீடு விண்ணப்பம் செய்யலாம். இதற்கென தமிழ்நாடு அரசு, ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் இரண்டு தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட மேல்முறையீட்டு ஆணையத்தை அமைத்துள்ளது. இவ்வாணையம் எண் 51, கங்காதீஸ்வரர் கோவில் தெரு, புரசைவாக்கம், சென்னை-86 என்ற விலாசத்தில் இயங்கி வருகிறது. ஏப்ரல் 2015 முதல் ஜூன் 2016 வரை, 82 மேல்முறையீடுகள் பதிவு செய்யப்பட்டு, அவற்றில் 26 மேல்முறையீடுகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 56 மேல்முறையீடுகள் விசாரணையில் உள்ளன.

19.9 தேசிய பசுமை தீர்ப்பாயம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வன பாதுகாப்புக்குரிய வழக்குகளைப் பயனுள்ளதாகவும், விரைவாகவும் முடித்து வைக்க 18.10.2010 அன்று புதுடில்லியில் தேசிய பசுமை தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. தேசிய தீர்ப்பாயம் சட்டம் 2010-ன்படி, பிரிவு 28/29 மற்றும் 33அ-படி நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974, பிரிவு 13 நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம் 1977, பிரிவு 31, காற்று (மாசு தடுப்பு மற்றும்

[2016 ஆகஸ்ட் 12

கட்டுப்பாடு) சட்டம் 1981 மற்றும் பிரிவு 5 சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986-ன்படி மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மேல்முறையீட்டு ஆணையம் பிறப்பித்த ஆணை மற்றும் முடிவுகளினால் இடருற்ற நபர்கள், மேற்கூறிய ஆணைகள் கிடைக்க பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

சென்னையில் தென் மண்டலத்திற்கான தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் முதல் அமர்வு 2012 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இரண்டாவது அமர்வு 2015 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, இயங்கி வருகின்றது. மேற்படி தேசிய பசுமை தீர்ப்பாயம் அரும்பாக்கம், சென்னை-106-ல் உள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதுவரை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்புடைய 563 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 300 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 263 வழக்குகள் விசாரணையில் உள்ளன.

19.10 நூலகம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய நூலகம் 1989 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தற்போது இந்நூலகம் 11,421 புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைக் கொண்டுள்ளது. இந்த நூலகத்திற்கு சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட 51 இதழ்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), 10 செய்தி மடல்கள், 11 சுற்றுச்சூழல் குறித்த மாத இதழ்கள் தருவிக்கப்படுகின்றன. நம் நாட்டில் சுற்றுச்சூழல் சம்பந்தமான அதிக அளவிலான புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள நூலகங்களில் இதுவும் ஒன்றாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணியில் தொடர்புடைய அனைவரும் இதில் உறுப்பினராகலாம். நூலகத்தின் செயல்பாடுகளை கணினிமயமாக்கும் வண்ணம் லிப்சிஸ் (Lib Sys) என்ற மென்பொருள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

20. வாரியத்தின் சிறப்பான செயல்பாடுகளின் சுருக்கம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பினை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்கான சிறந்த தொழில்நுட்பங்களை புகுத்தியும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டங்களை சரிவர அமல்படுத்தியும், தமிழ்நாடு மாநிலம் ஒரு நிலையான அபிவிருத்தி மாநிலமாக

2016 ஆகஸ்ட் 12]

முன்னேற்றமடைய தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. அதன்படி மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடிற்கான பல நவீன தொழில்நுட்பங்களுக்கு ஊக்குவிப்பு அளிப்பதோடு மட்டுமல்லாமல், நிருவாகத்திலும் பல நவீன முறைகளை புகுத்தியுள்ளது. நவீன தொழில்நுட்பங்களை அமல்படுத்துவதில் பலவற்றில், இந்தியாவில் முதன்மை மாநில வாரியம் என்ற பெருமையை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பெற்றுள்ளது. சிறு தொழிற்சாலைகளுக்கான பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க உதவுவதில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்ற மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களுக்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கின்றது. இந்தியாவிலேயே முதன்முறையாக பூஜ்ஜிய மாசு நிலைபாட்டை அடையக்கூடிய முழுமையான சுத்திகரிப்பு அமைப்பினை தோல் தொழிற்சாலைகள் மற்றும் சாயத் தொழிற்சாலைகளில் வாரியம் ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தில்தான் முதன் முறையாக காற்று தர கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டு, காற்றின் தன்மை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை இம்மையத்துடன் 351 தொழிற்சாலைகள் இணைக்கப்பட்டு, வருடத்தின் அனைத்து நாட்களிலும், 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. அதே போன்று நீர் தர கண்காணிப்பு மையத்தினை முதன்முதலில் ஏற்படுத்திய பெருமையும் வாரியத்தையே சாரும். மருத்துவக் கழிவுகளை முறையாகச் சுத்திகரித்து வெளியேற்றுவதற்கான 11 பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்பினை ஏற்படுத்தி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இந்தியாவிலேயே முதன்மை வாரியமாக திகழ்கிறது.

நாட்டில் உள்ள மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்களில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்தான் ஐந்து மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு தேசிய அங்கீகாரச் சான்றிதழினை, மத்திய அரசின் தேசிய ஆய்வக அங்கீகார வாரியத்திடமிருந்து பெற்றுள்ளது. அதேபோல் நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையத்தை முதன்முதலில் அமைத்ததும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆகும். முக்கிய நீர் நிலைகளின் தரத்தினை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் தொடர் கண்காணிப்பு நிலையங்களையும் வாரியம் ஏற்படுத்தியுள்ளது. மாசினைத் தடுத்திடவும், சுற்றுச்சூழல் சட்டங்களை தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுத்துவதை உறுதி செய்யவும், வாரியமானது கூட்டங்கள்,

[2016 ஆகஸ்ட் 12

விழிப்புணர்வு பிரச்சாரங்கள், பயிற்சிகள் மூலம் பங்குதாரர்களுடன் நிலையான தொடர்பில் உள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இணையதளம் மூலம் இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை வசதியை அறிமுகப்படுத்தி, தொழிற்சாலைகளுக்கு இசைவாணைகளை இணையதளம் மூலம் வழங்குகின்றது. அதே போல தீங்கு விளைவிக்கும் கழிவுகளை மேலாண்மை செய்வதற்கான அங்கீகாரத்திற்கான விண்ணப்பங்கள் இணையதளம்மூலம் பெற்று, இணையதளம் மூலம் அங்கீகாரங்கள் வழங்கப்படுகின்றன. மாசு சம்பந்தமான புகார்களையும் இணையதளம் மூலம் தெரிவிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. இவையெல்லாம் வாரியத்தின் மின் ஆளுமைக்கான மைல் கற்களாகும். தொழிற்சாலைகளினால் ஏற்படும் மாசினைத் தடுத்தும் மற்றும் கட்டுப்படுத்தியும் மாநிலத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சிறப்பான முறையில் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். "பங்கேற்பாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, பொறுப்புள்ள மற்றும் நிலைத்தகு வளர்ச்சி காணும் மாநிலமாகத் திகழ செயலாற்ற வேண்டும்" என்ற தொலைநோக்குப் பார்வையுடன் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 12]

இணைப்பு II

(521 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017

முன்னுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் பயனடையும் வகையில் இந்தியத் திருநாட்டின் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் புதுமையான மக்கள் நலத் திட்டங்களை தீட்டி செயல்படுத்தினார். இதனால் பயனடைந்த தமிழக மக்கள், 32 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு புதிய சாதனையைப் படைத்து தொடர்ச்சியாக இரண்டாம் முறையும் ஆட்சிப் பொறுப்பை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கி வள்ளுவரின் பின்வரும் குறளுக்கு ஒரு புதிய இலக்கணம் படைத்துள்ளார்கள்.

'கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் வுலகு'

அதாவது தம் கடமையாகிய தொழில் கெடாமல் கண்ணோட்டம் உடையவராக இருக்க வல்லவர்க்கு இவ்வுலகம் உரிமை உடையது.

வள்ளுவப் பெருமான் எடுத்துக்காட்டியபடி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் தொண்டாற்றும் தனது கடமை வழுவாது, நாட்டு மக்கள் நலம் பேணும் கண்ணோட்டத்துடன் வகுத்து, தொகுத்து செயலாக்கிடும் சீர் மிகு திட்டங்கள், மக்களிடம் வெகுவாகச் சென்றடையும் வண்ணம் செய்தி மக்கள் தொடர்புத் துறை விளம்பரப் பணிகளையும், மக்கள் தொடர்புப் பணிகளையும் செம்மையுடன் மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது.

ஆறாம் முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்று அரும்பணி ஆற்றிடும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது

தலைமையிலான அரசு, தொடர்ந்து செயல்படுத்தும் முன்னேற்றத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்த செய்திகளை மக்களிடம் எடுத்துச் செல்வதுடன் அத்திட்டங்களின் பயன்களை அவர்கள் எளிதில் பெறும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் சீரிய பணியையும் இத்துறையின் பல்வேறு பிரிவுகளான,

- செய்தி வெளியீட்டுப் பிரிவு
- புகைப்படப் பிரிவு
- மேற்கோள் பிரிவு
- நினைவகங்கள் பிரிவு
- விழாக்கள் பிரிவு
- கள விளம்பரப் பிரிவு
- விளம்பரப் பிரிவு
- பொருட்காட்சிப் பிரிவு
- தமிழ்நாடு திரைப்படப் பிரிவு
- திரைப்படத் துறையினர் நல வாரியம்
- எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்
- தமிழரசு
- செய்தி நிலையங்கள் மற்றும்
- மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

ஆகிய அனைத்துப் பிரிவுகளின் வாயிலாக முன்னிலும் சிறப்புடன் மேற்கொள்ள செய்தி மக்கள் தொடர்புத் துறை உறுதி பூண்டுள்ளது.

“மக்களால் நான்—மக்களுக்காகவே நான்” என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டு, தமிழக மக்களின் நலனுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்து தவவாழ்வு வாழ்ந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான

2016 ஆகஸ்ட் 12]

அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் சீரிய பணியை மிகுந்த உத்வேகத்துடனும் உற்சாகத்துடனும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

செய்தி வெளியீட்டுப் பிரிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்புகள், செய்திக் குறிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகளை மக்கள் உடனுக்குடன் அறிந்துகொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவு வருடத்தின் அனைத்து நாட்களிலும் நாளின் 24 மணி நேரமும் செயல்படுகிறது.

மேலும், அமைச்சர்களின் செய்திக் குறிப்புகள், அரசின் செய்தி வெளியீடுகள், அறிவிப்புகள், நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றையும், அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சி விவரங்கள், அது குறித்த வண்ணப் புகைப்படங்கள், வீடியோ ஒளிப்பதிவுகள் முதலியவற்றையும் தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மாநில நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை நாளிதழ்கள், இணையதளச் செய்தி நிறுவனங்கள் ஆகிய 300-க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்கு செய்தி வெளியீட்டுப் பிரிவு உடனுக்குடன் அனுப்பி வைக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் செய்தியாளர் கூட்டங்கள் நடத்திடத் தேவையான ஏற்பாடுகளை இப்பிரிவு மேற்கொள்கிறது. மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் பங்கேற்கும் விழாக்கள், முக்கிய பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு, பத்திரிகையாளர் மற்றும் தொலைக்காட்சியினருக்குத் தேவையான உதவிகளையும், அதற்கான ஏற்பாடுகளையும் இப்பிரிவு செய்து வருகிறது.

தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படும் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகள் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு அந்தந்த மாவட்ட ஊடகங்களில் உடனடியாக வெளியிட இப்பிரிவின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

அதேபோல, மாவட்டங்களில் மாண்புமிகு அமைச்சர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள், விழாக்கள் மற்றும் பொதுவான ஏனைய அரசு நிகழ்ச்சிகள் ஆகியவை குறித்த செய்திகளும்

புகைப்படங்களும் சம்பந்தப்பட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் பெறப்பட்டு, அவற்றை தலைமையிடத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் ஆகியவற்றில் இடம் பெறச் செய்திட செய்தி வெளியீட்டுப் பிரிவால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர் நலன்

ஓய்வூதியம்

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில் மூன்று முறை பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை உயர்த்தி, பத்திரிகையாளர்களுக்கு ரூ.5,000/-ஆக வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத்தை 14-9-2011 நாள் முதல் ரூ.6,000/- ஆகவும் 7-10-2013 முதல் ரூ.7,500/- ஆகவும், உயர்த்தி வழங்கியதோடு மீண்டும் இத்தொகையை 11-1-2016 நாள் முதல் ரூ.8,000/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 163 நபர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெற, பணிக்கொடை உச்ச வரம்புத் தகுதி ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக 2012 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

பணியில் இருந்தபோது பத்திரிகையாளர்கள் பெற்ற ஆண்டு வருமானத்திற்கான உச்ச வரம்பு தகுதி 2012 ஆம் ஆண்டு 1.20 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

2011-2016 ஆம் கால கட்டத்தில், 3 பத்திரிகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டங்கள் மூலம் 60 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க பரிந்துரை செய்யப்பட்டு, அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 12]

குடும்ப ஓய்வூதியம்

மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்ப நலனைக் கருத்தில் கொண்டு, ஓய்வூதியம் பெற்று வந்த பத்திரிகையாளர்கள் இயற்கை எய்தினால், அவரது குடும்பத்திற்கு அரசால் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில் மூன்று முறை பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி, பத்திரிகையாளர்களின் குடும்பத்திற்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ரூ.2,500/-ஐ 14-9-2011 ஆம் நாள் முதல் ரூ.3,000/-ஆகவும் 7-10-2013 ஆம் நாள் முதல் ரூ.4,500/- ஆகவும் உயர்த்தி வழங்கியதோடு, மீண்டும் இந்த குடும்ப ஓய்வூதியத் தொகை 11-1-2016 ஆம் நாள் முதல் ரூ.4,750/- ஆகவும் உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார். தற்போது 34 நபர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழை திருத்துபவர் ஆகியோர் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து கீழ்க்கண்டவாறு குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டு வருகிறது :

பணிபுரிந்த ஆண்டுகள்	குடும்ப உதவி நிதித் தொகை
5	ரூ.50,000/-
10	ரூ.1,00,000/-
15	ரூ.1,50,000/-
20	ரூ.2,00,000/-

மேலும், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி பரிந்துரைக் குழுக் கூட்டத்தில், 13 பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப உதவி நிதி வழங்க பரிந்துரை செய்யப்பட்டு, நிதியுதவிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 12

நல நிதியம்

பத்திரிகையாளர் நல நிதியத்திற்கென ஒரு கோடி ரூபாய் நிதி தனியே ஒதுக்கப்பட்டு, தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும்போது அவர்களுக்கு மேற்படி வைப்பீட்டுத் தொகை வாயிலாகக் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து மருத்துவ நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்தகைய நிதியுதவி அதிகபட்சமாக ரூ.50,000 வரை அளிக்கப்படுகிறது.

அரசு வாடகைக் குடியிருப்பு

பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

வீட்டுமனை வசதி

இத்திட்டத்தின்கீழ், மாவட்டங்களில் வருவாய்த் துறை மூலம் பத்திரிகையாளர்களுக்குச் சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன.

செய்தியாளர் அங்கீகார அட்டை

அரசு அமைத்துள்ள "செய்தியாளர் அங்கீகாரக் குழு"வின் பரிந்துரையின் பேரில், ஆண்டுதோறும் நாளிதழ்கள்/ தொலைக்காட்சிகள் /செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கு, செய்தியாளர் அங்கீகார அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அரசின் அனைத்து நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களில் கலந்து கொண்டு செய்தி சேகரிப்பதற்கு செய்தியாளர்களுக்கு அங்கீகார அட்டை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

செய்தியாளர் அட்டை

காலமுறை இதழ்களில் பணியாற்றும் பத்திரிகையாளர்களுக்கு, "செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழு"வின் பரிந்துரையின் பேரில், செய்தியாளர் அட்டை (Press Pass) வழங்கப்பட்டு வருகிறது. இவை காலமுறை செய்தியாளர்களுக்கு முக்கிய இடங்களுக்குச் சென்று கட்டுரைகள், வரலாற்று விவரங்கள், செய்திகளின்

2016 ஆகஸ்ட் 12]

பின்னணி ஆகியன குறித்த உண்மைத் தன்மையை அறிந்து செய்தி சேகரிக்க உதவியாக அமைகிறது.

செய்தியாளர்களுக்கான கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை

செய்தியாளர் அங்கீகார அட்டை வழங்கப் பெற்ற பத்திரிகையாளர்கள், செய்தி சேகரிப்பதற்கு வசதியாக அவர்கள் விடுக்கும் வேண்டுகோளின் அடிப்படையில் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்ய ஓராண்டு காலத்திற்குச் செல்லத்தக்க கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை ஒவ்வோர் ஆண்டும் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் வழங்கப்படும் இந்த கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டைகளுக்கான செலவினத் தொகையை, போக்குவரத்து நிறுவனங்களுக்கு இத்துறை ஈடுசெய்கிறது.

செய்தி முகமைகள்

பி டி ஐ (Press Trust of India) மற்றும் யு என் ஐ (United News of India) ஆகிய இரண்டு செய்தி முகமைகள் வெளியிடும் செய்திகள் கீழ்க்காணும் இடங்களில் கணினி மூலம் 24 மணிநேரமும், ஆண்டு முழுவதும் பெறப்படுகிறது:

(அ) மேதகு ஆளுநர் மாளிகை

(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லம்

(இ) செய்தி வெளியீட்டுப் பிரிவு, தலைமைச் செயலகம்

நாடு முழுவதிலிருந்தும் தகவல்கள் பெறப்படுகின்றன. மிக முக்கியமான செய்திகள் தொடர்பாகத் தேவையான நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அவை உரிய அரசு அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன.

செய்தி மக்கள் தொடர்புத் துறை வலைதளம்

ஊடகங்கள், தங்களுக்கு தேவையான அரசு சார்ந்த செய்திகள், புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் ஆகியவற்றை வலைதளத்தின் வாயிலாக உடனுக்குடன் பெற்றிடவும், அதே போல பொது மக்களும் இவற்றைப் பார்த்து பயன் அடையவும் ஏதுவாக செய்தி மக்கள் தொடர்புத் துறையின் www.tndipr.gov.in என்னும் வலைதளம் சிறப்புடன் இயங்கி வருகிறது. செய்தி ஊடகங்கள் இவ்வலைதளத்தின் உள் நுழைந்து (Login) தங்களுக்கு தேவையானவற்றை பதிவிறக்கம் செய்துகொள்ளவும், பொது மக்கள் இணையதளப் பக்கத்திலேயே

அவற்றை பார்த்துப் பயன்பெறவும் துறையால் நிமிடத்திற்கு நிமிட அடிப்படையில், உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

ஊடக மையம்

பல்வேறு ஊடகங்களைச் சார்ந்த தலைமைச் செயலக செய்தியாளர்கள் தங்கள் நிறுவனத்திற்கு உடனுக்குடன் செய்திகளையும், புகைப்படங்களையும் தலைமைச் செயலகத்திலிருந்தே அனுப்புவதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள ஊடக மையத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.10.2012 அன்று திறந்து வைத்தார்கள்.

தலைமைச் செயலக பழைய கட்டடத்தின் தரைத் தளத்தில் உள்ள இந்த ஊடக மையமானது, ஆண்டு முழுவதும் விடுமுறை ஏதுமின்றி (24 X 7) எல்லா நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது.

செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள், புகைப்படங்கள் ஆகியவை தலைமையிடத்தில் (தலைமைச் செயலகத்தில்) வெளியிடப்படும் அதே நேரத்தில், அவை அனைத்தும் ஊடக மையத்திலிருந்து, அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களில் வெளியாகும் பத்திரிகைகள் / ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறாக, அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை, மாநிலத்தின் கடைக்கோடியில் உள்ளவர்களுக்கும் விளம்பரப்படுத்த முடிகிறது. மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், மேற்கண்ட செய்திகள் ஊடகங்களில் வெளியான விவரங்களை ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலகத்திலுள்ள ஊடக மையத்திற்கு அனுப்புகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்பான செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் மாவட்ட நாளிதழ்களில் வெளியான விவரங்கள் தொகுக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் அரசுக்கு அறிக்கை அளிக்கப்படுகிறது. அரசின் செய்திகள் தமிழகம் முழுவதும் நாளிதழ்களில் வெளிவருவதில் ஊடக மையம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

புதுப்பிக்கப்பட்ட செய்தியாளர் அறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி

2016 ஆகஸ்ட் 12]

தலைமைச் செயலகத்தில் உள்ள செய்தியாளர் அறை ரூ.25 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டது. இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3-8-2011 அன்று திறந்து வைத்தார்கள்.

புகைப்படப் பிரிவு

புகைப்படப் பிரிவில் புதிய வகை டிஜிட்டல் புகைப்படக் கருவிகள் மூலம் வண்ணப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவை தலைமைச் செயலகத்திலிருந்து மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் ஏறக்குறைய 300-க்கும் மேற்பட்ட ஊடகங்களுக்கு ஒரே நேரத்தில் அனுப்பி வைக்கப்படுகின்றன. அத்துடன் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடத்திலிருந்தே இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினிகள் மூலம் புகைப்படங்கள் உடனுக்குடன் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் குறித்து உடனுக்குடன் பொதுமக்கள் அறியும் வகையில், அந்நிகழ்வுகள் குறித்த விவர அடிக்குறிப்புகளுடன் கூடிய புகைப்படங்கள், தலைமைச் செயலக முதன்மைக் கட்டடத்தில் சீர் பெருமக்களுக்கான மின்தூக்கி அருகிலும், நாமக்கல் கவிஞர் மாளிகையில் சீர் பெருமக்கள் செல்லும் மின்தூக்கி அருகிலும் பொருத்தப்பட்டுள்ள டிஜிட்டல் தொலைக்காட்சி வாயிலாக காட்சிப்படுத்தப்படுகின்றன.

இப்பிரிவின் வாயிலாக எடுக்கப்படும் புகைப்படங்கள் அனைத்தும், குறுந்தகடு (Compact Disk) *மற்றும் நிலைவட்டு* (Hard Disk) *ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டு, அவை எதிர்காலப் பயன்பாட்டிற்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.*

புகைப்படப் பிரிவிலுள்ள அரிய புகைப்படச் சுருள்களை ஸ்கேன் செய்து வரிசைப்படுத்தி, தலைப்பிட்டு, அவற்றை எண்மயப்படுத்தி மின்னணு முறையில் மாற்றும் பணிக்கு ரூ.25.89 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அப்பணிகள் நிறைவடைந்துள்ளன.

புதுடெல்லி செய்தி நிலையத்திற்கு ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டிலும், தலைமையிடப் புகைப்படப்பிரிவிற்கு ரூ.4.77 இலட்சம் மதிப்பீட்டிலும் அதிநவீன புகைப்படக்கருவி வாங்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கோள் பிரிவு

நாளிதழ்கள், பருவ இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கிய செய்திகளை நாள்தோறும் அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் முக்கிய பணியினை தலைமையிடத்தில் உள்ள மேற்கோள் பிரிவு சிறப்புடன் மேற்கொண்டு வருகிறது.

காலை மற்றும் மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், செய்தி நறுக்குகளாகத் தொகுக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு அனுப்பும் பணி காலையும், மாலையும் விடுமுறை ஏதுமின்றி நாள்தோறும் இப்பிரிவில் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், நாளிதழ்கள், பருவ இதழ்களில் வெளிவரும் முக்கியச் செய்திகள் மாண்புமிகு அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களின் பார்வைக்கும், நடவடிக்கைக்கும் தொகுத்து நாள்தோறும் அனுப்பும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதே போன்று நாளிதழ்களில் அனைத்து துறைகள் தொடர்பாக வெளிவரும் முக்கியச் செய்திகள் ஸ்கேன் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களுக்கு மின்னஞ்சல் மூலம் நாள்தோறும் காலையில் அனுப்பப்பட்டு வருகின்றன. இச்செய்திகள் குறித்து உடனுக்குடன் அத்துறையின் செயலாளர்கள் அறியும் பொருட்டு அவர்தம் கைப்பேசிகளுக்கு குறுஞ்செய்திகளாகவும் அனுப்பப்படுகின்றன. மேலும், துறைத் தலைவர்களுக்கும் இக்குறுஞ்செய்திகளை, வாட்ஸ்ஆப் மற்றும் மின்னஞ்சல்கள் மூலம் அனுப்பும் சிறப்புப் பணியையும் இப்பிரிவு நாள்தோறும் மேற்கொள்கிறது. முக்கியமான தமிழ், ஆங்கில நாளிதழ்கள் முறையாகத் தொகுக்கப்பட்டு, எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவை தேவைப்படும் நேரத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கும், அமைச்சர்கள், துறைச்செயலாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கும் வழங்கப்படுகின்றன.

காலச்சுவடுகளின் தொகுப்பாக விளங்கும் பழைய நாளிதழ்களை நவீன மின்னணு முறையில் எண்மயப்படுத்திப் (Digitization) பராமரிக்கவேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மேற்கோள் பிரிவில் பராமரிக்கப்படும் நாளிதழ்களில் இடம் பெற்ற முக்கியச் செய்திகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், பேட்டிகள், அரசின் சாதனைகள்,

2016 ஆகஸ்ட் 12]

வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள், அரசு ஆணைகள் போன்றவை அடங்கிய தகவல்களும், நாளிதழ்களின் தலையங்கங்கள், கட்டுரைகள், விமர்சனங்கள், பல்வேறு தலைவர்களின் கருத்துக்கள் போன்றவையும், தனித்தனித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டு மின்னணு முறையில் எண்மயப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் பழைய நாளிதழ்கள் நவீன முறையில் எண்மயப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

தலைமையிடத்தில் உள்ள மேற்கோள் பிரிவில் உள்ள பழைய நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களைப் பாதுகாக்கும் பொருட்டு இப்பிரிவு ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் நாளிதழ்கள், பருவ இதழ்கள் வெளி மாநில நாளிதழ்களின் முக்கிய செய்திகள் தொகுக்கப்பட்டு சிறப்பு சாதனை மலர் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வகையில்,

2012	–	பத்திரிகையின் பார்வையில் ஒளிரும் சாதனைகள்
2013	–	சாதனை புரிந்த ஈராண்டு! சரித்திரம் பேசும் பல்லாண்டு!
2014	–	மூன்றாண்டு ஆட்சிமுழுமையான வளர்ச்சி
2015	–	ஊடகங்களில் பாராட்டு

என்னும் தலைப்புகளில் சிறப்பு சாதனை மலர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நினைவகங்கள்

தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் மற்றும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு தம் வாழ்வையே அர்ப்பணித்த தமிழ் சான்றோர்களின் நினைவைப் போற்றியும், இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கேற்று தியாகங்கள் பல புரிந்த தியாகிகளைப் பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையால் 63 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள் மற்றும் 1 நினைவுச்சின்னம் ஆகியன உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. மேலும் புதியதாக 4 மணிமண்டபங்கள் கட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 12

1. நினைவகங்கள்

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
1.	பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம்	மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை
2.	பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம்	மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை
3.	பெருந்தலைவர் காமராஜர் நினைவகம்	சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை
4.	பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம்	சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை
5.	காந்தி மண்டபம்	சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை
6.	மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம்	சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை
7.	மகாகவி பாரதியார் நினைவு இல்லம்	துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை
8.	பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம்	திருமலை சாலை, தியாகராய நகர், சென்னை
9.	வள்ளுவர் கோட்டம்	நுங்கம்பாக்கம், சென்னை
10.	மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம்	சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
11.	தியாகிகள் மணிமண்டபம்	சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை
12.	இரட்டைமலை சீனிவாசன் நினைவகம்	சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை
13.	கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம்	டாம்ஸ் சாலை, சென்னை
14.	பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம்	காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்
15.	திருப்பூர் குமரன் நினைவகம்	திருப்பூர், திருப்பூர் மாவட்டம்
16.	பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம்	உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்
17.	தந்தை பெரியார் நினைவகம்	வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம்
18.	பெரியார்—அண்ணா நினைவகம்	ஈரோடு, ஈரோடு மாவட்டம்
19.	தீரன் சின்னமலை மணிமண்டபம்	ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம்
20.	மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம்	தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்
21.	வள்ளல் அதியமான் கோட்டம்	தருமபுரி, தருமபுரி மாவட்டம்
22.	நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம்	நாமக்கல், நாமக்கல் மாவட்டம்
23.	வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம்	வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
24.	பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம்	பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்
25.	தில்லையாடி வள்ளியம்மை நினைவகம்	தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம்
26.	தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம்	உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம்
27.	தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம்	திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம்
28.	கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம்	காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்
29.	தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம்	குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்
30.	மருதுபாண்டியர் நினைவு மண்டபம்	திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்
31.	தியாக சீலர் கக்கன் நினைவு மண்டபம்	தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம்
32.	தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம்	திருமங்கலம், மதுரை மாவட்டம்
33.	பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம்	விளாச்சேரி, மதுரை மாவட்டம்
34.	மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம்	சாத்தமங்கலம், மதுரை மாவட்டம்
35.	பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம்	விருதுநகர், விருதுநகர், மாவட்டம்
36.	பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம்	விருதுநகர், விருதுநகர் மாவட்டம்
37	மகாகவி பாரதியார் மணிமண்டபம்	எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
38.	மகாகவி பாரதியார் இல்லம்	எட்டயபுரம், தூத்துக்குடிமாவட்டம்
39.	கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம்	ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்
40.	வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம்	கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம்
41.	சுதந்திர போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம்	கவர்ணகிரி, தூத்துக்குடி மாவட்டம்
42.	சுதந்திர போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம்	வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம்
43.	அமுதகவி உமறுப்புலவர் நினைவகம்	எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்
44.	கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம்	திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம்
45.	பூலித்தேவன் நினைவு மாளிகை	நெற்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம்
46.	தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம்	இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம்
47.	பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம்	நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
48.	காந்தி நினைவு மண்டபம்	கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்
49.	பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம்	கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம்
50.	சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம்	இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
51.	முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜ சிங்கன் நினைவகம்)	வேலூர், வேலூர் மாவட்டம்
52.	தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம்	பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம்
53.	தமிழிசை மூவர் மணி மண்டபம்	சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம்
54.	விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம்	விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம்
55.	ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம்	ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம்
56.	விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம்	சங்கரி, சேலம் மாவட்டம்
57.	தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம்	செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்
58.	மார்ஷல் நேசமணி மணிமண்டபம்	நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
59.	வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம்	சூரக்குளம், சிவகங்கை மாவட்டம்
60.	தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம்	விருதுநகர், விருதுநகர் மாவட்டம்
61.	வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம்	கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம்

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	நினைவகம்	அமைவிடம்
62.	சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபம் மற்றும் நூலகம்	இராயபுரம், சென்னை
63.	விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் மணிமண்டபம்	பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்

2. அரங்கங்கள்

வ. எண்	அரங்கம்	அமைவிடம்
1.	இராஜாஜி மண்டபம்	ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை
2.	அண்ணா கலை அரங்கம்	வேலூர், வேலூர் மாவட்டம்
3.	மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம்	கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம்
4.	கலைவாணர் அரங்கம்	ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை

3. நினைவுத்தூண்கள்

வ. எண்	நினைவுத்தூண்	அமைவிடம்
1.	"வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண்	காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை
2.	சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண்	போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை

வ. எண்	நினைவுத்தூண்	அமைவிடம்
3.	குடியரசுப் பொன்விழா நினைவுத் தூண்	காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை
4.	சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண்	வேலூர், வேலூர் மாவட்டம்
5.	பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத்தூண்	விருதுநகர், விருதுநகர் மாவட்டம்

4. நினைவுச்சின்னம்

வ. எண்	நினைவுச்சின்னம்	அமைவிடம்
1.	வீரத்தாய் குயிலி நினைவுச்சின்னம்	சூரக்குளம், சிவகங்கை மாவட்டம்

5. 2011 முதல் 2016 வரையிலான கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மணிமண்டபங்கள்

- *தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம், 18-7-2011 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.40.00 இலட்சம்*

- *நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் தமிழிசை மூவர் மணிமண்டபம், 20-2-2013 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.1.51 கோடி.*

- *திண்டுக்கல் மாவட்டம், விருப்பாச்சியில், விடுதலை போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம், 20-2-2013 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.69.00 இலட்சம்*

2016 ஆகஸ்ட் 12]

- விழுப்புரம் மாவட்டம், ஓமந்தூரில், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம், 20-2-2013 அன்று திறந்துவைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.69.00 இலட்சம்
- சேலம் மாவட்டம், சங்கரியில், விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம், 23-12-2013 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.60.00 இலட்சம்
- திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில், தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம், 23-12-2013 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு: ரூ.50.00 இலட்சம்
- கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில், மார்ஷல் நேசமணி மணிமண்டபம், 27-2-2014 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு: ரூ.48.70 இலட்சம்
- சிவகங்கை மாவட்டம் சூரக்குளத்தில், வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம் 18-7-2014 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.60.00 இலட்சம்
- சிவகங்கை மாவட்டம், சூரக்குளத்தில் கட்டப்பட்ட ரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டப வளாகத்திலுள்ள வீரத்தாய் குயிலி நினைவுச்சின்னம், 18-7-2014 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.27.50 இலட்சம்
- விருதுநகர் மாவட்டம், விருதுநகரில், தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம், 18-6-2015 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு: ரூ.77.00 இலட்சம்
- தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில், வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம், 18-6-2015 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.1.20 கோடி
- சென்னை, இராயபுரத்தில், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபங்கள் மற்றும் நூலகம், 29-9-2015 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.2.34 கோடி
- திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் விடுதலைப்போராட்ட வீரர் ஒண்டி வீரன் மணிமண்டபம் 1-3-2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.64.00 இலட்சம்.

[2016 ஆகஸ்ட் 12

6. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அரங்கம்

➢ *சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கலைவாணர் அரங்கம் 14-2-2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.62.73 கோடி*

7. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திருவுருவச் சிலைகள்

➢ *கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் மொழிப்போர் தியாகி அ. சிதம்பரநாதன் திருவுருவச்சிலை 8-2-2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.8.50 இலட்சம்*

➢ *கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை திருவுருவச்சிலை 8-2-2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.10.80 இலட்சம்*

➢ *திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளியில் மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னச்சாமி திருவுருவச்சிலை 8-2-2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.8.79 இலட்சம்*

➢ *இராமநாதபுரம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில், ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி திருவுருவச்சிலை 8-2-2016 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.7.25 இலட்சம்*

8. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் புனரமைத்துத் திறந்து வைக்கப்பட்ட மணிமண்டபங்கள் மற்றும் கலையரங்கம்

➢ *சென்னையில் பேரறிஞர் அண்ணா நினைவிடம், பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடம், 9-12-2012 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.8.90 கோடி*

➢ *கும்பகோணத்தில் 20-2-2013 அன்று மகாமகம் பல்நோக்கு கலையரங்கம் திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.63.00 இலட்சம்*

2016 ஆகஸ்ட் 12]

- சென்னை, கிண்டியில் 27-6-2014 அன்று காந்தி மண்டப வளாகம் திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு:ரூ.12.00 கோடி.
- கேரள மாநிலம், வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம் 27-6-2014 அன்று திறந்து வைக்கப்பட்டது. மதிப்பீடு : ரூ.25.00 இலட்சம்

9. புனரமைக்கப்பட்ட பணிகள்

- சென்னை, திருமலை சாலையில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- சென்னை, ஓமந்தூரார் தோட்டத்தில் அமைந்துள்ள இராஜாஜி மண்டபம் ரூ.75.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் நினைவிடங்களில் நாளுக்கு நாள் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு காவல் துறை மூலம் பாதுகாப்புப் பணி மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- நாகப்பட்டினம் தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபத்தில் ரூ.1.40 இலட்சம் மதிப்பீட்டில் ஒலிபரப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு அன்னாரின் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.
- சென்னை, திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் நினைவு இல்லம் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.
- காந்தி மண்டப வளாகத்தில் புனரமைக்கப்பட்ட பூங்கா மற்றும் புல்வெளிகள் 2014 முதல் 2017 வரை மூன்றாண்டுகளுக்கு ரூ.2.63 கோடி மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 12

10. குடிநீர் வசதிகள்

- பேரறிஞர் அண்ணா மற்றும் டாக்டர் எம்ஜிஆர் நினைவிடங்களில் ரூ.19.50 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் வாயிலாக குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.
- பேரறிஞர் அண்ணா மற்றும் டாக்டர் எம்ஜிஆர் நினைவிடங்களுக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினை வழங்கும் பொருட்டு, பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நினைவிடத்தில் ரூ.9.86 இலட்சம் செலவில் எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பு (Reverse Osmosis System) நிறுவப்பட்டுள்ளது.
- சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்திற்கு வருகை தரும் பார்வையாளர்களின் குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக, அவ்வளாகத்தில் ரூ.7.14 லட்சம் செலவில் எதிர்மறை சவ்வூடு பரவல் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

11. பணி முன்னேற்றத்தில் உள்ள மணிமண்டபங்கள் மற்றும் இதர பணிகள்

வ. எண்	மணிமண்டபம் / கலையரங்கம்	மதிப்பீடு	தற்போதைய நிலை
1.	மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம், திருவாரூர், திருவாரூர் மாவட்டம்	ரூ.1.10 கோடி	கட்டுமானப்பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.
2.	ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் மணிமண்டபம், திண்டுக்கல் மாவட்டம்	ரூ.1.30 கோடி	கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
3.	சுவாமி சகஜானந்தா மணிமண்டபம், சிதம்பரம், கடலூர் மாவட்டம்	ரூ.1.15 கோடி	கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	மணிமண்டபம் / கலையரங்கம்	மதிப்பீடு	தற்போதைய நிலை
4.	பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவகம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்	ரூ.85.00 இலட்சம்	கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
5.	பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்திற்குள் உள்ள 3 ஏக்கர் பரப்பளவிலான இடத்தினை மேம்படுத்தி, இயற்கை எழில் கொஞ்சும் பூங்கா அமைத்தல்	ரூ.7.50 கோடி	சென்னை மாநகராட்சி மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரசு விழாக்கள்

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட சான்றோர்களையும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட பெரியோர்களையும், இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குப் பாடுபட்ட தலைவர்களையும் நினைவு கூர்ந்து பெருமைப்படுத்தும் வகையிலும், அவர்கள் ஆற்றிய தியாகத் தொண்டுகளை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளவும், அவர்களது பிறந்த நாள் விழாக்களையும், நினைவு நாள் நிகழ்ச்சிகளையும் அரசு நடத்துகிறது. இத்தகைய விழாக்களில் மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் பங்கேற்று அன்னாரது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலைகள் அணிவித்தும், திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செலுத்துகின்றனர். சென்னை மாவட்டத்தில் 27 தலைவர்களுக்கும், பிற மாவட்டங்களில் 30 தலைவர்களுக்கும் அவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாளில் அவர்களது திருவுருவச்சிலைகளுக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செய்யப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 12

1. சென்னையில் நடத்தப்படும் விழாக்கள்

வ. எண்	நாள்	விழாக்கள்
1.	ஜனவரி 17	பாரத ரத்னா டாக்டர் எம்ஜிஆர் பிறந்த நாள் விழா
2.	ஜனவரி 23	நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா
3.	ஜனவரி 30	அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள்
4.	பிப்ரவரி 18	சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் விழா
5.	ஏப்ரல் 14	டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா
6.	ஏப்ரல் 17	சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா
7.	ஏப்ரல் 21	சித்திரை முழு நிலவு நாளன்று கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவப்படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர்தூவி மரியாதை செய்தல்
8.	ஏப்ரல் 27	சர்.பிட்டி.தியாகராயர் பிறந்த நாள் விழா
9.	ஏப்ரல் 29	பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா
10.	ஜூன் 5	கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள் விழா
11.	ஜூன் 24	கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா
12.	ஜூலை 7	இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் விழா
13.	ஜூலை 15	பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா
14.	ஜூலை 17	தியாகிகள் தினம், தியாகி ஆர்யா (எ) பாஷ்யம்
15.	ஜூலை 17	தியாகிகள் தினம், தியாகி சங்கரலிங்கனார்

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	நாள்	விழாக்கள்
16.	ஜூலை 17	தியாகிகள் தினம், தியாகி செண்பகராமன்
17.	செப்டம்பர் 5	கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா
18.	செப்டம்பர் 15	பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா
19.	செப்டம்பர் 17	தந்தை பெரியார் பிறந்த நாள் விழா
20.	செப்டம்பர் 29	முன்னாள் சென்னை மேயர் சிவராஜ் பிறந்த நாள் விழா
21.	அக்டோபர் 2	அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா
22.	அக்டோபர் 30	பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா
23.	நவம்பர் 8	தமிழறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள் விழா
24.	நவம்பர் 14	பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா
25.	நவம்பர் 23	கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா
26.	டிசம்பர் 10	மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா
27.	டிசம்பர் 11	மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா

2. மாவட்டங்களில் நடத்தப்படும் விழாக்கள்

வ. எண்	நாள்	விழாக்கள்	நிகழ்விடம்
1.	ஜனவரி 3	வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் விழா	சூரக்குளம், சிவகங்கை மாவட்டம்

வ. எண்	நாள்	விழாக்கள்	நிகழ்விடம்
2.	ஜனவரி 24 (தைப்பூசத் திருநாள்)	திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா	மதுரை, மதுரை மாவட்டம்
3.	பிப்ரவரி 7	மொழிஞாயிறு தேவநேய பாவணர் பிறந்த நாள் விழா	சாத்தமங்கலம், மதுரை மாவட்டம்
4.	பிப்ரவரி 19	தமிழ்த்தாத்தா உ.வே.சா பிறந்த நாள் விழா	உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம்
5.	மார்ச் 30	ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழா	இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்
6.	ஏப்ரல் 16	வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா	கவர்ணகிரி, தூத்துக்குடி மாவட்டம்
7.	ஏப்ரல் 17	தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா	ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம்.
8.	மே 13	வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா	பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம்
9.	மே 23	பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் விழா	திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்
10.	ஜூன் 12	மார்ஷல் நேசமணி பிறந்த நாள் விழா	நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
11.	ஜூன் 16	தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் விழா	திருமங்கலம், மதுரை மாவட்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	நாள்	விழாக்கள்	நிகழ்விடம்
12.	ஜூன் 18	தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் விழா	மேலூர் அருகில், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம்
13.	ஜூலை 6	தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் பிறந்த நாள் விழா	விளாச்சேரி, மதுரை மாவட்டம்
14.	ஜூலை 11	வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா	கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்
15.	ஜூலை 17	தியாகிகள் தினம்- தியாகி வாஞ்சிநாதன்	செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்
16.	ஜூலை 31	சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள் விழா	இடலாக்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
17.	ஆகஸ்ட் 1 மற்றும் 2	வல்வில் ஓரி விழா	கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம்
18.	ஆகஸ்ட் 2 (ஆடி 18)	தீரன் சின்னமலை நினைவு நாள்	ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம்
19.	ஆகஸ்ட் 2 (ஆடி 18)	தீரன் சின்னமலை நினைவு நாள்	நினைவுச்சின்னம், சங்கரி, சேலம் மாவட்டம்
20.	செப்டம்பர் 5	கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா	ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்
21.	செப்டம்பர் 15	பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா	ஈரோடு, ஈரோடு மாவட்டம்
22.	செப்டம்பர் 17	தந்தை பெரியார் பிறந்த நாள் விழா	ஈரோடு, ஈரோடு மாவட்டம்

TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	நாள்	விழாக்கள்	நிகழ்விடம்
23.	அக்டோபர் 2	அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா	அனைத்து மாவட்டங்கள்
24.	அக்டோபர் 4	தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் விழா	பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம்
25.	அக்டோபர் 4	திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா	திருப்பூர், திருப்பூர் மாவட்டம்
26.	அக்டோபர் 24	மருதுபாண்டியர் நினைவு நாள்	திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்
27.	அக்டோபர் 30	பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா	பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்
28.	நவம்பர் 1	கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்துடன் இணைந்த நாளை முன்னிட்டு மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா	நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்
29.	டிசம்பர் 10	மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா	தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்
30.	டிசம்பர் 11	மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா	எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்

2016 ஆகஸ்ட் 12]

3. 2011 முதல் 2016 வரையிலான கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு கொண்டாடப்படும் விழாக்கள்

- *கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைய அரும்பாடுபட்ட மார்ஷல் நேசமணி அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில், தமிழ்நாட்டுடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைந்த நாளான நவம்பர் 1ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.*

- *தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக தன் வாழ்வை அர்பணித்த தலைவர் இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் ஜுலைத் திங்கள் 7 ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.*

- *சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் விடுதலைப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாரின் பிறந்தநாள் விழா ஆண்டுதோறும் ஜனவரி திங்கள் 3 ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.*

- *மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் மிகவும் முக்கியமான மன்னரான திருமலை நாயக்கர் அவர்களின் பிறந்த நாள் ஆண்டு தோறும் தைப்பூசத்தன்று மதுரை மாவட்டத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது.*

- *கொடி காத்த குமரன் அவர்களின் பிறந்த நாள் ஆண்டு தோறும் அக்டோபர் திங்கள் நான்காம் நாள் அன்று திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் கொண்டாடப்பட்டு வருகிறது.*

- *விடுதலைப் போராட்ட வீரர் தியாகி வாஞ்சிநாதன் அவர்களின் பிறந்த நாள் விழா தியாகிகள் தினமான ஜுலை திங்கள் 17 ஆம் நாள் அன்று திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் கொண்டாடப்பட்டு வருகிறது.*

[2016 ஆகஸ்ட் 12

4. அரசு சார்பில் கொண்டாடப்படும் சிறப்பு விழா

- ஆண்டுதோறும் ஜனவரி திங்கள் திருவள்ளுவர் தினத்தன்று, தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் செய்தித் துறை இணைந்து திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் அறிஞர் பெருமக்களுக்கு, திருவள்ளுவர் விருது, தந்தை பெரியார் விருது, பேரறிஞர் அண்ணா விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பெருந்தலைவர் காமராஜர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது மற்றும் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது ஆகிய விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள்.

கள விளம்பரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தின் குக்கிராமங்களில் உள்ள மக்களும் அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் நேரடியாக அறிந்து பயன்பெறும் வகையில் விளம்பரப்படுத்துவதையும், தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகள் வாயிலாகச் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்கள் வாயிலாக மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு, கள விளம்பரப் பிரிவு என்னும் புதிய பிரிவு முதன்முதலாக கடந்த 2013 ஆம் ஆண்டு செய்தித் துறையில் உருவாக்கப்பட்டது.

மின்னணு விளம்பரத் திரை வீடியோ வாகனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நவீன தொழில்நுட்ப முறையில் மின்னணு விளம்பரத் திரை பொருத்திய 32 புதிய மின்னணு விளம்பரத் திரை வீடியோ வாகனங்களை அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கியுள்ளார்கள். இந்த

2016 ஆகஸ்ட் 12]

மின்னணு விளம்பரத் திரை வீடியோ வாகனங்கள், பகல், இரவு மற்றும் அனைத்து நேரங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்களிலும் அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த விளம்பரப் பணிகளை மேற்கொள்ளும் வகைகளில் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்விளம்பரக் காட்சி ஊர்திகளின் அன்றாட நடமாட்டத்தை மின்னணு இடம் காணல் கருவி (GPS) வாயிலாகக் கண்காணிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

மின்னணு விளம்பரத் திரைகள்

அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை விவரங்களை, அனைத்துப் பகுதி மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் சென்னையில் பத்து அம்மா உணவகங்கள் போன்ற மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் மின்னணு விளம்பரத் திரைகள் நிறுவப்பட்டு, இதன் மூலம் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த விளம்பரப் பணிகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

தகவல் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தகவல் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி ஒன்று கள விளம்பரப் பிரிவில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக அரசின் திட்டங்களும் சாதனை விவரங்களும், துறைகள் வாரியாகவும், மாவட்டங்கள் வாரியாகவும் தொகுப்பதற்காக, புதிதாக மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மென்பொருளைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசு சார்பில் அனைத்து மாவட்டங்களிலும், பல்வேறு துறைகள் வாயிலாக செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள், அரசால் வழங்கப்படும் உதவித் தொகையினை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை, இப்பயனாளிகளின் பெயர் மற்றும் முகவரி போன்ற விவரங்களை மாவட்ட வாரியாக ஒவ்வொரு துறையிலிருந்தும் நியமிக்கப்படும் பொறுப்பு அலுவலர்மூலம் அந்தந்தத் துறை அலுவலர்கள் அந்தந்த மாவட்டங்களில் ஒவ்வொரு நாளும் இணையவழி பதிவேற்றம் செய்திட, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 12

அலுவலர்களின் பணி மதிப்பீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளான, செய்தியாளர் கூட்டங்கள் நடத்துதல், நாளிதழ்களில் வெற்றிக் கதைகள் வெளிவரச் செய்தல், வீடியோ படக்காட்சிகள் நடத்துதல், திரையரங்கு ஆய்வு மேற்கொள்ளுதல், சிறப்பு வெளியீடுகள் பிரசுரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஆய்வு செய்து, அதற்கென மதிப்பெண்கள் வழங்கி அவர்களின் பணிகளை மாதந்தோறும், இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழு தர மதிப்பீடு செய்வதன்மூலம் மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கிடையே புதிய ஒரு உத்வேகம் உருவாக்கப்பட்டுள்ளது.

விளம்பரம்

தமிழ்நாடு அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூக நலப் பணிகளை, மக்கள் அறிந்துகொள்ளச் செய்யும் வகையில் நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் ஆகியவற்றில் விளம்பரங்களை வெளியிடும் பணியில் இத்துறை முனைப்புடன் செயலாற்றி வருகிறது. இதே போன்று தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஏனைய பணிகளின் பொருட்டு வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களையும் இத்துறை வெளியிட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களை, நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாக இத்துறை செயலாற்றி வருகிறது.

மேலும், விளம்பரத்தின் முக்கியத்துவத்திற்கேற்ப இந்திய வர்த்தக இதழிலும் (Indian Trade Journal) விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்

நவீன மின்னணு தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில், ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் தேசியத் தகவல் மையத்தின்

வழியாக, தமிழக அரசின் www.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. www.tenders.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை விலையேதுமின்றிப் பதிவிறக்கம் செய்ய முடியும். ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதோடு, இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் தகுதியான அனைவரும் தமிழக அரசு கோரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பாகுபாடு இன்றிப் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்

அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில், அவை வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இயற்றப்பட்டு, அதன் அடிப்படையில் மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளிகள், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளிகள், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள்மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

திரைப்பட விருதுகள்

மனித நல்லுணர்வுகளைப் பிரதிபலிக்கும் திரைப்படங்களை ஊக்கப்படுத்தும் வகையில், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக்

கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. விருதுகள் பெறுவதற்குத் தகுதியான சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்வதற்காக, தேர்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

குழு தேர்ந்தெடுக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு கீழ்காணும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

1. முதல் பரிசு	—	*ரூ.2 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்*
2. இரண்டாம் பரிசு	—	*ரூ.1 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்*
3. மூன்றாம் பரிசு	—	*ரூ.75 ஆயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்*
4. சிறப்புப் பரிசு	—	*ரூ.75 ஆயிரம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்*

மகளிரைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்கு சிறப்புப் பரிசாக ரூ.1.25 இலட்சம் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு), சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு), சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடலாசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த பின்னணிப் பாடகர், சிறந்த பின்னணிப் பாடகி, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த திரைப்படத் தொகுப்பாளர், சிறந்த கலை இயக்குநர், சிறந்த சண்டைப் பயிற்சியாளர், சிறந்த நடன ஆசிரியர், சிறந்த ஒப்பனைக் கலைஞர், சிறந்த தையற்கலைஞர், சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) மற்றும் சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) ஆகியோருக்கு தலா 5 பவுன்

2016 ஆகஸ்ட் 12]

தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

கலைத் துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த்திரை உலகில் தமது எழுத்தாலும் நடிப்பாலும் தனி முத்திரை பதித்த பேரறிஞர் அண்ணா, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், தியாகராஜ பாகவதர், ராஜாசாண்டோ, மக்கள் திலகம் எம்ஜிஆர், கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரின் பெயர்களில் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத் துறை வித்தகர்களுக்கு, தலா 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் நினைவுப்பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.

அரசு திரைப்பட மானியம்

சிறிய முதலீட்டில் திரைப்படம் தயாரிப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில், குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட சமூகப் பொறுப்பும், அக்கறையும் கொண்ட, தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தகுதியான திரைப்படங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசால் தேர்வுக் குழு அமைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ.7 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

சின்னத்திரை விருதுகள்

மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப்பெரும் பங்கு வகிக்கும் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் தொடர்கள், அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு, சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசு	–	ரூ.2 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்
2. சிறந்த நெடுந்தொடருக்கு இரண்டாம் பரிசு	–	ரூ.1 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ்

மேலும், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன்,

சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணி குரல் கொடுப்பவர் (ஆண்) சிறந்த பின்னணி குரல் கொடுப்பவர் (பெண்) மற்றும் சிறந்த தந்திரக் காட்சியாளர் ஆகியோருக்கு தலா 3 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர், சிறந்த வாழ்நாள் சாதனையாளர் ஆகியோருக்கு தலா ரூ.1 இலட்சம் ரொக்கம், நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

திரைப்பட உலகிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினை சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஏதுவாக இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு அரசின் சார்பில் இவ்விழாவினை நடத்திய தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு ரூ.10 கோடி மானியமாக வழங்கப்பட்டது. இவ்விழா சென்னையில் 21-9-2013 முதல் 24-9-2013 வரை நடைபெற்றது. இவ்விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் பிற மாநில முதலமைச்சர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னையில் 14-12-2011 முதல் 22-12-2011 வரை நடைபெற்ற ஒன்பதாவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழக அரசு சார்பில் ரூ.25 இலட்சம் மானியமும், 12-12-2012 முதல் 20-12-2012 வரை நடைபெற்ற பத்தாவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழக அரசு சார்பில் ரூ.50 இலட்சம் மானியமும், 12-12-2013 முதல் 19-12-2013 வரை நடைபெற்ற பதினோராவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழக அரசு சார்பில் ரூ.50 இலட்சம் மானியமும், 18-12-2014 முதல் 25-12-2014 வரை நடைபெற்ற பன்னிரெண்டாவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழக அரசு சார்பில் ரூ.50 இலட்சம் மானியமும் மற்றும் 6-1-2016 முதல் 13-1-2016 வரை நடைபெற்ற பதிமூன்றாவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழக அரசு சார்பில் ரூ.50 இலட்சம் மானியமும் வழங்கப்பட்டது.

2016 ஆகஸ்ட் 12]

திரைப்படத் துறையினர் நல வாரியம்

திரைப்படத் துறையினர், சின்னத்திரையினர் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலமுடன் வாழவேண்டுமென்பதற்காக தமிழக அரசால் திரைப்படத் துறையினர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டு அத்துறையினர் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரைப்படத் துறையின் 41 சங்கங்களைச் சேர்ந்த திரைப்பட / சின்னத்திரைப் பணியாளர்கள், திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். இதுவரை சுமார் 20,000 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர்.

திரைப்படத் துறையின் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்குக் கீழ்க்கண்ட நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

வ. எண்	நலத் திட்ட உதவிகள்	உதவித்தொகை
1.	விபத்து ஈட்டுறுதித் திட்டம் (அ) விபத்தினால் ஏற்படும் மரணம் (ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப	 ரூ.1,00,000 ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை
2.	இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை	ரூ.15,000
3.	ஈமச் சடங்கு மரணத்திற்கான உதவித் தொகை	ரூ.2,000
4.	கல்வி உதவித் தொகை	
அ)	10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு	ரூ.1,000
ஆ)	10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்க்கு	ரூ.1,000
இ)	12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு	ரூ.1,500
	12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்க்கு (இரு பாலருக்கும்)	ரூ.1,500

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	நலத் திட்ட உதவிகள்	உதவித்தொகை
ஈ)	முறையான பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு	ரூ.1,500
	மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப் படிப்பிற்கு	ரூ.1,750
உ)	முறையான பட்ட மேற்படிப்பிற்கு	ரூ.2,000
	மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு	ரூ.3,000
ஊ)	தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு	ரூ.2,000
	மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு	ரூ.4,000
எ)	தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு	ரூ.4,000
	மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு	ரூ.6,000
ஏ)	ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி அல்லது பல்தொழில் பயிற்சிப் படிப்பிற்கு	ரூ.1,000
	மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பல்தொழில் பயிற்சிப் படிப்பிற்கு	ரூ.1,200
5.	திருமண உதவித் தொகை	ரூ.2,000
6.	மகப்பேறு உதவித் தொகை	ரூ.6,000
7.	கருக்கலைப்பு / கருச்சிதைவு உதவித் தொகை	ரூ.3,000
8.	மூக்குக் கண்ணாடிச் செலவுத் தொகையை ஈடுசெய்தல்	ரூ.500
9.	முதியோர் ஓய்வூதியம் (மாதமொன்றுக்கு)	ரூ.400

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வரவு செலவு திட்டத்தில் திரைப்படத் துறையினர் நல வாரிய செயல்பாடுகளுக்காக 2011 ஆம் ஆண்டு ரூ.49.13 இலட்சமும்,

2016 ஆகஸ்ட் 12]

2013 ஆம் ஆண்டு ரூ.23.08 இலட்சமும், 2014 ஆம் ஆண்டு ரூ.22.14 இலட்சமும் மற்றும் 2015 ஆம் ஆண்டில் ரூ.25.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் திரைப்படத் துறையினர் நல வாரியத்தின்மூலம் வழங்கப்பட்ட நலத் திட்ட உதவிகளுக்கான விவரங்கள் ஆண்டுவாரியாக கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்	ஆண்டு	மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை ரூ.
1.	*2011*	*38*	*1,98,000/-*
2.	*2013*	*728*	*21,39,000/-*
3.	*2014*	*303*	*8,00,000/-*
4.	*2016*	*277*	*8,00,250/-*
	மொத்தம்	*1,346*	*39,37,250/-*

திரைப்படத் துறையினர் நல வாரியத்திற்கு வரப்பெற்ற விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, பயனாளிகளைத் தேர்வு செய்து, நலத் திட்ட உதவிகளை வழங்குவதற்கு திரைப்படத் துறையினர் நல வாரியத்திற்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமித்துத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. திரைப்படத் துறையினர் நல வாரியத்திற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்கள் உறுப்பினர் / செயலாளராகவும் மற்றும் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வ. எண்	அலுவல் சாரா உறுப்பினர்கள்	வ. எண்	அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்
	(திருவாளர்கள்)		
1.	ஆர்.வி. உதயகுமார் தயாரிப்பாளர் / இயக்குநர்	*1.*	தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர்
2.	பி. வாசு, இயக்குநர்	*2.*	நிதித் துறைச் செயலாளர்

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	அலுவல் சாரா உறுப்பினர்கள்	வ. எண்	அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்
3.	லியாகத் அலிகான் வசனகர்த்தா	3.	வருவாய்த் துறைச் செயலாளர்
4.	மோகன் காந்திராமன் தயாரிப்பாளர் / இயக்குநர்	4.	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளர்
5.	ராமராஜன் நடிகர் / தயாரிப்பாளர் / இயக்குநர்	5.	வணிகவரித்துறை ஆணையர்
6.	டி.கே. கலா துணை நடிகை மற்றும் பாடகி	6.	உள் துறை செயலாளர் (சினிமா)
7.	எல்.ஆர். ஈஸ்வரி திரைப்பட பின்னணி பாடகி	.7	தொழிலாளர் நலத் துறை ஆணையர்
		8.	நில நிருவாகத் துறை ஆணையர்

இவ்வாரியத்தின்மூலம் பெறப்படும் விண்ணப்பங்களை இக்குழு பரிசீலித்துப் பயனாளிகளைத் தேர்வு செய்கிறது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

செய்திப் படப்பிடிப்பு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் முக்கியமான நிகழ்ச்சிகளை வீடியோமூலம் ஒளிப்பதிவு செய்து அவற்றைத் தொகுத்துச் செய்தி மலராக வெளியிடும் விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

குறும்பாடல்கள் மற்றும் குறும்படங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முத்தான திட்டங்கள் குறித்து 75 சிறப்பு குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு தமிழகத்தின் அனைத்து டிஜிட்டல் திரையரங்குகளிலும் திரையிடப்பட்டன. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

2016 ஆகஸ்ட் 12]

அவர்கள் கலந்து கொண்ட 139 காணொலிக் காட்சி நிகழ்ச்சிகள் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின்மூலம் தொகுக்கப்பட்டு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன்மூலம் பொது மக்களுக்கு ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

வார செய்தித் தொகுப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சிமூலம் துவக்கப்பட்ட புதிய திட்டங்களை செய்தித் தொகுப்புகளாக தயாரித்து குறுந்தகடுகளில் பதிவேற்றம் செய்து, வாரந்தோறும் கள விளம்பரப் பணிகளை மேற்கொள்ள அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

படக்காட்சி செய்தி மலர்கள்

தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் முக்கியப் பணியாக தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள், அறிவிப்புகள், வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய படக்காட்சி செய்தி மலர்களைத் தயாரித்து அனைத்து டிஜிட்டல் சினிமா திரையரங்குகளில் வெளியிடுவது மற்றும் குறுந்தகடுகளில் பதிவேற்றம் செய்து அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் அனுப்பி, பொது மக்கள் கூடும் இடங்களில் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலக வீடியோ வாகனங்கள் மூலமாகக் கள விளம்பரப் பணியைச் செய்து வருகிறது.

தொழில்நுட்ப வளர்ச்சிகேற்றவாறு படக்காட்சி செய்தி மலர்களை LED *திரைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டு அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், அம்மா உணவகங்களிலும் திரையிட்டு மக்களுக்கு அரசுத் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு, அவை தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையத்தின்மூலம் அனைத்து ஊடகங்களுக்கும் படக்காட்சிகளாக வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென உயர் தொழில்நுட்ப மடிக்கணினி ஒன்று வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் திட்டங்களை மக்களுக்கு விளக்கி கூறும் வகையில் கடந்த 2011 முதல் 2016 வரையிலான 5 ஆண்டுகளில்

[2016 ஆகஸ்ட் 12

116 படக்காட்சி செய்தி மலர்களும் 45 குறும்பாடல்கள் கொண்ட 6 தொகுப்புகளும் 4 வார செய்தி தொகுப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

வ. எண்	படக்காட்சி செய்தி மலர்கள்
1.	மலர்ந்தது அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி
2.	மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைகள்
3.	அம்மாவும் அன்னைத் தமிழும்
4.	அம்மாவின் செயற்கரிய செயல்பாட்டில் சிகரம் தொட்ட பள்ளிக் கல்வித் துறை
5.	அம்மா காட்டும் கல்விப்பாதை
6.	அம்மா உணவகம்
7.	அம்மாவின் கல்விப்புரட்சி
8.	அம்மா குடிநீர்
9.	கல்வித்தாய்
10.	அம்மா திட்டம்
11.	வரமாய் வந்தது அம்மாவின் ஆட்சி (பாடல்)
12.	அம்மா உப்பு
13.	அம்மா உப்பு (பாடல்)
14.	மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த ஆணைகள்
15.	சுதந்திரத் திருநாள் 2011
16.	எளியோர் ஏற்றம் பெற ஏற்றமிகு நிதிநிலை அறிக்கை
17.	நாடு நலம் பெற நலத் திட்டங்கள்
18.	தானே புயல்
19.	பள்ளிக் கல்வியில் அம்மாவின் சொல்லிமாளாச் சாதனைகள்
20.	மீனவர் நலன் காக்கும் மக்கள் அரசு

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	படக்காட்சி செய்தி மலர்கள்
21.	*நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனை*
22.	*உங்களால் நான் (சுதந்திர தினத் திருநாள் 2012)*
23.	*டெங்குவை ஒழிப்போம்*
24.	*டெங்குவை ஒழிப்போம் (பகுதி 2)*
25.	*பென்னி குவிக்*
26.	*ஒரு கையெழுத்து மாறியது தலையெழுத்து*
27.	*அன்பின் அரசாங்கம்*
28.	*சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு (பகுதி 1)*
29.	*சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு (பகுதி 2)*
30.	*சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு (குறும்பாடல்கள்)*
31.	*விதி 110 (பகுதி 1 மற்றும் 2)*
32.	*புதுமைகள் படைக்கும் புரட்சித் தலைவி*
33.	*உயிர் காத்த உத்தமத் தலைவி*
34.	*மாவட்ட ஆட்சியர் மாநாடு - 2013*
35.	*காவிரி நீரின் உரிமையை தமிழகத்துக்கு பெற்றுத்தந்தது*
36.	*விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம்*
37.	*காவிரி டெல்டா மேம்பாட்டுத் திட்டம்*
38.	*முதல் தலைமுறை*
39.	*விலையில்லாக் கறவை மாடு*
40.	*சூரியசக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்*
41.	*அரசு கேபிள் டிவி சேவை மூலம் அதிக சேனல்களை குறைந்த கட்டணத்தில் வழங்குதல்*
42.	*விலையில்லா அரிசி*

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	படக்காட்சி செய்தி மலர்கள்
43.	ஒரு கிலோ அரிசி ரூ.20/-
44.	தாய்ப்பாசம்
45.	தாலிக்குத் தங்கம்
46.	நடமாடும் மருத்துவமனைத் திட்டம்
47.	உழவர் பெருவிழா
48.	மாணவ - மாணவியர் காவலர்
49.	பண்ணைப்பசுமை நுகர்வோர் மலிவு விலைக் காய்கறிக் கடை
50.	தமிழ்நாடு அரசின் காவலர்களுக்கான புதிய குடியிருப்புகள் திட்டம்
51.	இலவச நாப்கின் வழங்கும் திட்டம்
52.	தொட்டில் குழந்தை திட்டம்
53.	முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்
54.	வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு நிவாரணம்
55.	விலையில்லா மின் விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்
56.	விலையில்லா மடிக்கணினி
57.	ஜெருசலேம் தெய்வீக சுற்றுலா செல்லும் கிறிஸ்தவர்களுக்கு மானியம்
58.	உழவர் பாதுகாப்புத் திட்டம்
59.	விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்
60.	அனைத்து திட்டங்களையும் முகாமில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு விரிவுபடுத்தியது
61.	விதவை, திருமணம் ஆகாதவர்கள், ஓய்வூதியதாரரின் விதவை மகள், குடும்ப நலத்திட்டத்தின் கீழ் வாழ்நாள் ஓய்வூதியம் உயர்த்தி வழங்குதல்
62.	சமூகப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை உயர்த்திய திட்டம்

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	படக்காட்சி செய்தி மலர்கள்
63.	விலையில்லா ஆடுகள்
64.	தாய் திட்டம்
65.	பள்ளி மாணவர்களுக்கான விலையில்லா பொருட்கள் வழங்கும் திட்டம்
66.	மாற்றுத்திறனாளிக்கு Retro Fitted Scooter வழங்கும் திட்டம்
67.	மரக்கன்றுகள் நடுதல்
68.	பள்ளி மாணவர்கள் பாதியில் பள்ளியை விட்டு நிற்காமல் இருக்க சிறப்பு திட்டம்
69.	மின் திட்டங்கள்
70.	போக்குவரத்துத் துறை
71.	அரசு தொலைநோக்கு திட்டம் 2023
72.	மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்களுக்கு உதவித் தொகை உயர்த்தி வழங்கும் திட்டம்
73.	அன்னதானத் திட்டம்
74.	மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகிய இடங்களுக்கு புனித பயணத்திற்கு மானியம்
75.	தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை மற்றும் சூரிய சக்தி திட்டங்கள்
76.	பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டுமூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் வழங்குதல்
77.	ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் புனரமைப்புத் திட்டம்
78.	விரைவு பட்டா மாற்றும் திட்டம்
79.	மாற்றுத்திறனாளிகளுக்கான வயது வரம்பை 18-க்கு குறைத்து ஓய்வூதியம் பெறுவதற்கான திட்டம்
80.	சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகையை உயர்த்திய திட்டம்

TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	படக்காட்சி செய்தி மலர்கள்
81.	சிறிய பேருந்து பெரிய மகிழ்ச்சி
82.	மீன்பிடி குறைவு காலத்தில் மீனவர்களுக்கு சிறப்பு நிவாரணம் உதவித் திட்டம்
83.	அயல்நாட்டில் உயர்கல்வி படிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்
84.	முத்திரை பதித்த மூன்றாண்டு (பகுதி 1)
85.	முத்திரை பதித்த மூன்றாண்டு (பகுதி 2)
86.	ஆண்டாண்டு போற்றும் மூன்றாண்டு சாதனைகள்
87.	இமயம் தொட்ட சாதனைகள் (பாடல்)
88.	தாயே அன்னபூரணி மற்றும் தொழில் புரட்சி
89.	மாற்றம் தந்து ஏற்றம் தந்த புரட்சித் தலைவி
90.	பயணங்கள் இனிதாகும் பேருந்துப் பயணம்
91.	பண்ணைப் பசுமைக் காய்கறிகள்
92.	குறுவை நெல் சாகுபடி
93.	அணை காத்த அன்னை
94.	வளமையான தமிழகம்
95.	விவசாயிகளின் நலன்
96.	குழந்தைகள் நலன்
97.	தாய் திட்டம், காவல் துறை
98.	மகளிர் மேம்பாடு
99.	விலையில்லா மடிக்கணினி, அம்மா உணவகம்
100.	ஊட்டச்சத்து
101.	அம்மா குடிநீர், அம்மா சிமெண்ட்
102.	ஆதி திராவிடர் நலன் (ம) பிற்படுத்தப்பட்டோர் நலன்

TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	படக்காட்சி செய்தி மலர்கள்
103.	திருமண உதவி திட்டம், 20 கிலோ அரிசி
104.	சானிடரி நாப்கின், விலையில்லா மிதிவண்டி
105.	திருக்கோயில் அன்னதான திட்டம், மானசரோவர் முக்திநாத் புனித பயண மான்ய திட்டம்
106.	பண்ணைப் பசுமை, அம்மா மருந்தகம்
107.	மழைநீர் சேகரிப்பு, காடு வளர்ப்போம்
108.	மீனவர்கள் நலன், முதியோர் உதவித்தொகை
109.	விரிவான மருத்துவப் பாதுகாப்புத் திட்டம், தொழில்துறை-2023
110.	மகப்பேறு நலன்
111.	விலையில்லா மாடு, நான்கு ஆடுகள்
112.	விவசாயிகளின் வாழ்வாதாரம் முல்லைப்பெரியாறு, காவேரியை மீட்டெடுத்த காவியத் தலைவி
113.	தொட்டில் குழந்தை திட்டம், அம்மா பேர் தலைப்பெழுத்து
114.	விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி, அம்மா உப்பு
115.	தர்மம் வெல்லும்
116.	பிளாஸ்டிக் ஆதார் அட்டை
117.	இ-சேவையில் இனி பாஸ்போர்ட்
118.	சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி-1
119.	சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி-2
120.	சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி-3
121.	சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி-4

வ. எண்	படக்காட்சி செய்தி மலர்கள்
122.	*சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி-5*
123.	*சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு முதல்வர் அவர்களின் பதில் உரை பகுதி-6*
124.	*110 விதியின்கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிக்கை*
125.	*தொடரும் அம்மாவின் ஆட்சி, தொடர்கிறது மக்களின் மகிழ்ச்சி*

குறும்பாடல்கள்

வ. எண்	குறும்பாடல்கள்
1.	***வளர்ச்சிப் பாதையில் மீண்டும் தமிழ்நாடு தொகுப்பு 1*** *1. விலையில்லா அரிசி* *2. மாற்றுத்திறனாளி, விதவை, ஆதரவற்றோர் உதவித்தொகை* *3. பெண் அரசு ஊழியர் மகப்பேறு காலம் 6 மாத விடுமுறை* *4. மீனவர் மீன்பிடி தடைக்கால உதவித்தொகை* *5. படித்த பெண்களுக்கு நிதியுதவியுடன் 4 கிராம் தங்கம்* *6. பட்டம் படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்கம், ரூ.50 ஆயிரம் நிதியுதவி*
2.	***தொகுப்பு 2*** *1. விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்* *2. விலையில்லா 4 ஆடுகள், கறவைமாடு திட்டம்* *3. விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்* *4. விலையில்லா மடிக்கணினி* *5. சித்திரைத் திருநாள்*

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	குறும்பாடல்கள்
3.	நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனை
4.	ஒரு கையெழுத்து, மாறியது தலையெழுத்து
	1. விலையில்லா பசு மாடுகள் செம்மறி ஆடுகள், 2. விலையில்லா மடிக்கணினி 3. விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 4. பசுமை வீடுகள் திட்டம் 5. தாலிக்குத் தங்கம் மற்றும் ரொக்கம் 6. மீன்பிடி தடைக் காலத்தில் உதவித் தொகை உயர்வு 7. விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை உயர்வு 8. விலையில்லா 20 கிலோ அரிசி 9. கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறுகால உதவித் தொகை உயர்வு 10. விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்
5.	சாதனை படைத்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு 1. காவிரியை மீட்டெடுத்த காவியத் தலைவி 2. பள்ளிக் கல்வி 3. கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் 4. போக்குவரத்துத் துறையின் வளர்ச்சி 5. அம்மா உணவகம் பகுதி-1 6. உழவர் பாதுகாப்புத் திட்டம் 7. அம்மா உணவகம் பகுதி-2 8. பாலங்கள் 9. நிருவாகம் 10. தொழில் புரட்சி 11. தொலைநோக்குத் திட்டம்-2023 12. சோலார் சிஸ்டம் 13. மலிவு விலை அரிசி

வ. எண்	குறும்பாடல்கள்
6.	நாடு போற்றும் நான்காண்டு சாதனைகள் 1. அம்மாவின் முதல் எழுத்து தலைப்பெழுத்து 2. அம்மா குடிநீர் 3. அம்மா மருந்தகம் 4. அம்மா சிமெண்ட் 5. அம்மா சிற்றுந்து 6. தொட்டில் குழந்தைத் திட்டம் 7. காடு வளர்ப்புத் திட்டம் 8. காற்றாலை மின்சாரத் திட்டம் 9. பண்ணைப் பசுமை கடைகள் 10. மழைநீர் சேகரிப்பு

அதிநவீன உபகரணங்கள்

2012-2013 ஆம் ஆண்டு பகுதி II திட்டங்களின்கீழ் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலமாக 3 நவீன கேமிராக்கள் ரூ. 26.49 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் நிகழ்ச்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டு வருகிறது. மேலும், தலைமைச் செயலக ஊடக மையத்தில் உயர்தர மடிக்கணினி ஒன்றும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒரு நேரடி ஒளிபரப்பு கருவி ரூ.9.40 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது. அதன் துணை கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிகழ்ச்சிகள் நேரடியாக ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன. ஒரு வீடியோ படத்தொகுப்பு கருவி ரூ.7.74 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

ரூ.30.25 இலட்சம் மதிப்பீட்டில், ஒரு உயர்ரக வீடியோ காமிரா, ஒரு ஆப்பிள் மேக்புரோ நான் லீனியர் வீடியோ எடிட்டிங் சிஸ்டம், ஒரு நகலெடுக்கும் கருவி மற்றும் இரண்டு கணினி மற்றும் பிரிண்டர்கள் வாங்கப்பட்டுள்ளன.

2016 ஆகஸ்ட் 12]

பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்ஜிஆர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆகியோரின் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு செய்திப்படங்கள் எண்மயப்படுத்தி மின்னணு முறையில் மாற்றும் பணிக்கு ரூ.8.55 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் திரைப்படத் தயாரிப்பு, தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்களையும், கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் பல்வேறு விதமான திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப்பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத்தருவதாகும்.

அகில இந்திய அளவில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சியை அளிக்கும் மூன்று முன்னோடி நிறுவனங்களில், தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஒன்றாகும். மற்றவை, பூனாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும், கொல்கத்தாவில் உள்ள சத்தியஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஆகும்.

பட்டப் படிப்புகள்

அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) அங்கீகாரத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்த பட்டயப் படிப்புகள் தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, இளங்கலை காட்சிக்கலை (Bachelor of Visual Arts) நான்காண்டு பட்டப்படிப்புகளாக மாற்றப்பட்டு, 2016-2017 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்துடன் இணைந்து பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 12

இதில், இளங்கலை காட்சிக்கலை ஒளிப்பதிவு Bachelor of Visual Arts (Cinematography),

இளங்கலை காட்சிக்கலை (எண்மிய இடைநிலை)–Bachelor of Visual Arts (Digital Intermediate),

இளங்கலை காட்சிக்கலை (ஒலிப்பதிவு)–Bachelor of Visual Arts (Audiography),

இளங்கலை காட்சிக்கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்) – Bachelor of Visual Arts (Direction and Screenplay Writing),

இளங்கலை காட்சிக்கலை (படத்தொகுப்பு)–Bachelor of Visual Arts (Film Editing),

இளங்கலை காட்சிக்கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன்)–Bachelor of Visual Arts (Animation and Visual Effects), என ஆறு பாடப்பிரிவுகள் பயிற்றுவிக்கப்படுகிறது.

இதுவரை வழங்கப்பட்ட Diploma in Film Technology என்ற பட்டயத்திற்கு பதிலாக Bachelore of Visual Arts, என்ற பட்டம் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் 14 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். கல்விக் கட்டணமாக ரூ.15,000/-மும், சிறப்புக் கட்டணமாக ரூ.2,000/-மும், வளர்ச்சிக் கட்டணமாக ரூ.1,000/-மும் வசூலிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் முற்றிலுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி

கல்வி இறுதியாண்டில், அனைத்துத் துறைகளிலும் பயிலும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டயக் குறும்படம் வீதம் 14 பட்டயப் படங்கள் தயாரிக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், 2012-2013 ஆம் நிதியாண்டு முதல் பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவிற்காக ஒரு மாணவருக்கு ஒரு பட்டயப் படம் தயாரிக்க அளிக்கப்படும் நிதியுதவி ரூ.8,000/-லிருந்து ரூ.15,000/-ஆக உயர்த்தி தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 12]

குறும்பட விருது

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குக் குறும்பட விருது என்ற பெயரில், இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் பட ஆக்கம் – அச்சிடல் வல்லுநர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குத் தலா ஒரு பவுன் தங்கப்பதக்கம், ரூ.5,000/- பரிசு மற்றும் நினைவுக் கேடயம் வழங்கப்பட்டு வருகிறது.

திரைப்பட விழாக்களில் பங்கேற்க நிதியுதவி

மாணவர்களால் தயாரிக்கப்படும் பட்டயப் படங்களை தேசிய மற்றும் சர்வதேச திரைப்பட விழாக்களில் கலந்து கொள்ள அனுப்பும் பொருட்டு ஆண்டுதோறும் ரூ.75,000/- தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அகில இந்திய சர்வதேச திரைப்பட விழா

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் பட்டயக் குறும்படங்கள் ஆண்டுதோறும், கோவாவில் நடைபெற்று வரும் அகில இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு வருகிறது.

சென்னை சர்வதேச திரைப்பட விழா

சென்னையில் கடந்த 2014-2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற சென்னை சர்வதேச திரைப்பட விழாவில், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் 5 பட்டயக் குறும்படங்கள் போட்டியிட்டு "ச்சீ" என்ற பட்டயக் குறும்படமும், 2015-2016 ஆம் ஆண்டில் 10 பட்டயக் குறும்படங்கள் போட்டியிட்டு "புர்ர்ரா" என்ற பட்டயக் குறும்படமும் "அம்மா" விருதினை வென்றுள்ளது.

நவீன படப்பிடிப்பு கருவிகள் – உபகரணங்கள்

இந்நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் திரைப்படத் துறையில் நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப சிறந்த முறையில் விளங்கிட ரூ.3.83 கோடி மதிப்பீட்டில், 2015-2016 ஆம் கல்வியாண்டில் உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பாடப்பிரிவிற்காக நவீன கருவிகள் மற்றும் அதன் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டில் உள்ளது.

[2016 ஆகஸ்ட் 12

திரைப்படத் துறையில் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப மாணவர்களின் செயல்முறை பாடத்திட்டங்களுக்காக நவீன படப்பிடிப்பு கருவிகள் மற்றும் அதன் உபகரணங்களை வெளிமுகமை (Out Sourcing)மூலமாக ஆண்டுதோறும் வாடகைக்கு பெற்று உபயோகிப்பதற்காக ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொன்விழா முகப்பு வளைவு மற்றும் பாரத ரத்னா எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவச் சிலை

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் தரமணி வளாகத்தில் செயல்படத் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, இந்நிறுவன வளாகத்தின் நுழைவு வாயிலில் பொன்விழா முகப்பு வளைவு மற்றும் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலை ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

பகுதி 2 திட்டம், மானியக் கோரிக்கை அறிவிப்புகளின்கீழ் கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதலுக்காக நிதி ஒதுக்கீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மற்றும் பகுதி-2 திட்டம் ஆகியவற்றின்படி, கடந்த 5 ஆண்டுகளில் இந்நிறுவனத்திற்கு 13 கோடியே 55 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய கட்டடம் மற்றும் புனரமைப்புப் பணிகள் கீழ்க்காணும் 2011–2016 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன

1. *ரூ.4.62 கோடி மதிப்பீட்டில், உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் பாடப்பிரிவிற்கு புதிய வகுப்பறைக் கட்டடங்கள்.*

2. *ரூ.93 இலட்சத்தில் ரிச் மேன் ஹவுஸ் மற்றும் ரூ.90 இலட்சத்தில் டப்பிங் தியேட்டர் புனரமைப்பு.*

3. *ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் அமையப்பட்டுள்ள முன்காண் திரையரங்கம் புனரமைப்பு.*

2016 ஆகஸ்ட் 12]

4. ரூ.2 கோடி மதிப்பீட்டில், எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில், புதிய மாணவர் விடுதி.

5. ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில், புதிதாக கட்டப்பட்ட மாணவர் விடுதிக்கு அறைகலன்கள் கொள்முதல்.

6. மேலும், ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில், எம்ஜிஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் முன்காண் திரையரங்கம் நவீன உயர்தர டிஜிட்டல் டால்பி பார்கோ புரொஜெக்டர் மற்றும் நவீன ஒலி அமைப்புடன் புதுப்பிப்பு.

திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

திரைப்படம் என்பது மாநிலத்தில் முக்கியமான பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாக திகழ்வதால் திரைப்படத் துறையின் ஒட்டு மொத்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது.

திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதற்கும், உரிமம் வழங்குவதற்கும், திரையிடுவதை முறைப் படுத்துவதற்கும் தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டது. மேற்கண்ட சட்டப் பிரிவுகளின்படி, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை காவல் துறை ஆணையரும், திரையரங்குகளைக் கட்டுவதற்குத் தடையின்மை சான்றும், திரைப்படங்களை திரையிடுவதற்கு உரிமம் வழங்கும் தகுதியுடைய அதிகாரிகள் ஆவர். இணை ஆணையர், நில நிருவாக ஆணையரகம் மற்றும் அரசு (உள்துறை) ஆகியோர் முறையே மேல் முறையீட்டு அதிகாரியாகவும், சீராய்வு மேற்கொள்ளும் அதிகாரியாகவும் செயல்பட இச்சட்டப்பிரிவுகளின்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. திரையரங்குகளில் திரைப்படம் காண வரும் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகள், சுகாதாரமான சூழல், பாதுகாப்பு மற்றும் பிற நல அம்சங்கள் வழங்க உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு

[2016 ஆகஸ்ட் 12

திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள் 1957-ல் அரசு கடுமையான வழிமுறைகளை வகுத்துள்ளது.

தமிழ்நாட்டில், தற்போது 1,022 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு உள்ளது:—

1.	நிரந்தரத் திரையரங்குகள்	997
2.	பகுதி நிரந்தரத் திரையரங்குகள்	13
3.	நடமாடும் திரையரங்குகள்	09
4.	திறந்தவெளித் திரையரங்குகள்	03
	மொத்தம்	1,022

கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு

இந்தியா முழுவதும் உள்ள கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பினை 1995 ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்புச் (முறைப்படுத்துதல்) சட்டம் (மத்திய சட்டம் 7/1995) முறைப்படுத்துகிறது. மேற்சொல்லப்பட்ட சட்டத்தின்படி, மாவட்ட மற்றும் உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் மாநகர காவல் துறை ஆணையாளர் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8 மற்றும் 9 (அல்லது) 10 ஆகிய பிரிவுகளை மீறும், கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தமிழக அரசு சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் மாநகர காவல் துறை ஆணையாளர்கள், மாவட்டங்களைப் பொறுத்த அளவில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களை கேபிள் தொலைக்காட்சி சட்டத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமித்து அறிவிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டத்தினை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாநகரக் காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2016 ஆகஸ்ட் 12]

வீடியோ சட்டமும் விதிகளும்

1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில், திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், தமிழ்நாட்டில், வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல் துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அதிகாரிகள்.

திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு

காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடி கட்டுப்பாட்டின்கீழ், குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு இயங்கி வருகிறது. காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநருக்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அளவில் ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் ஒரு காவல் துறை துணை கண்காணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் தற்போது சென்னை (2), புனித தோமையார் மலை (1), வேலூர் (1), சேலம் (1), கோயம்புத்தூர் (1), திருச்சி (1), கடலூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), விருதுநகர் (1) மற்றும் திருநெல்வேலி (1) ஆகிய பன்னிரண்டு இடங்களில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு அலகும், ஒரு காவல் ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் ஆறு முதல் நிலை காவலர்களை உள்ளடக்கியதாகும். சென்னையைப் பொறுத்த வரை இரண்டு அலகுகள் இயங்கி வருகின்றன. அதில் அலகு 1-இல் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், எட்டு முதல் நிலை காவலர்கள் மற்றும் இரண்டு இரண்டாம் நிலை காவலர்கள் உள்ளனர். அலகு 2-இல் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், மற்றும் எட்டு முதல் நிலை காவலர்கள் உள்ளனர். 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்க இப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 12

வீடியோ தடுப்பு பிரிவினால் 2004 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, அவ்வழக்குகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துகளின் மதிப்பு முதலிய விவரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன:—

திருட்டு வீடியோ தடுப்பு பிரிவால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த விவரம் 2004 முதல் 2016 வரை (31—05—2016 வரை)

வருடம்	பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை	கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூ)	கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை
2004	**1151**	**1206**	**12,06,43,647**	**53**
2005	**813**	**950**	**9,44,55,557**	**13**
2006	**1153**	**1193**	**19,00,04,502**	**10**
2007	**1844**	**1866**	**17,38,74,360**	**9**
2008	**1968**	**1955**	**1,72,23,401**	**17**
2009	**2204**	**2201**	**8,32,59,759**	**31**
2010	**2690**	**2664**	**14,38,31,530**	**34**
2011	**2665**	**2648**	**10,78,74,745**	**9**
2012	**2858**	**2838**	**14,36,05,175**	**2**
2013	**3020**	**3004**	**36,57,57,107**	**2**
2014	**3320**	**3320**	**17,75,02,306**	**29**
2015	**3406**	**3406**	**11,65,23,631**	**51**
2016 (31-5-16 வரை)	**1535**	**1535**	**4,98,67,387**	**5**

2016 ஆகஸ்ட் 12]

இது தவிர, வீடியோ திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982) கீழும் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. வீடியோ திருட்டு சம்பந்தமான குற்றங்களுக்காக, 2015-2016 ஆம் ஆண்டில் 7 நபர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழரசு

தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், மக்கள் நலப் பணிகள், நலத் திட்ட உதவிகள், சாதனைகள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்க்கும் அரசின் அச்சு ஊடகமாகத் தமிழரசு இதழ் திகழ்ந்து வருகிறது. அரசின் சாதனைகளையும், திட்டங்களையும் விளக்கும் இதழாக தமிழரசு விளங்குகிறது.

மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரைத் தொகுப்புகள் மற்றும் அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள் மற்றும் அறிவிப்புகள், தமிழக அரசின் சாதனைகள், மக்கள் நலத் திட்டங்களின் செயல்பாடுகள், அரசு நலத் திட்ட உதவிகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், தமிழகம் முழுவதிலும் உள்ள நலத் திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகளின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வெற்றிக் கதைகள், பொது மக்களுக்குப் பயனளிக்கும் முக்கிய அரசாணைகள் உள்ளிட்டவை தமிழரசு இதழில் வெளியிடப்படுகின்றன. மேலும், மகளிர் நலம், குடும்பநலம், மருத்துவம், இரத்ததானம், எய்ட்ஸ் விழிப்புணர்வு உள்ளிட்ட சமூக நலம் சார்ந்த அரசின் திட்டங்களை விளக்கிடும் கட்டுரைகள், தமிழ் இலக்கிய வளத்தை உணர்த்தும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றுடன் அரசு மற்றும் அரசுத் துறை சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களையும் தாங்கித் தமிழரசு இதழ், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் திங்கள் தோறும் வெளியிடப்படுகின்றது.

காலாண்டு இதழாக வெளிவந்த தமிழரசு ஆங்கில இதழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஜூலை 2012 முதல் மாத இதழாக வெளியிடப்பட்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 12

சிறப்பு வெளியீடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கிய நிகழ்ச்சிகளில் ஆற்றிய தமிழ் மற்றும் ஆங்கில உரைகள் அடங்கிய சிறப்பு வெளியீடுகள் அவ்வப்போது வெளியிடப்பட்டு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலமாக மக்களுக்கு வழங்கப்படுகின்றன. தமிழரசு இதழ்கள் மட்டுமல்லாமல், தலைவர்கள், தியாகிகள் மற்றும் சான்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள், சிறப்புக் கையேடுகள், தொலைபேசிச் சிறுகையேடு, அரசு விழா அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் ஆகியவையும் அழகிய முறையில் வடிவமைத்து, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்றவையும் இங்கு அச்சிட்டு வழங்கப்படுகின்றன.

சாதனை மலர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற 2011 முதல் 2016 வரை, ஐந்தாண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி 16-5-2011 முதல் 31-1-2016 வரையிலான சாதனைகள் 'தமிழரசு' சார்பில் அரசின் சாதனைகள் துறைவாரியாகத் தொகுக்கப்பட்டு, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சாதனை மலர்களாக வெளியிடப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் 100 நாள் சாதனைகளைத் துறைவாரியாகத் தொகுத்து "மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் அரசின் 100 நாள் சாதனைகள்" என்ற சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஓராண்டு சாதனை மலர்: "நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனைகள்" ஈராண்டு சாதனை மலர்: "சாதனை புரிந்த ஈராண்டு, சரித்திரம் பேசும் பல்லாண்டு" மூன்றாண்டு சாதனை மலர்: "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் மூன்றாண்டு சாதனைகள்" நான்காண்டு சாதனை மலர்: "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் நான்காண்டு சாதனைகள்" ஐந்தாண்டு சாதனை மலர் : "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் சாதனைகள் (16-5-2011 – 31-1-2016)" சாதனை மலர்களாக வெளியிடப்பட்டன.

2016 ஆகஸ்ட் 12]

மடிப்பேடுகள்

"தமிழரசு" சார்பில் 2011 மே முதல் தற்போது வரை பல்வேறு தலைவர்கள், தியாகிகளின் வாழ்க்கை வரலாறுகள் மடிப்பேடுகளாக அச்சடிக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1. தந்தை பெரியார்
2. பேரறிஞர் அண்ணா
3. பெருந்தலைவர் காமராசர்
4. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்
5. மகாகவி சுப்பிரமணிய பாரதியார்
6. கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில்
7. தியாகச் செம்மல் வ.உ. சிதம்பரனார்
8. வீரன் சுந்தரலிங்கம்
9. சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துக்கோன்
10. விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன்
11. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயண கவி
12. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம்
13. சுதந்திரப் போராட்ட வீரர் திருப்பூர் குமரன்
14. விருப்பாட்சி கோபால் நாயக்கர்
15. தியாகி வ.வே. சுப்பிரமணிய அய்யர்
16. தியாகி ஆர்யா (எ) பாஷ்யம்
17. மார்ஷல் நேசமணி
18. முன்னாள் மேயர் என் சிவராஜ்
19. தமிழுக்குப் பெருமை சேர்த்த பரிதிமாற் கலைஞர்
20. தீரன் சின்னமலை
21. தியாக சீலர் கக்கன்
22. தியாகி சங்கரலிங்கனார்
23. தியாகி விஸ்வநாததாஸ்
24. அமுதகவியரசு உமறுப்புலவர்
25. கவியரசு கண்ணதாசன்

26. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை

27. மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

28. சதாவதானி செய்குத் தம்பி பாவலர்

29. மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்

30. தவத்திரு குன்றக்குடி அடிகளார்

31. பட்டுக்கோட்டை அழகிரிசாமி

32. மாமன்னர் பெரும்பிடுகு முத்தரையர்

33. ராபர்ட் கால்டுவெல்

34. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆறாவது முறையாக பதவியேற்றவுடன் முதலில் கையொப்பமிட்ட ஐந்து திட்டங்கள்

சிறப்பு வெளியீடுகள்

வ. எண்	தலைப்பு	வெளியிடப்பட்ட மாதம்
1.	சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை - 10-6-2011.	ஜூன் 2011
2.	5-7-2011-ல் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்)	ஜூலை 2011
3.	சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை-4-2-2012	பிப்ரவரி 2012

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	தலைப்பு	வெளியிடப்பட்ட மாதம்
4.	*22-3-2012 இல் சென்னையில் நடைபெற்ற "தொலைநோக்குப்பார்வை தமிழ்நாடு 2023" வெளியீட்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமை உரை (ஆங்கிலம்)*	*மார்ச் 2012*
5.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு உரைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு - 1 (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு) (தமிழ் மற்றும் ஆங்கிலம்)*	*மே 2012*
6.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு உரைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு - 2 (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு)*	*மே 2012*
7.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நலத் திட்டங்கள் பயன் பெற்றோரின் வெற்றிக் கதைகள் (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு)*	*மே 2012*
8.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அமுத மொழிகள் (ஓராண்டு சாதனை சிறப்பு வெளியீடு)*	*மே 2012*
9.	*புது டெல்லியில் 4.6.2012 மத்திய திட்டக்குழு துணைத் தலைவரின் தமிழ்நாட்டிற்கான ஆண்டுத் திட்டம் இறுதி செய்யும் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புரை (ஆங்கிலம்)*	*ஜுன் 2012*

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	தலைப்பு	வெளியிடப்பட்ட மாதம்
10.	புது டெல்லியில் 19-9-2012 இல் நடைபெற்ற காவிரி நதிநீர் ஆணையத்தின் ஏழாவது கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை (ஆங்கிலம்)	செப்டம்பர் 2012
11.	5-11-2012 இல் சென்னையில் நடைபெற்ற தமிழகத்தில் தொழில் முதலீட்டிற்கான 12 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை (ஆங்கிலம்)	நவம்பர் 2012
12.	காவிரி நதி நீர் பங்கீடு - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரைகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)	டிசம்பர் 2012
13.	விதியை மாற்றிய விதி-தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110 இன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு-1	டிசம்பர் 2012
14.	மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள்-17,18 மற்றும் 19 டிசம்பர் 2012 (தமிழ் மற்றும் ஆங்கிலம்)	டிசம்பர் 2012
15.	புது டெல்லியில் 27-12-2012 இல் 57 ஆவது தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை (ஆங்கிலம்)	டிசம்பர் 2012

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	தலைப்பு	வெளியிடப்பட்ட மாதம்
16.	சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (8-2-2013)	பிப்ரவரி 2013
17.	கச்சத்தீவை மீட்போம்-3-5-2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை	மே 2013
18.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எழுச்சிமிகு உரைகள் - தொகுப்பு-3 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2013
19.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எழுச்சிமிகு உரைகள்-தொகுப்பு-4 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2013
20.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எழுச்சிமிகு உரைகள் -தொகுப்பு-2 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்)	மே 2013
21.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள் (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2013
22.	விதியை மாற்றிய விதி-தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு-2 (ஈராண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2013

வ. எண்	தலைப்பு	வெளியிடப்பட்ட மாதம்
23.	புது டெல்லியில் 5-6-2013 அன்று நடைபெற்ற உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்த முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை (ஆங்கிலம்)	ஜுன் 2013
24.	புதுடெல்லியில் 10-6-2013 அன்று தமிழ்நாட்டுக்கான 2013-2014ஆம் ஆண்டின் ஆண்டுத் திட்டத்தை இறுதி செய்வதற்கான மத்திய திட்டக் குழுவின் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்)	ஜுன் 2013
25.	தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு என்.எல்.சி.யின் பங்குகள்! தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைத்த வெற்றி!!	ஜுலை 2013
26.	சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில் 17-8-2013 அன்று நடைபெற்ற, சென்னைப் பல்கலைக்கழகத்தின் 155 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்)	ஆகஸ்ட் 2013
27.	சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாஅரங்கில் 20-8-2013 அன்று நடைபெற்ற தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வெள்ளி விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (ஆங்கிலம்)	ஆகஸ்ட் 2013

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	தலைப்பு	வெளியிடப்பட்ட மாதம்
28.	மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் 11,12 மற்றும் 13 டிசம்பர் 2013 (ஆங்கிலம்)	டிசம்பர் 2013
29.	சென்னையில் 16-12-2013 அன்று நடைபெற்ற 14 ஆவது நிதிக்குழு ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைத்தொகுப்பு	டிசம்பர் 2013
30.	சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் 27-1-2014 அன்று நடைபெற்ற 4 ஆவது அகில இந்திய காவல் அதிரடிப்படையினர் திறன் போட்டி நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை (ஆங்கிலம்)	ஜனவரி 2014
31.	எங்கள் பக்கம் மக்கள்; மக்களின் பக்கம் நாங்கள்-மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3-2-2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநரின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதிலுரை	பிப்ரவரி 2014
32.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு உரைகள்-தொகுப்பு-5 (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2014

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	தலைப்பு	வெளியிடப்பட்ட மாதம்
33.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு உரைகள்-தொகுப்பு-6 (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2014
34.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு உரைகள்-தொகுப்பு-3 (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்)	மே 2014
35.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அமுத மொழிகள் (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2014
36.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய நேர்முகக் கடிதங்களின் தொகுப்பு (2011-2014) (மூன்றாண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்)	மே 2014
37.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களிடம் அளித்த கோரிக்கை மனு 3-6-2014 (தமிழ் மற்றும் ஆங்கிலம்)	ஜூன் 2014
38.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் மூன்றாண்டு சாதனைகள் (32 மாவட்டங்களின் சாதனைகள் மாவட்டங்கள் வாரியாக தனித்தனி புத்தகங்களாக வெளியிடப்பட்டன).	ஜூலை 2014
39.	அரசு நலத் திட்ட உதவிகள் (தகவல் கையேடு)	ஜூலை 2014

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	தலைப்பு	வெளியிடப்பட்ட மாதம்
40.	விதியை மாற்றிய விதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 8-6-2011 முதல் 12-8-2014 வரை வெளியிட்ட அறிவிப்புகள்	செப்டம்பர் 2014
41.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு உரைகள் (2011-2012) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2015
42.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு உரைகள் (2012-2013) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2015
43.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு உரைகள் (2013-2014) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2015
44.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு உரைகள்- (2011-2014) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்)	மே 2015
45.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய நேர்முகக் கடிதங்களின் தொகுப்பு (2011-2015) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்)	மே 2015
46.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள் (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே 2015

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	தலைப்பு	வெளியிடப்பட்ட மாதம்
47.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அமுத மொழிகள் (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே *2015*
48.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நலத்திட்டப் பயனாளிகளின் வெற்றிக்கதைகள் (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே *2015*
49.	Awards and Accolades for Tamil Nadu Government (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்)	மே *2015*
50.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் நான்காண்டு சாதனைகள் (*32* மாவட்டங்களின் சாதனைகள் மாவட்டங்கள் வாரியாக தனித்தனி புத்தகங்களாக வெளியிடப்பட்டன) (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு)	மே *2015*
51.	Tamil Nadu in the Forefront (நான்காண்டு சாதனைகள் சிறப்பு வெளியீடு) (ஆங்கிலம்)	மே *2015*
52.	விதியை மாற்றிய விதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் *8-6-2011* முதல் *29-9-2015* வரை வெளியிட்ட அறிவிப்புகள்	
53.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் சாதனைகள் (*16-5-2011 - 31-1-2016*)	பிப்ரவரி *2016*

வ. எண்	தலைப்பு	வெளியிடப்பட்ட மாதம்
54.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் சாதனைகள் *(16-5-2011 - 31-1-2016) (ஆங்கிலம்)*	பிப்ரவரி *2016*
55.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களிடம் அளித்த கோரிக்கை மனு-*14-6-2016* (ஆங்கிலம்)	ஜூன் *2016*
56.	தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை *(23-6-2016)*	ஜூன் *2016*

புதிய கட்டடம்

சென்னை, அண்ணாசாலை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்திற்கென சொந்தமாக இருந்த கட்டடம், கடந்த *2009* ஆம் ஆண்டு அங்கு புதியதாக கட்டப்பட்ட கட்டடத்திற்காக இடிக்கப்பட்ட காரணத்தால் அங்கிருந்து இடம் மாறி, சென்னை, அண்ணா சாலையில் உள்ள எழுதுபொருள் அச்சுத் துறை வளாகத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சகத்திற்கு, சொந்தமாக அதிக இடவசதியுடன் கூடிய புதிய கட்டடம் கட்ட ஆணையிட்டவாறு சென்னை, தரமணியில் ரூ.*6.23* கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் *29-9-2015* அன்று திறந்து வைக்கப்பட்டது.

கணினியிலிருந்து அச்சுத்தட்டு இயந்திரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழரசு அச்சகத்தை நவீனமயமாக்கிட

[2016 ஆகஸ்ட் 12

ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் "கணினியிலிருந்து அச்சுத்தட்டு இயந்திரம்" வாங்கப்பட்டு, தற்போது செயல்பாட்டில் உள்ளது.

நான்கு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம்

முக்கிய பிரமுகர்களுக்கு வண்ணப் பக்கங்களைக் கொண்டு அனுப்பப்படும் தமிழரசு இதழை சந்தாதாரர்களுக்கு அனுப்புகை செய்யும்பொருட்டு ரூ.4 கோடி மதிப்பீட்டில் நான்கு வண்ண வெப் ஆப்செட் புதிய இயந்திரம் வாங்கி புதிய கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

தமிழரசு சந்தாதாரர்கள்

தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்களின் மொத்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை 50,000 ஆகும்.

பொருட்காட்சிப் பிரிவு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் செயல்படுகின்ற தமிழ்நாடு அரசின் அனைத்துத் திட்டங்கள் குறித்து, அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்துகொள்ளச் செய்கின்ற அரிய பணியினை, அரசு சார்பில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சிகள் நிறைவேற்றி வருகின்றன.

கேட்பதைவிட, பார்ப்பது மக்கள் மனதில் எளிதில் பதியும் என்பதால், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அரசுப் பொருட்காட்சிகள், பொது மக்கள் குடும்பத்துடன் வருகை தந்து கண்டுகளித்துப் பயன்பெற ஏதுவாக விழாக் காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில், மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்படுகின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில் அரசினுடைய திட்டங்கள் சிறப்பான முறையில் விளம்பரப்படுத்தப்படுகிறது.

கிராமம் மற்றும் நகர்ப்புற மக்கள் அரசுத் துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்து கொண்டு, தேவையான தகவல்களைப் பெறுவதுடன், பொழுதுபோக்கு அம்சங்களைக் கண்டுகளித்து, மனநிறைவுடன் தங்களது இல்லத்திற்குச் செல்வதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன.

2016 ஆகஸ்ட் 12]

அரசுப் பொருட்காட்சிகளில் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. இவ்வாறு அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள், மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு, நேரடியாகவும், மறைமுகமாகவும், பலருக்கு வேலைவாய்ப்பை அளித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இப்பொருட்காட்சிகளில், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், நாள்தோறும் கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அரசுப் பொருட்காட்சி, ஆண்டுதோறும், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய 10 மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை, செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் 174 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, அதன்மூலம் அரசுக்கு, ஏறத்தாழ 36 கோடியே 10 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் நிகர வருவாய் கிடைத்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசுப் பொருட்காட்சிகளில் ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பார்வையாளர்கள் விவரம்:-

பொருட்காட்சிகளின்மூலம் ஈட்டப்பட்ட வருவாய்-ரூபாய் 12.02 கோடி

பொருட்காட்சிகளுக்கு வருகை தந்த பார்வையாளர்கள்- 81 இலட்சம் நபர்கள்

தனியார் பொருட்காட்சிகள்

தனியாரால், வணிக நோக்குடன், வரைமுறைகளின்றி நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சிகள், முறைப்படுத்தப்பட்டு, பொது மக்களின் நன்மைக்காகவும், அதே நேரத்தில் பொழுதுபோக்கிற்காகவும் உரிய விதிமுறைகள் வகுக்கப்பட்டு, மாவட்டங்களில் தனியார் பொருட்காட்சிகள் முறையாக நடத்த, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், செய்தி மக்கள் தொடர்புத் துறைமூலம் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 12

புதுடெல்லி மலர்ப்பேரணி

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது. 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற மலர்ப்பேரணி விழாக்களில் தமிழ்நாடு அரசு பங்கேற்று முதல் பரிசு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்

சென்னை மற்றும் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும், குடியரசு நாள் விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்து கொள்வதும், சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அரசின் பல்வேறு திட்டங்களை வெளிப்படுத்தும் வகையில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு நடத்திட, ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும், இத்துறையின் முக்கியப் பணிகளாகும்.

சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி 2012 ஆம் ஆண்டில் முதல் பரிசும், 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் இரண்டாம் பரிசும் பெற்றுள்ளன. மேலும், 2014 ஆம் ஆண்டு, புதுடெல்லியில் நடைபெற்ற அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், பொங்கல் விழாவினைச் சித்தரிக்கும் தமிழ்நாடு அலங்கார ஊர்தி அகில இந்திய அளவில் இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். 2016 ஆம் ஆண்டு அகில இந்திய அளவில் புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பிற்கு தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டத்தில் வசித்துவரும் தோடர்கள் என்ற மலைவாழ் பழங்குடி இனத்தினரைச் சித்தரிக்கும் வகையில் அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டு, பங்கேற்கப்பட்டது.

தொழில் மற்றும் வர்த்தகப் பொருட்காட்சி

ஒவ்வோர் ஆண்டும், சென்னையில் நடைபெறும், அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், இத்துறை பங்கேற்று அரசின் கொள்கைகள், நலத் திட்டங்கள், அரசின் சாதனைகள்

2016 ஆகஸ்ட் 12]

குறித்த விளக்கங்களை, பொது மக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும், மக்கள் விழிப்புணர்வு பெறும் வகையிலும், விளக்கப்படங்கள் மற்றும் காட்சி மாதிரிகளுடன் தனி அரங்கு திறன்பட அமைக்கப்பட்டு வருகிறது.

புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி

புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும், தமிழகத்தின் சார்பில், இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று, தமிழக அரசின் அனைத்துத் துறைகள் தொடர்பான கொள்கை விளக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்கங்கள் வெளிக்கொணரப்பட்டு வருகிறது. இப்பொருட்காட்சி அகில இந்தியளவில் நடைபெறுவதால், அனைத்து மாநிலங்களும் தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகளை அறிந்துகொள்ள நல்வாய்ப்பாக உள்ளது.

இப்பொருட்காட்சிகள் பெரும்பான்மையோருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வழிவகுக்கிறது.

ஒன்றியங்களில் கண்காட்சிகள்

தமிழக அரசின் நலத் திட்டங்கள், சாதனைகள் குறித்துப் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கடந்த ஐந்து நிதியாண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள மொத்தம் 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசின் சாதனையை விளக்கும் வகையில், சிறு கண்காட்சிகள் நடத்தப்பட்டு, அக்கண்காட்சிகளை 20,90,360 பொது மக்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர். அதைப்போன்று வருகின்ற நிதியாண்டுகளிலும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் சிறு கண்காட்சிகள் நடத்தப்படும்.

புகைப்படக் கண்காட்சி

மாவட்டங்கள்தோறும் திருவிழாக்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் பங்கு கொள்ளும் அரசின் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள் ஆகியவற்றில், அரசின் சாதனைகள், நலத் திட்டங்கள் குறித்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும், அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சிகளை நடத்த, நிதியாண்டு ஒன்றிற்கு ரூ.10,000/- வீதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடந்த ஐந்து நிதியாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் 32 மாவட்டங்களிலும் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இப்புகைப்படக் கண்காட்சியினை மொத்தம் 15,28,050 பேர் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர். இதைப்போன்று அரசின் சாதனைகள், நலத் திட்டங்கள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வரும் நிதியாண்டுகளிலும் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்படும்.

மேலும், அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், கிராமங்களில் நடத்தப்படும், மக்கள் குறை தீர்க்கும் மனு நீதி நாள் முகாம் நிகழ்ச்சிகளின் போதும், சிறிய அளவிலான, பல்துறை பணி விளக்க கண்காட்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இரும்பு வளைவுத் தகரங்கள் மற்றும் தெரு விளக்கு மின் கம்பங்கள்

ஒரே கால கட்டத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட, அரசுப் பொருட்காட்சிகளை வெவ்வேறு இடங்களில் நடத்துவதற்கு ஏதுவாக, கடந்த 5 ஆண்டுகளில் ரூபாய் 1 கோடியே 1 இலட்சத்திற்கு புதிய இரும்பு வளைவுத் தகடுகளும் மற்றும் நல்ல முறையில் ஒளி அமைப்புச் செய்திட ரூ.33.91 இலட்சத்திற்கு 170 தெரு விளக்குக் கம்பங்களும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

அரசுப் பொருட்காட்சி கிடங்கு

அரசுப் பொருட்காட்சிகளுக்கு தேவைப்படும் தளவாடப் பொருட்கள், வளைவுத் தகரங்கள் மற்றும் தெரு விளக்குக் கம்பங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்கு ரூ.1.23 கோடி செலவில் சேலம் மாவட்டம், கடத்தூர் அக்ரஹாரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய அரசுப் பொருட்காட்சி கிடங்கு கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 8.2.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 32 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களும், தமிழ்நாட்டின் செய்தி மக்கள் தொடர்புத்

2016 ஆகஸ்ட் 12]

துறையின் மிக இன்றியமையாத உறுப்புகளாக விளங்குகின்றன. செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பணிகளில் மிக முக்கியமான பங்கை வகிக்கும் மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் மற்றும் அரசின் புதிய அறிவிப்புகளை பயனாளிகளான பொது மக்களுக்கு, செய்தி இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்தும் பணியினைச் செம்மையுறச் செயல்படுத்தி வருகின்றன.

அரசு அறிவிக்கும் நலத் திட்டங்களைப் பற்றிய விவரங்கள் மற்றும் அரசின் சாதனைகளைப் பொது மக்கள் அறியும் வகையில் விளம்பரம் செய்வதுடன், அரசு நலத் திட்டங்களின் பலனைப் பயனாளிகள் முழுமையாகப் பெறுவதற்கு ஏதுவாக, அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்கும் பணியினையும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

ஊடகங்களுக்கு அரசின் செய்தி வெளியீடுகள் மற்றும் புகைப்படங்களை வழங்குதல், மக்கள் கூடுமிடங்களில் வீடியோ படக்காட்சிகள் நடத்துதல், பத்திரிகையாளர் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், கேபிள் தொலைக்காட்சிகள்மூலம் விளம்பரப் பணி செய்தல், அரசு விழாக்களை நடத்துதல், பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் மற்றும் சிறு கண்காட்சிகள் நடத்துதல், நினைவகங்களைப் பராமரித்தல் போன்ற பணிகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் செய்து வருகிறார்கள்.

செய்தி நிலையங்கள்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்செய்தி நிலையங்களில், மொழி, இலக்கியம், வரலாறு, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள் மற்றும் நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன.

இச்செய்தி நிலையங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ—மாணவியர் பெரிதும் பயன்படுத்தி வருகிறார்கள்.

[2016 ஆகஸ்ட் 12

மாநிலச் செய்தி நிலையம், சென்னை

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இருந்த கலைவாணர் அரங்கம் கடந்த 2009 ஆம் ஆண்டு இடிக்கப்பட்ட போது அவ்வரங்கில் செயல்பட்டு வந்த மாநில செய்தி நிலைய அலுவலகமும் இடிக்கப்பட்டது. இதனால் மாநில செய்தி நிலைய அலுவலகம் தற்காலிகமாக சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் நினைவு இல்லத்தில் இயங்கி வந்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இடிக்கப்பட்ட கலைவாணர் அரங்கம் மீண்டும் புதிதாக பிரம்மாண்டமான முறையில் கட்டப்படும் என்று அறிவித்ததுடன் கலைவாணர் அரங்கத்துடன் மாநில செய்தி நிலையமும் சேர்ந்து கட்ட ஆணை வழங்கினார்கள்.

இதன்படி, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கலைவாணர் அரங்கின் பின்பகுதியில் ரூபாய் 2 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாநில செய்தி நிலையக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14-2-2016 அன்று திறந்து வைத்தார்கள்.

மாநில செய்தி நிலைய புதிய கட்டடத்தில் நூலகமும் பொது மக்கள் அமர்ந்து படிக்கக்கூடிய வகையில் படிப்பக வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நூலகத்தில் தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், அறிவியல், ஆன்மீகம், சிறுவர் நூல்கள், ஆங்கில நூல்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் சுமார் 52,000 நூல்கள் உள்ளன. மேலும், நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வார இதழ்கள் போன்றவை பொது மக்கள் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன.

இதுதவிர சட்டமன்ற பேரவை நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத் துறை வெளியீடுகள் ஆகியவை மேற்கோள் தொகுப்பு பணிக்காக பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள நூல்கள் அரசின் மேற்கோள் பணிக்காக தேவைப்படும்போது அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இங்கு நாள்தோறும் ஏராளமான பொது மக்கள், கல்லூரி மாணவர்கள் வருகை தந்து படித்து பயன்பெறுகின்றனர்.

2016 ஆகஸ்ட் 12]

பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவு

பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டம் 1867-ன்படி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் புத்தகப் பதிவாளராகச் செயல்பட்டு வருவதன் அடிப்படையில் பல்வேறு பதிப்பகங்களின் மூலம் வெளியிடப்படும் புத்தகங்களின் இரண்டு பிரதிகள் பெறப்பட்டு, முறையாகப் பதிவு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

நிறைவுரை

"என்னுடைய வாழ்வு தமிழக மக்களுக்காகவே என்று வாழ்ந்து வருகிறேன். தமிழக மக்கள்பால் எனக்குள்ள நன்றியுணர்வை வெளிப்படுத்த அகராதியில் போதிய வார்த்தைகளே இல்லை. என்னுடைய வாழ்நாளை மக்களுக்காக மக்கள் தொண்டிலேயே கழிப்பேன். தமிழக மக்கள் நலனுக்காக புதிய உத்வேகத்துடன் செயல்பட்டு எனது நன்றியை செயலில் காண்பிப்பேன்."

—மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித்தலைவி அம்மா *அவர்கள்*

2016 சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் தமக்கு அமோக ஆதரவு அளித்து, ஆட்சிப் பொறுப்பை அளித்த தமிழக மக்களுக்கு மேற்கண்டவாறு நன்றி தெரிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமது இதய உணர்வை வெளிப்படுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்தப் பிரகடனத்தையே செய்தி மக்கள் தொடர்புத் துறை தனது செயல் முழக்கமாக ஏற்று தமிழக மக்களின் வாழ்வு வளம் பெற, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது தலைமையிலான அரசு செயல்படுத்தும் திட்டங்களையும் படைக்கின்ற சாதனைகளையும் மக்களிடம் எடுத்துச் செல்கின்ற மகத்தான பணியை உளப்பூர்வமாகவும், உற்சாகமாகவும், புதிய உத்வேகத்துடன் திறம்பட செயலாற்ற உறுதிபூண்டிருக்கிறது.

இணைப்பு–1

வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2016–2017

தொகை (ரூபாய் ஆயிரத்தில்)

		2014-2015 கணக்குகள்	2015-2016 திருத்திய மதிப்பீடு	2016-2017 இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	2016-2017 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
2059	பொதுப் பணிகள்	66,49	65,73	67,00	67,00
2220	செய்தி மற்றும் விளம்பரம்	104,61,66	84,89,33	65,22,04	65,54,05
2235	சமூகப் பாதுகாப்பும் நலனும்	85,52	85,65	1,03,50	1,03,50
2250	ஏனைய சமூகப் பணிகள்	13,36	11,49	12,98	12,98
4220	செய்தி விளம்பரம் குறித்த மூலதனச் செலவு	———	4,00,00	1	1
	மொத்தம்	106,27,03	90,52,20	67,05,53	67,37,54

இணைப்பு—III

(521 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 30—எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி. —குறள் 390

கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் இவை நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்கு போன்றவன் என்ற தமிழ் திருமறையாம் திருக்குறள் வழி நின்று திண்ணிய கொள்கையுடன் திறம்பட ஆட்சி செய்யும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, நவீன தொழில்நுட்பத்துடன் தன்னை இணைத்துக் கொண்ட எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை வியக்கத்தக்க எழுச்சியுடன் சீரிய முறையில் செயலாற்றி வருகிறது.

1. எழுச்சியும் வளர்ச்சியும்.

தமிழக அரசின் அரசிதழ்களை அச்சிட்டு வெளியிடும் நோக்கோடு, 1831 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் நாள் பத்து பணியாளர்களுடன் புனித ஜார்ஜ் கோட்டையில் சிறிய அளவில் தொடங்கப்பட்ட இந்த அச்சகம் 185 ஆண்டுகளில் படிப்படியாக வளர்ச்சியடைந்து, தற்போது மாநிலம் முழுவதும் பத்து அலகுகளுடன் செயல்பட்டு வருகிறது. சென்னையில் இயக்ககம் மற்றும் எழுதுபொருள் அலுவலகம் இயங்கி வருகின்றன. மாநிலம் முழுவதும் எட்டு அச்சகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. எட்டு அச்சகங்களில், சென்னை மற்றும் மதுரையில் தலா இரண்டு கிளை அச்சகங்களும், ஏனைய நான்கு கிளை அச்சகங்கள் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் விருத்தாசலத்தில் இயங்கி வருகின்றன.

மேலும், அரசு அச்சகங்களில் அரசின் அறிவிப்புகள், சட்டப்படியான தனியரின் அறிவிப்புகளான குழும முடிப்பு மற்றும் நொடிப்பு மனுக்கள், ஏனைய அரசு சார்ந்த நிறுவனங்களின் அறிவிப்புகள் மற்றும் தனியர்களின் பெயர் மாற்ற அறிவிப்புகள் ஆகியவையும் அரசிதழில் வெளியிடப்படுகின்றன.

சென்னையில் உள்ள அரசு மைய அச்சகம், உயர் நீதிமன்ற கிளை அச்சகம் உட்பட தமிழகமெங்கும் உள்ள எட்டு கிளை அச்சகங்களில் மாநிலம் முழுவதிலும் உள்ள அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்குத் தேவைப்படும் நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், பதிவேடுகள், துறை சார்ந்த நடைமுறை நூல்கள், தமிழக மக்களின் இன்றியமையாத தேவைகளான பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள், சாதிச் சான்றிதழ்கள், தேர்தல் படிவங்கள் மற்றும் தேசிய மக்கள் தொகை பதிவேடு ஆகியவற்றை தங்குதடையின்றி அச்சிட்டு வழங்கி வருவதன்மூலம் இத்துறை சேவைத் துறையாக செயல்பட்டு வருகிறது.

1.1 அரசு அச்சகங்கள் செயல்படும் இடங்கள்

சென்னை மற்றும் மதுரையில் உள்ள அச்சகங்கள்:—

சென்னை, தங்கச்சாலையில் அரசு மைய அச்சகமும், உயர் நீதிமன்ற வளாகத்தில் அரசு கிளை அச்சகமும் சென்னை மாநகரில் இயங்குகின்றன. மதுரையில் இரு அச்சகங்கள் முறையே, உயர் நீதிமன்ற மதுரைக் கிளை (Bench) வளாகத்தில் ஒரு கிளை அச்சகமும், மதுரை ரேஸ்கோர்ஸ் பகுதியில் ஒரு அச்சகமும் செயல்படுகின்றன.

இதர அச்சகங்கள்

மேலும், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம் மற்றும் விருத்தாசலம் ஆகிய நகரங்களில் தலா ஒரு அரசு அச்சகத்துடன் மொத்தம் 8 அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன.

1.2 பணியாளர்கள் ஒரு கண்ணோட்டம்

இத்துறையில் 1118 ஆண்கள் மற்றும் 578 பெண்கள் உட்பட மொத்தம் 1696 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களில் 221 பணியாளர்கள் மாற்றுத் திறனாளிகள் ஆவர். அவர்களின் விவரம் வருமாறு:

2016 ஆகஸ்ட் 12]

வ. எண்	வகைப்பாடு	ஆண்	பெண்	மொத்தம்
1.	பார்வைத் திறன் குறைந்தோர்	95	5	100
2.	செவித் திறன் மற்றும் பேசும் திறன் குறைந்தோர்	5	2	7
3.	பிற வகையினர்	76	38	114
	மொத்தம்	176	45	221

மாற்றுத் திறனாளிகளுக்கு 3% இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் எனும் அரசின் கொள்கையை ஏற்று, இத்துறை, 13% மாற்றுத் திறனாளிகளுக்கு பணி வழங்கி ஒரு முன்மாதிரித் துறையாகத் திகழ்கிறது.

1.3 எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம், சென்னை

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககமானது, செயல்திறன் மிக்க, இணக்கமான தொழில் உறவுகளை பேணிக் காப்பதோடு பணியாளர் நிருவாகம், பொது நிருவாகம் மற்றும் பணியாளர் மேலாண்மை ஆகியவற்றுடன் தொலைநோக்கு பார்வையுடன் திட்டமிட்டு அரசு அச்சகங்களுக்குத் தேவையான புதிய நவீன இயந்திரங்களை கொள்முதல் செய்தும், அரசு அச்சகங்களுக்குத் தேவையான உதிரிபாகங்களையும் மற்றும் காகிதங்களையும் கொள்முதல் செய்தும் அச்சுப்பணிகளை சிறப்புடன் செய்து வருகிறது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் இயக்குநராக இந்திய ஆட்சிப் பணி அலுவலர், பணியாற்றி வருகிறார். இயக்கக நிருவாகம் தொடர்பான பணிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு இணை இயக்குநரும், தொழில்நுட்பம் சார்ந்த பிரிவிற்கு ஒரு பொது மேலாளரும் உறுதுணையாக பணிபுரிந்து வருகின்றனர்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககம் கீழ்க்காணும் 5 செயல்பாட்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு, நிருவகிக்கப்பட்டு வருகிறது:—

நிருவாகப் பிரிவு	வருவாய்த் துறையிலிருந்து வரப்பெற்றுள்ள மாவட்ட வருவாய் அலுவலர் / இணை இயக்குநர்
தொழில்நுட்பப் பிரிவு	பொது மேலாளர், துணைப் பணிமேலாளர் மற்றும் உதவிப் பணிமேலாளர்கள்
வெளியீடுகள் பிரிவு	உதவி இயக்குநர்
கணக்குப் பிரிவு	கருவூலம் மற்றும் கணக்குத் துறையிலிருந்து வரப்பெற்றுள்ள முதன்மை கணக்கு அலுவலர் மற்றும் செலவினக் கணக்கர்
தொழிலாளர் நலப்பிரிவு	தொழிலாளர் துறையிலிருந்து வரப்பெற்றுள்ள தொழிலாளர் நல அலுவலர் மற்றும் இரண்டு உதவி தொழிலாளர் நல அலுவலர்கள்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்ககத்தில் 174 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். நிருவாக அமைப்பு முறை பிற்சேர்க்கை-"அ" பக்கம் 41-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. அரசு அச்சகங்கள்

2.1 அரசு மைய அச்சகம், சென்னை

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் முக்கிய அங்கமாக பெருமை கொள்ளும் வகையில், சென்னை தங்க சாலையில் இயங்கிவரும் அரசு மைய அச்சகம் கடந்த 185 ஆண்டுகளாக தொய்வின்றி செயல்பட்டு வருகிறது. தற்போது நவீன ரக புதிய இயந்திரங்களைக் கொண்டு இயங்கக்கூடிய மாபெரும் அச்சகமாக உருவெடுத்து இத்துறையின் முக்கிய அங்கமாக திகழ்ந்து வருகிறது.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அரசு மைய அச்சகத்தில் நவீன ரக புதிய இயந்திரங்களை கொண்டு அரசின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு வகையான அச்சுப் பணிகள் சிறப்புடனும், திறம்படவும் நிறைவேற்றப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2016 ஆகஸ்ட் 12]

அரசு மைய அச்சகம் இரு பணி மேலாளர்களால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு அச்சுப்பணியில் துணைபுரிய துணைப் பணிமேலாளரும், ஒன்பது உதவி பணிமேலாளர்களும், நிருவாக பணிகளுக்கு துணைபுரிய மூன்று உதவி இயக்குநர்களும் உள்ளனர். இயந்திரங்கள் மற்றும் கட்டடங்களை பராமரிப்பது குறித்து தொழில்நுட்ப ஆலோசனை வழங்கிட இரு உதவி பொறியாளர்களும், வரவு-செலவு கணக்குகளை வரைமுறைப்படுத்த ஒரு உதவி கணக்கு அலுவலரும், தொழிலாளர் நலன் காத்திட ஒரு உதவி தொழிலாளர் நல அலுவலரும், சுகாதார ஆய்வாளர் ஒருவரும், பாதுகாப்பு பணிகளுக்காக காவல் துறையின் துணை கண்காணிப்பாளர் நிலையில் பாதுகாப்பு அலுவலர் ஒருவரும் உள்ளனர். மேலும், மைய அச்சக வளாகத்தில் மருந்தகம் ஒன்றும் இயங்கி வருகிறது.

அரசு மைய அச்சகத்தில் அரசின் கமுக்கப் பணிகளை உடனுக்குடன் அச்சிட்டு வழங்குவதற்காக அதிகமுக்கப் பிரிவும், வரவு-செலவு பிரிவும் இயங்கி வருகின்றன. இப்பிரிவுகள் அரசு விடுமுறை நாட்கள் உட்பட அனைத்து நாட்களிலும் இடைவிடாது செயலாற்றி வருகின்றன.

இந்த அச்சகத்தில் மொத்தம் 777 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

சென்னை அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்படும் முன்னுரிமை வாய்ந்த முக்கிய இனங்கள்:

1. *மேதகு ஆளுநர் அவர்களின் உரை.*
2. *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரை.*
3. *நிதிநிலை அறிக்கை.*
4. *அனைத்து தலைமைச் செயலகத் துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்பு மற்றும் மானியக் கோரிக்கை.*
5. *சாதனை விளக்கக் குறிப்பு.*
6. *வரவு—செலவு ஆவணங்கள்.*
7. *தமிழ்நாடு அரசிதழ்கள்.*
8. *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விவாதங்கள்.*

9. பல்வேறு சட்டமன்றக் குழுக்களின் அறிக்கைகள்.

10. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள்

11. தேர்தல் ஆணையப் படிவங்கள், அறிவிக்கைகள் மற்றும் வாக்குச் சீட்டுகள்.

12. மாநில கணக்காய்வுத் தலைவரின் அறிக்கைகள்.

13. மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ்கள்.

14. மிகு மந்தண/கமுக்கப் பணிகள்.

15. சட்ட விதித் தொகுப்புகள் மற்றும் நடைமுறை நூல்கள்.

16. காலமுறை வெளியீடுகள்.

17. நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள்.

18. வணிக வரித் துறை படிவங்கள்.

19. கருவூலத் துறைப் படிவங்கள் மற்றும் பதிவேடுகள்.

மேதகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு தலைமை நீதியரசர், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு தலைமைச் செயலாளர் போன்ற உயர் பதவியாளர்களுக்கான அரசு முத்திரையுடன் பெயர் அச்சிடப்பட்ட கடிதத் தாள்கள் மற்றும் காகித உறைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வு எழுதுபவர்களுக்கான சிற்றேடுகள் மற்றும் அறிவுரைகள், அரசுத் தேர்வுகள் மற்றும் தொழில்நுட்பத் தேர்வுகளுக்கான விடைத்தாட்கள் ஆகியவை இங்கு அச்சிடப்படுகின்றன. இவை தவிர, அனைத்து துறைகளுக்குத் தேவையான காகித உறைகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இந்த பிரிவுகளில் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பெருமளவு பணியில் ஈடுபட்டு சாதனை புரிந்து வருகின்றனர்.

2016 ஆகஸ்ட் 12]

அனைத்து அச்சுப் பணிகளை முனைப்பாகவும் திறமையாகவும் மேற்கொள்ள ஏதுவாக, அச்சுத் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள அண்மைக்கால வளர்ச்சிக்கு ஏற்ப அரசு மைய அச்சகம் படிப்படியாக நவீனமயமாக்கப்பட்டு, மாநில அளவில் அரசு அலுவலகங்களின் தேவைகளை துரிதமாக நிறைவேற்றி வருகிறது.

2.1.1 அரசு மைய அச்சகக் கட்டமைப்பினை மேம்படுத்துதல்

அரசு மைய அச்சகத்தில், கடந்த 2013 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி நள்ளிரவில் நிகழ்ந்த தீ விபத்தின் காரணமாக அவ்வச்சகத்தின் பிரதான தொழிற்கூடமாகத் திகழ்ந்த 84,000 சதுர அடி பரப்பளவு கொண்ட சிவப்பு கட்டடம் மற்றும் அக்கட்டடத்திற்குள் நிறுவப்பட்டு இயங்கி வந்த இயந்திரங்கள் அனைத்தும் முழுமையாக சேதமடைந்தன.

அரசு அச்சகங்களில் உள்ள கழிவுத்தாள்கள் ஒப்பந்ததாரர்களால் உடனுக்குடன் அகற்றப்படாததால், தீ விபத்தின் போது தீ பரவிட காரணமாக அமைந்ததை தொடர்ந்து, தற்போது சேரும் கழிவுத்தாட்களை உடனுக்குடன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

அரசு மைய அச்சகப் பணிகளில் தொய்வு ஏற்படாவண்ணம் பழைய கட்டடங்களை பராமரிப்பு செய்தும், புதிய இயந்திரங்களை கொள்முதல் செய்தும், தொழிலாளர்களின் தளராத உழைப்பினால் அச்சுப் பணிகளில் எந்தவித சுணக்கமும் ஏற்படாதவாறு அனைத்து பணிகளும் செயல்படுத்தப்பட்டன.

தீ விபத்தினால் சேதமடைந்த இயந்திரங்களுக்கு பதிலாக புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்திடவும், இதர கட்டடப் பணிகளுக்காகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ரூ.22,64,45,000/-ல் புதிய இயந்திரங்கள் ரூ.19,47,25,000/- செலவில் கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளது. கட்டடப் பணிகளுக்கு ரூ.3,17,20,000/- செலவிடப்பட்டது.

சென்னை, மைய அச்சகத்திற்காக கீழ்காணும் நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பயன்படுத்தப்படுகிறது:

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	புதிய இயந்திரங்கள்
1.	சி.ப்பி.சி. - நான்கு வண்ண தனித்தாள் ஆப்செட் இயந்திரம்
2.	சி.டி.பி. - கணினி வழி அச்சுத்தகடு தயாரிக்கும் இயந்திரம்
3.	நான்கு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம்
4.	இரு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம்
5.	வெப் ஆப்செட் இயந்திரம் (மோனோ யூனிட்)
6.	அதிவேக டிஜிட்டல் புரொடக்ஷன் பிரிண்டர் (வண்ணம்)
7.	டிஜிட்டல் புரொடக்ஷன் பிரிண்டர் (கருப்பு (ம) வெள்ளை)
8.	இரு வண்ண தனித்தாள் ஆப்செட் இயந்திரம்
9.	ஒரு வண்ண தனித்தாள் ஆப்செட் இயந்திரம்
10.	தானியங்கி ஷீட் பெட் எண்ணிடும் இயந்திரம் (டிஜிட்டல்)
11.	காகிதம் வெட்டும் இயந்திரம்
12.	காகிதம் மடிக்கும் இயந்திரம்
13.	புத்தகம் தைக்கும் இயந்திரம்
14.	கம்பியடிக்கும் இயந்திரம்
15.	உறை மடிக்கும் இயந்திரம்
16.	பளு தூக்கும் இயந்திரம்
17.	நிப்பிங் இயந்திரம்
18.	ஹார்டு பிரஸ்
19.	கையால் எண் இடும் இயந்திரம்
20.	ஹைட்ராலிக் ட்ராலி
21.	ரிம்மிங் இயந்திரம்
22.	ஹரிஸாண்டல் தாள் சேர்க்கும் இயந்திரம்

வ. எண்	புதிய இயந்திரங்கள்
23.	தானியங்கி புத்தகம் தைக்கும் இயந்திரம்
24.	கணினியுடன் இணைக்கப்பட்ட எ3 அளவான டிஜிட்டல் பிரிண்டர்
25.	யு.வி.கோட்டிங் மெஷின்
26.	கவர் பஞ்சிங், டை கட்டிங், ஸ்கோரிங் மெஷின்
27.	தானியங்கி ஸ்பைரல் பைண்டிங் மெஷின்
28.	ஹெவி டியூட்டி வையர்—ஓ— பைண்டிங் இயந்திரம்
29.	பிளேட் பிராசசர்
30.	பண்டலிங் இயந்திரம்
31.	ஹைட்ராலிக் ட்ராலி — டயர் டைப்
32.	தானியங்கி கேஸ் மேக்கிங் இயந்திரம்
33.	தானியங்கி கேஸிங் இயந்திரம்
34.	தானியங்கி ஜாயின்ட் பார்மிங் இயந்திரம்
35.	கவர் மேக்கிங் இயந்திரம் (மாத்திரைகளுக்கானது)
36.	போட்டோ காப்பியிங் இயந்திரம்
37.	பிளேட் பேக்கிங் இயந்திரம்
38.	எலக்ட்ரிகல் ஸ்டேப்லர்ஸ்
39.	சிறப்பு கட்டுமான இயந்திரம்

மேலும், தீவிபத்தினால் பாதிப்படைந்த சிவப்பு கட்டடத்திற்கு பதிலாக, புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ.21,59,30,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையினரால் கட்டடம் கட்டும் பணி 22-01-2015 அன்று துவங்கப்பட்டு, பணிகள் மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, கட்டடப் பணி விரைவில் முடிவுறும் நிலையில் உள்ளது.

[2016 ஆகஸ்ட் 12

2.2 அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை

உயர் நீதிமன்றத்தின் அச்சுத் தேவைகளை நிறைவு செய்யும் முக்கிய நோக்குடன், உயர்நீதிமன்ற வளாகத்தில் 1923 ஆம் ஆண்டு முதல் அரசு கிளை அச்சகம் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த அச்சகத்தில், உயர்நீதிமன்றத்தால் நாள்தோறும் வெளியிடப்படும் உயர்நீதிமன்ற வழக்குப் பட்டியல்கள், வார மற்றும் மாத வழக்குப் பட்டியல்கள் ஆகியவற்றுடன் உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்குத் தேவையான 708 வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிடப்படுகின்றன.

இந்த அச்சகம், மூன்று உதவிப் பணிமேலாளர் மற்றும் ஒரு உதவிப் பொறியாளர் ஆகியோருடன் துணைப்பணி மேலாளரின் தலைமையின் கீழ் இரண்டு முறைமாற்றுப் பணிகளில், 96 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

மேலும், இந்த அச்சகத்தில் தமிழ்நாடு அரசிதழ்கள் மற்றும் பணிப்பதிவேடுகள் விற்பனை செய்ய ஒரு துணை விற்பனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

2.3 அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை

இந்த அச்சகம் 1949 ஆம் ஆண்டு முதல் இரண்டு முறைமாற்றுப் பணிகளில், 70 பணியாளர்களைக் கொண்டு செயல்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, உள்துறை, ஓய்வூதியத் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை ஆகிய துறைகளின் அச்சுத்தேவைகள் இங்கு நிறைவேற்றப்படுகின்றன. மேலும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், திருவாரூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள் இங்கு அச்சிடப்பட்டு வருகின்றன. பல்வேறு துறைகளுக்குத் தேவையான 290 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் உதவிப் பணிமேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

2.4 அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி

1965 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த அச்சகம், 1990 ஆம் ஆண்டு வரையில் அரியமங்கலம் தொழிற்பேட்டையில் வாடகைக்

கட்டடத்தில் இயங்கி வந்தது. பின்னர், 1990 ஆம் ஆண்டு முதல் துவாக்குடி, சிட்கோ வளாகத்தில் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இந்த அச்சகம், இரண்டு முறைமாற்றுப் பணிகளில், 92 பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள், அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான தன்பதிவேடுகள், ரொக்கப் பதிவேடுகள் மற்றும் பொதுப் படிவங்கள் ஆகியவை இங்கு அச்சிடப்படுகின்றன. பல்வேறு துறைகளுக்குத் தேவையான 126 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும் மற்றும் பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் உதவிப் பணிமேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளர் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

2.5 அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்

1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த அச்சகம், 1981ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இரண்டு முறைமாற்றுப் பணிகளில், 86 பணியாளர்களைக் கொண்டு செயல்படும் இந்த அச்சகத்தில் வேலூர், விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. பொதுப்பணித் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வேளாண்மைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, தொழில், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை போன்ற துறைகளின் 369 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம், துணைப் பணிமேலாளர் நிலையிலுள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

2.6 அரசு கிளை அச்சகம், சேலம்

இந்த கிளை அச்சகம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த கிளை அச்சகம் 1986 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. 88 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறைமாற்றுப் பணிகளில், இந்த அச்சகம் செயல்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 12

சேலம், நாமக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களின் மாவட்ட அரசிதழ்கள் இங்கு அச்சிடப்படுகின்றன. கருவூலம் மற்றும் கணக்குத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் அரசுத் தேர்வுத் துறையின் அச்சுத் தேவைகளை இந்த அச்சகம் நிறைவு செய்கின்றது. பல்வேறு அரசுத் துறைகளுக்குத் தேவையான 146 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்களும், பதிவேடுகளும் இங்கு அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகம் துணைப் பணிமேலாளர் நிலையில் உள்ள கிளை மேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

2.7 அரசு கிளை அச்சகம், மதுரை

இந்த அச்சகம், 1976 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் இரண்டு முறைமாற்றுப் பணிகளில், 198 பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இந்த அச்சகத்தில் வருவாய்த் துறை, உள் துறை, வணிக வரித் துறை, பதிவுத் துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைச் சார்ந்த அச்சுப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தேனி, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் சிவகங்கை மாவட்டங்களின் அரசிதழ்களை அச்சிடும் பணிகளும் இங்கு செவ்வனே மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பல்வேறு அரசுத் துறைகளுக்குத் தேவையான 211 வகையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் பதிவேடுகள் இந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. இந்த அச்சகம், இரண்டு உதவிப் பணிமேலாளர்கள் மற்றும் ஒரு உதவி இயக்குநர் ஆகியோருடன் துணைப் பணிமேலாளரின் தலைமையில் இயங்குகிறது.

2.8 அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற மதுரை கிளை, மதுரை

உயர்நீதிமன்ற மதுரை கிளையின் தினசரி, வார மற்றும் மாத வழக்குப் பட்டியல்களை அச்சிடும் முக்கிய நோக்கோடு இந்த அச்சகம், 2006 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் தொடங்கப்பட்டது. இந்த அச்சகம் 30 பணியாளர்களைக் கொண்டு இரண்டு முறைமாற்றுப் பணிகளில், ஒரு துணைப் பணிமேலாளரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

2016 ஆகஸ்ட் 12]

2.9 2015–2016 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் அச்சிடப்பட்ட இனங்களின் பட்டியல்

முன்னுரிமை அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் குறித்த காலத்தில் செவ்வனே இத்துறையினால் அச்சிட்டு வழங்கப்பட்டன:—

2015–2016 ஆம் ஆண்டிற்கான நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள்

வ. எண்	படிவங்களின் விவரங்கள்	எண்ணிக்கை
1.	அரசுத் தேர்வுகள் இயக்ககம்	48930000
2.	தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்	14800000
3.	மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் - கற்றல் கையேடுகள்	1807000
4.	சட்டமன்றத் தேர்தல் தொடர்பான சட்டப்படியான படிவங்கள், சட்டப்படி அல்லாத படிவங்கள், சிறப்பு கூர்நாடா, சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள், உறைகள், சரிபார்ப்பு பட்டியல், குறு நூல், அறிவிப்பு பலகைகள், வாக்குச் சீட்டுகள்.	30739900
5.	வாக்காளர் பட்டியல் படிவங்கள்	13364000
6.	தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை	1050600
7.	தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்	720000
8.	மாநில கணக்குத் துறைத் தலைவரின் அலுவலகம்	623131
9.	தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்	2331000
10.	கிங் நிலையம்	110000
11.	வணிகவரித் துறை	530900
12.	உயர்நீதிமன்ற படிவங்கள் மற்றும் பதிவேடுகள்	9522266

[2016 ஆகஸ்ட் 12

வ. எண்	படிவங்களின் விவரங்கள்	எண்ணிக்கை
13.	உள் துறை	17660113
14.	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை	14906075
15.	வனத் துறை	432343
16.	தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை	1405381
17.	பொதுப் படிவங்கள்	4141525
18.	பள்ளிக்கல்வித் துறை	975000
19.	வருவாய்த் துறை	196624
20.	விதை ஆய்வுத் துறை	2733972
21.	கருவூலம் மற்றும் கணக்குத் துறை	5906250
22.	வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை	135958
23.	கால்நடை பராமரிப்புத் துறை	1034273
24.	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (ம) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை	1331596
		175387907

3. அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை

அரசு எழுதுபொருள் கிடங்கானது, அரசு அச்சகங்கள் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான அனைத்து வகை காகிதங்கள், அட்டைகள் மற்றும் இதர எழுதுபொருட்களான தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள், படிப்பெருக்கி மை, மைப்படித்தாள், படிப்பெருக்கித்தாள் ஆகியவற்றை கொள்முதல் செய்தும், அச்சகம் தயார் செய்யும் கோடிட்ட தாள்களை சேமித்தும், அனைத்து அரசுத் துறைகளுக்கு வழங்கும் மையமாக விளங்குகின்றது. ஒரு துணை இயக்குநர், ஒரு உதவி இயக்குநர் மற்றும் 85 பணியாளர்களைக் கொண்டு இவ்வலுவலகம் இயங்குகின்றது. அனைத்து எழுது பொருட்களும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற

ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் 2000 ஆம் ஆண்டு விதிகளின்படி கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

அச்சுப் பணிகளுக்கு தேவையான வெள்ளை காகிதங்கள் மற்றும் மாநிலம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களுக்கு தேவையான காப்பியர் காகிதங்கள், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. சில சிறப்பு வகைக் காகிதங்கள், அட்டைகள், மைப்படித்தாள் மற்றும் படிப்பெருக்கி மை போன்றவை ஒப்பந்தப்புள்ளி கோருவதன் மூலம் வெளிச்சந்தையிலிருந்து ஆண்டுதோறும் கொள்முதல் செய்யப்படுகிறது. தட்டச்சுப் பொறிகள், படிப்பெருக்கிகள் ஆகியன தேவைப்படும் துறைகளுக்கு கொள்முதல் செய்து விநியோகம் செய்யப்படுகிறது.

எழுதுபொருட்கள் மற்றும் காகிதங்கள் தேவை என்று கோரிக்கை அளிக்கும் 3873 அரசு அலுவலகங்களுக்கு அவர்களின் தேவைப்பட்டியல்படி விலை ஏதுமின்றியும், 66 அலுவலகங்களுக்கு முன்கூட்டியே தொகை செலுத்தும் முறையிலும் குறிப்பிட்ட வரையறைகளுடன் ஆண்டுதோறும் மொத்தம் 3939 அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர தேர்தல் காலங்களில் வாக்குச்சாவடிகளுக்கு தேவையான அனைத்து எழுதுபொருட்களை கொள்முதல் செய்து, இருப்பு வைத்து அனைத்து மாவட்டங்களுக்கும் விநியோகம் செய்யும் மையமாகவும் இவ்வலுவலகம் நிறைவாக செயல்பட்டு வருகிறது.

4. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையங்கள்

சென்னை, அண்ணாசாலையிலுள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்கக வளாகத்தில் அமைந்துள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமானது, உதவி இயக்குநர் (வெளியீடுகள்) கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இதன் துணை விற்பனை நிலையம், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகத்தில் செயல்பட்டு வருகிறது.

இவ்விற்பனை நிலையத்தில் அரசிதழ்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வெளியீடுகள், சட்டத் தொகுப்புகள்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 12

விதிகள் மற்றும் விதித் தொகுப்புகள், அரசு அலுவலகங்களின் தொலைபேசி கையேடுகள் மற்றும் பணிப்பதிவேடுகள் முதலியவை விற்பனை செய்யப்படுகின்றன. இவ்விற்பனை நிலையம், இந்திய அரசின் வெளியீடுகளை விற்பனை செய்யும் முகவரமைப்பாகவும் செயல்படுகிறது. மேலும், அரசு வெளியீடுகளும் அனுமதிக்கப்பட்ட 32 முகவர்கள் வாயிலாக விற்பனை செய்யப்படுகின்றன. பெயர் மாற்றம் செய்ய விழைவோரின் விவரங்கள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுகிறது. தூய தமிழில் பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.115/-ம் (அச்சுக் கட்டணம்+அரசிதழ் விலை + அஞ்சல் செலவு), ஆங்கிலத்தில் பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.415/—ம் (அச்சுக் கட்டணம் + அரசிதழ் விலை + அஞ்சல் செலவு) வெளியீட்டுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. திருநங்கையர்களுக்கான பெயர் மாற்ற அறிவிக்கைகள் கட்டணம் ஏதுமின்றி அரசிதழில் வெளியிடப்பட்டு வருகிறது.

2015-16 ஆம் நிதியாண்டில், தனியார் அறிவிக்கைகள் மற்றும் பிற அறிவிக்கைகளுக்கான வெளியீட்டுக் கட்டணம், அரசிதழ்கள் மற்றும் வெளியீடுகள் விற்பனை வாயிலாக மொத்தம் ரூ.2,92,29,769-வசூலிக்கப்பட்டுள்ளது.

தென்மாவட்டங்களைச் சார்ந்த பொது மக்கள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2012 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை அரசு கிளை அச்சகங்களில், அரசு வெளியீடுகள் துணை விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவ்வாறு தொடங்கப்பட்டுள்ள விற்பனை நிலையங்களின் வாயிலாக 30-6-2016 அன்று வரை தனியார் அறிவிக்கைகள் மற்றும் பிற அறிவிக்கைகளுக்கான வெளியீட்டுக் கட்டணமாக திருச்சிராப்பள்ளியில் ரூ.22,38,759/-ம், மதுரையில் ரூ.21,44,283/-ம் வசூலிக்கப்பட்டுள்ளது.

5. தொழிலாளர் நலன்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் காக்கும் நோக்குடன், தொழிலாளர் துறையிலிருந்து ஒரு தொழிலாளர் நல அலுவலர், இரு உதவி தொழிலாளர் நல அலுவலர்கள் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையிலிருந்து ஒரு சுகாதார மேற்பார்வையாளர் ஆகியோர் அயற்பணியில் பணிபுரிந்து வருகின்றனர்.

2016 ஆகஸ்ட் 12]

தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் குறைகள் உடனுக்குடன் தொழிலாளர் நலன் சார்ந்த சட்டம் மற்றும் விதிகளின்படி தீர்வு செய்யப்படுகின்றன. அரசு மைய அச்சகத்தில் ஒரு மருந்தகம் செயல்பட்டு வருகிறது. மருந்தகத்தின் மருத்துவ அலுவலர் சென்னை நகரில் உள்ள இயக்ககம் உள்ளிட்ட இத்துறையைச் சார்ந்த அலுவலகங்களுக்குச் சென்று பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார்.

5.1 அரசு அச்சகப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் படிகள்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அச்சகங்களில் பணிபுரியும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பணியாளர்களுக்கு அரசால் பின்வரும் படிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

5.1.1 இரவு நேரப்படி

இத்துறையின் அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் இரவு நேரப்படி 30.11.2015 முதல் ரூ.25/-லிருந்து ரூ.50/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

5.1.2 சலவைப் படி

இத்துறையின் அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் சலவைப்படி 30-11-2015 முதல் ரூ.60/-லிருந்து ரூ.100/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

5.1.3 சீருடை தையற்கூலி

அனைத்து அச்சகங்களிலும் பணிபுரியும் ஆடவருக்கு சீருடை தையற்கூலி ரூ.800/- வழங்கப்பட்டு வருகிறது. (இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நான்கு இணை ஆடைகள்)

பெண் தொழிலாளர்களுக்கு சீருடையாக ஆண்டுதோறும் இரண்டு ஊதா நிற மேலங்கியும் 19-6-2012 முதல் இதற்கு தையற் கூலியாக ரூ. 350/-ம் வழங்கப்பட்டு வருகின்றன.

[2016 ஆகஸ்ட் 12

5.1.4 சிற்றுண்டிப் படி

இத்துறையின் அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் சிற்றுண்டிப் படி 1-11-2011 முதல் ரூ.150/-லிருந்து ரூ.200/-ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

5.1.5 இடர் படி

காகிதம் வெட்டும் இயந்திரங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடர் படி 15-6-2012 முதல் ரூ30/-லிருந்து ரூ.200/- ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

5.1.6 வார ஈட்டுப் படி

5-6-2012 முதல் அரசு மைய அச்சகத்தின் வரவு-செலவுப் பிரிவு மற்றும் மிக கமுக்கப் பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வார ஈட்டுப் படி ரூ.15/-லிருந்து ரூ.200/- ஆக உயர்த்தப்பட்டு மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

5.1.7 சிறப்பூதியம்

(i) *சென்னை மற்றும் மதுரை உயர்நீதி மன்ற அரசு அச்சகங்களில் இரவு நேரங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.300/- வழங்கப்பட்டு வருகிறது.*

(ii) *அரசு மைய அச்சகத்தில் வரவு-செலவு மற்றும் மிக கமுக்கப் பிரிவுகளில் பணிபுரியும் 49 பணியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த சிறப்பூதியம் ரூ.60, ரூ.70, ரூ.100 என்பன முறையே ரூ.120, ரூ.140, ரூ.200 ஆக 21-5-2013 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.*

6. கூட்டுறவு நாணயச் சங்கங்களின் செயல்பாடு

அரசு அச்சகத் தொழிலாளர் நலன் கருதி, தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கங்கள், அரசு மைய அச்சகத்திலும் அனைத்து அரசு கிளை அச்சகங்களிலும் செயல்பட்டு வருகின்றன. சங்க உறுப்பினர்களுக்கு ரூபாய் ஏழு இலட்சம் வரை கடனுதவி

2016 ஆகஸ்ட் 12]

வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு பெய்த கன மழையின் காரணமாக அங்கத்தினர்களுக்கு வெள்ள நிவாரண கடனாக ரூ.25,000/- வழங்கப்பட்டுள்ளது. மேலும், காலவரை வைப்புத் தொகை மற்றும் தொடர் வைப்புத்தொகை ஆகியவற்றின் மூலம் தொழிலாளர்களின் மனதில் சேமிக்கும் எண்ணத்தை இக் கூட்டுறவு நாணய சங்கங்கள் ஊக்குவித்து வருகின்றன.

7. மனமகிழ் மன்றங்கள்

பணியாளர்களிடையே காணும் விளையாட்டு ஆர்வத்தினை ஊக்குவிக்கவும், பணியிடத்தில் இணக்கமான சூழ்நிலையினை உருவாக்கவும், விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும் மனமகிழ் மன்றங்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.2.00 இலட்சம் மானியத் தொகையானது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.3.00 இலட்சமாக 2013 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இத்தொகை ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் வாங்கவும் செலவிடப்படுகிறது.

8. கூட்டுறவு பண்டகச்சாலை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை கூட்டுறவு பண்டகச்சாலையின் மூலம், குடும்ப அட்டை பெற்றுள்ள தற்போது பணியிலுள்ள பணியாளர்களுக்கும் மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கும் சென்னை, அரசு மைய அச்சகத்தில் உள்ள நியாய விலைக்கடையில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன.

9. அரசு அச்சக குடியிருப்புகள் சீரமைத்தல்

சென்னையில் அமைந்துள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கென தண்டையார் பேட்டையில் 1962-63ஆம் ஆண்டில் A, B மற்றும் C என மூன்று வகைகளில் 300 குடியிருப்புகள் கட்டப்பட்டு, அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

மேற்கண்ட மூன்று வகை குடியிருப்புகளில் B வகை குடியிருப்புகள் அனைத்தும் சேதமடைந்துள்ளதையடுத்து, இக்குடியிருப்பில் வசிப்போருக்கு A மற்றும் C வகை குடியிருப்புகளில் மாற்று குடியிருப்பு வழங்கப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 12

10. பணி நியமனங்கள்

கருணை அடிப்படையில் நியமனம், வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மற்றும் செய்தித்தாள் விளம்பரம் மூலம் நேரடி நியமனம் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நியமனம் என கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தம் 678 பணியாளர்கள் இத்துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

10.1 ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம்

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் காவலர்கள், மஸ்தூர்கள், ஓட்டுநர்கள், புத்தகம் கட்டுநர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் என 198 பணியாளர்கள் வெளி ஆதாரமுறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

10.2 பணியாளர் மற்றும் நிருவாக அமைப்பு

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் நிருவாக அமைப்பு, கிளை அச்சகங்களின் விவரங்கள் மற்றும் பணியாளர்களின் விவரங்கள் 30-6-2016 அன்றுள்ளவாறு பிற்சேர்க்கை “அ” மற்றும் “ஆ”வில் பக்க எண் 857, 858-ல் வழங்கப்பட்டுள்ளன.

11. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2011–2016 வரை அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட பணிகள்

11.1 அரசு மைய அச்சகம், சென்னை

11.1.1 கட்டடப் பணிகள்

தீ விபத்தில் சேதமடைந்த கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் சுமார் ரூ.21.59 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

7500 சதுர அடி பரப்பளவில் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்பட்டு இயந்திரங்கள் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

தீ விபத்தினால் பகுதியாக சேதமடைந்த பிற கட்டடங்களுக்கு ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2016 ஆகஸ்ட் 12]

புதிய காகித கிடங்கு ரூ.67.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

11.1.2 அச்சு இயந்திரங்கள் கொள்முதல்

தீ விபத்தில் சேதமடைந்த இயந்திரங்களுக்கு பதிலாக நான்கு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம் ஒன்றும், இரு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம் 2 எண்ணிக்கைகளும், தனித்தாள் ஆப்செட் இயந்திரம் 3 எண்ணிக்கைகளும், காகிதம் வெட்டும் இயந்திரம் 5 எண்ணிக்கைகளும், காகிதம் மடிக்கும் இயந்திரம் ஒன்றும், டிஜிட்டல் புரொடக்ஷன் பிரிண்டர் (கருப்பு வெள்ளை) ஒன்றும், அதிவேக டிஜிட்டல் புரொடக்ஷன் பிரிண்டர் (வண்ணம்) ஒன்றும், மோனோ யூனிட் வெப் ஆப்செட் இயந்திரம் ஒன்றும், கனரக கம்பி அடிக்கும் இயந்திரம் 19 எண்ணிக்கைகளும் மற்றும் பிற இயந்திரங்களும் ரூ.18.20 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

இயந்திரப் பிரிவை நவீனமயமாக்க தனித்தாள் வண்ண அச்சு இயந்திரம் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

புத்தகம் கட்டும் பிரிவை நவீனமயமாக்க தானியங்கி புத்தகம் தைக்கும் இயந்திரம் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

தானியங்கி தாள் சேகரிக்கும் இயந்திரம் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

கணினி மூலம் அச்சுத்தகடு தயாரிக்கும் இயந்திரம் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளது.

தானியங்கி சேகரிக்கும் இயந்திரம் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

நவீன, தரமான இரப்பர் முத்திரை தயாரிக்கும் இயந்திரம் மற்றும் தன் மையொற்றி ஆகியவை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளது.

திரை அச்சு (ஸ்கீரின் பிரிண்டிங்) இயந்திரம் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

சுமை ஊர்தி ஒன்று ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

[2016 ஆகஸ்ட் 12

11.2 எழுது பொருள் மற்றும் அச்சுத்துறையின்கீழ் இயங்கும் இதர அச்சகங்களுக்கு வழங்கப்பட்ட நவீன வசதிகள்

அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களுக்கு கணினிகளும், லேசர் பிரிண்டர்களும், கணினி மேசை மற்றும் நாற்காலிகளும், தடையில்லா மின்வழங்கும் சாதனமும் ரூ.23.05 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

அரசு அச்சகங்களுக்கு நவீன காகிதம் வெட்டும் இயந்திரம், முகப்பு அட்டை செய்யும் இயந்திரம் மற்றும் கம்பி அடிக்கும் இயந்திரம் ஆகியன ரூ.71.10 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் அனைத்து அச்சகங்களை நவீனமயமாக்கும் பொருட்டு பணி மேசை மற்றும் நீள பெஞ்சுகள் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம் மற்றும் அனைத்து அச்சகங்களிலும் தீ தடுப்பு சாதனங்கள் மற்றும் கண்காணிப்பு கேமிராக்கள் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் பொருத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

11.3 இயக்ககம் மற்றும் அரசு கிளை அச்சகம், உயர் நீதிமன்ற வளாகம், சென்னை

உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள அச்சக கிளைக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் இரு கம்பியடிக்கும் இயந்திரங்களும், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககத்திற்கு ரூ.3.20 மதிப்பீட்டில் ஒரு அதிநவீன டிஜிட்டல் பிரிண்டரும் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

11.4 அரசு கிளை அச்சகம், மதுரை

இரு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

2016 ஆகஸ்ட் 12]

11.5 அரசு கிளை அச்சகம், சேலம்

இரு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம் ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

11.6 அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்

இரு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம் ரூ.86.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

11.7 அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி

ஒரு வண்ண வெப் ஆப்செட் இயந்திரம் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

11.8 அரசு வெளியீடுகள் துணை விற்பனை நிலையங்கள்

தென்மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசு கிளை அச்சகம், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியில் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தின் துணை விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

12. தகவல் பரவலாக்கம்

இத்துறைக்கென அலுவல் முறை வலைதளம் அமைக்கப்பட்டு, இதன் மூலம் அரசின் அறிவிக்கைகள், தனியார் அறிவிக்கைகள், நிறுவன சரிவு, நொடிப்பு நிலை மனு குறித்த அறிவிக்கைகள், பெயர்மாற்றம் குறித்து வெளியிடப்படும் அறிவிக்கைகள் மற்றும் தமிழ்நாடு அரசிதழ்கள் ஆகியவை இத்துறையின் வலைதளம் http://www.stationeryprinting.tn.gov.in-ல் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இவ்வலைதளம் மூலம் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான விவரங்களை உடனுக்குடன் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

13. வரவு—செலவு

2016-2017 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் வரவு செலவு விவரங்கள் பிற்சேர்க்கை “இ” பக்க எண் 859-ல் வழங்கப்பட்டுள்ளன.

[2016 ஆகஸ்ட் 12

14. நிறைவுரை


எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை 185 ஆண்டுகளாக தமிழக அரசின் அனைத்துத் துறைகளின் அச்சுப்பணிகள் மற்றும் எழுதுபொருள் தேவைகளை நிறைவேற்றுவதில் தொய்வின்றி, ஊக்கத்துடனும், அர்ப்பணிப்புடனும் சிறப்புற சேவை செய்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேன்மையான வழிகாட்டுதலின்படி, இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப அரசு அச்சகங்களில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டு, நவீனமயமாக்கப்பட்டு வருவதால் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள், தேர்தல் படிவங்கள் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் படிவங்கள் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் வாயிலாக அச்சிட்டு இலவசமாக வழங்கப்பட்டு வருவதால், இத்துறை சேவைத் துறையாக தனது பணிகளை சிறப்புற சீரிய முறையில் செயலாற்றி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பிற்சேர்க்கை – அ

நிருவாக அமைப்பு



[2016 ஆகஸ்ட் 12

பிற்சேர்க்கை – ஆ

30–6–2016 அன்றைய நிலையில் பணியாளர் எண்ணிக்கை

வ.எண்	அலகு	அலுவலர்கள்	அமைச்சுப் பணியாளர்	இதர பிரிவு	மொத்த பணியாளர்கள்
1	இயக்ககம் (அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் உட்பட)	14	91	69	174
2	அரசு மைய அச்சகம், சென்னை	20	107	650	777
3	அரசு எழுதுபொருள் கிடங்கு, சென்னை	3	29	53	85
4	அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை	4	11	81	96
5	அரசு கிளை அச்சகம், மதுரை	5	18	175	198
6	அரசு கிளை அச்சகம், சேலம்	3	12	73	88
7	அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை	1	8	61	70
8	அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி	1	8	83	92
9	அரசு கிளை அச்சகம், விருத்தாசலம்	1	7	78	86
10	அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை	1	5	24	30
	மொத்தம்	53	296	1347	1696

பிற்சேர்க்கை – இ
எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை
வரவு–செலவு திட்ட மதிப்பீடு 2016 – 2017

		(ரூபாய் ஆயிரத்தில்)		
கணக்குத் தலைப்பு		2015–16 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடு	2015–16 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு	2016–17 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடு
2058	எழுதுபொருள் மற்றும் அச்சிடுதல்	1019724	1053090	951182
2059	பொதுப் பணிகள்	6300	6000	6000
4058	எழுதுபொருள் அச்சிடுதல் குறித்த மூலதனச் செலவு	195933	241018	3
	மொத்தம்	**1221957**	**1300108**	**957185**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.